
# தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும்



செல்லையா கிருஷ்ணராசா M.A

# தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும்

கிரு. செல்லையா கிருஷ்ணராசா, M. A.

வரலாற்றுத்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

1998

# Archaeology and Cultural Antiquity of the Jaffna Tamils

*Selliah Krishnarajah.,* M. A.

Dept. of History,
University of Jaffna.

1998


| | |
|---|---|
| தலைப்பு : | தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும். |
| ஆசிரியர் : | செல்லையா கிருஷ்ணராசா M. A. |
| விடயம் : | தொல்லியல் + பண்பாடு |
| பக்கம் : | 206 (படங்களுடன்) |
| வெளியீடு : | பிறைநிலா வெளியீடு. |
| அலுவலக விலாசம்: | வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி. |
| வதிவிட விலாசம் : | கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். |
| முதற்பதிப்பு | 1998 டிசெம்பர். |
| அச்சிட்ட பிரதிகள்: | 500 |
| முன் அட்டை வடிவமைப்பும் பதிப்பும் : | நியூ கார்த்திகேயன் பிரின்டேர்ஸ், கொழும்பு-6 |
| நூல் பதிப்பு : | அன்னை அச்சகம், குருநகர், யாழ்ப்பாணம். |
| நூல் அளவும் தாள் வகையும் : | 1/8. 70 கிராம் வெள்ளை. |
| நூல் பகுப்பாக்க இலக்கம் ; | 913: 2095488 (யாழ். பல்கலைக்கழக நூலகம்) |
| விலை ரூபா : | 350/- |
| அட்டைப்படங்கள் முன் அட்டை : | கந்தரோடை பௌத்த ஸ்தூபங்கள். |
| பின் அட்டை : | 17 ம் நூற்றாண்டு கால முதலியார் இல்ல முகப்புத் தோற்றம், கந்தரோடை. போர்த்துக்கீசரின் கத்தோலிக்க தேவாலயத்தின் பக்கத் தோற்றம், சக்கோட்டை, பருத்தித் துறை. |
| நிழற்படங்கள் : | S. K. ராஜா. |

Title : Archaeology and Cultural Antiquity of the Jaffna Tamils.

Auther : Selliah Krishnarajah., M. A.

Subject : Archaeology & Culture

Pages : 206 (with plates)

Publisher : Prainlia Publication.

Offical Add : Dept. of History Uni. of Jaffna.

Home Add : Kaladdy Lane, Kondavil - West.

First Publication : 1998, December.

Copy Rights : To Auther

Number of Copies Printed : 500

Cover Design & Printing : New Kaarthikeyan printers, Colombo.

Book printting : Annai Achchakam, Mount Carmel Road, Gurunagar, Jaffna.

Book size & paper : 1/8. 70 Grams white.

Cataloque Number: 913. 2095488, (Library: Universtty of Jaffna.)

Price Rs : 300/=

Cover photographs
Front : Buddhist Stupas at Kantarodai.
Back : The front view of [a Mudaliyar's house 17 th C. A. D: Kantarodai.
Side view of Portuguese Church at Sakkoddai Pointpedro.

Photographs : S. K. Rajah.



கற்காலக்கருவி (கைக்கோடரி ?) மாயக்கை


கற்காலக்கருவி (Spear Head) வியாபாரி மூலை





நாகர்கோயிற் பகுதியிலிருந்து பெறப்பட்ட மட்பாண்டம் (Ash Mound -?)

விநாயகர் தோற்றத்தில் சுடுமண் சிற்பங்கள் — கந்தரோடை



# அணிந்துரை

யாழ்ப்பாணப் பிரதேசத்திலோ ஏனைய தமிழர் வாழ் இடங்களிலோ அகழ்வாய்வு நடந்து எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன. தொல்லியல் பாடக் கற்கைநெறியும் பெரிய அளவிலே முன்னேறியதாகவும் இல்லை. ஆனால் செ. கிருஷ்ணராசா, ப. புஷ்பரட்ணம், ஆ. தேவராஜன் ஆகியோர் யாழ்ப்பாணத் தொல்லியல் பற்றி அடிக்கடி எழுதி வருகிறார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர் திரு. கிருஷ்ணராசா தான் இதுவரை தொல்லியல் தொடர்பாக எழுதி வந்த கட்டுரைகளைத் தொகுத்து **தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும்** என்ற நூலாக வெளியிடுகிறார். இந்நூலுக்கு இந்த அணிந்துரையை எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சாசனவியல் சிறப்பறிஞரும் தொல்லியல் ஆய்வாளருமான **திரு. ஐராவதம் மகாதேவன்** வண. தனிநாயக அடிகளார் நினைவுப் பேருரையில் (Journal of the Institute of Asian Studeis Vol. XII: 01, 1994, p. 139) பின்வருமாறு குறிப்பிட்டார்.

> "Recent surface explorations by Pushparatnam of Mannittalai, Paramankiray and Vettukkadu in the Poonagari region and by S. Krishnarajah at Kantarodai in Jaffna have yielded several potsherds bearing fragmentary Tamil inscriptions in the **Tamil - Brahmi script**, which have been assigned to about to third or second centuries B.C. on palaeographical grounds"

மகாதேவன் குறிப்பிட்ட கிருஷ்ணராசாவின் கண்டு பிடிப்புகள் பற்றிய எழுத்துருக்கள் இப்பொழுதுதான் நூல் வடிவிலே வருகின்றன. இந்நூலின் மூன்றாம் நான்காம் இயல்கள் கந்தரோடைத் தொல்லியல் விடயங்களைப் பற்றியே கூறுகின்றன.

தொல்லியலும் மொழியியல் போன்று அறிவியல் சார்ந்த ஒரு கற்கைநெறியாகும். இதற்குப் பல நவீன கருவிகளுடன் ஆய்வுகூட வசதிகளும் இன்றியமையாதன. இவை எம்முடைய பல்கலைக்கழகத்திலே தற்போது இல்லை. எனவே, செய்முறை கற்கைநெறியை விடுத்து அறிமுறைக் கற்கைநெறியையாவது முன்னேற்றலாம். அத்தகைய கற்கைநெறிக்கு தொல்லியல் பற்றிய நூல்கள் பல உருவாக வேண்டும். இந்த வகையில் கிருஷ்ணராசாவினுடைய இந்நூல் காலத்துக்கேற்ற பணி செய்வதாயமைகின்றது. தொல்லியலைப் பயிலும் மாணவர்களுக்கு இது ஓர் அரிய துணை நூலாக அமையும்.

வழுக்கையாற்றுப் பக்கல் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய இடம். ஈழத் தமிழர் வரலாற்று மூலங்கள் தொடர்பாக நம்பகமான சான்றுகள் வேண்டப்படுகின்ற இவ்வேளையில், ஆசிரியர் ஒரு குறிப்பிட்ட தொல்லியல் நடுவணில் நம்பகமான சான்றுகள் தற்செயலாகக் கிடைத்தன என்று கூறி, அவை **வழுக்கையாற்றுப் பின்னணியில் கந்தரோடை** என்னும் நான்காம் இயலிலே விரித்துரைக்கிறார். இயல் முழுவதையும் படித்து முடிந்தவுடன் வாய்ப்பு ஏற்படும் போது வழுக்கையாற்றுப் பகுதியிலே நிபுணத்துவம் வாய்ந்த அறிவியலடிப்படையிலான அகழ்வாய்வு செய்ய வேண்டுமென்ற எண்ணம் மேலும் வலுப்பெறுகின்றது.

தமிழர் வரலாற்றைத் தொல்லியல் சான்றுகள் கொண்டு துலக்க வேண்டுமென்னும் ஆசிரியருடைய அவா நூல் முழுவதும் பரவியுள்ளது. கிடைத்த சான்றுகள் ஒவ்வொன்றையும் புதிதாகப் பிறந்த அழகான குழந்தையை ஏந்துவது போல் ஆவலுடனும் ஆசையுடனும் பக்குவத்துடனும் ஏற்றுக்கொள்வதைக் காண்கிறோம். இடையிடையே தன்னை மீறிய புளகாங்கித உணர்வுக்கும் ஆசிரியர் உட்படுகிறார். எனினும் தொல்லியற் சான்றுகளை வரலாற்றுச் சான்றுகளாகக் கொள்ளுமிடத்து மிகுந்த பொறுப்புணர்வுடன் அவர் தொழிறபடுவதைக் காண்கின்றோம்.

தாம் அறிந்தவற்றை, கண்டுபிடித்தவற்றை ஆய்வுலகுக்கு வழங்க வேண்டியது அறிஞர்களுடைய கடமை. தொல்லியல் ஓர் அறிவியல்சார் துறையாகையால், அதற்குப் பரந்துபட்ட ஓர் ஆய்வுலகம் உண்டு. எனவே, ஆசிரியர் இந்நூலிலே விரிந்துரைத்தவற்றை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வழங்க வேண்டும். பரந்துபட்ட அறிஞருலக ஒப்புதல் கிடைக்கும் போது ஆசிரியர் புகழ் பரவுதல் மாத்திரமின்றி எங்கள் வரலாறும் நேராக ஆவதுடன் நம்பகத் தன்மையுடையதாகும்.

திரு. கிருஷ்ணராசாவினுடைய இந்நூல் அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு உதவுவதாயுள்ளது. வரலாற்று மாணவர்களுக்கு பொதுவாகவும் தொல்லியல் மாணவர்களுக்கு சிறப்பாகவும் உதவக் கூடியது. எங்கள் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைக்கு வளம் சேர்ப்பதாக இந்நூல் அமைகின்றது. ஆசிரியருக்கு என் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் கூறி இவ்வணிந்துரையை நிறைவுசெய்கிறேன்.

**பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்**
கலைப்பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

*01 - 10 - 1998*

# முன்னுரை

**தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும்** என்ற தலைப்பினுடைய இச் சிறு ஆய்வு நூலானது சிறிய அளவில் தொல்லியல் கோட்பாடு பற்றியும், மிகுதிப் பரப்பில் யாழ்ப்பாணத் தீபகற்பத்தினுள் மிகவும் பழமை வாய்ந்த மையமாக விளங்கி வரும் கந்தரோடை பற்றியுமே அதிக தகவல்களைக் கொண்டு வெளிவருகின்றது யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டியலில் கந்தரோடை வகித்திருக்கக் கூடிய நிலையை, கிடைத்த தொல்லியல் எச்சங்களினூடாக வெளிப்படுத்த முனைவதாக இந்நூலின் பிரதான பகுதி அமைக்கப்பட்டுள்ளது. இதுவரையிலும் வெளிப்படுத்தப்படாத வரலாற்றுச் செய்திகள் சில இங்கு கொடுக்கப்பட்டுள்ள முறையில் **திராவிட மரபுகள்** ''கந்தரோடை என்ற சர்ச்சைக்குள்ளாக்கப்பட்ட'' மையத்துடன் கொண்டிருந்த பிணைப்பினைத் தனித்துவமாக இனங்காணத்தூண்டுகின்றது.

யாழ்ப்பாணத் தமிழரது மரபில் மத்தியகாலப் பகுதியே ''**ஒளிபொருந்திய**'' காலகட்டமாகக் கொள்ளப்படுவதற்குரிய சூழ்நிலையை நல்லூர் தாங்கித் தந்தமையினை 'இலக்கியச்' சான்றுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆதலால் மத்தியகாலப் பகுதியிலிருந்தே தமிழர் பண்பாட்டில் சிறப்புப் பெற்று விளங்கிய நல்லூர் பற்றிய அத்தியாயம் தனித்துவமானதாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு மையங்களையும் உள்ளடக்கிய வகையில் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள பல தகவல்கள் தொல்லியல் வரலாற்று நோக்கில் காலத்தால் முற்பட்ட மையமொன்றிலிருந்து மத்தியகால மையமொன்றிற்குத் தமிழர் பண்பாட்டு மாற்றம் நிகழ்ந்தமையை விளங்கிக் கொள்வதற்கு உதவுவதாக அமையும்.

இந்நூலில் **வல்லிபுரம்** பற்றிய வரலாற்று — பண்பாட்டுச் செய்திகள் எவையும் சேர்க்கப்படாமைக்குக் காரணம் அம்மையத்தினைப் பற்றிய தகவல்கள் தனித்துவமான தனியொரு நூலாக அமையவிருக்கின்றபடியினாலாகும். கந்தரோடையிலிருந்து தொடங்கிய அப்பண்பாடு நல்லூரைச் சென்றடைவதற்கு முன் வல்லிபுரத்தினூடாக முகிழ்த்து, இரு சமய சமூக மாற்றமொன்றினூடே நல்லூரைத் தழுவிக்கொண்டதென்பதே பொருத்தமானதாகும். வல்லிபுரம் என்ற மையம் வெளிப்படுத்தி நிற்கின்ற பண்பாட்டு எச்சங்களினூடே சமூக — மாற்ற நிகழ்வுகளுக்கான தடயங்கள் கிடைத்திருப்பது தனித்துவமான நூல் ஒன்றின் பிறப்பிற்கும் வழிவகுத்துள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் கந்தரோடையில் தனித்துவமான முறையில் திராவிட மொழிவழக்கொன்றின் வரிவடிவம் பயிலப்பட்டு வல்லிபுரம் வரையிலும் விஸ்தரிக்கப்பட்டது என்றால் அங்கே ஒரு **சமூக நிலையாறு களம்** உருவாக்கப்பட்டிருந்தது என்பதே பொருள். அந்த வகையில் கந்தரோடையில் தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்றுக்கொண்டிருந்த வரிவடிவப் பாவனைக்கும் தென்னிந்திய வாணிப பரிமாற்ற நடைமுறைக்குமிடையே மிக நெருங்கிய தொடர்புகள் நிலவியிருந்தன என்பது தெளிவாகின்றது. **இப்பின்னணியில் கந்தரோடையில் வளர்ச்சி பெற்ற பன்னாட்டு வாணிப முகப்பானது அந்த அதிகாரம்மிக்க — அரசியல் கட்டுப்பாட்டுடனான சமூக இருப்பினையும் தெளிவுபடுத்தியுள்ளது.** அவ்வாறாயின் அப்பன்னாட்டுவாணிப நடைமுறையை வழிப்படுத்தி உதவிய **அதிகாரவர்க்கம்** கந்தரோடையில் எம்மொழியைப் பேசியிருந்த சமூகத்தினர் என்பதனைக் கண்டறிய வேண்டிய தேவை எமக்குண்டு. அப்பணியை ஓரளவுக்கேனும் தெளிவுபடுத்தும் நோக்குடனேயே கத்தரோடை தொடர்பான தகவல்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.

**'நாகநாணயங்கள்'** பற்றிய செய்தி அவ்வாறான ஒரு பணியை எமக்குக் கொடுத்துள்ளது என்பதனை மனங்கொளல் வேண்டும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் கண் **நாகமன்னர்கள்** ஆட்சியதிகாரம் புரிந்திருக்கிறார்கள் என்பதனையே நாக நாணய வெளியீடுகள் எமக்குணர்த்துகின்றன. இலங்கை வரலாற்றைப் பொறுத்தவரையிலும் நாகர்களை அரசவம்சத்தினராகக் கொள்கின்ற மரபு உருவாகி விட்டது என்பதனை பின்வரும் பகுதி எமக்கு உணர்த்துகின்றது.

"... the Nagas were protohistoric A people who displaced the Stone Age (Mesolithic) Yakka hunter — getherers ftom the Northern and Western Sectors of Lanka from arround 1000 B. C. Onwards..."

**The prehistory of SriLanka** By S. U. Deraniyagale, part 1. page 363)

நாகர்களுடைய ஆட்சி கி. பி. 4ம் நூற்றாண்டளவில் கந்தரோடையில் விஷ்ணுபுத்திர வம்சத்திற்கு மாற்றமுற்றுச் சென்று, பின்னர் கி.பி. 8ம் நூற்றாண்டில் சோழவம்ச ஆதிக்கத்திற்குள் சென்று மறைந்த தன்மையைக் காண முடிகிறது. (குடாநாட்டினுள் **குடா — குறிந்தத்தரைப்பாதை** வாணிப மார்க்கத்திற்காகப்



பயன்படுத்தப்பட்ட தன்மையினையும், அம்மார்க்கத்தில் **வல்லிபுரம், வரணி, புத்தூர், கந்தரோடை, ஆனைக்கோட்டை** என்பன பிரதானமான பண்பாட்டு மையங்கள் ஆக விளங்கிய முறையையும் தொல்லியல் எச்சங்களினூடாக அறிய முடிகிறது. குடாநாட்டினுள் முதலாவது **நகராக்கம்** கந்தரோடையில் நிகழ்ந்தமைக்குரிய பகைப்புலமானது வல்லிபுரத்தினையும் இணைத்திருக்க வேண்டும் என்பதனையே குடா — குறுக்கு வர்த்தக மார்க்கத்தின் அமைவு எடுத்துக்காட்டுகின்றது. **வல்லிபுரம் → வரணி → புத்தூர் → கந்தரோடை → ஆனைக்கோட்டை என்ற மையங்களினை இணைத்து வைத்த வர்த்தக மார்க்கம் இரு ஆழ்கடல் வாணிப மார்க்கத்தினையும் இணைத்து வைப்பதாக அமைந்துள்ளது.** இதுவே கந்தரோடை முதன்முதலாக ஒரு வாணிப நகராக **கி. மு. 700 ம்** ஆண்டிலிருந்து உருவாகி வளர்ச்சி பெற்றிருக்கக் கூடிய நிலையைப் பெற்றிருந்தமைக்கான காரணமுமாகும். **கி. மு. 700ம்** ஆண்டிலிருந்து **கி. பி. 700ம்** ஆண்டுவரைக்கும் நாகதீபத்தின் வரலாற்றிலும் குறிப்பாக தென்னிந்திய வாணிப முறையுடன் தொடர்புபட்ட சர்வதேச வாணிப வலைப்பின்னலினுள் ஒரு சந்திப்பாக கந்தரோடை விளங்கியிருந்த போதிலும் கூட தமிழ் இலக்கியச் சான்றுகளில் அதன் பெயர் வெளிப்படையாக இடம்பெற்றிருக்காத காரணத்தை நாம் ஆராய வேண்டியுள்ளது.

**கந்தமாதனம், கந்தரஸ்தால, காந்தத்தீவு. காகாலய, கபாடபுரம், கதிரகொட, கதிரைமலை** போன்ற பெயர்கள் குறித்து நிற்கும் மையம் எதுவென்பதும் இன்னும் சரிவர அறிய முடியாத நிலையில் உள்ளது. **சேர் ஜராவதம் மகாதேவன்** என்ற ஆய்வாளருக்கு கபாடபுரத்திற்கும் கந்தரோடைக்குமிடையே நெருங்கிய தொடர்பிருக்க வேண்டும் என்பதும் ஒரு **மெல்லிய நம்பிக்கையாகவும் உள்ளது.** எனவே எதிர்காலத்தில் கந்தரோடையில் அகன்ற பரப்பில் விஞ்ஞானபூர்வமான அகழ்வாய்வொன்றினை நிகழ்த்தும் வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் கந்தரோடை பற்றிய வரலாற்று வெளிச்சம் எமக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

இச் சிறு ஆய்வு நூலின் உருவாக்கத்தில் புலமைசான்றோரினதும், நண்பர்களினதும் பங்களிப்புகள் நிவேதனமாக்கப்பட்டுள்ளன. எமது பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியும், தமிழ்த்துறைப் பேராசிரியருமான கலாநிதி ஆ. சண்முகதாஸ் அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்கள். பல்கலைக்கழகக் கல்வியி

லும் பட்டப்பின் படிப்போடும் எனது சகபாடியாகவும் நண்பருமாகவும் இருந்து ஒன்றாகக் கல்வி பெற்றுக் கொண்டவருமான வண. S. ஜெயசீலன் அடிகளார் இந்நூலின் அச்சாக்கம் தொடங்கி படி பிழைதிருத்துதல் ஊடாக இப் புத்தகம் வெளி வரும்வரைக்கும் தனது சொந்தப் பணியை முன்னெடுத்துக் கருமமாற்றுவது போல் பேருதவி புரிந்துள்ளார். இந்நூலின் அட்டை வர்ணத்தில் அமையவும், வர்ணப் படங்களின் அச்சாக் கத்திற்கும் கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள கார்த்திகேயன் பிரின்டேர்ஸ் பொறுப்பேற்றிருந்தார்கள். இவர்கள் அனைவரிற் கும் ஆசிரியரின் சிரம்தாழ்த்திய பெருமதிப்பும், உள்ளம் நெகிழ்ந்த நன்றியறிதல்களும் சென்றடைய வேண்டும்.

'பிறைநிலா' வெளியீடாக இரண்டாவது இந்நூல் இன்று உங்கள் கைகளில் தவழ்கின்றது. இந்நூலைப் பற்றிய உங்கள் உள்வாங்கல் - உள்அழுத்தங்கள் - திருத்தங்கள் என்றும் எப் போதும் ஆசிரியரால் வரவேற்கப்படும் – நூலின் நிலை - தரம் - பயன்பாட்டமைவு ஆகியவற்றிற்கு அவை என்றுமே வளம் சேர்க்கும்.

நன்றியுடன்,

வரலாற்றுத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.
10 - 10 - 1998

செல்லையா கிருஷ்ணராசா.

# சுருக்கங்களின் விளக்கம்

## Abbreviations

| | | |
|---|---|---|
| C. A. L. R. | – | Ceylon Antiquary and Literary Register. |
| C. J. | – | Colombo Journal. |
| C. H. J. | – | Ceylon Historical Journal. |
| C. V. | – | Culavamsa |
| E. T. | – | Epigraphia Tamilica |
| E. Z. | – | Epigraphia Zeylanica |
| J. R. A. S. C. B. | – | Journal of the Royal Asiatic Society of Ceylon Branch |
| K. M. | – | Kailayamalai. |
| Kek. san | – | Kokila Sandesaya |
| MV | – | Mahavamsa |
| U. C. R. | – | University of Ceylon Review |
| Y. V. M. | – | Yalppana Vaipavamalai |

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | I |
| | முகவுரை | III |
| | சுருக்கக் குறியீடுகள் | VI |
| 1. | தொல்லியல் என்றால் என்ன...... | 1 |
| 2. | நாகதீபம் ஓர் அறிமுகம்...... | 17 |
| 3. | கந்தரோடையும் அதன் பன்னாட்டு வாணிபப் பாரம்பரியமும்...... | 28 |
| 4. | வழுக்கையாற்றுப் பின்னணியில் கந்தரோடை.... (வழுதி தந்த வரலாற்று மூலகங்கள்) | 47 |
| 5. | நல்லூரும் மத்தியகாலத் திராவிடர் மரபுகளும்... | 76 |
| 6. | யாழ்ப்பாணமும் சாசனவியலும்...... | 101 |
| | அடிக்குறிப்புகளும் பயன்படுத்தப்பட்ட நூற்பட்டியலும் | 128 |
| | பின்னிணைப்பு — 1 | 150 |
| | பின்னிணைப்பு — 2 | 155 |
| | பின்னிணைப்பு — 3 கலாநிதி P. ரகுபதியின் தொல்லியற் கடிதம் | 158 |


*அத்தியாயம்*

*ஒன்று*

# தொல்லியல் என்றால் என்ன?

தொல்லியல் என்பது பண்டைக்காலத்தில் மனிதன் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றி ஆராய்ந்தறியும் ஓர் அறிவியற்துறையாகும். இவ்வறிவியற்துறையானது புராதன மனிதனதும், சமூகத்தினதும் வரலாற்றினைப் பற்றிய விளக்கங்களைப் பரிபூரணமாக அறிந்துகொள்வதற்குதவும் நடைமுறையாகக் காணப்படுகிறது. அத்தகைய அறிவியல் நடைமுறையானது பெருமளவுக்கு வரலாற்றுக்கு முற்பட்டகால மனித பரிணாமத்தின் பல நிலைகளையும் கட்டி எழுப்புவதற்கு உதவுவதாக அமைந்துள்ளது. அவ்வாறே எழுத்து மூலாதாரங்கள் கிடைக்கப் பெறுகின்ற நதிக்கரையோர நாகரிக வாழ்க்கை முறையிலிருந்து தொடரும் மனித வாழ்வின் பரிணாமம், பண்பாட்டு வளர்ச்சி நிலைகள், பண்பாட்டின் பிராந்திய ரீதியான தொடர்புகள் போன்ற இன்னோரன்ன அம்சங்களைப் பற்றியும் தொல்லியல் என்ற அறிவியல் நடைமுறையானது ஆராய்கின்றது.

அடிப்படையில் தொல்லியல் பற்றிய கோட்பாடுகள் 'அகழ்வு' என்ற மைய நிகழ்வொன்றினை ஆதாரமாகக் கொண்டே உருவாக்கப்பட்டவையாக உள்ளன. அவ்வாறு தொல்லியல் பற்றிய கோட்பாடுகள் உருவாக்கப்படும்பொழுது அதன் நோக்கவிதானமானது பன்முகப்படுத்தப்படும் நிலையைப் பெற்றுக் கொள்வதனைக் காணலாம். குறிப்பாக தொல்லியல் பற்றிய கோட்

பாடுகள் தூய விஞ்ஞானத்தைச் சார்ந்தும், சமூக விஞ்ஞானத்தினைத் தழுவியும் வரையறை செய்யப்பட்டுள்ள தன்மையை இங்கு குறிப்பிடலாம்.

'ஓர் அறிவியல் நடைமுறை' என்ற வகையில் தொல்லியலானது ''நவீன தூய விஞ்ஞானத்துறைகளைப்'' போல் சமமாக ஒப்பிடக்கூடியளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை எனச் சிலர் குறிப்பிட்டாலும், அத் தூய விஞ்ஞானத் துறைகளின் தொடர்புகள் இன்றி தனித்து இயங்கும் நடைமுறையாகத் தொல்லியல் காணப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே தற்காலத் தூய விஞ்ஞானத்துறைகள் பெருமளவிற்கு ஆய்வுகூட பரிசோதனை முறைகளை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைவது போன்று தொல்லியல் அமையாவிடினும் பொதுப்பட அதற்கென வரைவிலக்கணம் உண்டு. தொல்லியலின் நோக்கத்தினைப் பொறுத்தவரையில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும் கூட அத்துறை சார்ந்த அறிவியல் நடவடிக்கைகள் அடைந்து கொள்ளும் பயன்பாடு, ஏனைய தூய விஞ்ஞானத்துறைகள் அடைந்து கொள்ளும் பயன்பாட்டினை ஒத்ததாகவே அமைகின்றது. ஆகையால், நவீன விஞ்ஞானத்தின் ஓர் அங்கமாக தொல்லியல் என்ற அறிவியற்துறையானது அமைந்துள்ளது என்ற கருத்தினையும் உணர வேண்டும்.

புராதன மனித சமூகத்தினால் விட்டுச் செல்லப்பட்ட எச்சங்கள் (Remains) செய்பொருட்கள் (Artifacts) போன்றவற்றை மூலாதாரமாகக் கொண்டு உருவாக்கப்படுகின்ற ஓர் அறிவியல் தொகுப்பே தொல்லியலாகும். இவ்வறிவியல் தொகுப்பு நடைமுறைக்குள் தூய விஞ்ஞானமும், சமூக விஞ்ஞானமும் ஒன்றிணைவதைக் காணலாம். எனவேதான் தூய விஞ்ஞானத்தினையும் சமூக விஞ்ஞானத்தினையும் ஒன்றிணைத்த ஒரு தொட்டிலாக தொல்லியல் என்ற அறிவியற் சட்டகம் காணப்படுகின்றது. இங்கு தூயவிஞ்ஞானத்தினைச் சாராத அறிவியற் துறைகளான சமூகவியல், மானிடவியல், மொழியியல், வரலாறு, நாட்டாரியல் போன்றவற்றுடன், மண்படை அடுக்கியல், கனிப்பொருளியல், காலநிலையியல், மக்கட் பரப்பியல், உயிரியல், இரசாயனவியல், உடற்கூற்றியல், தொல்லுயிரியல் போன்ற தூய விஞ்ஞான அறிவியற்துறைகளும் சங்கமமாகின்றன. எனவே நவீன விஞ்ஞானத்தின் உப பிரிவுகளுள் ஒன்றாக தொல்லியல் என்ற அறிவியற்துறை இன்று வகிக்கும் பங்கானது மானுடத்தின் அறிவியல் வரலாறாகப் பரிணாமம் பெற்றுள்ளது எனலாம்.

தூய விஞ்ஞானத்தினைச் சாராத வரலாறும், மானிடவியலும் மனிதனை மையமாகக் கொண்டு ஆராய்கின்ற பொழுதிலும், அவை ஆராயப்படுவதற்குரிய அடிப்படைகளை தொல்லியல் பெற்றுக் கொடுக்கின்றது. வரலாற்று ஆசிரியர்கள் மனிதனால் எழுதி வைக்



கப்பட்ட நூல்களையும், சாசனங்களையும் அடிப்படையாகக் கொண்டு புராதன மனித நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்கின்றனர். இவர்கள் 'வரலாற்றுக் காலப்பகுதியில்' நிகழ்ந்த சமூக – பொருளாதார – சமய வளர்ச்சி நிலைகளையும் மாற்றங்களையும் தொல்லியற் சான்றுகள் தரும் குறிப்புகளின் அடிப்படையில் விளக்குகின்றனர்.

இதேபோன்று மானிடவியல் அறிஞர்களும் புராதன கால – மக்களின் வாழ்க்கைமுறை, மதப் பழக்க – வழக்கங்கள் – சொள்கைகள் – சமூக அமைப்பு முறைகள் போன்றவற்றை தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் விளக்க முற்படுகின்றனர். சமூகவியல் விஞ்ஞானிகள் புராதன மனித சமூகத்தில் எவ்வாறு படிப்படியாக சமூகக் கட்டமைப்பு உருவாகி, வளர்ச்சி பெற்று வந்தது என்றும். ஒவ்வொரு சமூக கட்டமைப்புக்குமிடையே காணப்பட்டிருக்கக் கூடிய தொடர்புகள் - ஒற்றுமை – வேற்றுமைகள் – தனித்தன்மைகள் போன்றவற்றை தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்ந்து விளக்க முற்படுகின்றனர். எனவே மனிதனை மையமாகக் கொண்ட இப் பிரபஞ்சத்தைப் பற்றிய ஆய்வுகளுக்கு உரிய ஆவணங்களைப் பெற்றுக்கொடுக்கின்ற ஓர் உப அறிவியற்துறையாக தொல்லியல் விளங்கி வருகின்றது என்று கூறினால் அது மிகையாகாது.

இப் பிரபஞ்சத்தில் மனிதன் தோன்றிய காலம் தொட்டு அவனது வரலாறும் தோற்றம் பெற்றது. இற்றையிலிருந்து சுமார் 500,000 வருடங்களுக்கு முன்னர் மனிதன் இப் பூமியில் தோற்றம் பெற்றிருந்தான் எனப் பொதுவாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு தோற்றம் பெற்ற மனிதன் இற்றையிலிருந்து சுமார் 5000 ஆண்டுகளுக்குச் சற்று முன்னரே நாகரிக வாழ்வு முறையே அறிந்திருந்தான் எனக் கூறப்படுகின்றது. எனவே அம்மனிதன் நாகரிக வாழ்வு முறையை கண்டுகொள்வதற்கு முன் உள்ள மிக நீண்ட காலப் பகுதியானது, மிருகங்களுடன் மிருகங்களாகவும், நாடோடிகளாகவுமே வாழ்ந்த காலப்பகுதியாக அமைந்திருந்தது. எனவே அம் மனிதன் ஆக்கிய பொருட்களைத்தேடும் முயற்சிகள், அவற்றைப் பற்றிய ஆய்வுகள் என்பவை மட்டுமன்றி கண்டெடுத்த பொருட்களை ஆராய்ந்து அம் மனித வாழ்வில் நிகழ்ந்த கடந்தகாலச் சம்பவங்களின் பல நிலைகளையும், அவை ஒன்றுடன் ஒன்று கொண்டிருந்திருக்கக் கூடிய தொடர்புகளையும் எடுத்துக் காட்டுவதாக அமைவதே தொல்லியலாகும். அவ்வகையில் ஒரு நாட்டின் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனித வாழ்க்கை பற்றிய பல நிலைகளை வெளிப்படுத்தும் ஒரேயொரு அறிவியற்துறையாக தொல்லியல் விளங்குவதனைக் காணலாம். அவ்வாறு நோக்கும் பொழுது தொல்லியல் ஒரு வரலாறு என்ற நிலையில் இருந்து சற்று மாறுதல் அலடவதனைக் காணலாம்.

ஒரு தொல்லியலாளனின் பணியானது ஒரு வரலாற்றாசிரியனின் பணியைப் போன்று தோற்றமளித்தாலும் கூட, வரலாற்றாசிரியன் தொழிற்படும் நிலையிலிருந்து தொல்லியலாளனின் நிலையானது பெருமளவுக்கு மாறுபட்டிருப்பதனைக் காணலாம். புராதன மனிதனைப் பற்றிய 'ஒரு தொகுப்பாகவே' வரலாறும் தொல்லியலும் காணப்பட்டாலும் கூட, வரலாறானது புராதன காலத்தைப் பற்றிய இதிகாசங்கள், புராணங்கள், நாணயங்கள், சாசனங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நகர – நாகரிக வாழ்வு முறையிலிருந்து உருவாகி, வளர்ச்சி பெற்றுச் சென்ற மனித வரலாற்றைச் சித்தரிக்கின்றது. ஆனால் தொல்லியலோ மனிதனது நாகரிக வாழ்வுக்கு முன்னுள்ள பல்வேறு பண்பாட்டு வாழ்க்கை முறைகளைப் பற்றி, மனிதன் சிறு குழுக்களாகச் சேர்ந்து வாழ்ந்த வாழ்வுமுறைகளைப் பற்றி, எந்தவிதமான எழுத்தாவணங்களுமின்றி, கிடைத்த சடப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கி நிற்கின்ற அறிவியற்துறையாக பரிணாமம் அடைந்துள்ளது. அவ்வகையில் ஒரு தொல்லியலாளன் பல துறைப்பட்ட தூயவிஞ்ஞான அறிவுமுறைகளை ஓரளவுக்காவது தெரிந்து வைத்திருக்க வேண்டிய நிலையில் அல்லது அத்துறையில் துறைபோனவர்களைத் துணைக்கழைக்கவேண்டிய நிலையில் இருப்பதைக் காணலாம். எனவே தொல்லியல் ரீதியான மனித பரிணாமம் பற்றிய விளக்கமானது வெறும் வரலாற்று விபுரணம் போன்றில்லாது விஞ்ஞான நடைமுறைகளைச் சார்ந்ததாக இருப்பதனைக் காணலாம்,

தொல்லியலை 'ஒரு சடப்பொருட் பண்பாடு' பற்றிய ஆய்வுத்துறையாகவும் குறிப்பிடுவர். புராதன மக்களுடைய பல்வேறு நிலைப்பட்ட பண்பாட்டு – குழுநிலை வாழ்க்கை முறைகளைப் பற்றியே தொல்லியலாளன் ஆய்வு செய்கின்றான் என்பது வெளிப்படை. அவ்வாறான ஆய்வு நோக்கத்திற்கு அடிப்படையான தகவல்களைப் பெற்றுக் கொடுக்கின்ற மூலங்கள் சடப் பொருட்களாகவே காணப்படுகின்றன. மனித உடலெச்சங்களும், மனித செய்பொருட்களுமே தொல்லியலாளனுக்குதவுகின்ற சடப்பொருளாகும். அவ்வகையில் சடப்பொருட்களினூடாக அறியப்படும் ஓர் ஆய்வுத்துறையாகத் தொல்லியல் காணப்படுகின்ற தன்மையினால் அதனை ஒரு 'சடப்பொருட் பண்பாடு' எனக் குறிப்பிட்டனர். தொல்லியல் நடைமுறைகளில் பெற்றுக் கொள்ளப்படுகின்ற சடப்பொருட்களின் அடியாக குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினரது ஆன்மீகக் கருத்துக்கள் உள்ளிட்ட வாழ்க்கை முறைகளைக் கட்டி எழுப்புவதற்கு தொல்லியலாளன் முயல்கின்றான். சடப்பொருட் பண்பாட்டில் ஆன்மீகக் கருத்துக்களை வெளிப்படுத்தும் திறன் தொல்லியலாளனையே சாரும். இவ்விரு கருத்துக்களும் ஒன்றிற்கொன்று நேர் எதிரானவையாக இருந்



தும், தொல்லியல் என்ற அறிவியல் நடைமுறையினுள் இவ்விரு அம்சங்களும் இணைவதனைக் காணலாம். அதாவது தொல்லியலாளனது செயற்பாட்டின் அடிப்படையில் பார்த்து – தொட்டு அறியக்கூடிய சடப்பொருட்களைக் கொண்டு, பார்க்க முடியாத – உணர முடியாத புராதன மக்களது ஆன்மீக வாழ்வு – மொழி வாழ்வு முறைகளை ஓரளவுக்கு உருவாக்கிக்கொள்ளலாம் என்பதாகும்.

Archaeology என்ற ஆங்கிலப் பதத்திற்குரிய நேரடியான மொழி பெயர்ப்பாகவே தொல்லியல் என்ற பதம் இன்று வழங்கப்படுகிறது. இப்பதமானது இரு கிரேக்க சொற்களின் இணைவூடாக உருவாக்கப்பட்டது. Archia , Logos என்ற அவ்விருபதங்களும் முறையே 'தொன்மையான' , 'அறிவியல்' என்ற பொருளில் வழங்கின. எனவே தொன்மையான அறிவியல் ' தொல்லியல் 'என உருவாக்கம் பெற்று வருகின்றது. முதன்முதலாக (Archaeology) என்ற ஆங்கிலப் பதத்தினை 1803 ம் ஆண்டில் ஐரோப்பாவில் உபயோகிக்கப்பட்டமையைக் காணலாம்.

பின்னர் அலெக்ஸாந்தர் கோர்டன் என்பவர் இச்சொல்லின் பரவலான உபயோகத்தினை தனது ஆக்கங்களில் பயன்படுத்தியுள்ளமையைக் காணமுடிகின்றது. அவ்வகையில் பழமையையும் அறிவியற்துறையினையும் இணைக்கும் இரு சொற்கள் ஒன்று சேர்க்கப்பட்டதன் விளைவாகவே தொல்லியல் என்ற அறிவியற்துறையைக் குறிக்கும் சொற்பதம் உருவாக்கப்பட்டது. இப்பதத்தின் வேர்ச்சொற்களை எடுத்துப் பகுத்து விளக்குவோமானால் தொல்லியல் என்பது பழையன பற்றிய ஓர் அறிவியல் என்ற கருத்துப்பட நிற்பதனைக் காணலாம். இவ்வடிப்படையிலேயே பழம்பெருந் தொல்லியலாளர்கள் தத்தமது கோட்பாடுகளை தொல்லியல் தொடர்பாக எடுத்து விளக்கியிருப்பதனைக் காணலாம்.

'உற்ரகாம்ப் கிளார்க்' என்பவர் தனது 'தொல்லியலும் சமூகமும்' என்ற நூலில் தொல்லியல் என்றால் என்ன என்பது தொடர்பாக விளக்கியுள்ளார்.

> ''பழமையை மீளமைக்கின்ற போக்கில், புராதன
> பொருட்களைப் பற்றிய ஒழுங்கமைக்கப்பட்ட
> அறிவியல் அடிப்படையே தொல்லியலாகும்.''

> "Archaeology may be simply defind as a
> systematic study of antiquities as a means
> of reconstrueting the past"

உற்ரகாம்ப் கிளார்க், தொல்லியல் பற்றிய தனது கோட்பாட்டில் 'முறைப்படியான பழம்பொருட்கள் பற்றிய ஆய்வே தொல்லியல்' என வற்புறுத்துவதனைக் காணலாம். விபரண முறையில் அமைந்த இக்கோட்பாடானது மிகப் பரந்த பொருளில் அமைக்கப்பட்டுள்ளது. கிளார்க் குறிப்பிடும் பழம் பொருட்களானவை மனிதனதும், மனிதனால் உருவாக்கப்பட்ட செய்பொருட்களினது எச்சங்களினதும் தொகுப்பாகவே உள்ளன. எனவே மனித எச்சங்களினதும், மனித செய் பொருட்களினதும் பாகுபாடு பற்றிய வரன்முறைகளும், அவ்வரன் முறைகளை அடியொற்றிய விளக்கங்களும் ஒரு முறைப்படியான அறிவியல் அணுகுமுறை மூலம் ஒன்று சேர்க்கப்படும்பொழுது தொல்லியல் என்ற அறிவியற்துறை உருவாகின்றது. 'ஓர் அறிவியற்துறை' என்ற வகையில் பழம்பொருட்கள் பற்றிய முறைப்படியான ஆய்வு மேற்கொள்ளப்படும்பொழுது தொல்லியல் என்ற துறையானது சமூகவியல், மானிடவியல், உடற்கூற்றியல், மருத்துவவியல், தொல்லுயிரியல் போன்ற வளர்ந்துவரும் பல்வேறு வகைப்பட்ட அறிவியற்துறைகளுடன் தொடர்புபட்டதாக உருவாக்கப்படுவதனையும் காணலாம். இப் பின்னணியிலேயே வரலாற்றுக்கு முற்பட்ட கால, வரலாற்றுக் கால மனித வரலாற்றினை மீளமைக்க முடியும் என்பது உற்ரகாம்ப் கிளாக்கினது நம்பிக்கையுமாகும்.

கத்தலின் எம். கென்யான் என்றவொரு பழம்பெரும் தொல்லியலாளர் தொல்லியல் என்றால் என்னவென்று பின்வருமாறு வரையறை செய்வதனைக் காணலாம்.

> ''தொல்லியல் என்பது ஒரு விஞ்ஞான ஆய்வாகும். புராதன மனித இனத்தின் சடப்பொருள் முதல் வாழ்வின் அம்சங்களைக் கண்டு கொள்வதற்குரிய ஓர் அணுகு முறை இதுவாகும். தொல்லியலானது தன்னளவில் மட்டுமேயுள்ள ஒன்றல்ல; அது வெறுமனே கருத்துருவம் அற்ற ஆய்வுமில்லை, மக்கள் வாழ்ந்த வாழ்வு முறையைப் பற்றியும், அவர்கள் வணங்கிய முறையைப் பற்றியும், அவர்கள் கலைகள், வர்த்தகம், நுண்கலைகள் ஆகியவற்றை உருவாக்கிய வழிகள் பற்றியும் ஆராய்கிறது.''

> ''Archaeology is the scientific study, it is the method of finding out about the past of the human race in its material aspects. Archaeology is not an end in itself, not just and abstract study. the material aspects of the study of may be the way of people live, the way of worship, the way of built art, trade and their crafts.''



கென்யானுடைய தொல்லியல் பற்றிய கோட்பாடானது அதன் நோக்கத்தினைப் பொறுத்தமட்டில் மிகவும் பரந்ததாக இருப்பதனைக் காணலாம். அவருடைய வரைவிலக்கணத்தின் முக்கியமான பகுதி 'தொல்லியல் தன்னளவில் மட்டுமே நின்று விடுவதில்லை' அது கருத்துவமற்ற ஓர்ஆய்வுமல்ல' என்பதாக அமைந்துள்ளது (Archaeology is not an end in itself, not just and abstract study) மரபு ரீதியான தொல்லியல் பற்றிய கோட்பாட்டில் கென்யானுடைய வரைவிலக்கணமானது மிகவும் பிரசித்தம் வாய்ந்ததாகவுள்ளது. 'தொல்லியல் தன்னளவில் மட்டுமே நின்றுவிடுவதில்லை' என்ற கருத்தானது சமூகவிஞ்ஞான அறிவியல் துறைகளுக்கும் ஆவணங்களை வழங்குகின்ற ஒரு துறையாகவும் அது செயற்பட்டுக்கொண்டு வருவதனைக் குறிப்பிட்டு நிற்கின்றது. சமூக விஞ்ஞான அறிவியற்துறை என்று குறிப்பிடும்பொழுது சமூகவியல், மானிடவியல், மொழியியல், வரலாறு போன்றவற்றைக் கூறலாம். இவற்றுக்கெல்லாம் அடிப்படைத் தகவல்களை வழங்கும் ஒரு துறையாகவே தொல்லியல் அமைந்துள்ளது என்பது கென்யானது கருத்தாகும். அவ்வாறான நிலையில் தொல்லியலானது சடப்பொருட்களுடாகவே மனித வாழ்வின் பல வழிகளைப் பற்றியும் ஆராயமுனையும்பொழுது அது கருத்துவம் அற்ற ஆய்வாக அமைய முடியாது என்பதும் கென்யானது கருத்தாகும்.

கத்தலின் கென்யானது தொல்லியல் பற்றிய கோட்பாடானது க்ளின் டானியல் (Glyn Daniel) என்பவரது தொல்லியல் பற்றிய கோட்பாட்டுடன் கிட்டத்தட்ட ஒத்துப்போவதைக் காணலாம். க்ளின் டானியலினது தொல்லியல் பற்றிய கோட்பாடு பின்வருமாறு உள்ளது:

> ''ஒரு தொல்லியலாளன் (தொல்) பொருட்களில் விருப்புடையவனாக இருக்கின்றான். ஏனென்றால் புராதன மக்களின் வாழ்வின் பல வழிகளையும் மீளமைப்பதற்குரிய ஒரு பாதையை வகுத்துக் கொள்வதற்காகவாகும்.''

> "An Archaeologist is interested in things and in the way they may be used to recenstruct the ways of life of past people."

டானியலின் இக்கோட்பாடு கென்யானது கோட்பாட்டின் இறுதிப் பகுதியை ஒத்துக் காணப்படுவதனை அவதானிக்கலாம். இருவருமே தொல்லியலானது புரதான மக்களின் வாழ்வின் பல வழிகளையும் மீளமைப்பதற்கு முயல்கிறது என்ற அடிப்படைக் கருத்தில் ஒத்த கருத்துடைய்வர்களாக இருப்பதனைக் காணலாம். இங்கு

ஒரு தொல்லியலாளன் புராதன மக்களுடைய வாழ்வு முறையின் பல வழிகளையும் திருப்பியமைப்பதற்கு உபயோகிக்கும் பொருட்டு ஒரு வகையான பொருட்களில் நாட்டமுடையவனாகக் காணப்படுகின்றான். டானியல் குறிப்பிடுகின்ற பொருட்களுக்கும் கென்யான் குறிப்பிடுகின்ற 'கருத்துருவம் அற்றது அல்ல' என்பதற்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதனைக் காணலாம். பொதுவாக தொல்லியல் ஒரு 'சடப்பொருட் பண்பாடு' என அண்மையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அவ்வகையில் அச் சடப்பொருட்பண்பாடு இரு வகையாகப் பாகுபடுத்தப்படுவதனையும் காணலாம்.

1. மனித எச்சங்கள் (Human Remains)
2. மனிதனால் செய்யப்பட்ட பொருட்கள் (Human artifacts)

இவ்விருவகையான அடிப்படைச் சான்றுகளை உபயோகித்தே புராதன மக்களுடைய பல்வேறு வழிநிலைப்பட்ட வாழ்வு முறைகளை கட்டி எழுப்புவதற்கு தொல்லியலாளன் முயற்சிக்கின்றான் என்பது கென்யானதும் டானியலினதும் பொதுவான எண்ணக் கருவாகும்.

தொல்லியல் தொல்லியலாளன் உபயோகப்படுத்துகின்ற சடப் பொருட்கள் (Materials) அப்பொருட்களை விட்டுச் சென்ற மக்கள் சமூகத்தினருக்குரிய ஆன்மீகக் கருத்துக்கள் (Spiritual) உள்ளிட்ட வாழ்க்கைமுறைகளைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படை ஆதாரமாக விளங்குவதனைக் காணலாம்.

சடப்பொருட் பண்பாடும் ஆன்மீகப் பண்பாடும் ஒன்றிற்கொன்று நேர் எதிரானவை. தொல்லியலாளன் கண்டு, உணர்ந்து. தொட்டு எடுக்கக்கூடிய சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு, பார்க்கவும் உணரவும் முடியாத புராதன மக்களது பலத்தினை மீளமைப்பு செய்கின்றான். இவ்வகையில் கென்யான் குறிப்பிட்ட 'தொல்லியலானது கருத்துருவம் அற்றது அல்ல' என்ற கருத்து இங்கு மேலும் வலியுறுத்தப்படுவதையும் காணலாம்.

கடந்த ஐந்து தசாப்தங்களாக தொல்லியலானது ஓர் ஒழுங்கான அமைப்பில் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. அவ்வகையில் தொல்லியல் தொடர்பான கோட்பாடுகளும் சமூகக் கோட்பாட்டு ரீதியாக உருவாக்கப்பட்டு வந்துள்ளமையைக் காணலாம். குறிப்பாக 1960 களிலிருந்து தொல்லியல் தொடர்பாக உருவாக்கப்பட்ட கோட்பாடுகள் மிகவும் தெளிவான வரையறைக்குள்ளாக்கப்பட்டமையைக் காணலாம். சேர் மோட்டிமர் வீலருடைய தொல்லியல் பற்றிய



கோட்பாடு அவ்வகையில் முதலில் நோக்கத்தக்கது. அது பின்வருமாறு:–

> ''ஒரு தொல்லியலாளன் பொருட்களை அகழ்ந்
> தெடுக்கவில்லை; ஆனால் (எடுப்பது) மக்களையே''
> '' Archaeologist digging not things but people''

வீலருடைய இக்கோட்பாடானது தொல்லியலினது பிரதான நோக்கத்தினை வெளிப்படுத்தி நின்றாலும், ஏற்கனவே குறிப்பிடப்பட்ட 'சடப்பொருட் பண்பாடானது' இங்கு மக்களுடன் எவ்வாறு தொடர்புபடுத்தப்படுகின்றது என்பதனைக் காணலாம். தொல்லியலினுடைய பிரதான நோக்கம், இயல்பு இந்த இரண்டு அம்சங்களும் வீலருடைய நேர்த்தியான – ஆனால் மிகச் சுருக்கமான வரையறையினால் தெளிவாக்கப் பட்டுள்ளமையையும் காணலாம்.

வீலருடைய தொல்லியல் பற்றிய கோட்பாடானது, விஞ்ஞான ரீதியாகத் தொல்லியல் அகழ்வாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டமையைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டதாகும். இதனால் அகழ்வுக்கும் புராதன சமூகத்துக்குமிடையிலான தொடர்பினை, மிகவும் இலகுவாக வெளிப்படுத்தும் நிலையில் அவருடைய கோட்பாடு வரையறை செய்யப்பட்டது. இது தொல்லியலை சமூகவியல் ரீதியாக ஆராய முற்படும் ஒரு நிலையை – தொடக்கத்தினைக் குறித்தது எனலாம். வீலருடைய நூலான (Archaelolgy from the Earth) என்பது தொல்லியல் பற்றிய சிறந்த அணுகுமுறையை உள்ளடக்கிய நூலாக இன்று கருதப்பட்டு வருகிறது,

## சமூகவியலும் தொல்லியற் கோட்பாடுகளும்:

1960 களிலிருந்து தொல்லியலில் ஏற்பட்டு வந்த அபிவிருத்திகளானவை அவ்வொழுங்குமுறைபற்றிய பகுத்தறிவாண்மையின் போக்காக உருப்பெற வழிவகுத்தது. அத்தகைய ஒரு போக்குநிலை வெறும் தகவல் சேகரிப்புக்கு எதிராகவும், வெறும் 'இலக்கிய விபரண' முறையில் நோக்குகின்ற நடைமுறைக்கெதிராகவும், மரபு வழி வந்த தொல்லியற் கோட்பாடுகளை மறுதலிக்கின்ற வகையிலும் வளர்ச்சி பெற்றுச் சென்றது. இவ்வாறான பகுத்தறிவாண்மையானது அவ்வொழுங்கு தொடர்பான 'ஆய்வு முறை' பற்றிய விசாரணையாகவும் உருப்பெற்றது. ஆய்வு முறை பற்றியது எனக் குறிப்பிடப்படும்பொழுது தகவல் சேகரிப்புக்களை 'அணுகும் முறை" அல்லது ஆய்வுமுறைக்கான 'ஓர் அணுகு முறை' எனக் குறிப்பிட

லாம். இது பெருமளவுக்கு நேர்த்தியான, பூரணத்துவமான முறையில் தொல்லியலின் நோக்கின் அடிப்படையில் பழமை பற்றிய வரன்முறையைத் தருவதாக அமைவதனைக் காணலாம். என்ன வகையான தொல்லியல் பதிவுகளாக இருந்தாலென்ன, சேகரிக்கப்பட்ட தகவல்கள் எவ்வெவ்வகையிலும் வேறுபட்டு தனித்துவப்படுத்தப்பட்டாலென்ன ஆனால் இவை யாவும் பொருள் ரீதியான நோக்கில் ஏற்றுக் கொள்ளக் கூடியவையாகவும்' நடைமுறைக்குச் சாத்தியமானவையாகவும், ஆய்வினது நோக்கத்தினை அடித்தளமாகக் கொண்டு அமைந்தால் அதுவே 'பெறுமதி மிக்க ஓர் அணுகுமுறை' யாக அமையும்.

பெறுமதிமிக்க இவ்வாறான ஓர் அணுகுமுறையானது பின்வரும் மூன்று மையக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு 1960 களிற்கு பின்னர் வளர்த்தெடுக்கப்பட்டுச் செல்வதனைக் காணலாம்.

1. அழிந்தவை போக, எஞ்சியுள்ள புராதன காலத்துப் பொருட்கள் எவையோ அவற்றிலிருந்து மிகக் கூடியளவிற்கு எவ்வாறு தகவல்களைத் துருவிப் பெறுவது என்பது.

2. சடப்பொருள் பண்பாட்டினைக் கட்டியெழுப்புகின்ற நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு மிகவும் உகந்த முறை எது என்பது.

3. ஒரு தொல்லியலாளனை அவனது சடப்பொருள் முதல் ஆய்வு முறையில் எவ்வாறு அணுக வைப்பது என்பது. அதாவது செய்பொருட்களுடனும் அவற்றின் படிவுச் சூழலுடனும் தொல்லியலாளனை ஒன்றிக்க வைத்தல் என்பதாகும்.

மேலே குறிப்பிட்ட கருத்துருவங்களின் அடிப்படையில் தொல்லியலில் சமூகக் கோட்பாடுகள் பற்றிய கலந்துரையாடல்கள் மிக அண்மைக் காலம் வரைக்கும் மேற்கொள்ளப்பட்டன. பழமையைப் பற்றிய முழுமையானதும் மிகவும் பொருத்தமானதுமான கட்டமைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான வழியில் தொல்லியல் தவிர்ந்த ஏனைய சமூகவிஞ்ஞான அறிவியற்துறைகளுடன் தொல்லியல் ஆதாரங்களை இணைப்பது தொடர்பாக உசாத்துணை விபரங்கள் பல குறிப்பிடப்பட்டன. எந்தவகையான சமூக எண்ணக் கருக்களையும் தொல்லியல் ஆதாரங்களுடன் இணைத்துப் பார்க்கப்படக்கூடியவை என்ற நோக்கத்தினை அடைவதற்கு முயற்சி செய்யப்படுகின்றன. உதாரணமாக 'பழம் பொருளாதாரம்' என்ற துறையானது உயிரியல், இனத்துவக் கோட்பாடுகள் பற்றிய பரிணாமம் சமூகக்



கோட்பாடுகளில் பொருந்திவருவதிலும் பார்க்க, தொல்லியற் கோட்பாடுகளுடன் கூடுதலாகப் பொருந்தி வருவதனைக் காணலாம். மார்க்ஸீய தொல்லியலாளர்கள் தமது சமூகரீதியான நோக்கினைக் கொண்ட செய்பொருட்கள் பற்றிய அணுகுமுறையாக்கத்தினை சமூகமாதிரிகள், கோட்பாடுகள், விதிகள் என்பவற்றை விட, மிகவும் செம்மையாக உருவாக்கியுள்ளனர்.

கோட்பாடு பற்றிய இந்த எண்ணக்கருவாக்கத்தினுள் நின்று நாம் தொல்லியலாளனைப் பற்றிய இரு பிரதான வடிவங்களை இங்கு குறிப்பிடலாம்.

1. தொல்லியலாளன் ஒரு துப்புத் துலக்குபவன்.
2. தொல்லியலாளன் ஓர் உடற்கூற்றியல் நிபுணன்.

இவ்வெண்ணக் கருவாக்கத்தினுள் நின்று தொல்லியலாளனது அவ்விருவகை வெளிப்பாட்டின் தொழிற்பாடுகளையும் இங்கு நோக்குவது தொல்லியல் கோட்பாடுகள் எந்தளவிற்கு சமூகவியல் ரீதியாக நடைமுறைப் படுத்தப்படுகின்றன என்பதனை அறிவதற்கு உதவுவதாக அமையும்.

## தொல்லியலாளன் - ஒரு துப்புத்துலக்குபவன்:

தொல்லியல் ஒரு 'பிரசித்தி பெற்ற ஐதிகம்' என்ற நிலையில், ஒரு தொல்லியலாளனின் பணியானது துப்பறிவாளன் என்ற நிலையுடன் இணைக்கப்படுவதனைக் காணலாம். துப்பறிவாளன் என்ற நிலையில் ஒரு தொல்லியலாளன் பழமையை மீளமைக்கு முகமாக ஒன்று சேர்க்கப்பட்ட ஒழுங்கற்ற தடயங்களை பகுத்து, வெவ்வேறாக்கி, உடைந்த துண்டுகளாகவிருக்கும் புராதன சமூகத்தினைத் திரும்பவும் ஒட்டி, உருவாக்கி கட்டி எழுப்ப முயற்சிக்கின்றான். பழமை என்பது தொடக்கத்தில் மாயப் பொருளாகவும், அதனை அடைந்து கொள்வது என்பது முடியாததாகவும் இருந்தது. உடைந்த துண்டங்களினூடாகவே மட்டும் ஆராயப்படுகின்ற ஒரு பொருள் பழமை எனவும் கருதப்பட்டது. இத்தகைய ஒரு பணியில் ஈடுபடுகின்ற தொல்லியலாளன் ஒரு துப்பறிவாளனைப் போன்ற விஞ்ஞான ரீதியான நடவடிக்கையூடாக அப்பழமையின் முழுமையை வெளிப்படுத்த முயல்வதனைக் காணலாம்.

தொல்லியலாளன் துப்புத்துலக்குகின்ற நோக்கில் கடகடக்கும் வண்டிபோன்ற தர்க்க விஞ்ஞானத்தினூடாக பயணம் செய்வதனைக் காணலாம். அப்பயணமானது, காலத்தின் பின்நோக்கியதாக தன்னைப்படுத்துவதனையும், பழமையைக் கண்டு பிடித்து அதன் மாயை என்ற

போர்வையை விலக்கவும், உண்மையில் அப்பழமை எவ்வாறிருந்தது என்பதனை தொல்லியலாளர் அல்லாதவர்களுக்குச் சொல்லவும். ஏன், எப்போது, எவ்வாறு, யார் அப் பழமையை உருவாக்கியிருந்தார்கள், அது எமது நிகழ்காலத்திற்கு எவ்வாறு தலைமை கொண்டிருந்தது என்றவாறாக தொழிற்படுவதனையும் காணலாம். இவ்வாறு தொழிற்படுவது என்பது உண்மையில் மிகவும் இலகுவான ஒரு பணி அல்ல என்பதும் எமக்குத் தெரியும். இதனாலேயே பழமைமையைக் கட்டி எழுப்புகின்ற பணியானது ஒரு துப்புத்துலக்குபவன் போன்ற பணியை ஒத்தது எனக் கூறப்பட்டது.

நவீன தொல்லியலின் அணுகுமுறையில் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் தொல்லியலான பிரசித்தம் வாய்ந்த ஐதீகத்தினை வெளிப்படுத்தி, தெளிவுபடுத்துவதாகவே ஒரு தொல்லியலாளனுடைய துப்புத்துலக்குகின்ற பணி அமைகின்றது. பலகோடி வருடங்களாக பரிணாமமடைந்த மானிட சமூகத்தின் பல தூற்றுக் கணக்கான உடைவின் சிதைவுகளை உள்ளடக்கிய செய்பொருட்களையும், எச்சங்களையும் திரும்பவும் கண்டுபிடித்து ஒட்டவைக்கின்ற மாபெரும் பணியொன்றினைத் தொல்லியலாளன் ஆற்ற வேண்டியிருக்கின்றமையால் அவனுடைய இப்பெரும் பணியினை துப்புத்துலக்குகின்ற ஒருவனுடைய பணியுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றார் மைக்கல் சான்ங்ஸ் என்பவர் இங்கு துப்புத்துலக்குகின்ற பணியானது கற்பனை ரீதியாக அல்லாது முற்றுமுழுதாக தர்க்க விஞ்ஞானத்தின்பாற்பட்டதாக அமைந்தமையினை அவதானிக்கலாம். அவ்வகையில் ஒரு தொல்லியலாளனுக்கு புராதன சமூகத்தைப் பற்றிய பல குறிகாட்டிகள் அல்லது துணுக்குகள் கிடைத்தமையை அடிப்படையாகக் கொண்டு அச் சமூகத்தினுடைய உண்மையான வடிவத்தினையும், அதனுடைய இயக்கவியலையும் எமக்கு எடுத்துக்காட்டுகின்ற பணி உரியாதாகின்றது. அதனால் நவீன நோக்கில் ஒரு தொல்லியலாளன் ஒரு துப்புத்துலக்குபவன் என்ற கருத்து மிகவும் பொருத்தமாகின்றது.

## தொல்லியலாளன் - ஓர் உடற்கூற்றியல் நிபுணன்:

நவீன தொல்லியல் கோட்பாடுகளின் வருகையோடு தொல்பொருட்களின் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்படும் அறிவு முறையானது உடற்கூற்றியல் நிபுணத்துவத்தை அடிப்படையாகக் கொண்டமைந்தது என வரையறை செய்யப்பட்டுள்ளது. அறிவினை ஈட்டிக் கொள்ளும் ஒரு முறைமைக்குள்ளே பல்வேறு அணுகுமுறைகளும் கோட்பாடுகளும் பல்வேறு பரிகார முறைகளையும், நோய் தீர்க்கின்ற முறைகளையும் முரண்பாடாக உருவாக்கியுள்ளது. இன்று தொல்



லியலில் கூட பெரும்பாலான கோட்பாடுகள் அவ்வாறே அமைத்துள்ளன.

Pathology யில் அதன் நோக்கமானது தனிப்பட்ட விருப்பு – வெறுப்புக்களுக்கப்பாற்பட்ட நிலையில் நோயைக் கண்டுபிடித்து, அதற்குப் பரிகாரம் தேடுவதேயாகும். அதேபோன்று தொல்லியற் கோட்பாட்டு முறைகளும் ஆரோக்கியத்தினையே அறிவுறுத்துகின்றன. செய்பொருட்களே தொல்லியலின் ஆரோக்கியமான நோக்காக அமைகின்றன.

இங்கு சமூகத்தோடு தொடர்புபட்ட வகையில் தொல்லியலாளனது பணியை வைத்தியனுடன் ஒப்பிட்டு விளக்கியுள்ளார் மைக்கல் சான்ங்ஸ் என்பவர், அதாவது தொல்லியல் என்ற அறிவியற்துறையை அணுகும் முறையானது இப்பொழுது ஓர் உடற்கூற்றியல் நிபுணன் எவ்வாறு அறுவை சிகிச்சையின் பொழுது ஒரு நோயாளியோடு நடந்து கொள்கின்றானோ அந்த வகையை ஒத்தது என்பதாகும். எனவே ஒரு தொல்லியலாளன் எலும்பு முறிவு வைத்தியனைப் போன்று உடைந்த புராதன சமூகத்தினை ஒட்டவைக்கின்ற பணியில் ஈடுபடுகின்றான். அவ்வகையில் தொல்லியலானது சமூகக் கோட்பாடுகளுடன் இணைத்துக் காட்டப்படுகிறது.

ஓர் உடற்கூற்றியல் நிபுணர் வைத்திய பரிசோதனையின்போது அல்லது அறுவை சிகிச்சையின்பொழுது எவ்வாறு, உரியமுறையில் அவரது ஒழுங்குவிதிகளுக்கேற்ப, விதந்துரைக்கப்பட்ட வழிநின்று அப்பணியினை நடாத்தி, நோயைக் குணமாக்க முயல்கின்றாரோ அதனையொத்த வகையில் ஒரு தொல்லியலாளனும் குறிப்பிட்ட நிலப்பரப்புக்களில் வாழ்க்கை முறை சீரழிந்து அழிவடைந்தமைக்கான காரணிகளையும், அச்சமூகத்திற்குப் பீடித்திருந்த நோய்கள் பற்றியும், அதன் தன்மை, நம்பிக்கைகள் போன்ற இன்னோரன்ன அம்சங்களை விதந்துரைக்கப்பட்ட தொல்லியற் கோட்பாடுகளின் நெறிமுறை நின்று நடாத்தும் பணிக்கு ஒப்பிடப்படுகின்றான்.

ஒரு மனிதனது தேக ஆரோக்கியம், சுத்தமான வாழ்வு, புறச்சூழல், சுத்தமான உடல்நிலை என்பன பற்றிய வைத்தியக் குறிப்பே அவனது நீண்ட கால ஆரோக்கிய வாழ்வினை அறிந்து கொள்வதற்கு உதவுகின்றது. அதேபோன்று ஒரு தொல்லியலாளனது பணிகளின் முறைப்படியான பதிவுகள் அவன் தொல்லியற் கோட்பாடுகளின் வழிநின்று நடாத்துகின்ற ஆய்வின் ஆரோக்கியத்திற்கும் வழி சமைக்கின்றது. அல்லாவிடில் சேர் மோட்டிமர் வீலர் குறிப்பிட்டுள்ளபடி முறைப்படியான பதிவுகள் இல்லையெனில் (அகழ்வு என்பது) அழிவாகி

விடும்' என்ற கருத்து ருசுப்படுத்தப்பட்டுவிடும். எனவேதொல்லியலின் நாடித்துடிப்பு என்பது பதிவுகள் என்பதே,

இது வைத்தியனுடையதும் தொல்லியலாளனுடையதுமான ஒரு பணியாகும் என்பது வெளிப்படை. எனவே மைக்கல் சான்ங்ஸ் ஓர் உடற்கூற்றியல் நிபுணனுடன் தொல்லியலாளனை ஒப்பிட்டு நோக்குவது மிகப் பொருத்தமாகும்.

தொல்லியல் ஒரு 'தூய்மையான விஞ்ஞானம்' என்ற கருத்துப்பட பல கோட்பாடுகள் இன்று முன் வைக்கப்பட்டுள்ளன. நவீன தொல்லியல் அறிவு முறைக்கும், வளர்ந்துவரும் விஞ்ஞானத்திற்குமிடையே இருக்கின்ற தொடர்பு எத்தகையது என்பது தொடர்பாக அறிஞர் மட்டத்தில் பல பிரச்சினைகள் நிலவிய வண்ணமுள்ளன. தொல்லியல் என்ற அறிவியற்துறைக்கு ஏனைய தூய விஞ்ாளத்துறைகள் ஆற்றுகின்ற பங்களிப்பானது காலப்போக்கில் தொல்லியலை தூய விஞ்ஞானத்துறைகளுள் ஒன்றாக ஆக்கிவிடும் எனக் கருதப்படுகின்றது.

அதாவது நவீன தொல்லியலின் அடிப்படைக் கோட்பாடுகளுடன் தொடர்பான அகழ்வாய்வு முறைகள், பழம் பொருட்களைப் பாதுகாக்கின்ற முறைகள், அவற்றுக்கான காலக்கணிப்பு முறைகள் ஆகியன முற்றுமுழுதாக வளர்ந்து வரும் தூய விஞ்ஞானத்துறைகளுடன் இணைந்த வகையில் உள்ளன. பூமியில் உள்ள மண்படைகளை அகழும்பொழுது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பெருமளவுக்கு புவியமைப்பு இயலுடன் தொடர்புபட்டதாக இருப்பதனைக காணலாம். மண்படை அடுக்கியல் தொடர்பான விதிமுறைகள் தொடர்பாக Strata Smith என்பவர் குறிப்பிட்டதாவது:- 'புவியோட்டினது அடித்தளத்திலுள்ள மண்படை அடுக்கானது மேற்தளத்திலுள்ள மண்படையடுக்கிலும் பார்க்க காலத்தால் முற்பட்டது' என்பதாகும். இக் கோட்பாடானது புவியமைப்பியல் தொடர்பானதாக காணப்பட்டாலும், இன்று தொல்லியலில் விஞ்ஞான முறையிலமைந்தஅகழ்வு முறையின் அடிப்படையாகவும் அது பின்பற்றப்படுவதனையும் காணலாம்.

இதேபோன்று தொல்லியலுக்கும் தூய விஞ்ஞானத்திற்குமிடையிலான தொடர்பினை 'புராதன பழம் பொருட்களின் பாதுகாப்பு' தொடர்பான விதிமுறைகள் ஊடாகவும் கண்டு கொள்ள முடிகின்றது. அகழ்வாய்வின்பொழுது குறிப்பிட்ட ஈரலிப்பான மண்படை அடுக்குகளிலிருந்து ஒரு முழுமையான மட்கலத்தினை மீட்டெடுக்க முனையும்பொழுது அது உடனடியாக மண்ணோடு மண்ணாக உதிர்ந்து விடுவதனைக் காணலாம். ஆனால் பழம்பொருட் பாதுகாப்பு



தொடர்பான விஞ்ஞான விதிமுறைகளை அனுசரித்து அம் மட்கலத்தினை முழுமையாக மீட்டெடுக்க முடிகிறது. அவ்வகையில் குறிப்பிட்ட இரசாயனக் கலவையைக் குறிப்பட்ட அம் மட்கலத்தின் மீது தூவி அதனை இறுகச் செய்வதன் மூலம் அவ்வருமையான செய் பொருளை இவ்வுலகிற்கு முழுமையாக வெளிப்படுத்தலாம். இதே போன்று பல்வேறு வகையான உலோக நாணயங்கள் தொடர்பான பாதுகாப்பும் இரசாயனக் கலவைகள் மூலம் செய்யப்படுகிறன. உலோகத்தாலான சிற்பங்கள், வர்ணங்களினாலான ஓவியங்கள், இலகுவில் ஒடிந்துவிடும் ஓவியங்கள் என்பன எல்லாம் நீண்டகால உபயோகத்திற்கு உதவுகின்ற வகையில் விஞ்ஞான ரீதியாக பாதுகாக்கப்படுவதனைக் காணலாம். இவ்வாறு நன்கு பாதுகாக்கப்பட்ட புராதன செல்வங்களுக்குரிய திட்டவட்டமான காலப் பாகுபாட்டினை நவீன விஞ்ஞானத்தில் பல கூறுகளினூடாக கணித்துக் கொள்வதனைக் காணலாம். உதாரணமாக குறிப்பிடுவதாயின் மண்படை அடுக்குகளிலிருந்து வெளிப்படுத்தப்படும் எலும்புத்துண்டு ஒன்றின் கால வரையறையை (Radio Carbon 14) முறைமூலம் கண்டு கொள்ள முடிகிறது. இதேபோன்று மட்பாண்டம் ஒன்றினது அல்லது கழிவு இரும்பினது (கிச்சுக்கிட்டம் – Iron Slagy) காலத்தினை Thermoluminiscence என்ற வெப்பமேற்றுவியல் அடிப்படையில் கணித்துக் கொள்ள முடிகிறது.

இவ்வாறு நவீன விஞ்ஞானத்திற்கும் தொல்லியலுக்குமிடையிலான தொடர்பு இப்பொழுது நேரடியானதாகவும், அதன் நடைமுறை வடிவம் துணையானதாகவும் அல்லது மறைமுகமாகவும் அமைந்திருப்பதனைக் காணலாம். அந்த வகையில் தொல்லியல் ஒரு விஞ்ஞான அறிவியல் என்ற கருத்து வலுப்பெற்று வருவதனைக் காணலாம்.

தொல்லியல் 'ஒரு கலை' என்ற கருத்தும் அறிஞர் மத்தியில் நிலவுவதைக் காணலாம். அகழ்ந்து எடுக்கப்படுகின்ற தொல்பொருட் கருவூலங்களை வெறும் காட்சிப் பொருளாக மட்டும் கருதி, அவற்றை அரும் பொருளகங்களில் அல்லது வீட்டிலுள்ள 'விருந்தினர் அறையிலோ' மட்டும் வைத்து அழகியல் உணர்வுடன், பார்க்காது, அவை வெறும் காட்சிப் பொருட்கள் மட்டுமல்ல, புராதன சமூகத்தினுடைய ஏற்றமிகு வாழ்வின் நுணுக்கங்களையும், அனுபவ திரட்சிகளையும் இரகசியமாகத் தன்னுள்ளே அடக்கிய ஒரு 'பண்பாட்டுக்குவளை' என்ற கருத்து இன்று அறிஞர் மட்டத்தில் நிலவுகின்றது. அவ்வகையில் வெளிப்படுத்தப்படும் தொல்லியல் கருவூலங்களுக்குரிய பூரண விளக்கத்தினைக் கொடுக்கின்ற முறையானது ஒரு கலை எனப்படுகிறது. இக்கலை முறையின் அடியாக புராதனப்

பழங்குடி மக்களின் யதார்த்தமான வாழ்க்கை வரலாறு தெளிவாக்கப் படுகின்றது. எனவே வரலாற்று ஆதாரங்கள் தோற்றம் பெற்ற பின்னரும் தொடர முடியாது இருந்த வரலாற்றுக்கு முற்பட்ட கால நிகழ்வுகளை தொல்லியல் என்ற 'விபரணக்கலை மூலம்' தொடர வைக்க முடியும் என்ற நம்பிக்கை தொல்லியலாளர் மட்டத்தில் நிலவுகின்றமையால், அவ்வகையான ஒரு முறையை கலை என வர்ணித்துள்ளனர்.

அண்மைக் காலங்களாக தொல்லியல் என்ற பதமானது பலவித 'அறிவியற் கலைகளை' இணைத்த ஒன்றாகவே கணிக்கப்படுகிறது. கடலுக்கு அடியில் நீரில் மூழ்கி ஆய்வு செய்யும் முறை பெருவளர்ச்சி அடைந்து வருவது குறிப்பிடத்தக்கது. புராதன 'கடல்கோள்' பற்றிய கருதுகோள்களுக்கு சான்று சேர்க்கும் ஒரு கலையாக நீருக்கடியில் தொல்லியல் ஆய்வு செய்யும் முறை வளர்ச்சி பெற்றுள்ளது. இது மட்டுமன்றி, நவீன விஞ்ஞானத்தின் உயர் வளர்ச்சி நிலை காரணமாக அயல் கிரஹங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற சடப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு அயற்கிரஹ தொல்லியல் ஆய்வு முறையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனலாம்.

# அத்தியாயம் இரண்டு

## நாகதீபம் : ஓர் அறிமுகம்

யாழ்ப்பாணக் குடாநாட்டை மையமாகக் கொண்டு, பிற்பட்ட 15 – ம் நூற்றாண்டு வரைக்குமுள்ள காலப்பகுதிக்குரிய வரலாற்று அம்சங்களை, அங்கு இதுவரைக்கும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளினதும், அகழ்வாய்வுகளினதும், வரலாற்றாய்வுகளினதும் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுபேறுகளின் மூலமாக எடுத்து விளக்குவதாக இந்நூல் அமைகிறது. இதன் அடிப்படையில் வரலாற்றுக் காலத்தில் நாகதீபம் என அழைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணப் பிரதேசத்தினைக் குறிப்பாக தீபகற்பப் பகுதியின் வரலாற்றுத் தொன்மையை இலங்கைத்தீவின் பிரதான நிலப்பகுதியுடனும், சிறப்பாகத் தென்னிந்தியத் தீபகற்பத்துடனும ஒப்பட்டு நோக்குவது பிரதான நோக்கமாக உள்ளது.

இத்தொகுப்பு முயற்சியானது யாழ்ப்பாணக் குடாநாட்டின் தொல்லியல் பற்றி ஈழத்துத் தொல்லியல் ஆய்வாளராலும், வரலாறு, நாட்டார் மரபியல், சமூகவியல் ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்ட ஆய்வாளர்களாலும், வெளிநாட்டைச் சேர்ந்த தொல்லியலாளர் பல்வேறு கால கட்டங்களில் இங்கு மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் பல்வேறு சஞ்சிகைகளிலும், நூல்களிலும், நாளேடு வார இதழ்

களிலும் வெளியிடப்பட்ட அக்கருத்துக்களினதும் முடிவுகளினதும் ஒன்று திரண்ட வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது.

'யாழ்ப்பாணக் குடாநாடு என்று குறிப்பிடும்பொழுது அது உண்மையில் ஒரு 'புவியியற் பதமாக' அமைந்திருந்தாலும் கூட 'யாழ்ப்பாண இராச்சியம்' என்ற வரலாற்றுப் பதத்துடன் மிகவும் நெருங்கிய ஒன்றாகக் கணிக்கப்படுவதனையும் அவதானிக்கலாம். யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமுட்பட அதன் தலைநகர், இராச்சியப் பரப்பு சின்னம் ஆகிய விடயங்கள் பற்றியும் தொல்லியல்-வரலாற்று ஆசிரியர்கள் மத்தியில் பல சந்தேகங்களும், கருத்து முரண்பாடுகளும் இருந்து வருகின்றன இந்நிலையில் யாழ்ப்பாண வரலாற்றை அறிய முற்படுவோருக்கும், அவ் ஆய்வில் ஈடுபட முனைவோருக்கும் ஏற்படுகின்ற ஒரு பிரச்சினையானது அப்பிராந்தியம் தொடர்பான போதிய சான்றுகள் இல்லாதிருப்பதேயாகும். இக் காரணத்தினால் யாழ்ப்பாண வரலாற்றின் புராதன அரசியல், பொருளாதார, சமய பண்பாட்டு வரலாறு பற்றி தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பில்லாதொழிகின்றது இதனால் வரலாற்று ஆசிரியர்கள் பலர் இலங்கைத்தீவின் வரன்முறை வரலாற்றேடுகளான தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம், (1ம் 2ம் 3ம் பாகங்கள்) போன்றவற்றையும், தமிழில் கி. பி. 15ம் நூற்றாண்டுக்குப் பின்னர் குடாநாட்டினகண் தோற்றம் பெற்ற இலக்கியங்களையும் அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணத்தின் வரலாற்றினை எழுத முற்பட்டுள்ளனர்[1]. இவ்வாறு எழுதப்பட்ட வரலாறானது அடிப்படையில் பல தவறுகளையும் இடைவெளிகளையும், இடையீடுகளையும் கொண்டு விளங்குவதனையும் அவதானிக்க முடிகிறது. இந்தவகையில் யாழ்ப்பாணத்தின் புராதன வரலாற்றினை அறிவதற்குத் தொல்லியல் ஆய்வின் முக்கியத்துவம் மேலோங்கிக் காணப்படுவதனையும் மறுப்பதற்கில்லை.

அந்நியராட்சிக்கால யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வரலாற்றுப் பெருமை மிக்க பல கலைக்கருவூலங்களும் வரலாற்றுச் சான்றுகளும் அழிக்கப்பட்ட சம்பவத்தினை உறுதிப்படுத்துவதாக கி. பி. 17ம் நூற்றாண்டில் மயில்வாகனப் புலவரால் எழுதப்பட்ட 'யாழ்ப்பாண வைபவமாலையில்' குறிப்பொன்று இடம்பெற்றுள்ளது.[2] ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுக் கால வரலாற்றுச் சிறப்புடைய யாழ்ப்பாண இராச்சியத்தில் மன்னனாக ஆட்சி புரிந்த ஒருவனுடைய பெயர்கூட ஒரு கல்வெட்டிலாவது பேணப்பட்டு இதுவரையில் கிடைக்கவில்லை. அந்நியர்களான போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆகியோர்களது ஆட்சியின்போது இத்தகைய ஆவணங்கள் பல உருத்தெரியாமல் அழிக்கப்பட்டன அல்லது அவர்களால் தமது கட்டிடங்களுக்குள்



குறிப்பாக கோட்டைகளுக்குள்ளும் மறைத்துக் கட்டுவிக்கப்பட்டன. இந்நிகழ்வானது குடாநாட்டின் முதற்தர மூலாதாரங்களை அழித்தொழிப்பதாக அமைந்தது. இரண்டாவது நிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கண் உள்ள சில இடங்களில் தற்செயலாக பல தொல்லியற் சின்னங்கள் கண்டெடுக்கப்படுவதனையும், அவை பின்னர் அவற்றின் தன்மையைப் பொறுத்து மறைக்கப்படுவதனையோ அல்லது அவற்றின் 'வரலாற்றுப் பெறுமதி' உணரப்படாமல் கைவிடப்படுவதனையோ காணலாம்.[3] பல சட்டங்களில் எந்தவிதமான திட்டமிட்ட ஆய்வுமுயற்சிகளுமின்றி, பெறுமதிமிக்க வரலாற்றுக் கருவூலங்கள் பல இங்கு கிடைத்திருந்தும். அவை வரலாற்று ஆய்வாளர்களது கவனத்திற்கு கொண்டுவரப்படாமல் மறைக்கப்பட்ட செயல் உண்மையிலே இப்பிராந்தியத்தில் வாழும் மக்களது 'வரலாற்று உணர்வற்ற' தன்மையினையே எடுத்துக் காட்டுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின்கண் உள்ள ஓரிரு மையங்களைத் தவிர, பெரும்பாலான பகுதிகள் திட்டமிட்ட தொல்லியலாய்வுக்குட்படுத்தப்படாத நிலையிலேயே இருந்து கொண்டிருப்பதனைக் காணலாம். அமெரிக்க பென்சில்வேனியாப் பல்கலைக் கழகக் குழுவினர் கந்தரோடையிலும்[4], யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் ஆனைக்கோட்டையிலும்[5] நிகழ்த்திய முறைப்படியான ஆய்வுகளைத் தவிர, தனிப்பட்டோராலும், இத்துறை ஆய்வாளர்களாலும் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளின் அடிப்படையிலும் தொல்லியல் – வரலாற்றுத் தடயங்கள் பல சேர்க்கப்பட்டன அவை இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்றுக்கு முற்பட்ட நிலையில் நிகழ்ந்த அபிவிருத்திகளை சோடிட்டுக் காட்ட, பெருமளவுக்கு உதவுகின்றன. பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தினரின் கந்தரோடை மீதான ஆய்வு பூரணப்படுத்தப்படாத நிலையில் இருப்பதனால் அது பற்றிய ஆய்வறிக்கை கூட இன்னும் வெளியிடப்படவில்லை. இதேபோன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்து வரலாற்றுத் துறையினர் ஆனைக்கோட்டையில் மேற்கொண்டிருந்த அகழ்வாய்வு தொடர்பான தமது அறிக்கையினையும் இன்னும் வெளியிடவில்லை. இது யாழ்ப்பாணக் குடாநாட்டின் தொன்மையைப் பற்றி ஆய்வோருக்கும் கற்போருக்கும் ஒரு பெருங் குறைபாடாகத் தெரிகிறது, இந்நிலை நீங்க வேண்டும். ஆய்வறிக்கைகள் வெளிவர வேண்டும், அப்போதுதான் 'நாகதீபம்' என அழைக்கப்பட்டு, வரலாற்றுக் காலத்தில் புகழ் பெற்றிருந்த இப் பிராந்தியத்தின் முக்கியத்துவத்தினை இலங்கைத்தீவின் பிரதான நிலப்பகுதியுடனும். தென்னிந்தியப் பரப்புடனும் ஒப்பிட்டு நோக்கிக்கொள்ள முடியும்.

வரலாற்றுக்காலத்தில் 'நாகதீபம்' என அழைக்கப்பட்டிருந்த பிரதேசத்தின் வரலாற்றுப் பின்னணியை நோக்குவதும் இந்நூல்

பற்றிய இந்த அறிமுகத்தில் முக்கியமானதாகும். அந்த வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பற்றிய சுருக்கமான வரலாற்றோட்டத்தினை கி. பி. 15 ம் நூற்றாண்டு வரைக்குமுள்ள காலத்தை எல்லையாகக் கொண்டு குறிப்பிடுவது இங்கு நோக்கமாகின்றது. இந்நோக்கம் பெருமளவுக்கு இலக்கிய சாசன மூலாதாரங்களின் அடிப்படையில் வரையப்பட்டுள்ளது.

தென்னாசியாவில் மனித சமூகங்கள் வாழ்ந்துவரும் பிரதேசங்களுள் யாழ்ப்பாணக் குடாநாடும் ஒன்றாகும். இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேலாக இப் பிராந்தியத்தில் மனிதர்கள் நடமாடி வருகின்றனர் மிகவும் அண்மைக் காலங்களில் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வுகளின் பயனாக இப்பிராந்தியமானது வரலாற்றுக் காலத்திற்கு முன்னரிலிருந்தே மனித நடமாட்டத்திற்குரிய ஒரு பகுதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தது என்பதனை கருதுகோள்களின் அடிப்படையில் முன்வைக்க முடிகிறது. நீண்டகால மனித வரலாற்றையுடைய ஒரு பிரதேசமாக இருந்தாலும் அதன் வரலாற்றைத் தொடர்ச்சியாகவும் தெளிவாகவும் அறிந்து கொள்ளப் போதிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை [6] ஆனாலும் யாழ்ப்பாணக் குடாநாடானது மிகவும் தொன்மையான வரலாற்றுப் பாரம்பரியத்தினைக் கொண்டு விளங்கியிருந்தது என்பதனை ஈழத்துப் பாளி இலக்கிய மூலாதாரங்களினூடாகவும் சமகாலத் தென்னிந்திய இலக்கிய – சாசனச் சான்றுகள் வாயிலாகவும் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாடு அமைந்திருக்கும் நிலையே (Location) அதன் வரலாற்றுத் தன்மையை, அதன் தொன்மையை தீர்மானித்த ஒரு காரணி எனலாம். இக்குடாநாடு ஏறக்குறைய 1,220 சதுர மைல்கள் பரப்பினைக் கொண்டுள்ளது,[7] இக்குடாநாட்டின் மூன்று கரையோரங்களிலும் அமைந்து காணப்பட்ட இறங்குதுறைகள், துறைமுகங்கள் என்பன வர்த்தக – பண்பாட்டுப் பாரம்பரியங்களை பரிமாறிக்கொள்ளும் வாயில்களாக விளங்கின. யாழ்ப்பாணக் குடாநாட்டின கரையோரங்களில் உள்ள இறங்குதுறைகளினதும், துறைமுகங்களினதும் பெயர்களைக் கவனிக்கும்போது இந்த உண்மை நன்கு புலப்படும். இறங்குதுறைகளின் பெயர்கள் பெருமளவுக்கு அங்கிருந்து எந்த கப்பல்களும், கட்டுமரங்களும் புறப்பட்டுச் சென்றனவோ அவ்விடத்தின் பெயரையே கொண்டிருப்பதனைக் காணலாம்.[8]

தமிழ்நாட்டு வரலாற்றுப் போக்கு, யாழ்ப்பாணக்குடா நாட்டின் வரலாற்றைப் பெருமளவுக்குப் பாதித்திருப்பதனால் அதனைப் பற்றியும் இங்கு குறிப்பிடல் வேண்டும். தமிழ் நாட்டில் பாண்டிய நிலப் பரப்பு மிகவும் பழமை வாய்ந்த ஒன்று என்பதனை அங்கு மேற்



கொண்ட அகழ்வாய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.[9] தமிழ் நாட்டில் நாகரிக வளர்ச்சியானது பாண்டிய நாட்டிலிருந்தே படிப்படியாக வடக்குத்திசை நோக்கி பரவியமையைக் காணலாம்.[10] இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையிலும் கூட நாகரிக வளர்ச்சியானது வடக்கிலிருந்து தெற்கு நோக்கியதாகவே அமைகின்றது.[11] இதனை இலங்கையின் பாளி இலக்கிய ஏடுகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன தமிழ்நாட்டில் பாண்டியநாடு எந்தளவுக்குத் தொன்மை வாய்ந்ததாக விளங்கியதோ அந்தளவிற்கு அத்தன்மையை மாதோட்டமுட்பட யாழ்ப்பாணக் குடாநாடும் கொண்டு விளங்கியிருந்தது எனலாம். எனவே கடல் வழிவந்த ஒருவகையான செல்வாக்கிற்கு உட்பட்டதாகவே தமிழ்நாட்டில் பாண்டியநாடும், இலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாடும் அமைந்திருந்தமையை ஒப்பிட்டு நோக்கிக் கொள்ளலாம். மத்திய தரைக்கடலில் கிரீட்டன் தீவில் வளர்ச்சி பெற்றிருந்த ஏஜியன் நாகரிகம் எவ்வாறு கடலை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றதோ அத்தன்மையை ஒத்து யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் நாகரிகம் வளர்ச்சி பெற்றிருந்தது எனலாம் [12] யாழ்ப்பாணக்குடா உட்பட மன்னார்க்குடா தொடக்கம் பாண்டியநாடு வரையிலான இந்து சமுத்திரப் பகுதி முத்து விளையும் பிரதேசமாக விளங்கியமையால் அது இயல்பாகவே சர்வதேச வர்த்தகத்தை ஈர்க்கின்ற ஒரு பகுதியாக அமைந்ததெனலாம். சிந்துவெளி மக்களுடன் பாண்டியநாட்டு முத்துவர்த்தகத் தொடர்பு இருந்திருக்கலாம். என்பது சில வரலாற்றாசிரியரின் கருத்தாகும் [13] யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து மேற்குத் திசையில் தென்னிந்தியாவிற்கு அண்மையில் அமைந்துள்ள மாலைதீவுகளில் சிந்துவெளி நாகரிகத்தின் எச்சங்கள் அண்மையில் அகழ்ந்து பெறப்பட்டுள்ளன [14] பாண்டிய மன்னர் கொண்ட மீன் இலச்சினைக்கும் சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட மீன் முத்திரைக்கும் இடையிலே தொடர்புண்டு என்ற கருத்தும் நிலவுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் எழுச்சி பெற்றிருந்த 'யாழ்ப்பாண அரசு' இராமேஸ்வரம் சேதுபதிகளின் மேலாதிக்கத்தின் கீழ் இருந்தபொழுது வெளியிட்ட நாணயங்களில் இரட்டை மீன்சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது என்பதனை சேர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்.[15] எனவே சமுத்திரவியல் தொடர்பான நாகரிக வளர்ச்சியின் கட்டுக்கோப்பினுள், யாழ்ப்பாணக் குடாநாடும் ஒன்றிணைந்திருந்தது என்பதனைக் கண்டுகொள்ள முடிகிறது. அந்தவகையில் இக் குடா நாட்டின் வரலாறானது மிகவும் புராதனமானது என்... உறுதி செய்து கொள்ளலாம்.

கொழும்பு தமிழ்

இலங்கைத்தீவின் வரலாற்றினைக் கூறிச்செல்லும் பாளி இலக்கிய வரலாற்றேடான மகாவம்சம், யாழ்ப்பாணக் குடாநாட்... ...றிய

சில செய்திகளைத் தருவதனைக் காணலாம். புத்தருடைய இலங்கைக்கான மும்முறை விஜயம் பற்றிக் குறிப்பிடும்பொழுது நாகதீபத்துக்கான வருகையை இரண்டாவதாக மகாவம்சம் கூறுகின்றது.[16] எனவே இலங்கையின் இரண்டாவது பாளி பௌத்த இலக்கியமான மகாவம்சத்திலேயே 'நாகதீபம்' பற்றிய முதலாவது குறிப்பு இடம்பெற்றமையை இங்கு அவதானிக்க முடிகிறது. மகாவம்ச நூலுக்கு முந்திய இலக்கியமாகக் கொள்ளப்படும் தீபவம்ச நூலில் நாகதீபம் பற்றிய குறிப்பு இடம்பெறாததும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவற்றிற்கு அடுத்த நிலையில் தமிழ்ப் பௌத்த நூலான மணிமேகலையில் நாகதீபம் என்ற சொற்பிரயோகம் இடம்பெறுவதனை அவதானிக்க முடிகிறது.[17]

நாகதீபம் என்பது எந்த இடத்தினைக் குறித்து நின்றது என எவருக்குமே திட்டவட்டமாகத் தெரியாததால் அதனைச் சாதகமாகக் கொண்டு பலரும் பலவிதக் கருத்துக்களை தெரிவித்துள்ளனர். நாகதீபம் என்பது யாழ்ப்பாணக் குடாநாட்டையே குறிக்கின்றதெனப் பொதுப்படையாகக் கொண்டாலும் ஒருசில வரலாற்றாசிரியர்கள் நாகதீபம் இலங்கையின் வடமேற்குப் பகுதியில் அமைந்து காணப்படுகின்றது எனக் குறிப்பிட, வேறுசிலர் அது வடகிழக்குக் கரையையே குறிக்கின்றது எனத் தெரிவித்துள்ளனர்.[18] வெளிநாட்டு (கிரேக்கப்) புவியியல் அறிஞனான தொலமி என்பவனுடைய இலங்கைப் படத்தின்படி நாகதீபம் என்பது இலங்கையின் வடகிழக்குப் பகுதியையே குறித்து நிற்கின்றது. லூயிஸ் என்பவர் நாகதீபம் என்பது மகாவலி கங்கைக்கு வடக்கே அமைந்து காணப்படுகின்றது என எடுத்துக் காட்டினார்.[19] இவ்வாறாக நாகதீபத்தின் சரியான நிலையம் எது என்பது பற்றிய பிரச்சினை இருந்தபோதிலும், இலங்கையின் வடகிழக்குப் பிராந்தியத்தில் அமைந்துள்ள வல்லிபுரக் கோவிலில் கண்டெடுக்கப்பட்ட பொற்சாசனத்தின்படி நாகதீபம் என்பது யாழ்ப்பாணக் குடாநாட்டினையே குறித்து நிற்கின்றது எனக் குறிப்பிடுவர்.[20]

இக் கட்டத்தில் நாகதீபம் பற்றி பேராசிரியர் பரணவிதான கொண்டிருக்கும் கருத்தும் இங்கு நோக்கத்தக்கது.

'இலங்கையில் கல்யாணி, நாகதீவு போன்ற மனித உலகின் சில இடங்கள் மனிதர்களின் வசிப்பிடங்களாகக் கருதப்படவில்லை என்ற உண்மை மகாவம்சத்திற் கூறப்படுவதனால் நிரூபிக்கப்படுகின்றது. நாகதீவிற்கும் இலங்கையின் ஏனைய பகுதிகட்கும் புத்தர் வந்தபோது அங்கு மனித ஜீவன்கள் இருக்கவில்லை என மகாவம்சம் குறிப்பிட்டுள்ளது. இலங்கையின் ஐதீகக் கதைகளில் காணப்படுகின்ற மணி நாக அல்லது மணி – அக்கி, மகோதர போன்ற நாக அரக்கர்களின் பெயர்கள் சமஸ்கிருத இலக்கியத்தில் மனித வர்க்கத்திற்கு அப்பாற்பட்ட நாகர்களுடன் சேர்த்துக் கூறப்படுகின்றன. மணிநாக வழிபாடு இந்தியாவில் மத்திய காலம்வரை நிலவியது. சில அறிஞர்களைப் பொறுத்த வரையில் வழமையாகிவிட்டதாலும், நாகர்களை மனித ஜீவன்களாக மாற்றுவது நியாயமற்றதாகும். நாகர்களை மனிதர்களாகக் கொள்ளலாம் என்பதற்குக் காட்டும் வாதம் தேவர்களை மனிதர்களாகக் கொள்வதற்கு உதவும். நாகர்களை மனித ஜீவன்களாகக் கொண்டாலும், அவர்களைத் திராவிடருடன் அடையாளம் காண்பதற்கு எவ்விதக் குறிப்பான காரணங்களுமில்லை. பழைய நாகதீவில் தற்போது தமிழர்கள் வாழ்கின்றார்கள் என்ற காரணத்துக்காக நாகர்களைத் திராவிடர்களாகக் கொண்டாலும், வட இந்தியாவில் உள்ள நாகபுர என்ற இடத்தினைச் சுற்றி இன்று மொழியைப் பொறுத்து ஆரியர்கள் வாழ்வதனால் நாகர்களை ஆரியர்களாகவும் எடுக்கலாம்...'



இவ்வாறு பரணவிதானவின் நாகதீபம் பற்றிய விளக்கத்தினை நோக்கும்பொழுது பல மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ள முடிகிறது. முதலில் அவருடைய இக்கருத்தானது நாகதீபத்தின் பழமைத் தன்மையை ஒருவகையில் எடுத்துக் காட்டுகின்றதெனலாம். பரணவிதான நாகதீபம் பற்றிக் கொண்டிருக்கும் கருத்தானது எந்தளவுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கது என்பது ஒரு புறமிருக்க, நாம் இங்கு கவனிக்க வேண்டியது அவர் கொண்டிருக்கும் கருத்தின் பிற்பகுதியாகும். அதாவது, நாகரை மனிதவர்க்கத்தினராகக் கொண்டாலும் அவர்களை ஆரியர்களாகவும் கொள்ளக் காரணமுண்டு என ஒன்றன் பின் ஒன்றாக தன் நிலையிலிருந்து விலகித் தெரிவிக்கும் கருத்தில் நாகர் என்போர் திராவிடர்களாகவும் இருந்திருக்கலாமோஎன்ற ஓர் அச்சம் அவருக்கு இழையோடுவதனையும் கவனிக்க முடிகிறது.

விஜயனது வருகைக்கு முன்னரேயே யாழ்ப்பாணக் குடாநாடு முக்கியத்துவம் பெற்று விளங்கியது என்ற கருத்தினை ஒரு வரலாற்றாசிரியர் தனது ஆய்வுக் கட்டுரையின் ஒரு பகுதியில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''விஜயனது வருகைக்கு முன்னரேயே இலங்கையில் ஐந்து ஈஸ்வரன் ஆலயங்கள் இருந்தன. இந்தச் சிவ ஈஸ்வரன் ஆலயங்களுக்கு இந்தியாவில் இருந்துகூட மக்கள்

வந்து வழிபட்டுச் சென்றனர். இந்த ஆலயங்களாவன: மகாதித்தாவுக்கு அருகிலுள்ள திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், காங்கேசன்துறைக்கு அருகிலுள்ள நகுலேஸ்வரம் என்பனவாகும். இக் கோவில்களுடன் தொடர்புடைய துறைமுகங்கள் மிகச் செல்வம் நிறைந்த வியாபாரிகளது கூட்டத்தினராலே நிறைந்திருந்தன.[21]''

தொடர்ந்து மகாவம்சம் தரும் குறிப்புக்களை நோக்கும்போது வரலாற்றுக் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு பெற்றிருந்த முக்கியத்துவத்தினை நோக்க முடிகிறது. தேவநம்பியதீசன் என்ற மன்னனின் ஆட்சிக்காலத்தில் ஜம்புக் கோளத் துறைமுகத்தினூடாக மௌறியப் பேரரசனான அசோகனுக்குப் பரிசுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டதாக குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளமையை அவதானிக்கலாம். ஜம்புக்கோள என்பது தற்போது காங்கேசன்துறைக்கு அருகிலுள்ள ஜம்புத்துறை எனக் குறிப்பிடுகின்றது. ஜம்புத்துறைக்கு அருகிலுள்ள ஓர் இடமான திஸ்ஸமடுவம் என்பது இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட போதிமரக் கிளையை வைத்து பூஜிக்கப்பட்ட ஓர் இடம் என்பது மகாவம்சத்தினூடாகத் தெரிகிறது.[22] ஜம்புக் கோளத்தில் ஒரு போதிமரக் கிளையை வைத்து வழிபாடு செய்வித்த தேவநம்பியதீசன் என்ற மன்னன் அங்கிருந்து மிகுதி போதிமரக் கிளைகளை (07) அனுராதபுரத்தை நோக்கியமைக்கப்பட்ட பெருந்தெருவினூடாக எடுத்துச் சென்றான் எனவும் இப் பெருந்தெருவானது இருமருங்கும் அலங்கரிக்கப்பட்டதாக, வெண்மணல் தூவப் பெற்றுக் காணப்பட்டது எனவும் மகாவம்சம் குறிப்பிடுகின்றது. எனவே புராதன காலத்திலேயே யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடன் பெருந்தெருவினால் இணைக்கப்பட்டதாகத் தெரிகிறது. மாதோட்டத்தில் அகழ்வாய்வு மேற்கொண்டபொழுது 40 அடி அகலமான ஒரு பெருந்தெருவின் போக்கு கண்டுபிடிக்கப்பட்டமையிலிருந்து மகாவம்சத்தின் இக்கூற்றை உறுதிப்படுத்திக்கொள்ள முடிகிறது.[23]

நாகதீபத்தில் தேவநம்பியதீசனால் (தமிழ்ப்) பௌத்தவிகாரம் ஒன்று அமைக்கப்பட்டதாகவும், அதற்கு திச அல்லது திஸ்ஸவிகாரை எனப் பெயரிடப்பட்டதாகவும் மகாவம்சத்தில் குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.[24] வசபனுடைய வல்லிபுரப் பொன்னேடு தரும் விபரத்திலிருந்து பியகுகதீசன் என்பவன் நாகதீபத்தில் ஒரு விகாரையை அமைப்பித்தான் என்பதனையும் அறியமுடிகிறது[25] வல்லிபுரப் பொன்னேடு கி. பி. 3ம் அல்லது 4ம் நூற்றாண்டுக்குரிய பிராமி வரிவடிவில் பொறிக்கப்பட்டது என்பதும் பேராசிரியர் பரணவிதானவின் வாசிப்புடன் மட்டுமே அது ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்பட்டுக்



கொண்டு வரப்படுகின்றதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழ்ப் பிராமியுடன் பரிச்சயமுடைய ஒருவர் வல்லிபுரப் பொன்னேட்டுச் சாசனத்தினை வாசிக்க முயலும்போது தமிழ்ப் பௌத்த நூலான மணிமேகலையில் குறிப்பிடப்படுகின்ற 'மணிபல்லவம்' என்ற பெயர் பொறிக்கப்பட்டிருப்பதனைக் காண முயறசிக்க முடியும். இந்நிலையில் நாகதீபத்தின் தலைநகராக மணிபல்லவம் விளங்கியிருந்தது என்பதனையும், அவ்விடமே தற்காலத்தில் வல்லிபுரத்திற்கண்மையில் உள்ள 'பல்லப்பை' என்ற கிராமமுமாகும் என்பதனை அடையாளம் காணமுடியும். தொடர்ந்து நாகதீபத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை மணிபல்லவத்துடன் தொடர்புபடுத்தி மணிமேகலை கூறும் செய்திகளை தொல்லியலுடன் இணைந்தவகையில் ஆய்வு செய்யவேண்டிய கடமைப்பாடு எம் எல்லோருக்குமுண்டு.

யாழ்ப்பாணக் குடாநாடு புராதன காலத்திலிருந்து குடியிருப்புக்களைக் கொண்ட முக்கியமான ஒரு பிரதேசமாக இருந்து வந்தது என்பதற்கு மகாவம்சம் காட்டும் இன்னோர் குறிப்பினையும் நோக்கலாம். இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட எட்டுப் போதிமரக் கன்றுகளில் ஒன்று ஜம்புக்கோளத்தில் கப்பலிலிருந்து இறக்கியதும் அதேயிடத்தில் நாட்டப்பட்டது எனவும் பின்னர் அதற்கு மன்னன் தீசன் ராஜ்யாபிடேகம் செய்வித்து வைத்தான் எனவும் குறிப்பிடப்பட்டது. மேலும் இங்கு போதி விருட்சத்தைக் கொண்டுவந்த வணிகர் குழுவைச் சேர்ந்த எட்டுப்பேரும் அதுமுதல் 'போதிவிருட்சக் குழு' என அழைக்கப்படலாயினர் என மகாவம்சத்தில் குறிப்புக்கள் இடம் பெறுவதிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் புராதன காலம் தொட்டு வணிக முயற்சிகள் நடைபெற்று வந்தன என்பதனையறியக் கூடியதாகவுள்ளது.[26] இந்த வணிக நடவடிக்கைகள் யாவும் ஜம்புக் கோளத் துறைமுகத்தினூடாக நடைபெற்றது என்பதனையும் அறியக்கூடியதாகவுள்ளது. பிற்காலகட்டத்தில் குறிப்பாக கி. பி. 11ம், 12ம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வர்த்தகம் முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதனை 1ம் பராக்கிரமபாகுவின் நயினார்தீவு தமிழ்க் கல்வெட்டினால் உணரக்கூடியதாகவுள்ளது.[27]

மகாவம்சத்தில் துட்டகைமுனு – எல்லாள மன்னன் பற்றிக் கூறப்படும் வரலாற்றுப்பாகத்தில் புங்குடுதீவு பற்றிய செய்தியும் இடம்பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது. துட்டகைமுனு அல்லது துட்டகாமணி என்றழைக்கப்பட்ட சிங்கள மன்னன் எல்லாளன் என்ற தமிழ் மன்னனுடன் போரிட்டபோது தமிழ்ப்படைகளில் ஏற்பட்ட அழிவினைக்கண்டு மனம் வருந்தியதாகவும், பியங்கு தீபத்திலிருந்து வந்த (தமிழ்ப்) பிக்குகள் அவனுக்கு ஆறுதல் வார்த்தைகள்

கூறியதாகவும் மகாவம்சத்தில் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.[28] எனவே பியங்குதீப என்றழைக்கப்பட்ட புங்குடுதீவு கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே முக்கியத்துவம் வாய்ந்த ஓரிடமாக விளங்கி வந்தது என்பதனை உணரலாம்.

இதுவரைக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பற்றிய செய்திகள் வரலாற்றாசிரியர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலும் மகாவம்சத்தில் கூறப்பட்டதனடிப்படையிலும் இங்கு எடுத்துக்காட்டப்பட்டது. சூளவம்சம் என்ற பௌத்த பாளி நூலிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பற்றிய சில செய்திகள் இடம் பெற்றிருப்பது இங்கு நோக்கத்தக்கது, சூளவம்சத்தில் ஜம்புக்கோள விகாரை பற்றிய செய்தி ஒன்று இடம்பெறுவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. பழுதடைந்துகொண்டு சென்ற பல விகாரங்களை முதலாம் விஜயபாகு திருத்தியமைத்தபோது ஜம்புக்கோள விகாரையும் அவ்வாறு செய்யப்பட்டு. அதற்கு மானியமாக ஒரு கிராமமும் வழங்கப்பட்டது என சூளவம்சம் குறிப்பிடுகின்றது.[29]

சூளவம்சத்தில் 2ம் அக்கிரபோதி பற்றிக் குறிப்பிடும் பகுதியில் நாகதீபம் பற்றி இன்னொரு குறிப்பும் இடம்பெற்றுள்ளது. நாகதீபத்தில் அரசு ஒன்று இருந்தமையையும் அங்கு 'இராஜாஜதன தாது' எனறொரு விகாரம் நிறுவப்பட்டு அதற்கு நெல்வயல்களையுடைய ஒரு கிராமத்தை மானியமாக வழங்கப்பட்டது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.[30]

இங்கு நாகதீபம் என்பது பெருமளவுக்கு இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டையே குறிக்கின்றது என வில்லியம் கைகர் குறிப்பிட்டுள்ளார்.[31]

யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றைக் கூறிச் செல்லும் நூல்களாகிய வையாபாடல், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவ மாலை, யாழ்ப்பாண வைபவக்கௌமுதி, யாழ்ப்பாணக் குடியேற்றம், யாழ்ப்பாண வைபவ விமர்சனம் ஆகிய நூல்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பற்றிய பல விபரங்களைத் தந்தாலும் அவை தோற்றம் பெற்ற காலம் கி. பி. 17ம் நூற்றாண்டுக்குப்பின்னரே யாகும். இந்நூல்கள் தருகின்ற குறிப்புக்கள் பெருமளவுக்குபாளி – பௌத்த நூல்களில் இருந்து எடுத்தாளப்பட்டவையாகவும்



காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண வரலாறு பற்றி அவை பல ஐதீகங்களைக் கொண்டு எழுதப்பட்டவையாகவும் உள்ளன. யாழ்ப்பாண வைபவமாலையானது விஜயனது வருகை தொடக்கம் யாழ்ப்பாண இராச்சியத்தினைப் போர்த்துக்கீசர் கைப்பற்றும் காலம் வரையுள்ள வரலாற்றுப் பகுதியைக் கூறிச் செல்கிறது. கி. பி. 13ம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 16ம் நூற்றாண்டு வரையுள்ள நான்கு நூற்றாண்டு காலமாக நல்லூரை இராசதானியாகக் கொண்டு விளங்கியிருந்த யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளினுடைய சுதந்திர அரசினைப் பற்றியே யாழ்ப்பாண வைபவமாலை எடுத்துக் கூறுகின்றது. இலங்கையின் வரலாற்றில் யாழ்ப்பாண இராச்சியம் குறிப்பிடத்தக்களவில் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தமையை பிற சான்றுகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. இத்தகைய ஓர் அரசின் தோற்றமானது ஆரம்பத்தில் கதிரைமலையை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்தது எனவும் அதன் பின்னரே நன்கு வளர்சியடைந்த நிலையில் நல்லூருக்கு மாற்றப்பட்டது எனவும் கூறப்படுகிறது. கதிரமலை என்ற புராதன மையமே இன்று கந்தரோடை என வழங்கப்படுவதனையும் காணலாம்.

# அத்தியாயம் மூன்று

# கந்தரோடையும் அதன் பன்னாட்டு வாணிபப் பாரம்பரியமும்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்படுகின்ற தொல்பொருட் தளங்களுள் இன்று மிகப் பிரபல்யமுற்று விளங்குவதும், மிகப் பழமைவாய்ந்த ஸ்தானமாகவும் இருப்பது கந்தரோடை என்பதாகும். வரலாற்றுக்கு முற்பட்ட கால – வரலாற்றுக்கால நீண்ட பாரம்பரியத்தில் கந்தரோடையானது பெரும் பங்கினை இப் பிராந்தியப் பண்பாட்டில் வகித்து வந்துள்ளது. அதுமாத்திரமன்றி தென்னாசியாவில் புராதன வர்த்தக நடவடிக்கைகளின் மையங்கள் அமைந்துள்ள வலைப் பின்னலினுள்ளே மிகவும் முக்கியம் வாய்ந்த ஒரு மையமாகவும் விளங்கியிருந்தது. இந்து - பௌத்தப் பாரம்பரியங்கள் வர்த்தக நடவடிக்கைகளினூடே ஒன்றாகச் சந்தித்த மையம் என்ற வகையிலும் கந்தரோடையின் வரலாறு முக்கியத்துவம் பெற்றுள்ளது. தமிழ்ப் பௌத்தக் காவியமான மணிமேகலை தோற்றம் பெற்ற காலத்திற்கு முன்னரிலிருந்தே, திராவிடப் பாரம்பரியத்தின் ஊடாக தனித்துவமான பண்பாட்டுத் தோற்றப்பாட்டினை உருவாக்கிக் கொடுத்த ஒரு மையம் என்ற வகையிலும் கந்தரோடையின் வரலாறானது திராவிடர் பண்பாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றது. இத்தகைய பல்நிலைப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தொல்லியல் மையம் அரைகுறை அகழ்வாய்வுக்குட்படுத்தப்பட்ட நிலையில் கைவிடப்பட்டிருப்பது என்பது இலங்கையில் திராவிடர் பண்பாடு பற்றிய அக்கறையுடையோர்க்கு கவலையளிக்கும் விடயமாக அமையும்.

## கந்தரோடையின் நிலையம்:

தற்போது கந்தரோடை என அழைக்கப்படும் கிராமம் சுன்னாகத்தில் இருந்து ஏறத்தாழ இரண்டு மைல் தொலைவில் அமைந்துள்ளது. சுன்னாகம் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து கந்தையா உபாத்தியாயர் வீதியூடாகச் சென்றால் இக் கிராமத்தைச் சென்றடையலாம். கந்தரோடையின் கிழக்கே சுன்னாகமும், வடக்கில் அளவெட்டியும், மேற்கு, தென்மேற்கு பகுதியில் சண்டிலிப்பாயும், தெற்கில் உடுவிலும் எல்லைக் கிராமங்களாக அமைந்துள்ளன.

## வரலாற்றேடுகளில் கந்தரோடை:

இலங்கையின் புராதன வரலாற்றினைக் கூறும் தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் ஆகிய இலக்கிய வரலாற்று மூலாதாரங்களில் இத் தொல்லியற் தலத்தின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை. ஆனால் கி. பி. 14ம் நூற்றாண்டில் சிங்கள மொழியில் எழுதப்பட்ட 'நம்பொத்த' என்ற நூலிலே இடம்பெறும் 'கதுறுகொட' என்ற பதமானது கந்தரோடையினைக் குறித்து நிற்கின்றது எனச் சில அறிஞர் குறிப்பிடுவர்.[1] 'கதுறுகொட' என்ற இடப்பெயர் பழைய நாக மன்னர் தமது தலைநகருக்கு இட்ட பெயர் என்றும் 'கதுறு' என்பது கதிரையாகி 'கொட' என்பது மலையையுணர்த்தி இன்று 'கதிரமலை' என வழங்குகின்றதென்பர் சில வரலாற்றாசிரியர்கள்.[2] 'நம்பொத்த' என்ற சிங்கள நூலில் பௌத்த நிறுவனங்கள் அமைந்திருந்த இடங்களைப்பற்றி விபரிக்கும்போதே 'கதுறுகொட' என்ற இடப்பெயரைக் குறிக்கும் பதம் இடம்பெற்றுள்ளது.

கி. பி. 14ம் நூற்றாண்டில் சிங்கள மொழியில் எழுதப்பட்ட 'சமதர்மலங்கார' என்ற நூலில் கூறப்பட்டுள்ள பஞ்சதந்திரக் கதையை ஒத்துள்ள ஒரு கதையில் கந்தரோடை பற்றிய குறிப்பொன்று இடம்பெறுவதனைக் காணமுடிகிறது. இக் கதையானது இலங்கையின் தெற்குப் பகுதியைச் சேர்ந்த ஓர் ஆண் காக்கைக்கும் வடபகுதியைச் சேர்ந்த ஒரு பெண் காக்கைக்கும் இடையே நடைபெற்ற திருமணச் செய்தியைப் பற்றித் தெரிவிக்கின்றது. ஆண் காக்கையின் வசிப்பிடம் மகாகமத்திலுள்ள திஸ்ஸவீவா ஆகும். பெண் காக்கையின் வசிப்பிடம் மணிநாகதீவு ஆகும். இங்கு மணிநாகதீவு எனக் குறிப்பிட்ட இடம் 'ராஜவானி' என்ற நூலின்படி கந்தரோடையினையே குறித்து நிற்கின்றது எனக் குறிப்பிடுவர்.[3]

கந்தரோடை என்பது உண்மையில் அதன் இயற்பெயர் அல்ல என்பதும், இதன் புராதனப்பெயர் கதிரமலையே ஆகும் என வேறுசிலர் குறிப்பிடுகின்றனர்.

கடந்த நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் சில தொல்லியலாளர்கள் கந்தரோடை பற்றிக் கருத்துத் தெரிவிக்கும்பொழுது புராதன சிங்களக் குடியிருப்பின் இன்னொரு வடிவமே 'கதிரகொட' என விளக்கியுள்ளனர். சிங்கள மொழிவழக்கில் ஒருபொருள் குறித்த பல சொற் பிரயோகங்களில் 'கொட' என்பதும் ஒன்றாகும். இங்கு 'கதிரமலை' என்பது 'கதிரகொட' வையே குறிக்கின்றது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இருந்தபோதிலும் சிங்கள மொழியின் தோற்றத்துடனான காலவரையறை தொடர்பாக பல பிரச்சினைகள் இன்றுவரை நிலவுவதனைக் காணலாம். கி. பி, 1ம் நூற்றாண்டுக்குப் பின்னரே சிங்களமொழியின் உபயோகமானது அதன சிங்கள வரி வடிவத்துடன் பிரபல்யம் பெற்றது என்பதனை அடிப்படையாகக் கொண்டு 'கதிரமலை' என்று இயற்பெயராக இருந்த அவ்விடத்தினைப் பின்னரே சிங்கள மொழியில் 'கதிரகொட' என வழங்கினர் என வேறு சில அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இக் கூற்றினை வைத்து நோக்கும்போது விஜயனுடைய வருகைக்கு பல நூற்றாண்டுகட்கு முன்னரிலிருந்தே நாக மன்னர்களுடைய தலைநகராக கந்தரோடை விளங்கியிருந்தது என்பதும் தெளிவாகின்றது. கந்தரோடையில் காணப்படும் அழிபாடுகள் இக்கருத்தினை நன்கு உறுதிப்படுத்துகின்றன,

இன்னும் சில வரலாற்றாசிரியர் கந்தரோடை பற்றி மேலும் சில தகவல்களைக் கொடுத்துள்ளமையைக் காணலாம். சமராக்கிர வீரன் என்ற மன்னன் நாகதீபத்திற்கு விரோத உணர்வுடன் வந்தானென்றும் அக்கட்டத்தில் அங்கு ஆட்சிசெய்து கொண்டிருந்த சிங்கள மன்னன் ஒருவன் எதிரியினுடைய படையை முறியடித்து வெற்றி கொண்டான் எனவும் அதனால் சமராக்கிரவீரன் என்ற மன்னன் சிங்கள மன்னனுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டிய ஒரு நிலை உருவாயிற்று எனவும் எடுத்துக்காட்டியுள்ளனர். அந்த ஒப்பந்தத்தின் பின்னர் சமராக்கிர வீரன் நாகதீபத்தில் ஒரு விகாரையை அமைத்தான் எனவும் அதற்கான மானியமாக 'கந்தரஸ்தால' – என்ற கிராமத்தினை சிங்கள மன்னன் வழங்கினான் எனவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.[4] கந்தரஸ்தால என்ற சொற்பிரயோகம் உண்மையில் ஒரு சமஸ்கிருத வடிவமேயெனவும் காந்தார – கொடவே அதன் உண்மையான வடிவம் எனவும் அதுவே பின்பு பல்வேறு வடிவங்களைப் பெற்று 'காற்துறுகொட' எனவும் பின்பு கதுறுகொட எனவும் வழங்கியது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.[5]



ஆனால் இன்றைய நிலையில் இடப்பெயர் ஆய்வின் வளர்ச்சி தொடக்க நிலையிலேயே இருப்பதனால் இடப்பெயர் ஆய்வுமூலம் வரலாற்றைத் தீர்மானிக்க முடியாத ஒரு நிலையில் நாம் உள்ளோம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இடப்பெயர் ஆய்வுக்குப் பன்மொழி அறிவு இன்றியமையாத ஒன்றாகும். மொழியியல் ஆய்வின் வளர்ச்சி இலங்கையில் இன்று ஆரம்ப நிலையிலேயே உள்ளது. இலங்கையில் சிங்கள மொழி ஆரிய மொழிக் குடும்பமொன்றினைச் சேர்ந்ததாக இருந்தபோதிலும், அடிப்படையில் 'முண்டா' மொழியின் அடிப்படையைக் கொண்டிருப்பதனால், இடப்பெயர் ஆய்வின் போது எல்லாவற்றையும் சிங்கள மொழியடியாகவே வந்தது எனவும் கூறமுடியாது. எடுத்துக்காட்டாக சிங்கள மொழியிற் குறிப்பிடப்படும் 'பெ·ல்' 'அலியா' என்ற பதங்கள் உண்மையில் சிங்கள மொழியைச் சேர்ந்தவையல்ல என்பது மொழியியல் அறிஞரின் கருத்தாகும்.[6]

## கந்தரோடையில் அகழ்வாராய்ச்சி:

கந்தரோடையில் முதன்முதல் போல் இ. பீரீஸ் என்ற தொல்லியலாளரே பரீட்சார்த்த முறையில் 1917 தொடக்கம் 1919 வரையிலான காலப்பகுதியில் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டார். இவருடைய ஆய்வுக்குப் பின்னர் இலங்கைத் தொல்லியற் கழகத்தினர் 1966ல் அங்கு தமது ஆய்வினை மேற்கொண்டனர்.[7] இவர்களுடைய அகழ்வாய்வுகள் அரைகுறையாக நிறுத்தப்பட்டுள்ளன. போல் இ. பீரீஸினாலும், இலங்கைத் தொல்லியற் கழகத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பயனாக கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலே கந்தரோடையில் அமைக்கப்பட்டிருந்த கட்டிடப்பாகங்களின் ஒரு பகுதியையும், விசேடமாக ஒரு சாசனத்தையும் பெற்றுக்கொள்ள முடிந்தது. இதன் பின்னர் அமெரிக்கப் பென்சில்வேனியப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தொல்பொருளியல் ஆராய்ச்சியாளரான பெரேற்ப்ரென்சன், விமலாபெக்லி ஆகியோர் 1970 ல் தமது அகழ்வாய்வினை இங்கு மேற்கொண்டிருந்தனர்[8] இவர்களுடைய விஞ்ஞான பூர்வமான அகழ்வாய்வுகளுடனேயே கந்தரோடை கிறிஸ்தாப்தத்திற்கும் முற்பட்ட கால வரலாற்றினைக் கொண்டு விளங்குகின்றது என்பது தெரியவந்தது. 1970 ஜுன் ஜுலை மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுகளின் பெறுபேறு இன்றும் வெளியிடப்படாமல் இருப்பது எமது துர்ரதிஷ்டமே எனலாம்.

கந்தரோடையில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் பயனாக நாம் பல பெறுபேறுகளைப் பெற்றுள்ளோம். இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருட்களைக் கொண்டு,

அப்பிரதேசமானது கிறிஸ்துவுக்கு முற்பட்ட பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரிலிருந்தே ஓரளவுக்குத் தற்காலம் வரைக்கும் தொடர்ச்சியான குடியிருப்புக்களைக் கொண்டு விளங்குவதனைக் காணலாம். கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் இருந்து பிறநாட்டுத் தொடர்புடைய ஒரு பிரதேசமாகவும் காணப்படுவது அதன் அதியுயர்ந்த சிறப்பம்சமாகும்.[9] பிறநாட்டுத் தொடர்புடைய பல்வேறு வகையான தொல்பொருட்கள் பல்வேறு காலப் பகுதிக்குரிய நிலையில் அங்கிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டமையைக் காணலாம். கந்தரோடைக்கும் ரோமாபுரிக்குமிடையிலே இருந்திருக்கக்கூடிய வர்த்தகத் தொடர்புகள் மிகவும் இறுக்கமாக விளங்கியிருந்திருக்கக்கூடிய சான்றுகள் இங்கிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன.

இலங்கையில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட புராதன நாகரிக காலத்திலேயே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அமைந்து காணப்பட்ட நாகரிக மையங்களுடன் தொடர்பு கொண்ட ஒரு மையமாகவும் கந்தரோடை விளங்கியது என்பதில் ஐயமில்லை அனுராதபுரம், பொலன்னறுவை, திஸமகரகம, மாதோட்டம், பொன்பரிப்பு, இந்தியாவில் அரிக்கமேடு, ஆதிச்ச நல்லூர் ஆகிய முக்கியமான மையங்களுடன் நெருங்கிய தொடர்புகளை கந்தரோடை கொண்டிருந்தது என்பதில் சந்தேகமே இருக்க முடியாது. கந்தரோடை என்ற மையத்தின் வளர்ச்சி மேற்குறிப்பிட்ட இடங்களின் நடவடிக்கைகளுடன் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தது. அமெரிக்கப் பல்கலைக் கழகத் தொல்லியலாய்வாளர்களின் கணிப்பின்படி கந்தரோடையின் வரலாற்று ஆரம்பம் பெருங்கற்காலப் பண்பாட்டின் தோற்றத்துடன் தொடர்புபடுத்தப்பட்டது என்பதாகும்.[10] அதாவது கி. மு. 1000ம் ஆண்டிலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய வளர்ச்சி நிலைகள் இங்கு ஏற்பட்டிருந்தது என்பதாகும். அந்த வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் முதன்முதலாக விஞ்ஞான அடிப்படையில் காலவரையறை வகுக்கப்பட்ட ஒரேயொரு மையமாகவும் கந்தரோடை விளங்குகின்றது எனலாம்.

## கந்தரோடையில் கட்டிடக் கலை:

தென்னிந்தியத் திராவிடக் கட்டிடக்கலையில் பெருஞ்செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்த ஆந்திர நாட்டிலுள்ள அமராவதியில் கட்டிடக்கலை மரபானது கந்தரோடையின் கட்டிடக்கலைக் கூறுகளிலும் பெருஞ் செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தமையைக் காணலாம். இக் கட்டிடக்கலைக் கூறுகளின் பிரதான மூலப்பொருளாக விளங்கியது பவளக்கல்லாகும் (Coral stone). பௌத்த வழிபாட்டு மையங்களும், சில புதைகுழிக்குரிய அமைப்புக்களும் இங்கு கடற் பவளக் கல்லினால் அரிந்து, அறுத்த கற்கள் போன்று உருவாக்கப்



பட்டு, கட்டிடப்பொருளாக உபயோகப்படுத்தப்பட்டமையைக் காணலாம்.

கந்தரோடையில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட கட்டிடப் பாகங்களுள் முக்கியமானதாகக் காணப்படுவது திராவிட கலைப் பாணியில் அமைந்த பௌத்த மதத்துடன் தொடர்பான ஸ்தூபிகளின் அமைப்புக்கள் ஆகும். அகழ்ந்து வெளிப்படுத்தும்போது எந்த விதமான மேற்கட்டுமானமுமின்றிக் காணப்பட்ட இத்தகைய பௌத்த ஸ்தூபிகளுக்குரிய அத்திவாரங்கள் ஒன்றுக்குள் ஒன்று செருகப்பட்ட நிலையில் காணப்படுவதிலிருந்து பல கருத்துக்கள் அவை தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் அப்பகுதியானது பெருமளவுக்கு பௌத்த சமயத் துறவிகளையும் மத குருமாரையும் அடக்கம் செய்ய உபயோகிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டலாம். கந்தரோடையில் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட ஸ்தூபிகளின் அத்திவாரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வத்திவாரங்கள் ஒவ்வொன்றினதும் விட்டத்திற்கேற்ப அவற்றின் சுற்று வட்டம் வேறுபடுவதனையும் காணலாம். ஒவ்வொரு ஸ்தூபிக்குமுரிய அத்திவாரங்களின் விட்டங்களைக் கணக்கிடுவதும் மிகக் கஷ்டமாகவுள்ளது. எனினும் கந்தரோடையில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்பட்ட மிகப் பெரிய ஸ்தூபி ஒன்றின் அடித்தள விட்டம் 23 அடிகளாகும்.[11]

கந்தரோடையில் அகழ்ந்து வெளிப்படுத்திய அழிபாடுகளை நோக்கும்பொழுது, அவையெல்லாம் ஒரே சமகாலத்தில் அமைக்கப்பட்டன அல்ல என்பது புலனாகும். அத்திவாரங்களின் போக்குகளும் அமைப்புக்களும் ஒன்றன்மேல் ஒன்றாக அமைந்துள்ளமை இக் கருத்தினைத் தெளிவாக்குகின்றதெனலாம். சிந்துவெளியில் பல முறை கட்டிடங்கள் ஒன்றுக்குமேல் மற்றொன்று அமைக்கப்பட்ட தன்மையையொத்து இங்கும் கட்டிட அமைவு அமைக்கப்பட்டது என்று கருத இடமுண்டு. ஒரு பரந்த அடிப்படையிலான அகழ்வாராய்ச்சியை கந்தரோடையில் மேற்கொண்ட பின்னரே ஒன்றுக்குள் ஒன்று செருகியும், ஒன்றுக்கு மேல் மற்றொன்று அமைக்கப்பட்டதற்குமான கட்டிடங்களின் தன்மையைக்கண்டு கொள்ளலாம்.

தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில் திராவிடக் கட்டிடக் கலையின் சிறப்பியல்புகளை (சமயச்சார்புடைய கட்டிடங்களை) அதாவது இந்துசமயம் சார்ந்த கட்டிடங்களை அடிப்படையாகக் கொண்டே அறிந்துகொள்ள முடிகின்றது. ஆனால் பௌத்தமதத்துடன் தொடர்பான கட்டிடக்கலைக் கூறுகளில் இருந்து திராவிடக்

கலைப்பாணியின் இயல்புகளை மிகவும் அரிதாகவே எடுத்துக்காட்டியுள்ளனர். பல்லவர் காலத்துக்குரிய காஞ்சிக்கடிகையிலும், சோழர் காலத்துக்குரிய நாகபட்டின ஸ்தூபிகளிலிருந்துமே திராவிடப் பண்பின் இயல்புகள் பௌத்த சமயத்துடன் தொடர்புபடுத்திக் காட்டப்பட்டுள்ளன. ஆனால் இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையில் பௌத்த மதத்துடன் தொடர்புபடுத்தப்பட்ட திராவிடப்பாணியின் சிறப்பியல்புகளை கந்தரோடையிலிருந்தும், குடாநாட்டின் கிழக்குக் கரையில் அமைந்து காணப்படும் வல்லிபுரம் என்ற மையத்திலிருந்தும், கிழக்கிலங்கையில் திரியாய் என்னுமிடத்திலிருந்தும் சிறப்பாக எடுத்துக் காட்ட முடிகிறது. தற்பொழுது குடாநாட்டின் தென் விளிம்பில் பூநகரியில் மேற்கொள்ளப்பட்டுவரும் விரிவான தொல்லியல் ஆய்வின் விளைவாக பௌத்த – திராவிட நாகரிகத்தின் மிகப் பழமையான பல அம்சங்களையும் அங்கிருந்து பெறப்படும் சான்றுகள் எடுத்துக் காட்டி நிற்கின்றன.[12]

## கந்தரோடையும் சிற்பக் கலைமரபும்:

கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளினதும் அகழ்வாய்வுகளினதும் பயனாக பல சிற்பங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இச் சிற்பங்கள் யாவும் தென்னிந்திய சிற்பக்கலை மரபின் செல்வாக்கினை பிரதிபலித்து நிற்பதனை நன்கு அவதானிக்க முடிகிறது பௌத்த மதமானது தமிழ் நாட்டினூடாகவே இலங்கைக்குப் பரப்பப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் ஏற்ற சான்றாதாரங்களாகவும் அவை அமைகின்றன. கந்தரோடை அகழ்வுகளின்போது வெளிப்படுத்தப்பட்ட வெண் வைரக்கல்லினாலான புத்தர் சிலைகளே அமராவதிக் கலைமரபின் கலைச் செழிப்பினை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. இப் பௌத்த சிற்பங்களுள் பெரும்பாலானவை தலைகள் அற்ற நிலையிலேயே காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இருக்கின்ற, நிற்கின்ற நிலைகளில் உள்ள இச் சிற்பங்களின் இயல்புகள் மேலும் விரிவாக ஆராயத்தக்கவை [13] யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பௌத்தப் பாரம்பரியம் ஒன்று தோற்றம் பெற்று வளர்ச்சி கண்ட நிலையில் அது திடீரென மறைந்தமையானது அப் பின்னணியில் உருவானதும், ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றானதுமான மணிமேகலை என்ற தமிழ்ப் பௌத்த நூலுடன் தொடர்பான பல அம்சங்களை விளக்கிக் கொள்வதற்குத் தடையாயிற்று. எவ்வாறு சிங்களப் பௌத்த மரபின் தொடர்ச்சியானது பாளிமொழியில் எழுதப்பெற்ற மகாவம்சம் என்ற நூலை விளங்கிக் கொள்வதற்கு உதவியாயிற்றோ அதே போன்று மணிமேகலை என்ற நூலை விளங்கிக் கொள்வதற்கு தமிழ் பௌத்த மரபு உதவியிருக்கவில்லை என்றே கூற வேண்டும்.



ஆசன நிலையில் அமைக்கப்பட்ட வெண் வைரக்கல்லினாலான புத்தர் சிற்பத்தின் சிறப்பியல்புகள் இங்கு நோக்கத்தக்கவை. சுமார் 15 அந்தர் நிறையையுடைய இச்சிற்பமானது ஐந்தரை அடி அகலமான மார்புப் பகுதியைக் கொண்டுள்ளது. சிற்ப அமைப்பு முறையை நோக்கும்போது இந்த அமராவதி கலைமரபில் பின்பற்றப்பட்ட 'ஒட்டும் முறை' பின்பற்றப்பட்டிருந்தமையை உணர முடிகிறது, அதாவது கைகள், கால்கள் என்பன வெவ்வேறாகச் செய்யப்பட்டு பொருத்துகின்ற முறை ஒன்று நடைமுறையில் இருந்தமையினை கந்தரோடையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தர் சிற்பங்கள் காட்டி நிற்கின்றன. இக் கோட்பாடு முற்பட்ட அனுராதபுரகால பௌத்த சிற்பங்களுக்கும் பொருந்துவதாக உளளது.

இச் சிற்பத்தின் பாதங்கள் அகழ்ந்து வெளிப்படுத்தப்படும் பொழுது உடைவுக்குட்பட்டிருக்க வேண்டும் அல்லது பாதங்கள் பொருத்தப்படாமல் காணப்பட்டிருக்க வேண்டும். வலது பக்க முழங்கை சற்று வித்தியாசமான கற்துண்டொன்றினால் செய்யப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது என்பது பார்த்தவுடன் தெளிவாகிறது. அதேநேரத்தில் இடது பக்க முழங்கையானது உடைந்த நிலையிலேயே உள்ளது. ஒரு வட்டவடிவமான தட்டையான ஆசனத்தின் மீது இருக்கின்ற நிலையில் செதுக்கப்பட்ட இச் சிற்பத்தின் அமைப்பு முறை, அங்கியின் போர்வை மடிப்புக்கள், வலது தோள் மீதாக போர்வையின் மடிப்புக்கள் ஒழுங்காக செலுத்தப்பட்டுள்ளமை ஆகியன குறிப்பிடத்தக்கவையாகும். வெண் வைரக்கல்லில் செய்யப்பட்ட இச் சிற்பத்தில் 'மணியுருக்கள்' காணப்படுவது, அக் கல்லானது, பிறிதோரிடத்திலிருந்து அங்கு கொண்டு வரப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

நிற்கும் வகையைச் சேர்ந்த புத்தர் சிற்பமொன்று 1917ல் போல் இ. பீரிஸினால் சுன்னாகத்துக்கண்மையில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டது.[14] சுன்னாகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இச் சிற்பமே ஓரளவுக்குப் பூரணத்துவமான முறையில் பாதுகாக்கப்பட்டுள்ளது எனலாம். இச் சிற்பமானது 12 அடி உயரத்தைக் கொண்டதாகும். அதன் மார்பகலம் 20 அங்குலங்களாகும். தனிவெண்வைரக் கல்லினால் அமைக்கப்பட்ட இச்சிற்பத்தின் அமைதி அமராவதிக் கலைப் பாணியையே மாதிரியாகக் கொண்டுள்ளது.

இச் சிற்பத்தின் அமைப்பு முறையைப் பொறுத்தமட்டில் வலது மார்பு, தோள் ஆகிய பகுதிகள் தவிர ஏனைய பகுதிகள் போர்வையினால் மறைக்கப்பட்ட நிலையில் தோற்றமளிப்பதனைக் காணலாம். போர்வையின் அமைப்புக்கூட பாதத்தினை மறைத்த நிலையில், பாதத்திலிருந்து மடிக்கப்பட்டு மீண்டும் இடது கரத்தினூடாக கீழ்

நோக்கித் தொங்குவதாகச் செதுக்கப்பட்டுள்ளது. மடிப்புக்கள் யாவும் மிகத் தெளிவாகவும் ஒன்றுக்கொன்று சமாந்தரமாகவும் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் தலையமைப்பைப் பொறுத்தவரையில் காந்தாரக்கலை மரபின் சுருள்கேச முறையில் வடிக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதேநேரத்தில் மதுராக்கலை மரபில் காணப்படும் 'உச்சிக்கொண்டை' முறையும் இச் சிற்பத்தில் பின்பற்றப்பட்டுள்ளது.

நிற்கும் நிலையிலுள்ள புத்தர் சிற்பங்களில் பல தலையற்றவையாகவே அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவை யாவும் வெண்வைரக்கல்லினாலேயே செய்யப்பட்டவையாகவுமுள்ளன. இவற்றுள் ஒன்று மைத்திரேயர் வகையைச் சேர்ந்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் உயரம் 3 அடி 6 அங்குலங்களாகும். மைத்திரேய புத்தரின் ஆடையலங்காரமும், உடைந்த நிலையில் வேறாகக் கிடைத்த அதன் தலையின் அமைப்பும் கலை வனப்பு வாய்ந்தவையாகவுள்ளன. இங்கு மைத்திரேய புத்தரின் மேலாடையானது வலது கரத்தினூடாக கீழே தொங்குவதும் குறிப்பிடத்தக்கது. சுருள்சுருளான கேசத்தினையுடைய இப் புத்தரின் தலையமைப்பானது காந்தார மதுராக் கலைப்பாணியை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

கந்தரோடையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பௌத்த மரபுச் சின்னங்களில் புத்தரின் பாதச்சுவடுகள் பொறித்த சிற்பம் முக்கியமானதாகும். சிறிபதுல் எனக் குறிப்பிடப்படும் இப்பாதச் சுவட்டு வணக்க முறையானது புத்தருடைய சிற்பங்களின் தோற்றத்திற்கு முன்னர் வழக்கிலிருந்த குறியீட்டு முறையாகும். இது தமிழ்ப் பௌத்த மரபில் நன்கு பிரபல்யம் பெற்றிருந்தது என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக மணிமேகலையில் வரும் புத்தபீடிகையைக் கண்டு தொழுத காட்சி அமைகிறது. பௌத்த வழிபாட்டில் புத்தருடைய பாதச்சுவடுகளை உரு அமைத்து வழிபடும் முறை காலத்தால் முற்பட்டது என்பதனை சாஞ்சி, பாருட் ஸ்தூபிகளில் வரும் புடைப்புச் சிற்பக் காட்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

கந்தரோடையில் அகழ்வு மேற்கொண்டபொழுது வெளிப்படுத்தப்பட்ட இன்னொரு சிற்ப வடிவம் 'சந்திர வட்டக்கல்' ஆகும். பௌத்த மரபில் சந்திரவட்டக்கற்கலையானது தத்துவ அடிப்படையிலும் கலை ரீதியாகவும் முக்கியமான இடத்தினைப் பெற்றுள்ளது. இலங்கையில் வளர்ச்சி பெற்றிருந்த தனித்துவமான பௌத்தக்கலை மரபுக்கு சிறந்த உதாரணமாகவும் சந்திரவட்டக்கற்கலையினையே கலைவல்லுனர் எடுத்துக் காட்டுவர். அவ்வகையில் கந்தரோடையில் அகழ்வின்போது வெளிப்படுத்தப்பட்ட சந்திரவட்டக்கல்லின் தனிப் பண்புகளையும் நோக்கவேண்டும்.



இங்கு வெளிப்படுத்தப்பட்ட சந்திரவட்டக்கல்லானது மூன்று பிரதான வெவ்வேறான கற்துண்டுகளால் ஆனது. எந்தவிதமான அலங்கார வேலைப்பாடுகளுமற்ற நிலையில், அரைவட்ட வடிவத்தில் வெறுங்கோடுகள் மாத்திரம் செதுக்கப்பட்டதாகக் காட்சியளிக்கின்றது. இத் தன்மையானது ஆந்திரக் கலைமரபில் நாகர்ச்சுனாவில் காணப்பட்ட சந்திரவட்டக் கல்லின் தன்மையை நினைவூட்டுவதாகவுள்ளது. எனவே கந்தரோடைக்கும் நாகர்ச்சுன கொண்டாவுக்குமான தொடர்பு காலத்தால் முற்பட்டது என்பதனையும் கலைப் பாரம்பரியங்கள் இவ்விரண்டு மையங்களுக்குமிடையே நெருக்கமானவை என்பதனையும் தெளிவாக உணர்ந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

பௌத்த சிற்பங்களைத் தவிர கந்தரோடையிலிருந்து ஹனுமார் வெண்கலச் சிற்பமொன்றும், கணபதி சிற்பமொன்றும் பெற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது [15] வெண்கலத்தினாலான கணபதி சிற்பத்தின் அமைதியைப் பொறுத்தமட்டில் கிறிஸ்தாப்தத்தின் முதலிரு ஆண்டுகளுக்குமுரியதாகக் கொள்ள முடியும். ஹனுமார் சிற்பத்தின் இயல்புகள் இங்கு ஆராயத்தக்கது. ஒரு வட்டவடிவான, அகலமான விளிம்பினையுடைய வளையத்தினுள் ஹனுமார் பறக்கின்ற நிலையில் அல்லது அசைகின்ற நிலையில் சித்தரிக்கப்பட்டுள்ளார். மிகவும் அழகுபடுத்தப்பட்ட நிலையில் ஹனுமானுடைய உடற்கட்டு அமைந்துள்ளது. வலது கரமும் வலதுகாலும் அசைகின்ற நிலையில் இடது கரமானது இடது முழங்காலின் மீது தாங்கிக் கொண்டிருப்பதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஹனுமானுடைய தலைப்பாகை மிகவும் அழகுபடுத்தப்பட்டுள்ளது. வளையத்தின் உச்சியில் ஐந்து தலைகளையுடைய நாகத்தின் தலைப்பாகம் செதுக்கப்பட்டுள்ளது வளையத்தின் அகலமான விளிம்பில் சுற்றிவர தாமரை இதழ் வடிவம் செதுக்கப்பட்டிருக்கின்ற தன்மையை அவதானிக்கும் பொழுது சோழர் கால வெண்கலச் சிற்ப மரபின் இயல்புகள் பிரதிபலிக்கின்ற முறையைக் காணலாம். இச்சிற்பத்தினை முழுமையாக நோக்கும்பொழுது சோழர்களுடைய திருவாலங்காட்டு செப்புப் பட்டயத்தின் முகப்பில் அமைந்து காணப்படும் முத்திரையின் (Seal) வடிவம் நினைவுக்கு வரக்கூடும். எனவே கந்தரோடையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஹனுமான் சிற்பமானது பல வகையிலும் சோழர் காலத்துக்குரிய இயல்பினை வெளிப்படுத்தி நிற்பதாகக் கொள்ள முடியும்.

கந்தரோடையிற் கிடைக்கப்பெற்ற சிற்பங்களில் குறிப்பிடத்தக்க இன்னொன்று சிவனின் அல்லது விஷ்ணுவின் வடிவத்தினை ஒத்த ஓர் உருவமாகும். அசையும் நிலையில் அமைக்கப்பட்ட இச்சிற்பமானது 2 அடி 10 அங்குல உயரத்தினைக் கொண்டுள்ளது. இச்

சிற்பத்தின் கிழரைப் பகுதியானது ஆடையணிவிக்கப்பெற்ற ஒரு தோற்றத்தினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.[16] கந்தரோடையில் 'விஷ்ணு பூஸ்திய' என பிராமியில் பொறிக்கப்பட்ட கார்ணேலியன் முத்திரை கண்டெடுக்கப்பட்டது என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.[17]

## பிற தொல்பொருட்கள்:

கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளினதும் அகழ்வாய்வுகளினதும் பயனாக அதிகளவில் வெளிக்கொணரப்பட்ட தொல்பொருள் மணிவகைகளே (Beads) ஆகும். பல்வகை வண்ணங்களில், பலவகை வடிவங்களில் அவை கிடைத்துள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டின்கண் உள்ள வேறு எந்தவொரு மையத்திலிருந்தும் கிடைக்காத அளவிற்கு கந்தரோடையிலிருந்து பலவகையான மணிவகைகள் கிடைத்துள்ளன. 1919ம் ஆண்டில் போல் இ. பீரிஸ் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது மட்டும் 26,000க்கு மேற்பட்ட மணிவகைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.[18] நானாவித மணிவகைகளுள், கண்ணாடி, தந்தம், சங்கு, கார்ணேலியன், பளிங்கு ஆகியவற்றாலான மணிகளே அதிகமானவை. கார்ணேலியன் மணி ஒன்றிலேயே பிராகிருதவாசகம் ஒன்று பொறிக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. மணிவகைகளுள் பெரும்பாலானவை நீலம், பச்சை, செம்மஞ்சள், கருநீலம் ஆகிய வண்ணங்களைக் கொண்டுள்ளன.

எல்லாவகையான மணிவகைகளும் அவற்றின் மையப்பகுதியில் சிறிய நுண்துளைகளைக் கொண்டு காணப்படுகின்றன. இதனால் அவை பெருமளவுக்கு கழுத்தணிகளாகவே உபயோகிக்கப்பட்டிருந்தன என்பது புலனாகிறது. யாழ்ப்பாண அரும் பொருளகத்தில் இவற்றில் பெரும்பாலானவை பாதுகாக்கப்பட்டுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

காப்புக்கள், மோதிரங்கள், காதணிகள் என்பனவும் கந்தரோடை அகழ்வாய்வின் போதும் கண்டுபிடிக்கப்பட்டன. மோதிரங்கள் பெருமளவுக்கு உலோகத்தினால் செய்யப்பட்டவையாக உள்ளன. கண்ணாடியினால் பெருமளவு வளையங்கள் செய்யப்பட்டுள்ளன. அதே நேரத்தில் சங்கினால் செய்யப்பட்ட வளையல்களும் கிடைத்துள்ளன.

## மட்பாண்ட ஓடுகள்:

கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின்போது கிடைத்த மட்பாண்ட ஓடுகளைப்பற்றிக் குறிப்பிடுவது தொல்லியலின் அடிப்படையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மட்பாண்டங்கள் தொல்லியலின் உயிர்நாடி எனக் கருதப்படுகின்றது. பண்டைக்



கால மக்கள் வாழ்ந்த வாழ்க்கையின் மேனிலையை, அடைந்த மாறுதல்களை அளக்கும் அளவுகோலாகவும் அது விளங்குகின்றது. சாதாரண மக்கள் தமது அன்றாட வாழ்வில் பயன்படுத்திய பொருட்களில் மட்கலங்களே அதிகமானவை என்பதனால் மட்பாண்டங்கள் பற்றிய ஆய்வு தொல்லியலில் முக்கியத்துவம் பெறுகின்றது. அகழ்வாய்வுகளின்போது கிடக்கின்ற தொல் எச்சங்களுள் பானைகளும், அவற்றின் உடைந்த துண்டங்களுமே எமக்குக் கூடுதலாகக் கிடைக்கின்றன. இதனால் மட்பாண்டங்களை 'பண்பாட்டுக் குறிகாட்டி' எனவும் தொல்லியலாளர் குறிப்பிடுவர்.

கந்தரோடையில் பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட தொல்லியலகழ்வாய்வின் அடிப்படையில் அப் பிரதேசத்து மட்பாண்டங்களின் தன்மை, தொன்மை பற்றி அறியக் கூடியதாகவுள்ளது.[19] அமெரிக்கப் பல்கலைக் கழகத் தொல்லியலாளர் கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்ட வகைகளை மூன்று பெரும் பிரிவுகளாக வகுத்து தமது ஆய்வினைச் செய்துள்ளனர். இதில் முதலாவது வகையினை 'A' என வகுத்துள்ளனர். இவ்வகையைச் சேர்ந்த மட்பாண்டங்களின் கழுத்து வளையங்கள் (Rim) ரோமச்சிவப்பு நிறத்தினை (Roman Red) கொண்டு விளங்குகின்றன. இவ்வகையான மட்பாண்டங்களை தென்னிந்திய அரிக்கமேடு மட்பாண்ட வகைகளில் இருந்து வேறுபடுத்தியுமுள்ளனர்.

இரண்டாவது 'B' வகையான மட்பாண்டங்களை கறுப்பு-சிவப்பு வர்ண மட்பாண்டங்கள் என வகுத்துள்ளனர். இவை பெருமளவுக்கு தென் இந்தியப் பெருங் கற்காலப் பண்பாட்டு மக்களுக்குரிய மட்பாண்ட வகைகள் எனவும் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வகையான மட்பாண்டங்கள் தென் இந்தியாவில் அரிக்கமேட்டில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களை ஒத்துக் காணப்படுகின்றன எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக இவ்வகையான மட்பாண்டங்களின் பரவலான உபயோகமானது தென் இந்தியாவில் இரும்பின் உபயோகத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது என்பது தொல்லியலாளரின் கருத்தாகும்,

மூன்றாவது 'C' வகையைச் சேர்ந்த மட்பாண்டங்களே கந்தரோடையில் அதிகளவில் கிடைத்துள்ளன என அமெரிக்க ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இப் பிரிவைச் சேர்ந்த மட்பாண்டங்கள் பெருமளவிற்கு உள்ளூரிலேயே செய்யப்பட்டனவாகும். இவற்றினை சமையல் மற்றும் அன்றாட உபயோகங்களுக்காக மக்கள் கொண்டிருந்தமையினால், தடிப்பாகவும், தடிப்பான விளிம்புகளையுடையனவாகவும், பெரிய உருவத்தினைக் கொண்டனவாகவும் அவை உருவாக்கப்பட்டன. 'ஜாடி' வகையைச் சேர்ந்த மட்பாண்

டங்களும் இவ்வகைக்குள்ளேயே அடக்கப்படுகின்றன. இவை அலங்கார வேலைப்பாடுகள் ஏதுமின்றி, வெறுமையாகவும், அதே நேரத்தில் வழவழப்பான தன்மையாகவும் அமைக்கப்பட்டுள்ளமையையும் காணலாம்.

மட்பாண்டங்களின் கீழ்ப்பகுதி பெரும்பாலும் அலங்கார வேலைகளுக்குட்படுத்தப்படுவதில்லை. கந்தரோடையில் வெளிப்படுத்தப்பட்ட முதலிரு வகை மட்பாண்டங்களும் துடுப்பினால் அடித்து, மிகவும் மென்மையான அளவில் அவற்றின் கீழ்ப்பகுதி அமைக்கப்பட்டுள்ளன. கழுத்து வளையத்தின் கீழ்ப்பாகம் பலவகைப்பட்ட வரிவடிவங்களுக்குட் படுத்தப்பட்டிருப்பதனையும் காணலாம். கூரான கத்தியால் கீறப்பட்டிருப்பது போன்ற அமைப்புடன் முதலிருவகை மட்பாண்டங்களும் விளங்குவதனை அவதானிக்க முடிகிறது. இவற்றினுள்ளும் மூன்று பிரதான இயல்புகளை அடையாளம் காணலாம்.

(1) வழுவழுப்பில்லாத தன்மை,
(2) கறுப்பு வர்ணம் பூசப்பட்டமை,
(3) வெறுமையான வடிவம் என்பனவே அவையாகும்.

கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களில் 'கிராபிடிக்குறிகள்' (Graffiti Marks) இருப்பதனையும் அவதானிக்க முடிந்தது. இது மட்பாண்டத்தின் அலங்கார வேலைப்பாடுகளையே குறிக்கும் என்பது ஒரு சாராரது கருத்தாகும். இக்குறியீடுகளானவை மட்பாண்டம் செய்யும் குழுவினருடைய குறியீடுகளே என்பது இன்னும் சிலரது கருத்து. தென் இந்தியாவில் அரிக்கமேட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களில் கிராபிடிக் குறிகள் அதிகளவில் காணப்படுகின்றன. இக் குறியீடுகள் பற்றி தென்னிந்திய தொல்லியல் அறிஞர்கள் பல்வேறுவகையான ஆய்வுகளைச் செய்து வருகின்றனர்.[20]

## கந்தரோடையும் பெருங்கற்காலப் பண்பாடும்:

முதன் முறையாக 1970ல் விமலாபெக்லியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட கந்தரோடை அகழ்வாராய்ச்சியின் போதே பெருங்கற்காலப் பண்பாட்டுச் சுவடுகள் பல இங்கு கண்டுபிடிக்கப்பட்டன. இலங்கைத் தொல்லியற் திணைக்களம் இங்கு மேற்கொண்ட அகழ்வாய்வு மையத்திலிருந்து அதாவது தற்போது ஸ்தூபி போன்று (உருவாக்கப்பட்ட) பௌத்த எச்சங்களைக் கொண்ட பகுதியிலிருந்து சற்றுத் தூரத்திலேயே பென்சில்வேனியப் பல்கலைக் கழகத்தினர் தமது ஆய்வினை மேற்கொண்டிருந்தனர். இவ்வாய்வின் விளைவாக தற்போது காணப்படும் பௌத்தமத எச்சங்களைக் கொண்ட மண்படைக்குக் கீழே மிகவும் வளர்ச்சிபெற்ற பெருங் கற்



காலப் பண்பாட்டுக்குரிய மண்படைகள் காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. C14 காலக் கணிப்பின்படி இப் பெருங்கற்கால மண்படையானது கி. மு. 1000 ஆண்டுகளுக்கும் முற்பட்டது.[21]

இத்தகைய ஒரு தன்மையானது கர்நாடக மாநிலத்தில் உள்ள பிரம்மகிரி மாஸ்கி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் விளைவாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகளை ஒத்ததாகக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. கந்தரோடையிலும் கர்நாடக மாநிலத்திலும் பண்பாட்டு வளர்ச்சியானது ஒரே தன்மையாக (Similarity) விளங்கியிருந்தது என்பதனையும் நகரமயமாக்கம் (Urbanization) ஒரே மாதிரியாகவே தொழிற்பட்டிருந்தது என்பதனையும் தொல்லியலாய்வின் முடிவுகளிலிருந்து உணரக்கூடியதாகவுள்ளது.

மாஸ்கி என்னுமிடத்தில் அசோக மாமன்னன் முக்கியமான தனது ஒரு பாறைக்கல்வெட்டினை பொறித்திருந்தான். பிராமி வரிவடிவில் அமைந்த அச் சாசனத்திலேயே அம் மாமன்னன் தனது பெயரை அசோகன் எனக் குறிப்பிட்டிருந்தான் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் கர்நாடக தொல்லியலாளர் மாஸ்கியில் மேற்கொண்ட அகழ்வாய்வின் விளைவாக பெருங் கற்காலப் பண்பாட்டின் வளர்ச்சிநிலைகளுக்குரிய மண்படைகளை அசோக மன்னன் நாட்டிய பிராமிச்சாசன மண்படைக்குக் கீழ் கண்டு வெளிப்படுத்தியுள்ளனர். பிரம்மகிரி அகழ்வாய்வின்போதும் (1948) சேர் மோட்டியர் வீலர் மிகவும் வளர்ச்சியடைந்த பெருங்காலப் பணபாட்டு மண்படைகளுக்கு மேல் ஆந்திரப் பண்பாட்டு வளர்ச்சி பெற்றிருந்தமையை எடுத்துக் காட்டியுள்ளார். ஆந்திரப் பண்பாடு பௌத்த பண்பாட்டுக்குரிய விழுமியங்களையும் அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றிருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இபபண்பாடு கி. மு. 2ம் நூற்றாண்டின் முதலரைப் பகுதியிலிருந்து கி. பி. 1ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை வளர்ச்சி பெற்றிருந்தது. எனவே இதனையொத்த வகையில் கந்தரோடையிலும் பெருங்கற் பண்பாட்டின் வளர்ச்சியைத் தொடர்ந்து பௌத்தப் பண்பாடு வளர்ச்சி பெற்றிருந்தது என்பதனைக் காணும்போது மாஸ்கியைப் போன்று, இங்கும் பூர்வீக திராவிடர்களே (பெருங் கற்காலப் பண்பாட்டு மக்களே) பௌத்த மதத்தினையும் தழுவியவர்களாக அதேசமயத்தில் உரோமன் ரௌலட்டட் மட்பாண்டத்தின் உபயோகத்துடன் உரோம வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களாகவும் காணப்பட்டிருந்தனர் என்பதனை உறுதிப்படுத்தக் கூடியதாகவுள்ளது. இம்மக்கள் பிராமி வரிவடிவத்தின் உபயோகத்தினை கி. மு. 3ம் நூற்றாண்டளவில்

நன்கறிந்திருந்தனர் என்பதனையும் மாஸ்கியில் அம்மக்கட்கூட்டத்தினருக்காக அசோக மாமன்னன் நாட்டிவைத்த பிராமிச் சாசனத்திலிருந்து உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இதே போன்று கந்தரோடையில் வாழ்ந்த பெருங் கற்கால மக்களும் கி. மு. 3ம் நூற்றாண்டில் அல்லது அதற்குப் பின்னர் பௌத்தசமய அலையினுள் அகப்பட்ட நிலையில் இருந்த பிராமி எழுத்து வழக்கினை உபயோகித்து வந்திருந்தனர் என்பதனை அங்கிருந்து பெற்றுக்கொண்ட 'ததஹபத' என்ற வாசகத்தினையுடைய பிராமிச்சாசனம் எடுத்துக் காட்டுகின்றது.

ஆந்திரர்களுடைய தோற்றமானது எவ்வாறு பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களுடைய வளர்ச்சி நிலலயிலிருந்து எடுத்துக் காட்டப்படுகின்றதோ அதேபோன்று ஒருநிலையை கந்தரோடையில் பிற்காலகட்டத்தில் பௌத்தமத வழிபாட்டுமுறையையும் தழுவியிருந்த மக்களுடைய தோற்றமும் பெருங்கற்காலப் பண்பாட்டு நிலைகளிலிருந்து திட்டவட்டமாக எடுத்துக்காட்ட முடியும். இத்தகையவொரு முடிவானது திராவிடர்களுக்கும் பௌத்த மதத்துக்குமுள்ள இறுக்கமான தொடர்பினை இனங்காணவும் உதவும் (மணிமேகலையில் வருகின்ற ஆபுத்திரன் கதையில் மணிபல்லவம் தொடர்பாக கொடுக்கப்பட்டுள்ள விபரணங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய சவ அடக்க முறைகளை நினைவுகூர வைப்பதனைக் காணலாம்.)

கந்தரோடையில் இலங்கைத் தொல்லியற் திணைக்களம் அகழ்வாய்வில் ஈடுபட்டிருந்தபொழுது கிடைத்திருந்த பௌதத எங்கங்களுக்குரிய மண்படைக்கு மத்தியில் அல்லது அடியில் இரும்பினால் செய்யப்பட்ட வேல்போன்ற கருவிகளும் கிடைத்திருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தொல்லியற் திணைக்களமானது கந்தரோடை அகழ்வாய்வு பற்றிய தனது அறிக்கையை இதுவரைக்கும் வெளியிடாமல் இருப்பதன் காரணமாக இதனை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. இருந்தும் பேராசிரியர் இந்திரபாலாவின் கைககு இத்தகைய ஒரு கருவி கிடைத்தமையிலிருந்து அக்கருத்தினை உறுதிப்படுத்த முடிகிறது.[22] சாதாரணமாக இவ் வேல்போன்ற இரும்பினால் செய்யப்பட்ட (Spear Head) ஆயுதமானது பெருங்கற்கால சவக்குழிகளுடன் இணைந்த்த காணபபடுவது குறிப்பிடத்தக்கது. தென்னிந்தியாவில் ஆதிச்ச நல்லூரிலும் இலங்கையில் புத்தளம் மாவட்டத்திலுள்ள பொன்பரப்பியிலும் வேல்போன்ற ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மிக அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளரான புஸ்பரட்ணம் பூநகரி மீதான தனது மேலாய்வின்போது சேவலுடன் இணைந்த வேல்



போன்ற இரும்பாயுதங்கள் பலவற்றை கண்டுபிடித்துள்ளார்.[23] இவை பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய கறுப்பு – சிவப்பு மட்பாண்டங்களுடன் இணைந்திருக்கக் காணப்பட்டன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே புராதன முருக வழிபாடானது பெருங்கற்கால மக்கள் மத்தியில் பெருவழக்கிலிருந்தது என்பதனையும், கந்தரோடையிலும் முருக வழிபாடு மேலோங்கியிருந்தது என்பதனையும் மேற்படி தொல்லியல் ஆதாரங்களிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. கந்தரோடையில் முருக வழிபாட்டினைத் தொடர்ந்து பௌத்தமதத்தின் செல்வாக்கு கூடிக் காணப்பட்டமையினையும் அதன் பின்னர் விஷ்ணு வழிபாடு மேனிலையடையப் பெற்றிருந்தது என்பதனையும் தொல்லியற்சான்றுகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. இங்கிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கார்ணேலியன் மணியில் 'விஷ்ணு பூஸ்திய' என்று பொறிக்கப்பட்டிருந்த சாசனவாசகம் வளர்ச்சியடைந்த நாகரிலிபியில் பொறிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது இது கி. பி 3ம் அல்லது 4ம் நூற்றாண்டுக்குரியது என்பது பேராசிரியர் சிவசாமியினுடைய கருத்தாகும். வரலாற்றுப்புகழ் பெற்ற பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலும் கந்தரோடையிலிருந்து 4 மைல் தொலைவில் வடமேற்குத் திசையில் அமைந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சிங்கள மொழியில் எழுதப்பட்ட 'கோகில சந்தேசய' என்ற குயில்விடு தூது என்ற நூலில் வடபகுதியில் மிகவும் பிரசித்தி பெற்றுக் காணப்பட்ட விஷ்ணு கோயில்களில் பொன்னாலை வரதராஜப பெருமாள் கோவிலும் குறிக்கப்பட்டிருப்பது இங்கு நோக்கத்தக்கது. கோகில சந்தேசய என்ற சிங்களமொழி நூலானது கி. பி. 14ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கந்தரோடையில் சாசனம்:

கந்தரோடை அகழ்வாய்வின் பயனாக வெளிக்கொணரப்பட்ட தொல்பொருட்களில் சாசனங்களும் முக்கியமானதொரு கூறாக விளங்குகின்றன. காலத்தால் முந்திய சாசனப் பதிவுகள் அப்பிராந்தியத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட மட்பாண்ட சிதைவுகளில் பொறிக்கப்பட்டுக் காணப்படும் பிராமி வரிவடிவங்களைக் குறிப்பிடலாம். (ம) என்ற எழுத்துக்களே மிகவும் கூடுதலாக கந்தரோடை மட்பாண்டங்களில் காணப்படுகின்றன. தற்செயலாக முழுமையான ஒரு பிராமி மட்பாண்டச் சாசனமும் கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மட்பாண்ட ஓட்டில் பொறிக்கப்பட்ட இச் சாசனவாசகம் பிராமி வரிவடிவில் ஆதிச் சிங்களமொழியில் பொறிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது கிறீஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலிருந்தே கந்தரோடை மக்கள், இந்தியாவில்

அக் காலகட்டத்தில் பரவலாகப் பயன்படுத்தியிருந்த பிராமி எழுத்தினை நன்கு அறிந்திருந்தனர் என நாம் அறியத்தக்க வகையில் இப் பிராமி எழுத்துச்சாசனம் கிடைக்கப்பெற்றுள்ளது. சமகாலத்தில் இலங்கையின தெற்குப் பகுதிகளிலும இப பிராமி வரிவடிவத்தின் உபயோகம் நன்கறியப்பட்டிருந்தது.

இச் சாசனப் பொறிப்பில் ஆறு பிராமி எழுத்துக்கள் உள்ளன. இவ் எழுத்துக்களின் தன்மையினைக் கொண்டு இச் சாசனமானது ஏறத்தாள கி மு. 2ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இச் சாசனத்தின் வாசகம் 'தததஹபத' எனவும்' தத்தாவின் பாத்திரம்' என்பது இதன் பொருள் எனவும் விளக் கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராக விளங்கிய கலாநிதி ஆர். ஹோமஸ் என்ற அமெரிக்க அறிஞர் 1958ல் கந்தரோடையில் சேகரித்த தொல் பொருட்களுள் சிவப்பு நிறத்தில் அமைந்த கார்ணேலியன் மணி ஒன்றும் கிடைத்தது. அதில் 'விஷ்ணு பூஸ்திய' (விஷ்ணு பூதியினுடையது) என வளர்ச்சி பெற்ற ஆந்திர கலைமரபில் பொறிக்கப்பட்ட வடமொழிச் சுலோகம் ஒன்று காணப்பட்டது. இம் முத்திரையில் உள்ள வரிவடிவமானது ஆந்திர நாட்டிலுள்ள நாகர்ச்சுனாகொண்டாவில் கி. பி. 3ம் அல்லது 4ம் நூற்றாண்டளவில் நிலவிய, வளர்ச்சியுற்ற தென்பிராமி லிபி எனக் கூறப்படுகிறது. இச் சிவப்பு நிற கார்ணேலியன் முத்திரையானது வாசிப்பதற்காக பேராசிரியர் பரணவிதான என்பவரிடம் பேராசியர் சிவசாமி தொடுத்திருந்தார் என்பதனையும் அறிய முடிகிறது.

'பூரணகும்பம்' செதுக்கப்பட்ட, வெண் வைரக் கல்லினாலான ஓர் உடைந்த கற்றூண்சாசனம் கந்தரோடையில் கிடைத்த காலத்தாற் பிந்திய சாசனப் பதிவாக விளங்குகின்றது. இச்சாசனமானது வரலாற்று ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் விளங்குகின்றது கி. பி. 9ம் அல்லது 10ம் நூற்றாண்டுக்குரிய சிங்கள வரிவடிவத்தினால் ஏழு வரிகளில் இக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. நான்கு பக்கங்களைக் கொண்ட இச் சதுரத்தூணின் கீழ்ப்பகுதி உடைந்த நிலையிலேயே அகழ்ந்தெடுக்கப்பட்டது. நான்கு பக்கங்களில் ஒரு பக்கத்தில் சாசனப் பொறிப்பினையும் இன்னொரு பக்கத்தில் சக்கர வடிவத்தினைக் கொண்ட ஓர் உருவத்தினையும் இக்கற்றூண் கொண்டுள்ளது.



இச் சாசனத்திலிருந்து அரசனின் பெயரை அறிய முடியாதுள்ளது. கீழ்ப்பகுதி உடைந்து சிதைந்துவிட்ட காரணத்தினால் பல விடயங்கள் மறைந்துபோய் விட்டன. இச்சாசனப் பொறிப்பிலுள்ள வரிவடிவத்தினையொத்த இன்னொரு சாசனத்தினை வைத்துக் கொண்டே இச்சாசனமானது கி. பி 898 - 914 க்கிடைப்பட்ட காலப்பகுதியில ஆட்சி செய்த வசப மன்னனுடையது எனக் கண்டு பிடித்துள்ளனர். இக் கல்வெட்டிலுள்ள வாசகம் பின்வருமாறு:-

(1) 'சேருடை (க்ஷத்திரிய)
(2) குலத்தின் சிகரமாகிய இக்ஷ
(3) வாகு பரம்பரையில் வந்தது
(4) உடையாராகிய ருஹூணும்
(5) பிரதேசம் மலை
(6) மண்டலம் ஆகியனவற்றை ஓராணைக்கு(ள்)
(7) உட்படுத்திய .....'

இவ்வச்சு வாசகத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். 'ரோஹண மாவட்டத்தினையும் மலை மண்டலத்தினையும் ஓராணைக்குட்படுத்தி' என்ற சொற்றொடர் பொதுவாக 4வது கஸ்ஸப மன்னனுடைய கல்வெட்டுக்களிலே காணப்பட்டாலும் இது பொதுவாகக் கஸ்ஸப மன்னனுடைய 'மூத்த கதோதரனாகிய 1ம் உதயன் என்பவனது அரசியல் நடவடிக்கையினை எடுத்துக் கூறுவதாகவுள்ளது. இச் சாசனத்திலிருந்து நாகதீபராஜா இக் காலகட்டத்தில் இலங்கையின் ஒரு மையப்படுத்தப்பட்ட அனுராதபுர நிர்வாகத்தினை ஏற்றிருந்தான் என்பதனை உணரலாம்.

பொதுவாக நாகதீப ராஜாவினுடைய வலிமை வீழ்ச்சியடைந்த காலகட்டங்களிலேயே இலங்கைத்தீவின் ஒரு மையப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பினுள் இப் பிரதேசமானது பல தடவைகளில் உட்படுத்தப்பட்டிருந்தமைக்கு வரலாற்றுச் சான்றுகள் உள. ஆனால் பெரும்பாலான காலப்பகுதிகளில் நாகதீப அரசானது முதலில் கதிரமலையை (கந்தரோடையை) மையமாகக் கொண்டும் பின்னர் பொங்கொலி நீர் சிங்கைநகரினை தலைநகராகக் கொண்டும் சுதந்திர ஆட்சிப் பிரதேசமாக விளங்கிவந்திருந்தது. பின்னர் கால ஓட்டத்

தில் நல்லூர் இராசதானியை மையமாகக்கொண்டு சுதந்திரமான பேரரசராக வளர்ச்சிபெற்றிருந்தமையினை வையாபாடல், கைலாய மாலை, யாழ்ப்பாண வைபவமாலை என்பன தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. கேகாலை மாவட்டத்திலுள்ள கொட்டேகம என்ற இடத்தில் கிடைத்த காலத்தால் முந்திய வெண்பாப்பாடல் பதிவு ஒன்று 'பொங்கொலிநீர் சிங்கைநகர் ஆரியர்' பற்றிய குறிப்பொன்றினைத் தருவது யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. 'பொங்கொலிநீர் சிங்கை நகர்' என்பதனை பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் வல்லிபுரமாக இருக்கலாம் என முன்பு குறிப்பிட்டுள்ளபோதிலும் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் தொல்லியல் ஆய்வுகளின் பயனாக அது பூநகரியை சார்ந்ததாக இருக்குமென்பதும் ஒரு சாராரது கருத்தமைவாகக் காணப்படுகிறது.

# அத்தியாயம் நான்கு

# வழுக்கியாற்றுப் பின்னணியில் கந்தரோடை

## (வழுதி தந்த வரலாற்று மூலங்கள்)

ஈழத்தமிழரது பண்பாட்டு வரலாற்று மூலாதாரங்களைத் தேடுகின்ற ஒரு புதிய முயற்சி சமூகப் பணியாக இன்று யாழ்ப்பாணத்திலும், தமிழ்மக்கள் வாழ்கின்ற ஏனைய பிராந்தியங்களிலும் புத்தூக்கம் பெற்றுள்ளது சமகாலம் வரைக்கும் ஈழத்தமிழ் மக்கள் எதிர்நோக்கி நின்ற பல்வேறு வகையான பிரச்சினைகளுடன் அவர்கள் தமது தாயகம் தொடர்பாகக் கொண்டிருந்த உணர்வு பூர்வமற்ற நிலைப்பாடும், சந்தேக நோக்கும் அவர்களது வாழ்வில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்திவிட்டன. அவர்கள் தமது வரலாற்றுப் பாரம்பரியம் தொடர்பாக பிரக்ஞையற்றவொரு நிலையில் இதுவரைக்கும் வாழ்ந்து வந்தமையாலேயே இவ்வாறானவொரு சீரழிந்த நிலை தோற்றுவிக்கப்பட்டதற்கு காரணம் எனலாம். அத்தோடு இதுவரைக்கும் தமிழ் மக்களது வரலாற்றுப் பாரம்பரியம் தொடர்பான நிலைப்பாடானது பெருமளவுக்கு ஐதீகங்களையும் கர்ணபரம்பரைக் கதைகளையும் மையப்படுத்தி தோற்றுவிக்கப்பட்டமையின் அடிப்படையில், தமிழ்மக்கள் மத்தியில் தமது பண்பாட்டுத் தொடர்ச்சியைக் குறித்த மையத்தில் நிலை நிறுத்துவதற்கு வேண்டப்பட்ட மன உணர்வு உருவாக்கப்படுவதற்கும் வாய்ப்பில்லாதொழிந்தது. இவ்வாறான ஒரு பின்னணியே இன்று 'ஈழத்தமிழர் வரலாற்று மூலங்கள்' தொடர்பாக நம்பகமான சான்றுகளைத் தேடிப் பெற்றுக்கொள்ள வேண்

டிய ஒரு சூழலை உருவாக்கியுள்ளது. அவ்வாறான பணியொன்றின் போது கந்தரோடையில் உள்ள குறிக்க மையமொன்றில் இருந்து திராவிடப் பண்பாட்டினதும் மொழிவழக்கினதும் தொடர்ச்சியான வளர்ச்சி நிலைகளை மிகத் தெளிவாக இனம் கண்டு உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் மிகவும் நம்பகமான சான்றுகள் தற்செயலாகக் கிடைத்தமைபற்றிய விபரத் தொகுப்பாக இவ்வத்தியாயம் அமைகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சமூக உருவாக்கத்தில் இயற்கையமைப்பு பெரும் செல்வாக்குச் செலுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவ்வகையில் குடாநாட்டினுள் மேற்காக வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கும், கிழக்காக மாயக்கை நீரேந்து பரப்பும் மக்கள் வாழ்வின் புராதன இரு மையங்களாக இருந்து வந்திருக்கின்றன. வழுக்கையாற்று வடிநிலத்தினூடாக உள்வாங்கப்பட்ட பண்பாட்டுப் பங்களிப்புப் பற்றிய ஆய்வுகளில் ஆய்வாளர்கள் இன்னும் அக்கறை செலுத்தவில்லை. இருந்தாலும் கந்தரோடையிலிருந்தும் இதுவரையில் வெளிக்கொணரப்பட்ட தொல்லியல் எச்சங்கள் அத்துறை ஆய்வுகளில் முக்கியத்துவத்தை கோடிட்டுக்காட்டி நிற்கின்றன எனலாம்.

ஜீவனோபாயத்துக்கான உயிரோட்டமான மையங்களாக இயற்கையாக அமைந்த நன்நீர் நிலைகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம்தொட்டே இருந்து வந்திருக்கின்றன. தொல்லியல் ஆய்வுகள் மூலம் பெறப்படுகின்ற சான்றுகள் இக் கருத்தினை உறுதிப்படுத்தியுள்ளன. அவ்வகையில் 'மயோசீன்' காலப்பகுதியில உருவான யாழ்ப்பாணத் தீபகற்ப புவியமைப்பியலுடன் இணைந்து தோற்றம் பெற்ற வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் இருமருங்கிலும் கோயிற் குடியிருப்புக்களும், விவசாயக் குடியிருப்புக்களும் தொடர்ச்சியான வளர்ச்சியோடு பண்பாட்டுக் கோலங்களை வெளிப்படுத்தியிருந்தன என்றால் அது மிகையாகாது. இக் குடியிருப்புக்கள் ஒரே சீராக இப் பள்ளத்தாக்கின் இருமருங்கிலும் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. சில பகுதிகள் நகரரீதியாக வளர்ச்சியடைந்திருந்தன, பெரும்பாலான குடியிருப்புக்கள் விவசாயக் கிராமியக் குடியிருப்புக்களாகவே இருந்திருக்கின்றன கந்தரோடை அவ்வகையில் ஒரு நகரக்குடியிருப்பாகவும் வர்த்தக மையமாகவும் வளர்ச்சி பெற்றிருந்தமையை அங்கிருந்து பெற்றுக்கொள்ளப்படும் தொல்லியற் சான்றுகள் மூலமாக அறிந்துகொள்ள முடிகிறது. கந்தரோடை தொடர்பான ஆய்வின் பின்னணியிலே வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கினுடைய தொல்லியல் முக்கியத்துவம் எதிர்காலத்தில் இன்றியமையாததாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும். ஏனெனில் யாழ்ப்பாணத்தின் சமூக உருவாக்கம் பற்றி கற்போருக்கும், ஆய்வு



செய்வோருக்கும் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு வளமான சான்று வழங்கும் ஒரு மையமாக அமையும் என்பது அண்மைக்கால ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

## வெள்ளி நாணயங்கள்:

வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்குடன் இணைந்த வகையில் பல வாணிக மையங்களும், தானியக்களஞ்சியங்களும், ஆலயங்களும் காணப்பட்டிருந்தன என்பதனை அண்மைக்காலத் தொல்லியல் மேலாய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. ஈமச்சந்துகள் பலவும் இப் பள்ளத்தாக்குடன் இணைந்தவகையில் காணப்பட்ட முறையினை ஆனைக்கோட்டை இருகோடு போன்றவை உறுதிப்படுத்தியுள்ளன. இம் மையங்களிலிருந்து கிடைத்த மிருகவடிவம் பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள் பலவும் எமது ஆய்விற்குரிய தொல்லியல் மூலகங்களாகின்றன. கந்தரோடையில் பெருங் கற்கால மண்படையடுக்கொன்றில் காணப்பட்ட செங்கட்டியுடன் சேர்ந்து பன்னிரண்டு நாணயங்களும் ஒட்டப்பட்டிருந்தமையை / செருக்கப்பட்டிருந்தமையைக் கண்டுகொள்ள முடிந்தது. வெள்ளியிலான இப் பன்னிரண்டு நாணயங்களையும் விஞ்ஞான முறைப்படி சுத்திகரித்தபின்னர் ஆய்வுக்காகப் பயன்படுத்தியபோது அவை அச்சுககுத்தப்பட்ட வெள்ளி நாணயங்கள் என்பது தெரியவந்தன. வட்டவடிவினதாகவும், சதுர முறையிலும் காணப்படும் இந் நாணயங்களின் முற்பக்கத்தில் சூரிய உருவமும் அல்லது வண்டிற்சில்லு ஒன்றிலே விலங்கு ஒன்று இழுத்துச் செல்வது போன்ற உருவமும் காணப்படுவதனை அவதானிக்கலாம், ஒரு நாணயத்தில் சூரிய உருவம் மிகத் தெளிவாக தெரிகின்றது. அதில் சூரிய உருவத்தினை நோக்கி ஒரு விலங்கு வருவது போன்று அமைந்துள்ளது.

இத்தகைய உருவங்களைத் தாங்கி, வெளியிடப்பட்ட இவ்வகையான நாணயங்களை வடகிழக்கிந்தியாவிலிருந்தும் தக்கண – தென்னிந்தியப் பரப்பிலிருந்தும் ஆய்வாளர் பெற்றுள்ளனர். இருப்பினும் கந்தரோடையிலிருந்து கிடைத்தவற்றுள் நான்கு நாகவடிவம் பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயங்களாக இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த வெள்ளிநாணயம நாகவம்சத்தின் வெளியீடாகவே கொள்ளவேண்டிய ஒரு நிலை எமக்கு ஏற்படுகின்றது. நாகதீபத்தில் அரசாட்சி செய்த நாகதீப ராஜாவினுடைய வெளியீடுகளாக நாகசின்னம் பொறித்த இந்த வெள்ளிநாணயத்தினைக் கொள்வதில் தவறேதும் இருக்க முடியாது என்றே கருதவேண்டியுள்ளது. கந்தரோடையிற் கிடைத்துள்ள இவ் வெள்ளிநாணயங்கள் தொடர்பான

விபரண நோக்கு இவ் அத்தியாயத்தின் இறுதிப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

## தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டத் துண்டுகள்:

வழுக்கையாறு தந்த வரலாற்று மூலங்களுள் எமக்குத் தற்பொழுது சிறப்பாகக் கிடைத்திருப்பது தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டத் துண்டுகளாகும். தமிழ்ப் பிராமி வரிவடிவங்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டங்கள் பல்வேறு வகையைச் சேர்ந்தனவாகக் காணப்படுகின்றன. கறுப்பு, சிவப்பு மட்பாண்டச் சட்டிகள் (Bowls) இவற்றுள் மிகமிகப் பிரதானமானவையாகும். சிவப்பு வர்ணத்தினாலான பெரிய மண்பானைகளிலும் பிராமி வரிவடிவங்கள் பொறிக்கப்பட்டுக் கிடைத்துள்ளன.

இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் விளைவாகக் கிடைத்த பிராமி வரிவடிவங்களுள் 'குணி' என்ற தமிழ் வாசகம் பொறிக்கப்பட்டுக் கிடைத்த மட்பாண்டத்துண்டு ஒன்று வரலாற்று முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துவதாக அமைகிறது. இவ்வாசகத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட பிராமி வரிவடிவம் தமிழ் நாட்டில் உள்ள புகலூர் தமிழ்ப் பிராமிச் சாசன வரிவடிவினை ஒத்தமுறையில் காணப்படுவது விசேடமாக நோக்கத் தக்கதாகும். வரிவடிவினையிட்டு எவருமே அதனை தமிழ்ப்பிராமி அல்ல என்று மறுக்க முடியாது. அத்தோடு இம் மட்பாண்டச் சாசனத்துடன் இணைந்தவகையில் கிடைத்த வேறு மட்பாண்டங்களில் தமிழ்நெடுங்கணக்கிற்கே சிறப்பெழுத்தாக அமைந்த 'ழ' கர ஒலிக்குரிய வரிவடிவமும் கிடைத்துள்ளது. மேலும் 'ஈ' கார ஒலிக்குரிய தமிழ்ப்பிராமி வரிவடிவமும் கிடைத்துள்ளது. இன்னும் மேலதிகமாக தமிழ்ப்பிராமி வரிவடிவங்களில் வழங்கிவந்த எண் முறைக்குரிய குறியீட்டு முறையும் கிடைத்திருப்பது எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. தமிழகத்தில் ஓரிரு இடங்களிலேயே இவ்வகையான எண்முறை நிலவியிருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய வரிவடிவ முறைக்குரிய காலப்பகுதியை கி. பி 1ம் 2ம் நூற்றாண்டுக் காலப்பகுதி எனக் கொள்ள முடியும்.

## கந்தரோடையில் கிடைத்த 'ஆனைக்கோட்டை' முத்திரை எழுத்து:

1980ம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் ஆனைக்கோட்டையில் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டு



அரிய தொல்லியற் கண்டுபிடிப்பொன்றினை நிகழ்த்தியிருந்தனர். ஆனைக்கோட்டையில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் இறுதி நாள் அன்று மாலை 4 - 30 மணியளவில் ஆய்வுகள் யாவும் முடிவுற்ற நிலையில் ஒரு சிறிய நேர இடைவெளிக்குள் இந்நூலாசிரியர் பேராசிரியர் இந்திரபாலாவினது அனுமதியுடன் ஓரிடத்தில் மண்வெட்டியினால் ஒரு சிறிய குழியைத் தோண்டியபோது கிடைத்தற்கரிய சான்று ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. எதிர்பாராதவகையாக கறுப்பு – சிவப்பு மட்பாண்டம் ஒன்றும் அதனுள் இருந்த முத்திரை மோதிரமும் எமது கைக்கு கிடைத்தன. பின்னர் பேராசிரியர் இந்திரபாலா அதனை எம்மிடமிருந்து வாங்கி ஆராய்ந்த பின் ஊற்றுப்பேனாவுக்குரிய மையில் தேய்த்து ஒருதாளில் அம் முத்திரையைப் பதித்தார். உடனே அத்தாளில் ஈரின எழுத்துக்கள் புலப்பட்டன. மேல்வரியில் சிந்துவெளி (?) எழுத்தும் கீழ்வரியில் தமிழ்ப்பிராமிச் சாசன வாசகமான கோவேந்த அல்லது கோவேதம் என்பதும் காணப்பட்டன. இவ்வெழுத்துக்கள் தொடர்பாகப் பின்னர் தொடர்ச்சியான பல ஆய்வுக்கட்டுரைகள் பேராசிரியர் கா. இந்திரபாலா, கலாநிதி ஜேமஸ் இரட்ணம், கலாநிதி P இரகுபதி ஆகியோரால் எழுதி வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இன்று கந்தரோடையில் எமக்குக்கிடைத்த சிவந்த மட்பாண்டத்துண்டு ஒன்றில் ஓர் எழுத்தானது அன்று ஆனைக்கோட்டையிற் கிடைத்த ஈரின எழுத்து முத்திரையின் மேல்வரியில் பொறிக்கப்பட்டு காணப்படும் 'சிந்துவெளியின் (?) எழுத்தினை ஒத்திருப்பதனை ஒப்பிட்டு நோக்கிக்கொள்ள முடிகிறது. அவ்வாறாயின் ஆனைக்கோட்டையிலிருந்து கந்தரோடைவரைக்குமுள்ள வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் சமகாலத்தில் அத்தகைய வரிவடிவங்களைக் கையாண்ட மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது அல்லவா? கந்தரோடையில் கிடைத்த இந்த சிறப்பு வரிவடிவமானது அன்று கலாநிதி இரகுபதி குறிப்பிட்டது போன்று 'கோ' என்பதனை உணர்த்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட புச்சூலக் குறியீடாக இருப்பது ஈண்டும் நோக்கத்தக்கது. அவ்வாறாயின் கந்தரோடைப் புராதன அரசிருக்கையின் அரசபதம் தொடர்பான வரலாற்றாய்வுக்கு இச்சான்று எமக்கு நன்கு பயன்படும் என்பதும் தெளிவாகின்றது.

## 'சிவ' - பிராமி நாணயம்:

வழுதி தந்த வரலாற்று மூலங்களுள் மிக முக்கியத்துவம் வாய்ந்த 'சிவ' என்ற வாசகத்தினைக் கொண்ட சதுரமான செம்பு நாணய

மானது சங்ககால வாணிபத் தொடர்பினை கந்தரோடையுடன் உறுதிப்படுத்துவதற்கு உதவியுள்ளது.

இந் நாணயத்தில் தமிழ் பிராமி வரிவடிவில் சிவ என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. 'வார்வை' நாணயமான இச் செம்பு நாணயம் கந்தரோடையில் குறிப்பிட்ட மையத்தில் மேற்பரப்பிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## சிவப்பு - மணற்கல் முத்திரை (Red - Sand - Stone – Stamp)

கந்தரோடையில் உள்ள குறிப்பிட்ட மையத்தில் கிடைத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஆவணம் சிவப்பு மணற்கல்லில் செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்ட ஒரு முத்திரையாகும். இது முத்திரைக்கல்தான் என்பதனை ருசுப்படுத்துவதற்கேற்ற வகையில் அதன் உள்ளக விளிம்பு மிகவும் அழுத்கம் திருத்தமாகப் பொழியப்பட்டுச் செய்யப்பட்டதாகக் காணப்படுகிறது. ஒரு முக்கோணவடிவில் அதன் முத்திரை பதிவதனையும் அதன் மையத்தில் நாகவடிவம் புலப்படுவதனையும் பதிக்கப்பட்ட முத்திரையூடாகக் கண்டுகொள்ள முடிகிறது. குயவர்கள் பானைவனைவதற்குப் பயன்படுத்திய கல்லாக இது இருக்க முடியாது என்பதனை அதன் அமைப்புமுறை எமக்கு நன்கு வெளிப்படுத்துகின்றது. மட்பாண்டங்களில் முத்திரை பொறிப்பதற்காக இக்கல் பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடும் என்பதனை, முத்திரை பொறித்துக் கிடைத்த ஏனைய மட்பாண்டத்துண்டுகள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. ஆனாலும் இக் குறிப்பிட்ட கல் முத்திரை பொறித்துக்கொள்ளப்பட்ட மட்பாண்டம் இன்னும் எமக்கு கிடைக்கவில்லை.

## முத்திரை பொறிக்கப்பட்ட மட்பாண்டங்கள்:

கந்தரோடையில் உள்ள குறிப்பிட்ட மையத்தில் கிடைத்த இரு வகையான முத்திரை பொறிக்கப்பட்ட மட்பாண்டங்களை இங்கு குறிப்பிடலாம். முதலாவது வகையானது ஒரு வெளிவட்டத்தினுள் அமைந்த நீள்வட்ட வடிவான - உருவம் பதித்த முத்திரையாகும். இரு வட்டங்களுக்கிடையே பிராமி எழுத்துக்கள் தெளிவற்ற முறையில் காணப்படுகின்றன. இவற்றுள் 'ம' என்ற எழுத்து முத்திரையில் பதிந்துள்ளது. நடுவட்டத்தினுள் மையத்தில் நாகத்தினது உருவம் பதிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது வகையான முத்திரையானது வட்டவடிவில் அமைந்துள்ளது. பிராமி எழுத்துக்கள் மிகவும் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளன. நாகபாம்பினது உருவமும் தெளிவாக உள்ளது. இவ்விரு முத்திரைகளின் பதிவுகளையும் ஆராயும்போது



உலோகத்தினாலான முத்திரையிடும் கருவியே இங்கு பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதும் தெளிவாகின்றது.

## எலும்பினாலான கருவி:

கந்தரோடையில் உள்ள குறித்த மையத்திலிருந்து மீட்டெடுத்த தொல்லியல் எச்சங்களுள் எலும்பினாலான கருவியே சிறப்பிடம் பெறுவதனைக் காணலாம். ஒரு மிருகத்தினுடைய எலும்புப் பாகத்தினைப் பயன்படுத்தி கத்தி போன்று உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்ட கருவியாக இவ்வெலும்புக்கருவி கிடைத்துள்ளது. திட்டவட்டமாக ஒரு கருவியாக இக் குறிப்பிட்ட எலும்புத்துண்டு பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதற்குரிய அடையாளங்கள், அதில் மிகத்தெளிவாகவே பதிந்துள்ளது. ஒரு பக்கமுனை நன்கு சீவிக் கூராக்கப்பட்டுள்ளது என்பதனை அவ்வடையாளங்கள் நிரூபிக்கின்றன. இதற்கு மேலாக இவ்வெலும்புக்கருவியின் ஒருபக்கம் தட்டையாகச் சமப்படுத்தப்பட்டு ஓர் எருதின் உருவம் வரையப்பட்டுளளதாகவும் காணப்படுகின்றது. மிகவும் நீட்டுப்போக்கான அமைப்பினையுடைய அந்த எருதில் இரு கொம்புகள், சுருக்கங்களையுடைய தாடை, குறுகிய நான்கு கால்கள், வால் என்பன காணப்படுகின்றன. வயிற்றுப் பாகத்தில் சில கோடுகளும் காணப்படுகின்றன.

இவ்வகையான தொல்லியல் எச்சம் பொதுவாக வரலாற்றுக்கு முற்பட்டகால மக்களுடைய வாழ்க்கைமுறைகளுடனேயே தொடர்புபட்டதாய் அமைவது வழக்கம். ஆனால் கந்தரோடையைப் பொறுத்தவரையில் எலும்பினாலான இக்கருவி பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய மண்படையடுக்குகளுக்குக் கீழே உள்ள பிறிதொரு மண்படையடுக்கு ஒன்றினுள் இருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டது. இம் மண்படைக்குமேல் உள்ள பெருங் கற்காலப் பண்பாட்டிற்குரிய மண்படையில் தமிழ் வரிவடிவில் உள்ள, சிறப்பெழுத்தான 'ழ' கரம் உட்பட தமிழ்ப்பிராமி வடிவங்கள், குறியீடுகள் ஆகியன பொறிக்கப்பட்ட கறுப்பு சிவப்பு மட்பாண்டங்களும், ரோமன் 'ரௌலெட்டட்' வகையைச் சேர்ந்த மட்பாண்டங்களும், ஈமச்சாம்பல்களும் நிறைந்துள்ளன. இதற்குக் கீழ்ப்புறமாக உள்ள வண்டல் மண்படை வழுக்கையாற்றினால் கொண்டுவரப்பட்டு படியவிடப்பட்ட வண்டல் மண்படுக்கையாக அமையக்கூடும். இதன் கீழ்ப்புறமாக முழுமையான பெரிய சிப்பிகளும், குவாட்ஸ் கற்களும் பரவிக் காணப்படுகின்றன. அம் மண்படைக்குள்ளேயே இவ் எலும்பினாலான கருவி கிடைத்துள்ளது. இத்தகைய நிலையானது பெருங் கற்காலப்பகுதிக்கும் முற்பட்ட ஒரு காலப்பகுதிக்குரியதாகவே எலும்பினாலான கருவியைக் கொள்ளவைக்கும். இருப்பினும் பரந்தரீதியாக இவ்விடத்தில்

ஓர் அகழ்வாராய்ச்சியை நிகழ்த்தும் வரைக்கும் இக் கருவியினுடைய காலத்தையிட்டு எதுவுமே திட்டவட்டமாகக் குறிப்பிடமுடியாது.

எலும்புக் கருவியில் வரையப்பட்டுள்ள எருதுவினது தோற்றம் தொடர்பாகவும் ஆராயவேண்டியவர்களாக உள்ளோம். ஒடுங்கிய உடல் அமைப்பினையும், நீண்ட போக்கினையுமுடையதான இந்த எருதுவினது தோற்றம் கிரீட்டன் தீவில் நோஸஷ் Knossess) என்ற நகரில் உள்ள அரண்மனைச் சுவரில் தீட்டப்பட்டுள்ள எருதினது உருவ அமைதியைக் கொண்டுள்ளதாகக் கொள்ளலாம்.

## வழக்கையாற்றுப் பிராந்தியத்தில் சங்ககாலப் படிமங்கள்

தென்னாசியப் பண்பாட்டுச் சூழலில் இந்துநதிப் பள்ளத்தாக்கு மக்களதும், சங்ககாலத் தமிழக மக்களதும் வாழ்வும் வளமும் பெருமளவுக்கு ஆரியப் பண்புகளினது தாக்கமின்றி, தனித்துவமான வகையில் வளர்ச்சி பெற்றுச் சென்றமையைக் காணலாம். 'ஆரியவர்த்த'ப் பண்பாடு பின்னர் தென்னாசியாவின் தென்பகுதியில் அதன் செல்வாக்கு நிலைகளை ஏற்படுத்த ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிக மக்களதும், சங்ககாலத் தமிழக மக்களதும் பண்பாட்டம்சங்கள் செறிவாக இப்பிராந்தியத்து மக்கள் வாழ்வில் செல்வாக்கினைச் செலுத்தியிருந்தமையினை அண்மைக் காலத் தொல்லியல் ஆய்வு முடிபுகள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. இவ்விரு வேறுபட்ட காலப்பகுதிக்குரிய பண்பாட்டு அசைவியக்கங்கள் தென்னகத்திலும், ஈழத்திலும், அயற்தீவுகளிலும் பரவலாகத் தத்தமது பண்பாட்டுக் குறிகாட்டிகளை விட்டுச் சென்றிருப்பதனை இத் தொல்லியல் ஆய்வு முடிவுகளில் இருந்து கண்டுகொள்ள முடிகின்றது. இந்துநதிப பள்ளத்தாக்கு மக்களது வாழ்க்கை முறையூடாக ஏற்பட்ட செல்வாக்கு நிலைகளின பரப்பு இடபொழுது விந்திய மலையையும் தாண்டி தெற்கே பரவியிருந்தமைபற்றிய செய்தி மிகவும் குறிப்பிடத்தக்கது.[1] உஜ்ஜயினி உள்ளிட்ட மத்திய தக்கணப் பிராந்தியங்களில் சிந்துவெளி நாகரிகத்தின் சுவடுகள் பல அண்மைக் காலங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை போன்று தீபகற்ப இந்தியாவுக்குத் தென்மேற்கிலுள்ள மாலைதீவுகளிலும் அதன் சுவடுகளை ஆய்வாளர் எடுத்துக்காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.[2]

இதேபோன்று, சங்ககாலத் தமிழக மக்களின் பண்பாட்டு வாழ்வின் குறிபபிடத்தக்க அம்சங்களை ஈழத்திலும் அதன் அயற்பரப்புக்களிலும் இனம் கண்டுகொள்ளக்கூடிய வகையில் தொல்லியல் ஆய்வு முடிவுகள் எமக்குக் கிடைத்து வருகின்றன. தமிழகத்தில் அண்மைக்



காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள், வெளியீடுகள் என்பன சங்ககாலப் தொடர்பாக இலக்கியங்கள் தரும் பல செய்திகளை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் சான்றுகளை ஈந்தவண்ணமுள்ளன சேர் ஐராவதம் மகாதேவனின் ஆய்வு முடிபுகள் சங்ககாலத் தமிழக மக்களது இலக்கியப் பரப்பில் இடம்பெறும் அகத்தியர் கதைக் கருவினை சிந்துவெளி தந்த முத்திரைகளினின்றும் வெளிப்படுத்தியிருப்பது இத்துறை தொடர்பான ஆய்வுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.[3] குடத்திற்கும் (பானைக்கும்) ஆதித் திராவிடருக்கும் இடையிலான தொடர்புகளை அகத்தியர் கதைக் கருவினூடாக எடுத்துக்காட்டிய ஐராவதம் மகாதேவன், சிந்து வெளி முத்திரைகளில் பதியப்பெற்றிருந்த பானை வடிவம் போன்ற இலச்சினைகளுடன் தொடர்புபடுத்திய வகையில் அக்கதை மரபினை எடுத்துக்காட்டியிருப்பது சங்ககாலப் பண்பாட்டுப் பரப்பினை தொல்லியல் மூலாதாரங்களோடு இணைத்து ஆய்வு செய்வோருக்கு உவப்பான செய்தியாக அமையும்.

இன்னொருபுறத்தில். பரமசிவம் போன்ற தமிழகத்தைச்சேர்ந்த பிற தொல்லியல் ஆய்வாளர்கள் மதுரைக்குத் தெற்கே ஆவரம்பிட்டி, காரைக்கால் போன்ற மையங்களில் அகழ்ந்து, சங்ககால – ரோமானிய வர்த்தகப் பொருட்கள் பலவற்றை வெளிப்படுத்தியிருப்பது மேலும் சங்ககாலத் தமிழக மக்களது கலைமரபுகள் பற்றி ஆராய்வோருக்கு பயனுடைய தொல்லியல் மூலங்களாக அமையும்.[4] பல்வேறு விதமான மணிகளினாலான ஆபரணங்கள், கார்னேலியன் மணி வகைகள், சங்கு வளையங்கள், முத்து பவள வகைகள் போன்றன பரமசிவத்தினால் வெளிக்கொணரப்பட்டவற்றுள் சிலவாகும்.

காவிரியாறு கடலில் சங்கமமாகும் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து 12 கடல் மைல்கள் தொலைவில் உள்ள கண்ட மேடைத் தளத்திலிருந்து மிகவும் பழமைவாய்ந்த கல்லினாலான நங்கூரம் ஒன்றினை தஞ்சாவூர்ப் பல்கலைக்கழக சமுத்திரவியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்து, வெளிப்படுத்தியுள்ளனர்.[5] அவர்களுடைய ஆய்வு முடிவுகளின்படி, கடல்கோள் இங்கு ஏற்படுத்துவதற்கு முன்னர் தற்போதைய துறைமுக நகரான காவிரிப்பூம்பட்டினம் முன்பு அமைந்திருந்த அதன் பழைய அமைவிடத்தினையே இக் கல்லினாலான நங்கூரம் கண்டுபிடிக்கப்பட்ட மையம் எடுத்துக்காட்டுவதாகக் கொள்ளப்படுகின்றது 12வது கடல் மைல் எல்லையிலிருந்து கடலின் ஆழம் திடீரென அதிகரித்துச் செல்வதினை அவர்கள் தமது ஆய்வு முடிவுக்குச் சார்பாக எடுத்துக் கையாள்வதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இப் பின்னணியில் சங்கம் வளர்த்த ஆதித் திராவிடப் பண்பாடு பற்றிய செய்திகளுக்கும், ஈழத்தில் உள்ள கந்தரோடைக்குமிடையே ஏதாவது தொடர்புகள் இருந்திருக்குமா என சிந்தனைமட்டத்தில் எவ

ரேனும் குறித்துக் கொள்வார்களேயானால் அது எதிர்காலத்தில் பயனுடையதாக அமைவதற்கு அதிக வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் என இவகு குறிப்பிடலாம். வழக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்திருந்த ஆதிக் குடியிருப்புக்களுள் கந்தரோடையானது மிகவும் தொன்மை வாய்ந்ததாகவும்,[6] மனித பரிணாமத்தின் தொடர்ச்சியான பண்பாட்டு வளர்ச்சி நிலைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றதன் அடிப்படையிலும், சங்க காலப் பண்பாட்டுப் படிமங்கள் பலவற்றைக் காலத்திற்குக்காலம் வெளிப்படுத்தி நிற்பதன் அடிப்படையிலும் கந்தரோடையில் சங்க காலத்தின் சமுத்திரவியல் (Oceanic culture) பண்பாட்டினை உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது. அவ்வகையில் வர்த்தகத் தொடர்புகளின் மூலமாகவும் சமுத்திரவியற் பண்பாடானது வழுக்கையாற்றுப் பிராந்தியத்திற்கும் சங்ககாலத் தமிழகத்திற்குமிடையே மக்கள் வாழ்வில் செல்வாக்கு நிலைகளை ஏற்படுத்தியிருந்திருக்க வேண்டும் எனக் கொள்ள வைக்கின்றது. அதனை தொல்லியற்சான்றுகளும் இப்பொழுது உறுதி செய்கின்றன.


சங்ககாலத் தமிழகத்து சமுத்திரவியற் பண்பாட்டினை உள்வாங்கிய ஒரு பிராந்தியம் என்ற வகையில் வழுக்கையாற்று வெளியில் அமைந்த கந்தரோடை ஒரு சர்வதேச வியாபார மையமாக வளர்ச்சி பெற்றிருந்தமையினை அண்மைக் காலங்களில் அங்கிருந்து பெற்றுக்கொள்ளப்படும் தொல்லியற் சான்றுகளினூடாகக் கண்டு கொள்ள முடிகிறது. ஆதித் திராவிடக் குடியிருப்புக்களின் குறிகாட்டி எனப்படும் கறுப்பு – சிவப்பு மட்பாண்டங்கள் பெருமளவில் கந்தரோடையில் உள்ள பல்வேறு மண்படைகளிலிருந்தும் கிடைத்து வருகின்றன. அவற்றுள் புறா வடிவம் உட்பக்கத்தில் பதிக்கப்பட்ட நிலையில் கிடைத்த கறுப்பு – சிவப்பு மட்பாண்டத்துண்டு ஒன்று சங்ககாலத் தமிழகத்துடனான சமுத்திரவியற் பண்பினைத் தெளிவாக இனம் காட்டும் வகையில் கிடைத்துள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது. கடல்வாணிபம் பெருகியிருந்த அக்காலத்தில் புறா திசை அறியும் கருவியாகச் செயற்பட்டிருந்தமையினை கடற்பாதைக் கதைகள் பல எடுத்துக்காட்டுகின்றன.[7] சங்ககால இலக்கியங்களுள் பட்டினப்பாலை கடந்தகால நாடுகளுடனான வாணிபத் தொடர்புகளை, குறிப்பாக ஈழத்துணர்வும் காழகத்தாக்கமும் பற்றிய குறிப்புக்களைத் தருவதனைக் காண்கின்றோம்.[8] இவை மறைமுகமாக வாணிப மார்க்கங்களையே குறித்து நிற்பனவாகக் கொள்ள முடியும். கூடவே பட்டினப்பாலையில் (செய்யுள் ருஅ) 'தூதுணம் புறவொடு துச்சிற்சேக்கும்' என புறாவைப் பற்றிய செய்தியும் இடம்பெறுவதனைக் காண்கிறோம்.[9] புறா கடற் பயணங்களுடன் இணைந்த ஒரு பறவையாகும். இதேபோன்று நெடுநல்வாடையிலும் (செய்யுள் சரு) மனையுறை புறவின் செங்காற் சேவல் என புறா




பற்றிய செய்தி இடம்பெறுவதனைக் காணலாம்.[10] தமிழர் வாழ்வில் புறாவுடனான இணைவு இன்றியமையாததாகக் காணப்பட்டிருந்தமையினை இக்குறிப்புக்கள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. கந்தரோடையிலிருந்து கிடைத்த கறுப்பு - சிவப்பு மட்பாண்டத் துண்டில் காணப்படுகின்ற புறாவடிவமும் அதனையே உணர்த்தி நிற்கின்றது. பதிற்றுப்பத்தில் 39 வது செய்யுளில் இடம்பெறும் புறது என்பதனை புறா எனக் கொள்ளலாமா ?) என்பதனைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி சர்ச்சைக்குள்ளாக்கிவிட்டிருந்தார்.[11] 'மனையுறை புறவினை' அகம் + புறம் எனக் கொள்வதற்கு (மனை – அகம் புறவின் – புறம்) வாய்ப்புக்கள் வாய்ப்பாக இருக்குமாயினும் அது கந்தரோடையில் கிடைத்த புறாவடிவத்துக்கும் சங்ககாலப் பண்பாட்டுக்குமிடையே தொடர்பில்லாமற் போய்விடும் என்று கொள்வதற்குரிய அர்த்தமாகிவிட முடியாது. அதனை சமுத்திரவியல் வழிவந்த ஒரு பண்பாட்டின் சின்னம் என்றே திட்டவட்டமாகக் கொள்ள வேண்டும். அதற்கு வழுக்கையாறு வழிசமைத்துக்கொடுத்திருந்தது என்றால் அது மிகைப்படுத்தப்பட்ட கூற்றாகிவிட முடியாது.

சங்க இலக்கியங்களில் செறிவாகக் குறிப்பிடப்படும் ஈமம் பற்றிய செய்திகளுடன் வீரக்கல், சதிக்கல், பத்தினிக்கல் போன்ற செய்திகளும், அவற்றில் இடம்பெறும் வரைவுகள் பற்றிய குறிப்புக்களும் தொல்லியல் ஆய்வாளர்களுக்கு பெருவிருந்தாக அமைகின்றன. சங்ககாலத் தமிழக மக்கள் மத்தியில் வீரக்கல் வழிபாடு பெருவழக்கில் இருந்ததற்கான தொல்லியற் தடயங்கள் பல அண்மைக்காலங்களில் கிடைத்துள்ளன.[12] இப்பண்பு பல்லவர் காலம் வரைக்கும் நீடித்திருந்ததற்கான சான்றுகளையும் ஆய்வாளர் வெளிப்படுத்தியுள்ளனர். மிக அண்மையில் சங்ககாலத்திற்குரியதான கருங்கல்லாலான மனித உருவம் ஒன்று (Anthropomophic stone stab) நிலத்தின் அடியில் புதைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. 3.5 மீற்றர் உயரத்தினையும், 1.75 மீற்றர் அகலத்தினையும், 16 மீற் – 22 மீற்றர் வரையிலான தடிப்பினையும் கொண்டு காணப்படும் இக் கருங்கல்லினாலான மனித உருவம் முதன்முறையாக தமிழகத்தில் கிடைத்திருப்பது சங்ககாலத் தமிழக மக்களுக்கும் பெருங் கற்கால கற்கட்டிடத் தொழில்நுட்பத்திற்குமிடையேயுள்ள நெருங்கிய தொடர்பினை வலியுறுத்துவதாக உள்ளது.[13] இத்தகைய ஒரு நிலையானது கோட்டு வரைபு (Liner craft) முறையிலிருந்து ஒருபடி வளர்ச்சிகண்டு வளைகோட்டு வரைபு முறைக்கு (Semi circular projection) மாற்றம் பெற்றிருந்தமையை உறுதிப்படுத்துவதாக உள்ளது. ஆனால் கந்தரோடையில் எமக்குக் கிடைத்த உயர்ரகமான கறுப்பு – சிவப்பு தட்டையான மட்பாண்டத்தில் (Bowl) வரையப்பட்டுள்ள ஆள்வடிவம் முற்

றிலும் கோட்டுவரைபு முறையில் இடம்பெற்றிருப்பதனைக் காண லாம். தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 1 கருங்கல்லினாலான அம் மனிதவடிவத்திற்கும் கந்தரோடை மட்பாண்டத்தில் இடம் பெற்றுள்ள கோட்டுவரைபு முறையில் அமைந்த ஆள் வடிவத்திற்கும் இடையே நெருங்கிய பல ஒற்றுமைகள் இருப்பதனை இங்கு அவ தானிக்கமுடிகிறது இது மேலும் ஆராயத்தக்க ஓர் அடித்தள மாகவும்காணப்படுகின்றது.



சங்க கால முதுமக்கள் நடுகல் வரைபு.



கந்தரோடை கறுப்பு – சிவப்பு மட்கலத்தில் வரையப்பட்டுள்ள மனித உருவம்.


வழக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்திருந்த ஆதிக்குடிகள் வரலாற்றுக் காலத்தில் இருந்து பயன் படுத்தியிருந்த வரிவடிவமுறை பற்றிய புதிய தகவல்கள் அண்மைக் கால தொல்லியல் ஆய்வுகளின் விளைவாக எமக்குக் கிடைத்துள்ளன. 1981ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினர் ஆனைக் கோட்டையில் பெருங் கற்காலத் தாழி அடக்கமுறை பயிலப்பட் டிருந்த கரையாம்பிட்டியில் அகழ்வுகளை மேற்கொண்டதன் பயனாக சங்க காலத் தமிழ்மொழி வழக்கிற்கு உபயோகிக்கப்பட்டிருந்தமை யினை உறுதி செய்வதாக அமைந்த தமிழ்ப் பிராமி வடிவமுடைய ஒரு முத்திரைச் சாசனத்தினை மீட்டெடுக்க முடிந்தது[14] இதே போன்று மிக அண்மையில் கந்தரோடையில் உள்ள உச்சாப்பனை என்ற பகுதியிலிருந்து தமிழ்ப்பிராமி வரிவடிவம் பொறிக்கப்பட்ட பெருந்தொகையான கறுப்பு – சிவப்பு, சிவப்பு மட்பாண்டத் துண்டு களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

பிராமி வரிவடிவம் பொறிக்கப்பட்டுக்கிடைத்த மட்பாண்டத் துண்டுகள் ஓரெழுத்து. ஈரெழுத்துக்கள் அல்லது மூன்று எழுத்துக்




களை மட்டுமே உள்ளடக்கியவையாக கிடைத்துள்ளன. இவற்றுள் 'ழ'கர வடிவ எழுத்தில் இரு துண்டுகளும், 'ஈ'கார வடிவ எழுத் தில் ஒரு துண்டுமாக மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. இவற்றினை வெறும் குறியீடுகள் எனக் கொள்வதற்கு எமக்கு இன்னும் சான்று கள் கிடைக்கவில்லை 'ஈ'கார வடிவம் தமிழ்நாட்டு புகலூர் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டில் வரும் வரிவடிவ முறையைத் தழுவியதாகக் காணப்படுகிறது. ஆனால் 'ழ'கர வரிவடிவமானது கி. பி. 4ம் நூற்றாண்டுக்குரியது எனக் கருதப்படும் திருநாதர் குன்றுக் கல் வெட்டினைப் பெரிதும் ஒத்ததாகக் காணப்படுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.[15]

'ழ'கர ஒலிக்குறி தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்தமை தொடர்பான பரத்தியேகமான தகவல் ஒன்றினை, பளபளப்பாக் கப்பட்ட நிலையில் உபயோகிக்கப்பட்டிருந்த கறுப்பு – சிவப்பு தட்டை யான (Bowl) மட்கலசத்தின் விளிம்பில் வரையப்பட்ட வரைபு ஒன்று எமக்கு உணர்த்தி நிற்கின்றது. இக் குறிப்பட்ட மட்கலத்தின் கருமையான பகுதிக்குள் வரையப்பட்ட இரு உருவங்களைக் கொண்ட வரைபானது 'ழ'கர ஒலிக்குறியுடன் இணைக்கப்படடிருப்பது மொழி யியல் ஆய்வாளர்கட்குரிய ஆய்வுத்தளமாக அமைய வாய்ப்பளிக்கின் றது. நாற் சூலக் குறியுடன் இணைந்த வகையில் 'ழ'கர, வடிவம் ஒன்றும், வேல் குறியுடன் இணைககப்பட்ட 'ழ'கர வடிவம் இன், னொன்றுமாக அவ் வரைபு காணப்படுகிறது. அதன் தோற்றம் பின் வருமாறு காணப்படுகின்றது.



இக் குறிக்கப்பட்ட வரைபினைத் தாங்கிய மட்கலமானது கந்த ரோடையில் ஒரு மையத்தில் அமைந்திருந்த சூளையிலிருந்தே சேக ரிக்கப்பட்டது என்பது ஈண்டும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இவ்வடிவங்கள் தாங்கியுள்ள 'ழ'கர வடிவ வரிவடிவம் வெளிப்படுத்தி நிற்கும் பொருள் மேலும் ஆராயப்படவேண்டியதாகின்றது. 'ழ'

கர வரிவடிவமே திராவிட மொழிக் குடும்பத்தில் 'தாமிழி'யின் உப யோகத்திற்கு அடித்தளமாக விளங்கியது என்பது அறிஞர்களது வாதமாகும்.[16] 'கோ'வை உணர்த்தி நிற்கும் வரிவடிவமாகவும், 'ழ'கரம் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதனை நிறுவுவதற்கேற்ற தொல்லியல் சான்றுகளும் கிடைத்துள்ளன.[17] சங்க காலப் பாண்டிய மன்னனான நெடுஞ்செழியனுடைய நாணய வெளியீடுகளில் 'ழ'கரம் கோவுக்குரிய வரைபாகக் கொடுக்கப்பட்டுள்ளமை இங்கு எடுத்துக்காட்டத்தக்கது. ஆனைக்கோட்டை ஈரின வரிவடிவில் உள்ள குறியீட்டு வரைபில் கூட ஓரளவுக்கு 'ழ'கரத்துக்குரிய தொடக்கநிலை நடு எழுத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளமையைக் காணமுடியும். அதில் உள்ள பிராமி வரிவடிவம் கோவேதம் அல்லது கோவந்த என்ற வாசகத்தினை கொண்டுள்ளது என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஆனைக்கோட்டை முத்திரையில் இடம்பெற்றுள்ள ஈரின வரிவடிவம் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது.




1. ஆனைக்கோட்டை முத்திரையில் உள்ள குறியீடு.
2. கந்தரோடை மட்பாண்டத்தில் உள்ள சூலக்குறியில் இடம்பெற்றுள்ள வடிவம்,
3. சிவப்பு வர்ண மட்பாண்டத்தில் இடம் பெற்றுள்ள வடிவம்.
4. கந்தரோடை மட்பாண்டத்தில் உள்ள வேலில் இடம்பெற்ற வடிவம்.



நாகத்தலை பொறிக்கப்பட்ட நான்கு வெள்ளி நாணயங்கள் அச்சுக் குத்தப்பட்ட நாணயங்களாக (Punch Marked coins) எமக்குக் கிடைத்திருப்பது வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் பண்பாட்டுருவாக்கத்தைப் பற்றி ஆராய்ந்து கொள்வதற்குரிய அடிப்படை மூலாதாரங்களாகின்றன. இது வரையிலும் இத்தகைய நாகத்தலையுடன் கூடிய வெள்ளி நாணயங்கள் அச்சுக்குத்தப்பட்ட முறையில் தென்னாசியாவில் எவ்விடத்திலும் பெற்றுக்கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் எடுத்துக்காட்டப்படவில்லை சூரிய கதிர்கள், விலங்குருவங்கள், ஏழு சிறுவட்டங்களை உள்ளடக்கிய வகையிலான பெருவட்டங்கள், தலையற்ற கருடப் பறவையின் வடிவம், எகிப்திய வண்டின் வரைபு போன்ற வண்டு உருவங்கள் என தனித்தனியாக பல உருவங்கள் இவ் வெள்ளிநாணயங்களில் பதிக்கப்பட்டனவாகக் காணப்படுகின்றன. மிகவும் தனித்துவமான வகையில் வெளியிடப்பெற்ற இந்நாணயங்கள் சூளைப்பரப்பிலிருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நாகதீபத்தின் வரலாற்றோடு மிகவும் நெருக்கமுடையதாகக் காணப்படும் இந் நாக நாணயங்களை நாகர்களே வெளியிட்டிருக்க வேண்டும் என்பதனை மேலதிகமாகக் கிடைத்த மட்பாண்ட நாக முத்திரைச் சான்றுகளும் உறுதிப்படுத்தி நிற்கின்றன நாகவம்சத்தின் குறியீடுகள் மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்ட முத்திரைகளில் இடம்பெற்றுள்ளன கூடவே பிராமி வரிவடிவமும் பொறிக்கப்பட்டுக் காணப்படுவதிலிருந்தும். அத்தோடு இத்தகைய மட்பாண்டங்கள் சூளையிலிருந்தே சேகரிக்கப்பட்டவை என்பதிலிருந்தும் அவை சுதேச மன்னர்களால் குறிப்பாக நாகதீபத்தினை ஆட்சிசெய்த நாகர் வம்சத்தினரால் வெளியிடப்பட்டவை என்பது உறுதியாகின்றது. இந்நிலையில் நாகநாணயங்களை வெளியிட்டுவைத்த நாகர் வம்சத்தினர் சூரியகுல வழித்தோன்றல்கள் என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது.[18]

சங்ககால இலக்கியப் பரப்பில் நாகவம்சத்தைச் சேர்ந்த பல புலவர்களது பெயர்கள் இடம்பெற்றிருப்பது இப்பொழுது எமக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாக அமைகின்றது. ஈழ முடி நாகராயர், ஈழநாகன், ஈழ நாகராயர், பூநாகன், குறுநாகன் போன்ற பெயர்கள் நாகதுவீபத்தைச் சேர்ந்தவை என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.[19] சங்ககால முடியுடை மூவேந்தரின் ஆட்சிப் பரப்பிற்குள் காணப்பட்டிருந்த குறுநில மன்னர்போன்றே சிற்றரசராக நாகர்களும் நாகதுவீபத்தில் ஆட்சி செய்திருந்தனர் என்பதனை இப்பொழுது இந்நாணய வெளியீடுகள் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள முடிகிறது. இதுபோன்று மணிமேகலையில் உள்ள பலசெய்திகள் குறிப்பாக மணிபல்லவம் தொடர்பாகக் கிடைத்துள்ள செய்திகளுடன் நாக

அரசர்களைப் பற்றிய செய்திகளும் இணைக்கப்பட்டுக் கூறப்பட்டுள்ளமையானது நாகவம்சத்தினரது அரசமுறைமையுடன் தொடர்புபட்டவகையிற் கிடைத்த தொல்லியற் சான்றுகளுடன் இணைத்த வகையில் ஆராய்ந்துகொள்வதற்கு வாய்ப்பினைத் தருகின்றது[20] பாளிமொழியில் 'நகதிவ' எனக் குறிப்பிடப்பட்ட நாகதீபம் பற்றிய வரலாற்றுத் தொடக்கத்தினை நாகமன்னர்களுடைய ஆட்சிமுறைமையுடன் ஆரம்பிக்கவேண்டும் என்பதனையும், அவர்கள் திராவிட நாகர்களே என்பதனையும் இக்குறிப்பிட்ட நாணய வெளியீடுகள் வாயிலாக உறுதிப்படுத்திக்கொள்ளவும் முடிகிறது.[21]

நாக முத்திரைகள் பொறிக்கப்பட்ட மூன்று மட்பாண்டத் துண்டுகளை சூளைப்பகுதியில் இருந்து மீட்டெடுக்க முடிந்தமையானது வாணிபத்தொடர்புகளை உறுதிப்படுத்துவதற்கேற்ற வழிவகைகளைத் தெளிவாக்கியுள்ளது வட்டவடிவமான இம்முத்திரைகள் தனித்துவமான வகையிற் தோற்றமளிப்பது ஒருபுறத்தில் அதிகார பூர்வமான உற்பத்திமுறை வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் மேற்கொள்ளப்பட்டது என்பதனையும் மறுபுறத்தில் ஏற்றுமதிக்குரிய தரத்தினை நிர்ணயம் செய்யும் குறியீடாகவும் உபயோகிக்கப்பட்டது என்பதனையும் அவை உறுதிப்படுத்துவதாக அமைகின்றன. சிவப்பு வகையைச் சேர்ந்த மட்பாண்டங்களில் சூளையிட்டுச் சுடுவதற்கு முன்னமே இத்தகைய முத்திரைகள் பதிட்டம் செய்யப்பட்டிருந்தன என்பதனை செய்முறைகள் எடுத்துக்காட்டுகின்றன. உள்வட்டம் வெளிவட்டம் என்பவற்றுக்கிடையே உற்ற இடைவெளியில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுக் காணப்படுவது அத்தகைய மட்பாண்டங்களினது காலவரையறையை நிர்ணயம் செய்துகொள்வதற்கு உதவுவதாக உள்ளது. வட்டத்தின் மையப்பகுதியில் நாகவடிவம் பொறிக்கப்பட்டுக் காணப்படுவது அதன் சிறப்பியல்பாகவும், வரலாற்றுக்கு முக்கியத்துவம் உடையதாகவும் அமைந்துவிடுகின்றது.

நாக முத்திரைகள் பொறிக்கப்பட்ட இச்சிவப்பு மட்பாண்டங்கள் வாணிப நோக்கத்திற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்பதனை அவை மீட்டெடுக்கப்பட்ட நிலைகளை அடிப்படையாககொண்டு குறிப்பிட்டுக்கொள்ள முடிகிறது. சங்ககாலத் தமிழகத்துடனான வாணிபத் தொடர்புகளுக்கு அச்சாணியாக விளங்கிய ரோமாபுரி வியாபாரிகள் / தமது பிரதிநிதிகள் ஊடாக இப்பிராந்தியத்திலும் (வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கிலும்) வாணிப முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர் என்பதனை இங்கு கிடைத்துக்கொண்டிருக்கும் ரோமன ரௌலெட்டட் மட்பாண்டங்களும் ரோம நாணயங்களும் உறுதிப்படுத்துகின்றன சேரநாட்டுப் பிரதிநிதிகளே ரோமாபுரி பெருவர்த்தகர்களையும் ஈழத்து வியாபாரிகளையும் இணைத்து வைத்த வணிகர்களாவர். சிலப்பதிகாரம் – மணிமேகலை போன்ற நூல்கள்



இவற்றுக்குச் சிறந்த சான்றுகளை வழங்குகின்ற இலக்கிய மூலங்களாகவும் உள்ளன[22] கந்தரோடையைப் பொறுத்த வரையிலும் சேரநாட்டு வாணிபப்பிரதிநிதிகள் ஊடாக தமிழகத்தினுடனான பொருளாதாரப் பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதனை உறுதிப்படுத்தும் சான்றுகளும் கிடைத்துள்ளன. அந்த வகையில் முத்திரையிடப்பட்ட இச்சிவப்பு மட்பாண்டங்கள் ஏற்றுமதி நோக்கத்திற்கான தரநிர்ணயத்தை உறுதிப்படுத்தி நிற்கும் அதே நேரத்தில் அரசமுறைமை ஒன்று வளர்ச்சி பெற்றிருந்த வகையினையும் பக்கம் பக்கமாக உறுதிப்படுத்தி நிற்கின்றன எனலாம். இந்த அம்சம் மேலும் விரிவாக ஆராயத்தக்கதாகவும் உள்ளது.

தமிழகத்திற்கும் கந்தரோடைக்கும் இடையே காணப்பட்டிருந்த வாணிபத்தொடர்புகளை மிகவும் தெளிவாக சான்றுகாட்டி நிற்கின்ற மூலங்களாக சங்ககாலப் பாண்டியன் பெருவழுதியின் சதுர நாணயங்கள் காணப்படுகின்றன 1956ம் ஆண்டில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையொன்றில் பாண்டியன் பெருவழுதியின் இரு நாணயங்கள் (மீன் சின்னத்துடன் கூடியவை) 'பௌத்த சக்கர வகை' எனப் பெயர் சூட்டப்பட்டு வெளியிடப்பட்டமையைக் காணலாம்[23] அதேவகையான நாணயம் ஒன்று இப்பொழுது எமக்குக் கிடைத்திருப்பது தமிழகத்தில் கிடைத்த பாண்டியர் நாணயங்களுடன் ஒப்பிட்டு நோக்கிக்கொள்ள வாய்ப்பினை அளித்துள்ளது. அண்மையில் தமிழகத்திலிருந்து வெளியான பாண்டியர் நாணயங்கள் என்ற ஆய்வு நூல் ஒன்றில் இதே வகையான நாணயமும் வெளியிடப்பட்டுள்ளமையைக் காண முடிகிறது[24] சங்க காலத்தைச் சேர்ந்த வேப்பங்காய்–நெல்லிக்காய் போன்ற உருண்டை வடிவமுடைய நாணயங்களும் கந்தரோடையிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன[25] இவை தொடர்பாக அறிஞர்கள் பல ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளனர். இவை யாவுமே வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு பிராந்தியத்திற்கும், தமிழகத்திற்குமிடையிலான வாணிபத்தொடர்புகளை மிகத் தெளிவாகக் காட்டுகின்ற சான்றுகளாகும்.

சங்ககாலத் தமிழகத்துடனான தொடர்பின் நிமித்தமாக வழுக்கையாற்றுப் பிராந்தியத்தில் ஏற்பட்ட செல்வாக்கு நிலைகளை அங்கு வழங்கிக்கொண்டிருக்கின்ற பல இடப்பெயர்கள் இன்றுவரை வெளிப்படுத்தி நிற்பதனையும் காணலாம். சிறப்பாக கந்தரோடைப் பிராந்தியத்தில் உள்ள குறிப்பிட்ட மையங்களின் – குறிச்சிகளின் பெயர் வரிசையில் சங்கம் புலவு, தில்லையங்கூடல், கயல்கண்ணி, அங்கண் அம்மைக்கடவை, உச்சாப்பனை, பருத்தியாவோடை (பருத்தியோடை), திருப்புதுறை போன்றன இங்கு ஆய்வுக்கெடுத்துக்கொண்ட பகுதிகளாகவுள்ளன. சங்கம் புலவு என்ற குறிச்சியானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொல்லியற் சான்று

களை ஈந்தவண்ணமுள்ளது. மிகப் பழமை வாய்ந்த ஈம அடக்க முறையைக் கொண்டுள்ள இம்மையத்தில் இருந்து பழமைவாய்ந்த நாகலிங்கம் ஒன்று அண்மையில் கண்டெடுக்கப்பட்டது. மஞ்சள்நிறக் கலவையினாலான – கல்வகையை ஒத்தவகையில் இந் நாகலிங்கம் காணப்படுகின்றது. திருக்காம்புலியூர் அகழ்வாய்வின்போது கிடைத்த நாகலிங்க வடிவத்தினை இது பெரிதும் ஒத்துக் காணப்படுவதும், குடிமல்லத்தில் கிடைத்த லிங்கத்தின் வரைபுகளை ஒத்தவகையில் இந் நாகலிங்கம் விளங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும்.[26] இவ்விடயம் தொடர்பாக மேலும் ஆராய இடமுண்டு.

கயல்கண்ணி அல்லது கயற்கண்ணி என வழங்கும் குறிச்சியே கந்தரோடையில் வட்ட வடிவானதும, சதுரமானதுமான பழமைவாய்ந்த கட்டிடக் கூறுகளை கொண்டு விளங்குகின்றது, இங்கு கடந்த வருடத்தில் கிணறு ஒன்று வெட்டப்பட்டபோது தனிமரமொன்றில் கோதப்பட்ட தோணி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டபோதும், அதன் வரலாற்று முக்கியத்துவம் உணரப்படாமல் அழிக்கப்பட்டும் விட்டது.[27] இதேபோன்ற தோணியமைப்புக்குரிய பாலைகட்டை ஒன்று சங்குவேலி வயல்வெளிப் பகுதியிலுள்ள கருஞ்சேற்றுக்குள்ளிருந்து மீட்டெடுக்கப்பட்டபோதும், அது விறகுக்காகப் பயன்படுத்தப் பட்டமையை அறியும்போது கடும் துயரமடையவேண்டியவர்களாகவே நாம் உள்ளோம்.

'அங்கணா அம்மைக்கடவை' மிகப் பழமைவாய்ந்த ஐதீகம் ஒன்றினை தன்னுள் கொண்டு, இன்று 'அங்கணாவைக்கடவை' என வழங்கி வருவதனைக் காண்கின்றோம். சேரன் செங்குட்டுவன் கண்ணகி தெய்வத்திற்கு விழா எடுத்த சமயத்தில், ஈழத்து மன்னனான முதலாம் கஜபாகு வேந்தனும் அதில் பங்கெடுத்து, மீண்டபோது ஈழத்தில் கண்ணகிக்குரிய முதல் ஆலயத்தினை அங்கண் அம்மைக் கடவையில் எழுப்பியதாக அந்த ஐதீகம் இன்றுவரை நிலவுகின்றது. இப் பழமை வாய்ந்த ஐதீகத்தினைக்கொண்ட ஆலயத்தினைப்பற்றிய ஆய்வுகள் தொடர்பாக இதுவரையில் அறிஞர்கள் கவனம் செலுத்தாமல் இருப்பது எமது துரதிஷ்டமே.

'திரும்புதுறை' தொடர்பாக இருவகைப்பட்ட விளக்கங்கள் கொடுக்கப்பட்டு வருகின்ற சமயத்திலும், வழுக்கையாற்றுக்கும், கந்தரோடைக்கும் இடையிலான நாவாய் போக்குவரத்துத் தொடர்பின் முக்கிய மையமாக திரும்புதுறை விளங்கியிருந்தமையைக் கண்டு கொள்ளலாம். திருபபு உயர்ந்த மண்மேடானது பெருமளவிலான தொல்லியற் கருவூலங்களைத் தன்னகத்தேகொண்டு விளங்குவது இதற்குச் சான்று பகர்வதாக உள்ளது. சங்கம் புலவுக்கும் சங்குவேலி வயல் பரப்பிற்குமிடையே காணப்படும் நீள்சதுரமான தாமரைத்



தடாகம் ஊடாக திரும்புதுறைவரையிலும் நாவாய் போக்குவரத்துக்கள் நடைபெற்றிருக்க வேண்டும் என்பதனை அங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. தாமரைத்தடாகம் ஒன்று சங்குவேலி வயற்பரப்பின் வடஎல்லையில் அமைந்திருப்பதும், அதன் அமைப்புமுறையும் அரசவம்சத் தொடர்புகளை அதனுடன் இணைத்துக்காட்டுவதாக உள்ளது. இப்பிராந்தியத்தில் நிலவும் ஐதீகங்கள் அதனை அரசவை மங்கையர்களுக்குரிய நீராடற்குளம் என்றே வழங்குகின்றன. இந்த அம்சம் மேலும் ஆராயத் தக்கதாக உள்ளது.

மேலே கூறப்பட்ட விடயங்கள் யாவற்றையும் தொகுத்து நோக்கும்போது, கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப்பரப்பிலிருந்தே கந்தரோடை என்ற மையம் வளர்ச்சிபெற்று வந்தது என்பதனையும், தமிழகத்துடனான வாணிப பண்பாட்டு வழிகளில் நெருக்கமான இணைவினைப் பெற்றிருந்தது என்பதனையும் நன்கு கண்டுகொள்ள முடிகிறது. கிடைத்துக் கொண்டிருக்கின்ற பிற தொல்லியற் சான்றுகள் இப்பிராந்தியத்து பண்பாட்டுத் தொன்மையை மேலும் பல நூற்றாண்டுகளை முன்னெடுத்துச்செல்ல உதவியபோதிலும், வரலாற்றுக் காலகட்டத்தில் தமிழகத்துடனான நெருக்கமான பண்பாட்டுத் தொடர்புகளை சேரநாட்டினூடாகவே பெற்றிருந்தது என்பதனை கந்தரோடையிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட சான்றுகள் ஆணித்தரமாக உறுதிப்படுத்துகின்றன.

## நாகத்தலை நாணயங்கள் கிடைக்கப்பெற்ற தன்மை:

இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நான்கு நாணயங்களுள் முதல் மூன்றும் பெருங்கற்கால மண்படையடுக்கினூடே காணப்பட்டிருந்த செங்கட்டி ஒன்றுடன் செருக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது கந்தரோடையின் வரலாற்றுத்தொன்மைபற்றி ஆராய்வோருக்கு மேலும் ஒரு உவப்பான செய்தியாக அமையும். நான்காவது வெள்ளி நாணயமானது, நீரோட்டத்தின் காரணமாக வெளிப்படுத்தபபட்ட மேட்டுநிலப்பரப்பின் அரிமானத்திடையே காணப்பட்ட ஈமப்படையில் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. இக் குறிப்பிட்ட ஈமப்படைகளுடன் இணைந்த வகையில் தமிழ்ப்பிராமி எழுத்துக்களும் கண்டெடுககப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## நாணயங்களின் தன்மை:

முதன் மூன்று நாணயங்களுள் முதலாவது பெரியதும் ஒழுங்கற்ற வட்டவடிவினைக் கொண்டும் காணப்படுகிறது. இந்நாணயத்தின் நிறை 0z 6069G ஆகும். இந்நாணயத்தின் முற்பக்கத்தில் (Obverse)

பல உருவங்கள் பதிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சூரியனும் அதனுடன் இணைந்த வகையில் காணப்படும் ஒரு மிருகத்தின் உருவமும் (எருது?) மிகத் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளன. சூரியனுடைய கதிர்கள் யாவும் அவற்றின் முடிவில் இன்னொரு பெரிய வட்டத்தினால் இணைக்கப்பட்டுள்ள தன்மையை அவதானிக்கும் பொழுது அதனை ஒரு வண்டிற்சில்லு என்றும் கொள்ள முடியும். இவ்வண்டிற்சில்லுக்கு 18 குறுக்குச்சட்டங்கள் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அதன் ஆரைப்பகுதியில் உள்ள 09 சட்டங்களும் மிகத் தெளிவாகப் பதிக்கப்பட்டுள்ளன. சில்லுடன் இணைந்த வகையிலேயே எருது எனக் கருதத்தக்க மிருகம் இடதுபக்கம் நோக்கிய திசையில் இழுத்துச் செல்வதாக உருவாக்கப்பட்டுள்ளது

வண்டிற்சில்லு – எருது ஆகியவற்றிற்கு நேர் மேல் முனையில் கூடிய சங்கு – சக்கரத்துடன் நாகத்தலை ஒன்று பொறிக்கப்பட்டிருப்பது இந்நாணயத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை மேலும் வலியுறுத்துவதாக உள்ளது மிகமிக அபூர்வமாகக் காணப்படும் நாகசின்னம் பொறிக்கப்பட்ட இந்நாணய வெளியீடானது எமது இழந்த வரலாற்று மரபின் தொடர்ச்சியினை மீளவும் அமைத்துக் கொள்வதற்கு பெருமளவிற்கு உதவுவதாகக் கொள்ளலாம்.

இந்நாணயத்தின் முற்பக்கத்தில் காணப்படும் மற்றொரு உருவம் கெண்டி (Spouted pot) ஆகும். கெண்டியினுடைய நீர்க்கொம்பு பாத்திரத்தின் வலது புறத்தில் அமைந்து காணப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தென்னிந்திய நாணயங்களில் கெண்டியின் வடிவம் மிகவும் அருமையாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந் நாணயத்தில் காணப்படும் இன்னொரு உருவம் (எகிப்திய) வண்டுபோன்று அமைந்துள்ள வடிவமாகும். புஜபலம் மிக்க ஒரு சிறிய மனிதனது இருகரங்களும் மேலே உயர்த்தப்பட்ட நிலையில் உள்ள தோற்றத்தினை அது பிரதிபலிக்கின்றது. மிகவும் அண்மையில தமிழகத்தில் வெளியிடப்பட்டுள்ள சங்ககால சோழர் மரபுக்குரியதும் பாண்டிய மரபுக்குரியதுமான நாணயங்களில் இத்தகைய வடிவம் இடம்பெற்றிருப்பது ஒப்புநோக்குதற்குரியது. இற்றைக்கு பல தசாப்தங்களுக்கு முன்னர் கந்தரோடையில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட (Buddh st cakra Type) எனக் குறிப்பிட்ட நாணயத்திலும் இவ்வடிவம் இடம்பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நாணயத்தின் முற்பக்கத்தில் உள்ள இந்த உருவங்கள் யாவும் தனித்தனியான முத்திரைகள் பயன்படுத்தப்பட்டே பதிக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன. நாணயத்தின் கீழ் விளிம்பினைக் குறி



பார்த்தவாறே (உருவம் பதிப்பித்தவர்) அந் நாணயத்தினைத் தேவைக்கேற்றவாறு வட்டப்பாதையில் அசைத்து பட்டடையில் வைத்து அழுத்தி உருவங்களைப் பதித்துக்கொண்டார். இங்கு உருவங்களின் அமைதி எவ்விதத்திலும் சிதறாது குறிபார்க்கப்பட்ட தன்மையை நோக்கும் பொழுது மரத்திலான பட்டடை (Wooden Anvil) இந்நாணயத்தின் உருவாக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும என்பது தெளிவாகின்றது. அத்தோடு உருவங்களைப் பதிப்பிக்க உபயோகித்த முத்திரை நாணயத்திலும் பார்க்க சிறியது என்பதும் தெளிவாகின்றது.

இந்த நாணயத்தின் பின்புறமும் பல வகையான உருவங்களைத் தன்னுள்ளே கொண்டிருக்கின்றது. அவற்றுள் மிகவும் தெளிவாக, குறிப்பிடத்தக்கதாக காணப்படுவது ஏழு சிறு வட்டங்களைக் கூட்டமாக ஒவ்வொரு வளையத்திற்குள்ளும் கொண்டதான இரு பெரு வெவ்வேறான வளையங்கள் ஆகும். அவற்றின் பொருளை அறிந்து கொள்வதில் மிகவும் சிக்கலான நிலை இருப்பினும் அவை ஒருவேளை பெருங்கற்கால மக்களின் வட்டவடிவிலமைந்த ஈம கல்வட்டங்களை குறித்திருக்கக் கூடும் என்று கொள்வதற்கும் வாய்ப்புண்டு நாணயத்தின் இப்பக்கத்தில் காணப்படும் இன்னொரு முக்கியமான வடிவம் கருடன் ஆகும். கருடப்பறவையானது தலையற்ற நிலையில் கால்களுடன் இடது பக்கம் நோக்கிய நிலையில் காணப்படுகிறது. (வட இந்தியாவில் வைணவ பக்தர்களான குப்தர்கள் தமது பரம எதிரிகளாக விளங்கிய நாகர்களுக்கெதிராக – அதாவது நாகக் கொடிக்கெதிராக – கருடக் கொடியினையே வெற்றிச் சின்னமாகக் கொண்டிருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது) ஆனால் கந்தரோடையில் நாகமன்னர்கள் விஷ்ணு புத்திரர்களுக்கெதிராக நாக சின்னத்தினையே கொண்டிருந்தனர் என்பதும், தலையற்ற கருட வடிவம் நாகர்கள் விஷ்ணு புத்திரரை வென்று அடக்கிய நிலையைக் குறித்து நிற்கின்றது என்பதும் இச்சான்று மூலம் உறுதிப்படுத்த வாய்ப்புண்டு. மேலும் இரு வடிவங்கள் இந்நாணயத்தின் இதே பக்கத்தில் காணப்படுகின்றன. தலையற்ற கருட உருவத்திற்கு மேலே மனித வடிவம் ஒன்று காணப்படுகிறது. மையப்பகுதியில் அரைவட்ட குன்றிற்கு மேல் குன்று வடிவமும் நடுவில் நாகமனிதனது சிறிய உருவமும் தெளிவற்ற நிலையில் பதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது நாணயம் சதுரமான அமைப்பினைக் கொண்டு காணப்படுகின்றது. இதன் நிறை 02 8028G ஆகும். இந்நாணயத்தின் முற்பக்கத்து மேற்பகுதியில் சூரியனுடன் அணைந்த விலங்கு ஒன்றின் பாயும் நிலை மிகவும் தெளிவாகப் பதிக்கப்பட்டுள்ளது. நாணயத்தின் வலது பக்கத்தில் நாகவடிவம் மிகத் தெளிவாகப் பதிக்கப்பட்டுள்ளது. கீழே சூரியனுடன் இணைந்த நாகமொன்றின் வடிவம் காணப்படுகிறது.

இந்நாணயத்தின் பிற்பக்கத்தில் உருவங்கள் எவையும் இடம் பெறாவிடினும் மிகவும் நுண்ணியதான முறையில் பாம்பு ஒன்று ஊர்ந்து வருவது போன்ற தோற்றம் காணப்படுவதனை அவதானிக்கமுடிகிறது. இதற்கு மேற்பகுதியில் ஒரு குறிப்பிட்ட வரிவடிவம் பொறிக்கப்பட்டுள்ளது. பொறிக்கப்பட்ட அவ்வரிவடிவமுறை தமிழகத்தில மாங்குளம் என்னும் ஊரில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்ப் பிராமிக் கல்வெட்டிலுள்ள ''ஈ'' கார ஒலிக்குறிப்பிற்குரியதாக ஒத்திருப்பது இங்கு அவதானிக்கத்தக்கது. இவற்றோடு மீன் ஒன்றின் வால் பகுதியும் அதனுடன் இணைந்த சூரியகதிர்களும் இந் நாணயத்தில் மிகவும் துல்லியமாகத் தெரிகின்றன.

மூன்றாவது வெள்ளிநாணயமானது மற்றெல்லா நாணயங்களையும் விட சுடிப்பில் கூடிக்காணப்படுகின்றது. இதன் நிறை 03 0375G ஆகும் மிகச்சிறிய நீள்வட்டவடிவமான இந் நாணயத்தின் முற்பக்கத்தில் நாகர் வரிவடிவமும், நாகபடமும் பொறிக்கப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது. எகிப்திய எழுத்துமுறையைத் தழுவியதாக நாகர் வரிவடிவம் இந் நாணயத்தின் முற்பக்கத்தில் காணப்படுவது கந்தரோடை – கேரளம் – மத்திய தரைக்கடற்றொடர்புகளை உறுதிப்படுத்த உதவும் சான்றெனக் கொள்ள வைக்கின்றது. இந்நாணயத்தின் பிற்பக்கத்தில் எந்தவிதமான அச்சுக்குத்தப்பட்ட அடையாளங்களும் காணப்படவில்லை.

நான்காவது வெள்ளிநாணயமானது சதுரமான வடிவில் அமைந்து காணப்படுகின்றது. இதன் நிறை 02 4000 G, ஆகும் அதன் இடது மேற்புற மூலையில் சூரியனின் உருவத்தில் அதன் காற்பங்களவின தாகக் காணப்படுகிறது. இது தனித்துவமான சூரிய வடிவமாகப் பொறிக்கப்பட்டுள்ளது சூரிய கதிர்களுக்காக உருவகிக்கப்பட்ட கோடுகள், கோடுகளாக இல்லாது அம்புக்குறி, கைதாங்கி (கெவர்கொம்பு) போன்ற வடிவங்களாக உள்ளன. நாகபடமொன்றின் உருவம் மேல் வலது மூலையில் பதிக்கப்பட்டுள்ளது. இந் நாணயத்தின் கீழ்ப்பக்க மத்தியில் மீன் சின்னம் அல்லது நாகர் வரிவடிவம் போன்ற ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளது. நாணயத்தின் பிற்பக்கத்தில் பெரிய-வாயகன்ற பானைபோன்ற பாத்திரத்தின் வடிவம் பொறிக்கப்பட்டிருப்பது விசேடமான அம்சமாகவுள்ளது. அச்சுக்குத்தப்பட்ட காசுகளில் இவ்வாறான வடிவம் காணப்படுவது இதுவே முதற்தடவை என்று குறிப்பிடலாம். இவ்வாறாக வெள்ளியிலான அச்சுக்குத்தப்பட்ட இந்த நான்கு நாணயங்களினதும் தன்மை அமைந்துள்ளது.

## நாணயங்களின் வரலாற்று முக்கியத்துவம்:

தென்னாசியாவில் நெடுங்காலமாக மனித சமூகங்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களுள் நாகதுவீபமும் (யாழ்ப்பாணக குடாநாடும்) ஒன்றாகும். இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேலாக இங்கு மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இத்தகைய மிக நீண்ட கால மனித வரலாற்றினையுடைய ஒரு பிரதேசமாக இப்பிராந்தியம் விளங்கி வந்திருந்த போதிலும் அதன் வரலாற்றைத் தொடர்ச்சியாகவும் தெளிவாகவும் அறிந்து கொள்ள எமக்குத் தெளிவான ஆதாரங்கள் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை ஆனால் தற்போது கந்தரோடையில் உள்ள மண்படை அடுக்குகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இந்த வெள்ளி நாணயங்கள் ஓரளவிற்கேனும், மறைந்து போன – மண்ணினுள் புதையுண்டு போன எமது பண்பாட்டு – வரலாற்றின் தொடர்ச்சியை சீர் செய்வதற்கு உதவுவதாக அமைகின்றன. அந்த வகையில் நாகத் தலை பொறிக்கப்பட்டுக் காணப்படும் அந்நான்கு நாணயங்களும் நாகதீபம் பற்றிய ஐதிகங்களுக்கு உருக் கொடுக்கின்ற முதற்தரமான தொல்லியற் சான்றுகளாகின்றன எனலாம். இந்த நான்கு நாக நாணயங்களின் வெளியீடுகள் கந்தரோடைக்குரிய தனித்துவமான அம்சமாக மட்டும் இருப்பதனைக் கொண்டு பார்க்கும் போது நாக மன்னர்களுடைய ஆட்சிப் புலத்தின் தலைநகராக அது விளங்கி இருந்திருக்க வேண்டும் என்பது உறுதியாகத் தெளிவாகின்றது.[27] இதனாலேயே தமிழக – ஈழத்து இலக்கிய வரன்முறை நூல்களிலும் கந்தமாதனம் மலை (கதிரமலை) பற்றிய குறிப்புக்கள் நாகதீபத்துடன் விபரிக்கப்பட்ட வகையில் எடுத்தாளப்பட்டமையைக் காணமுடிகிறது.[28]

நாகதீபம் பற்றிய காலத்தால் முற்பட்ட இலக்கியக் குறிப்பு இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை என்ற நூலில் காணப்படுகிறது. கி. பி. 3ம் நூற்றாண்டு முடிவில் அல்லது 4ம் நூற்றாண்டில் அந்நூல் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்பது பொதுவான முடிவாகும். இரண்டு நாக அரசர்களைப் பற்றிய செய்தி மாமுதல்வனுடன் தொடர்புபடுத்தப்பட்ட வகையிலும் மனுபல்ல காட்சிகளுடன் இணைக்கப்பட்ட வகையிலும் மணிமேகலை நாகதீபம் பற்றிய செய்திகளைத் தருகின்றது. மணிமேகலை எழுந்த காலத்திலேயே ஈழத்தில் வல்லிபுரத்தில் பொற்சாசனம் வரையப்பட்டது என்பதும் (கி.பி. 4ம் நூற்றாண்டு) அகில் நககிவ என்று நாகதீபம் குறிப்பிடப்பட்டிருந்தமை பற்றியும் வரலாற்றாசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.[29]

கி.பி. 6ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் மகாவம்சம் என்ற பாளி நூலில் நாகதீபம் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. புத்தரின் மும்முறை இலங்கை வருகை பற்றிய ஐதீகம் பற்றிக் கூறப்படும் பகுதியில் நாகதீப வருகையும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

கி. பி. 14ம் நூற்றாண்டில் சிங்கள மொழியில் எழுதப்பட்ட 'சமதாலங்கார' என்ற நூலில் கூறப்பட்டுள்ள பஞ்சதந்திரக் கதையை ஒத்துள்ள கதையில் நாகதீபம் பற்றிய குறிப்பு ஒன்று கந்தரோடை

யுடன் தொடர்புபடுத்தப்பட்ட வகையில் இடம்பெறுவதைக் காண முடிகின்றது. இக்கதையானது இலங்கையின் தெற்குப் பகுதியைச் சேர்ந்த ஓர் ஆண் காக்கைக்கும், வடபகுதியைச் சேர்ந்த ஒரு காக்கைக்கும் நடைபெற்ற திருமணச் செய்தியைத் தெரிவிப்பதாக உள்ளது. ஆண் காக்கையின் வசிப்பிடம் மகாகமத்திலுள்ள திஸ்ஸவிவா ஆகும். பெண்காக்கையின் வசிப்பிடம் வடக்கிலுள்ள 'மணிநாக தீவயின' ஆகும். இங்கு மணிநாகதிவு அல்லது மணிநாகதீபம் என்பது 'ராஜவாணி' என்ற நூலின்படி கந்தரோடையைக் குறிப்பிடும் என்பது வரலாற்றாசிரியர்களது பொதுவான கருத்தாகும். இருப்பினும் மணிநாகதீபம் என்பது யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதனையுமே குறிப்பிட்டு நின்றதாகக் கொள்ள வேண்டும் என்பது அறிஞர்களது வாதமாகும்.[30]

இப் பின்னணியில் நோக்கும்போது கந்தரோடையில் கிடைத்துள்ள இந்த நான்கு நாக நாணயங்களுக்கும் அங்கு வளர்ச்சியடைந்திருந்த நாகர் பண்பாட்டிற்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருந்திருக்கக்கூடிய முறமையை தெளிவாகக் கண்டு கொள்ளலாம். அவ்வாறான பண்பாட்டுப் பின்னணியின் வளர்ச்சியும் தொடர்ச்சியுமாகவே இன்றுவரை இப்பிராந்தியத்துப் பண்பாட்டுப் பரிமாணம் முகிழ்த்திருந்தமையையும் இங்குள்ள மக்கள் வாழ்க்கைமுறைகளில் இருந்து கண்டுகொள்ள முடிகிறது.[31]

நாகர் பற்றி பரணவிதான கொண்டிருந்த ஆய்வுக்கருத்துக்கள் ஒருதலைப்பட்சமானவையாக – அறிவியல் ரீதியிலான வரலாற்று நெறிக்கு முரண்பட்டவையாக வெளியிடப்பட்டவையாகக் காணப்படுகின்றன. உதாரணத்துக்காக பின்வரும் ஒரு பகுதியை நோக்கலாம்.[32]

'......இலங்கையில் கல்யாணி, நாகதீவு போன்ற மனித உலகின் சில இடங்கள் மனிதர்களின் வசிப்பிடங்களாகக் கருதப்படவில்லை என்ற உண்மை மகாவம்சத்தில் கூறப்படுவதிலிருந்து நிரூபிக்கப்படுகின்றது. நாகதீபத்திற்கும் இலங்கையின் ஏனைய பகுதிகட்கும் புத்தர் வந்தபோது அங்கு மனித ஜீவன்கள் இருக்கவில்லை என மகாவம்சம் குறிப்பிட்டுள்ளது. இலங்கையின் ஐதீகக் கதைகளில் காணப்படுகின்ற 'மணிநாக', அல்லது 'மணி – அக்கி', 'மகோதர' போன்ற நாக அரசர்களின் பெயர்கள் சமஸ்கிருத இலக்கியத்தில் மனிதவர்க்கத்திற்கு அப்பாற்பட்ட நாகர்களுடன் சேர்த்துக் கூறப்படுகின்றன. மணிநாக வழிபாடு இந்தியாவில் மத்தியகாலம் வரைக்கும் நிலவியது. சில அறிஞர்களைப் பொறுத்தவரையில் வழமையாகிவிட்டாலும், நாகர்களை மனித ஜீவன்களாக மாற்றுவது நியாயமற்றதாகும்...




நாகர்களை மனிதர்களாகக் கொள்ளலாம் என்பதற்குக் காட்டும் வாதம் தேவர்களை மனிதர்களாகக் கொள்வதற்குதவும். நாகர்களை மனித ஜீவன்களாகக் கொண்டாலும் அவர்களைத் திராவிடருடன் அடையாளம் காண்பதற்கு எவ்விதமான குறிப்பான காரணங்களுமில்லை. பழைய நாகதிவில் தற்போது தமிழர்கள் வாழ்கின்றார்கள் என்ற காரணத்துக்காக நாகர்களை திராவிடர்களாகக் கொண்டாலும் வட இந்தியாவில் உள்ள 'நாகபுர' என்ற இடத்தைச்சுற்றி இன்று மொழியைப் பொறுத்து ஆரியர்கள் வாழ்வதால் நாகர்களை ஆரியர்களாகவும் எடுக்கலாம்.'

பரணவிதானவினுடைய நாகதீபம்பற்றியதும் நாகர்கள் பற்றியதுமான இத்தகைய ஆய்வுக்கருத்துக்கள் கந்தரோடையிற் கிடைத்த சான்றுகளின் அடிப்படையில் மீளாய்வுக்குட்படுத்த வேண்டிய தேவை தற்பொழுது ஏற்பட்டுள்ளமையை உணரமுடிகிறது. தென்னாசியாவில் நாகவம்சங்கள் பல காலத்துக்காலம் பிராந்தியத்துக்குப் பிராந்தியம் பண்பாட்டுப் பங்களிப்புக்கள் பலவற்றை செலுத்தியிருக்கின்றன.[33] வட இந்தியாவில் நாகவம்சமொன்றின் ஆட்சி மரபு குப்தர் வரும்வரைக்கும் இருந்திருக்கின்றது. குப்தப் பேரரசர்கள் காலத்தில் அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர்[34] தக்கணத்தில் கிருஷ்ணா நதியின் முகத்துவாரப்பகுதியிலும் நாகவம்சம் ஒன்று பண்பாட்டுப் பங்களிப்புகளை செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது- தென்னிந்தியாவில் தமிழகத்திலும் நாகர்கள் குறுநில மன்னர்களாக விளங்கியிருக்கிறார்கள். முரஞ்சியர் முடிநாகராயர் என்பவர் சங்ககாலத் தமிழகத்தில் புகழ்பெற்ற கவிஞராகவும் வாழ்ந்திருந்தார் என்பனை சங்க நூல்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.[35] இதே போன்றுதான் கந்தரோடையில் பெருங்கற்காலப் பண்பாட்டு வாழ்வின் தொடக்கத்திலிருந்தே நாகர்கள் எழுச்சிபெற்று வந்திருக்கிறார்கள் என்பது தற்போது கந்தரோடையிலிருந்து எமக்குக் கிடைத்த நான்கு நாக நாணயங்களும் உறுதிப்படுத்துகின்றன. இவர்கள் திராவிட நாகர்களே என்பதில் சந்தேகமில்லை. இவர்கள் தமிழ்ப் பிராமி வரிவடிவ உபயோகத்தினையும் நன்கு அறிந்திருந்தனர் என்பதனை இங்கிருந்து கிடைத்த சான்றுகள் நிரூபிக்கின்றன. பெருங்கற்கால மண்படையடுக்குகளிடையே கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களில் காணப்படும் வட்டவடிவிலான நாகமுத்திரைகள் பிராமிவரிவடிவங்களுடன் சேர்த்துப் பொறிக்கப்பட்டுள்ள தன்மை அக்கருத்தினை மேலும் உறுதிப்படுத்த உதவுகின்றன. ஈழத்திற்குப் பௌத்தம் பரவியபோது அதன் செல்வாக்கிறகுட்பட்ட மூத்த குடிகளாகவும் இந்நாகவம்சத்தினர் விளங்கினர் எனக் கொள்ளமுடியும், (தென்னிந்தியப்பகுதி ஒன்றிலிருந்தே குறிப்பாக கேரள மாநிலத்திலிருந்தே பௌத்தமதமானது ஈழத்திற்குக் கொண்டு வரப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவதற்குரிய தொல்லியற்சான்றுகள் கிடைத்து வருகின்ற இந்நேரத்தில் கந்தரோடை கேரள பண்பாட்டுத் தொடர்புகளை அமமதத்தினூட்ட கொண்டு வரப்பட்ட

பண்பாட்டலைகள் வாயிலாக அடையாளம் கண்டு கொள்ள முடிவதும் இங்கு குறிப்பிடத்தக்கது ) தென்னிந்தியாவில் தமிழக மாநிலத்தில் இதுவரையில் அச்சுக்குத்தப்பட்ட வகைக்குரிய நாணயங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை ஆனால் கேரள மாநிலத்திலேதான் 300 க்கும் மேற்பட்ட அச்சுக்குத்தப்பட்ட வெள்ளி நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன [36] இதே போன்று யாழ்ப்பாணக்குடா நாட்டினுள் கந்தரோடையிலேயே தற்போது தனித்துவமான வகையிலான இந்த அச்சுக்குத்தப்பட்ட நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவே பலவகையாலும் கந்தரோடை – கேரளத் தொடர்புகளை தனித்துவமான வகையில் இனங்காணக்கூடிய முறையில் எமக்கு இந் நான்கு அச்சுக்குத்தப்பட்ட வெள்ளி நாணயங்களும் கிடைத்திருப்பது எமது வரப்பிரசாதமே.


## நாகதீப அரசும் வம்ச ஆட்சி முறைமையும்:

கந்தரோடையிற் கிடைத்த தனித்துவமான நாக நாணயங்களானவை திட்டவட்டமான வடிவத்தையும் பருப்பதத்தையும் கொண்டதாக, நிறுவன ரீதியாக, அதிகார இறைமையுடன் வெளியிடப்பட்டவை என்பதில் ஆய்வாளர் மத்தியில் ஐயம் எதும் எழ முடியாது ஒரே சீரான குறியீடுகள் இந்த நான்கு நாணயங்களிலும் பதிக்கப்பட்ட தன்மையின் அடிப்படையிலிருந்து அவை அங்கு அங்கீகரிக்கப்பட்ட நாணயங்களாக மக்கள் மத்தியில் புழக்கத்தில் இருந்திருக்க வேண்டும் என்பது உறுதியாகின்றது. இவ்வாறான அங்கீகாரம் வழங்கிய ஓர் அரச நிறுவனம் கந்தரோடையில் கி முற்பட்ட காலப்பகுதியிலிருந்து தோற்றம் பெற்று விட்டது என்பதனையே இந்நாணய வெளியீடுகள் தற்பொழுது எமக்கெடுத்துக் காட்டுகின்றன. அவ்வகையில் முதலை நாகவம்சம் ஒன்றுக்கும் கந்தரோடையில் தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்ற அரசியல் முறைமைக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்திருக்கக் கூடிய தன்மையை இந்நாணயங்கள் எடுத்துக்காட்டுகின்றன. கிறிஸ்துவுக்கு முற்பட்ட ஈழத்து பிராமிச்சாசனங்கள் சிலவற்றில் குறிப்பிடப்பட்டிருந்த 'நிபராஜா' என்ற பதமானது இந்த நாகதிப அரசிறைமையையே குறித்து நிற்கிறது என்பதை இவ்வழியே தற்பொழுது நிலைநிறுத்திக்கொள்ள முடிகிறது. [37] ஆகவே நாகர் வம்சத்தினால் தோற்றுவிக்கப்பட்ட முதல் அரசு என்ற வகையில் அவர்களது ஆட்சிப்புலமாக விளங்கியிருந்த இக் குடாநாட்டுப் பரப்பு நாகதிபம் அல்லது நாகதுவிபம் என வழங்கப்பட்டது எனலாம். இத்தகைய ஓர் அரசியல் முறைமையின் மையமாக – தலைநகராக கந்தரோடை விளங்கியிருந்தது என்பதும், கிறிஸ்துவுக்கு முற்பட்ட மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னரிலிருந்தே இவ்வரசு தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் தற்பொழுது கிடைத்துக் கொண்டிருக்கும் தொல்லியற்சான்றுகள் வாயிலாக நிறுவிக் கொள்ள முடிகிறது.



வழுக்கை (வழுதி) யாற்றுப்பள்ளத்தாக்கு — ஆறுகண் மதவடி

வழுக்கை (வழுதி) யாற்றுப்பள்ளத்தாக்கில் நெல் உற்பத்தி






மடம் — கிணறு ஆவுரஞ்சிக்கல் — சுமைதாங்கி
(ஆறுகண் மதவடிக்கண்மையில்)


மழைநீர் அரிப்பினால் வெளிவந்துள்ள அரும்பொருட்கள் —
கந்தரோடை





சிவப்பு வர்ண மட்பாண்டம் — கந்தரோடை


பாரம்பரிய மண்குடம் — சிவப்பு — வடமராட்சி. வதிரி





ரௌலட்டட் மட்பாண்டம் — கந்தரோடை (வரைபுடன் கூடியது)


பாரம்பரிய மண்குடம் — சிவப்பு — வடமராட்சி. வதிரி






சங்ககால நாணயம் — முற்பக்கம் — கந்தரோடை

சங்ககால நாணயம் — முற்பக்கம் — கந்தரோடை
(வரைபுத் தோற்றம்)







சங்ககால நாணயம் — முற்பக்கம் — கந்தரோடை



சங்ககால நாணயம் — முற்பக்கம் — கந்தரோடை
(வரைபுத் தோற்றம்)



அகழ்வின்போது கிடைத்த எலும்பினாலான கருவியும் வரைபும்
(எருது ஒன்றின் தோற்றம்)






கந்தரோடை அகழ்வில் வெளிப்பட்ட மிருகமொன்றின் எலும்புக்கூடு (மாடு?) கறுப்பு — சிவப்பு மட்பாண்டத்துடன்


செங்கட்டி — கட்டிட அழிபாடு — கந்தரோடை






கந்தரோடை நாகநாணயம் — முற்பக்கம்
(வாளும் மயிலும்)


கந்தரோடை நாகநாணயம் — பிற்பக்கம்
(நாகம்)





பாண்டியன் பெருவழுதி நாணயங்கள் — கந்தரோடை
(செம்பு — முற்பக்கம்)

பாண்டியன் பெருவழுதி நாணயங்கள் — கந்தரோடை
(செம்பு) பிற்பக்கம்





அச்சுக்குத்தப்பட்ட வெள்ளி நாணயம் — கந்தரோடை
(நாகக்குறியுடன்?) முற்பக்கம்

அச்சுக்குத்தப்பட்ட வெள்ளி நாணயம் — கந்தரோடை
பிற்பக்கம்





அச்சுக்குத்தப்பட்ட வெள்ளி நாணயம் — கந்தரோடை
(நாகக்குறியுடன்?) முற்பக்கம்

அச்சுக்குத்தப்பட்ட வெள்ளி நாணயம் — கந்தரோடை
பிற்பக்கம்





கந்தரோடை அகழ்வில் கிடைத்த பாண்டியன்
பெருவழுதி நாணயம் — முற்பக்கம் — வரிவடிவுடன்


பாண்டியன் பெருவழுதி நாணயம் — பிற்பக்கம்






கந்தரோடை அரசமாளிகைத் திடலில் கிடைத்த
சேது நாணயம் — முற்பக்கம் — (ராஜசேகரன் நாணயம்)


கந்தரோடை அரசமாளிகைத் திடலில் கிடைத்த சேது நாணயம்
பிற்பக்கம் — கலிங்கநாகரி வடிவம் (ராஜசேகரன்)






சாசன மட்பாண்டம் — கந்தரோடை — தமிழ்ப்பிராமி "ஆபதி"

சாசன மட்பாண்டம் — கந்தரோடை — தமிழ்ப்பிராமி "குணி"





"ழ" கரம் வரையப்பட்ட மட்பாண்ட விளிம்பு — கந்தரோடை


தென்பிராமி வடிவில் "ம" பொறிக்கப்பட்ட மட்பாண்டம் — கந்தரோடை






ரகாரம் பொறிக்கப்பட்ட மட்பாண்டம் — கந்தரோடை


மூகாரம் அல்லது முச்சூலம் பொறிக்கப்பட்ட மட்பாண்டம் — கந்தரோடை





ஈகாரம் பொறிக்கப்பட்ட மட்பாண்டம் — கந்தரோடை

கிராபிடிக் குறியீடு — கந்தரோடை மட்பாண்டம்





கந்தரோடை மண்மேடொன்றில் ஆசிரியருடன் ஆர்வலர்களின் அரும்பொருட் தேடல்

கந்தரோடை ஆய்வுக்குழி ஒன்றில் ஆசிரியர்





மழைநீரினால் அரிக்கப்பட்ட குழியில் அரும் பொருட்களைத் தேடும் இந்நூல் ஆசிரியர் — கந்தரோடை

களத்தில் தொல்லியல் ஆய்வலர்கள், பிரமுகர்கள் — கந்தரோடை





தமிழ்க்கந்தையா வித்தியாசாலை மாணவருடன் அதிபர்

தெருவோர அரும்பொருட்தேடல் — கந்தரோடை






கந்தரோடையில் ஆய்வுக்குழி ஒன்றின் தோற்றம்


அரும்பொருட் தேடலில் மாணவர்கள்
தமிழ்க்கந்தையா வித்தியாசாலை






சுடுமண் நாணயங்கள் — கந்தரோடை

அகழ்வின் போது பெற்றுக் கொள்ளப்பட்டவை






அச்சுக்குத்தப்பட்ட வெள்ளிநாணயம் — கந்தரோடை
(வரைபு — முற்பக்கம் — வரிவடிவத்துடன்)


அச்சுக்குத்தப்பட்ட வெள்ளிநாணயங்ம் — கந்தரோடை
(வரைபு — பிற்பக்கம் )






கந்தரோடையிற் கிடைத்த ரோம நாணயங்கள்
கி.பி. 1ம் நூற்றாண்டு — முற்பக்கம்


கந்தரோடையிற் கிடைத்த ரோமத்தங்க நாணயம் (முற்பக்கம்)






வரணியில் கிடைத்த ரோம நாணயங்கள் முற்பக்கம்
கி.மு. 1ம் நூற்றாண்டு

வரணியில் கிடைத்த ரோம நாணயங்கள் — பிற்பக்கம்






றௌலட்டட் மட்பாண்டமொன்றின் மீதான வரைபு —
கந்தரோடை


மட்பாண்டத்தில் றௌலட்டட் அமைப்பு — கந்தரோடை






றௌலட்டட் மட்பாண்ட வகைகள் — கந்தரோடை

றௌலட்டட் மட்பாண்டமொன்றில் புறாவடிவம் — கந்தரோடை






சேதுநாணயம் — முகப்புத் தோற்றம் — சங்கப்புலவு — கந்தரோடை


சேதுநாணயம் — பிற்பக்கம் — சங்கப்புலவு — கந்தரோடை





முச்சூலக்குறி வரையப்பட்ட சுடுமண் நாணயம் — கந்தரோடை

பல்வேறு வடிவங்களில் சுடுமண் நாணயங்கள் — கந்தரோடை





கந்தரோடையில் நாகர்வம்சத்தின் தோற்றத்தினை குறைந்த பட்சம் கி. மு. 3ம் நூற்றாண்டிலிருந்தாவது அடையாளம் காணக் கூடிய வகையில் எமக்கு இந்த நாகநாணயங்கள் கிடைத்திருக்கின் றன. 'தீபராஜா' பற்றிய பிராமிச் சாசனக் குறிப்புக்கள் ஊடாக வும், நாகசின்னம் பொறிக்கப்பட்டு கிடைத்துள்ள மட்பாண்ட முத் திரைச் சின்னங்கள் ஊடாகவும் அதனை உறுதிப்படுத்த முடிகிறது. இம்மட்பாண்ட முத்திரைச் சின்னங்களில் பிராமி எழுத்துக்கள் இணைந்து காணப்படுவது எமக்கு சார்பியல் ரீதியில் அமைந்த காலக்கணிப்பீட்டிற்கு உதவுவதாக அமைந்துள்ளது.[38]

கந்தரோடையில் பெருங்கற்காலப் பண்பாட்டு மண்படை அடுக்கு களுக்குரிய காலக்கணிப்பீடு கி. மு. 5ம் நூற்றாண்டிலிருந்து கொடுக் கப்பட்டுள்ளமையைக் காணலாம்.[39] 'ஓர் ஆக்க காலம்' என்ற வகையில் இப்பெருங்கற்காலமே குடாநாட்டு நிலையான குடியிருப்பு கள் பொறுத்தும், பயிர்ச்செய்கை பொறுத்தும் பல்வேறு அபி விருத்திகள் ஏற்பட்ட தொடக்கமாக அமைந்தது.[40] இத்தொடக்க கால அபிவிருத்திகள் கைவரப்பெற்ற முதல் மையமாக கந்தரோடை எழுச்சி பெற்றதனாலேயே அங்கு கி. மு. 3ம் நூற்றாண்டளவில் பெருங் கற்காலப் பண்பாட்டு வளர்ச்சியுடன் இணைந்த வகையில் இறைமை முறையை நாகர் வம்சத்தினரால் தோற்றுவிக்க முடிந்தது. இவ்வாறான அரசமுறைமையின் வளர்ச்சியின் குறிப்பாகவே ஆனைக் கோட்டை பெருங்கற்கால மண்படையடுக்குகளிடையே கண்டுபிடிக் கப்பட்ட 'கோவேதன்' என்று பிராமி வரிவடிவில் பொறிக்கப்பட்ட தமிழ் வாசகத்தினைத் தாங்கிய முத்திரைச்சாசனம் கொண்டு விளங்கு கின்றது.[41] அது நாகர் வம்ச ஆட்சியாளருக்குரிய அரசசின்னம் என் பதில் ஐயம் ஏதும் இருக்கமுடியாது.

கந்தரோடைப் பிராந்தியத்தில் இன்றுவரை நின்று நிலைத்திருக் கும் தோம்புப் பெயர்கள் (காணிகளுக்குரியவை) சிலவற்றை கிறிஸ் தவ சகாப்தத்திற்கு முற்பட்ட தமிழக மரபுகளுடன் இணைத்து அடையாளம் காண்பதற்கு உதவுவதாக உள்ளன. சங்கம்புலவு, தில்லையங்கூடல், வியாளவயல், குடாரை, கற்பக்குளை, கயற்கண்ணி, அங்கணாக்கடவை, (அங்கண் அம்மைக்கடவை), சோழியாகடவை, மம்மளை, உச்சாப்பனை, சங்குவேலி போன்ற இடப்பெயர்கள் குறிப்பிட்ட இப்பிராந்தியத்திற்குள் இன்றுவரை மக்களது வழக்கில் இருந்து வருவதனைக் காணலாம். 'சங்கம் புலவு' என்ற மையம் வழுக்கையாற்றுடன் நேரடியாக இணைந்த வகையில் அமைந்து காணப்படுகின்றது. 'சங்கம் புலவு' என்ற புராதன மையத்தில்

இருந்து சேகரிக்கப்பட்ட மட்பாண்டங்கள் கிறிஸ்தவ சகாப்தத்திற்கும் முற்பட்டவையாக காணப்படுகின்றன. சங்கம் புலவு இடுகாட்டினைச் சூழவுள்ள நிலப்பகுதி வயற்பரப்புக்கள் ஆகும். தொல்பொருட்கள் வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் மையமாக இவை விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

'கயற்கண்ணி' என்ற மையமே கந்தரோடையில் தற்போது தமிழ்ப் பௌத்த மதத்துடன் தொடர்புபட்ட கூறுகளைக் கொண்டுள்ளது. 'கயற்கண்ணி' என்ற பெயர் கூடல் மதுரையின் பழமையான ஒரு வடிவமாகும்.[42] அங்கு அங்கையற்கண்ணி என்ற நாக தேவதை உறைகின்றாள் என்ற மரபும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. நாகபாம்பின் பெண்பால் வர்க்கத்திற்கும் கயற்கண்ணி என்ற பெயர் மரபு இருந்துவருவதனைக் காணலாம்.

தில்லையங்கூடல், குடாரை, சங்குவேலி போன்ற பெயர்கள் சங்ககாலத் தமிழக மக்களுக்கு நன்கு பரிச்சயமானது. அங்கணாவைக் கடவை என்றழைக்கப்படும் இடத்தின் பழைய வடிவம் அங்கண் அம்மைக்கடவை ஆகும். சேரன் செங்குட்டுவன் மதுரையை எரித்த கண்ணகிக்கு கேரளத்தில் விழா எடுத்த சமயத்தில் ஈழத்து மன்னன் ஒருவனும் அதில் அதிதியாக பங்குபற்றியிருந்தான் என்றும், பின்னர் அவன் ஈழம் திரும்பியபொழுது திருவடிநிலையூடாக வழுக்கையாற்றுப்பள்ளத்தாக்கில் பயணம் செய்து அங்கண் அம்மைக் கடவையில் பத்தினிக்கு முதற்கோயிலை அமைத்துச் சென்றான் என்றும் ஓர் ஐதிகத்தின் வாயிலாக அறிய முடிகின்றது. முதன் முதலாக நாகதீபத்தில், நாகர் ஆட்சி செலுத்தும் போது அவர்களுடைய ஆதரவுடன் அங்கு பத்தினிக்கு கோயில் கட்டப்பட்டது என்ற சம்பவம் அப்பிராந்தியத்து பண்பாட்டு வரலாற்றில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஈழத்தில் பத்தினிக்குரிய முதற் கோயில் நாகர் ஆள்புலத்தில் அமைந்தது என்பதும், கண்ணகி பாம்பாக மாறி ஈழத்தின் வடகரையை அடைந்தாள் என்பதும். இங்கு, நாக சின்னத்தினை அடிப்படையாகக் கொண்ட பண்பாட்டின் தோற்றப்பாட்டினை வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட இரு ஐதீகங்களாகக் கொள்ளலாம் எனவும் சிந்திக்க வைக்கின்றது. நயினார் தீவிலுள்ள நாகத்துடன் இணைந்த கண்ணகியம்மன் வழிபாடு (பின்னர் நாக பரமேஸ்வரி என வளர்ச்சி பெற்ற வழிபாட்டு முறைமை) இப்பின்னணியிலேயே தோற்றம் பெற்றிருக்க வேண்டும்.[43] இவ்வாறான பண்பாட்டு தொடர்புகள் பற்றிய ஆய்வுகளுக்கெல்லாம் கந்தரோடையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நாக நாணயங்கள் அடிப்படையை இட்டுக் கொடுக்கின்றன என்றால் அது மிகையாகாது.



கந்தரோடை நாகர்களது ஆட்சி நடவடிக்கைகளின் மையமாக கி.பி. 4ம் நூற்றாண்டுகள் வரைக்கும் விளங்கியிருந்திருக்க வேண்டும். அதன் பின்னர் விஷ்ணு புத்திரர் வம்சமே இப்பிராந்தியத்தினது ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருந்தனர் என்பதும், அவ்வம்சத்தில் வந்த குதிரை வீரன் வெடியரசன் மிகப் பிரபல்யம் பெற்று விளங்கினான் என்பதும் ஐதீகம். விஷ்ணு புத்திர வம்சத்தினது ஆட்சியின் கால எல்லை கி.பி. 6ம் நூற்றாண்டுகள் வரைக்கும் தொடர்ந்திருக்கலாம். கி.பி. 6ம் நூற்றாண்டிலிருந்து 9ம் நூற்றாண்டுகள் முடிவு வரைக்கும் பாண வம்சத்தினர் கந்தரோடையை மையமாகக் கொண்டு ஆட்சி நடாத்தியிருந்தனர். யாழ்ப்பாண வைபவ மாலையில் குறிப்பிடப்படும் அந்தகக் கவியான வீரராகவன் பாணவம்சத்தில் தோற்றம் பெற்ற ஒருவனேயாவான். பல்லவர்களது ஆட்சி நிலவிக் கொண்டிருந்த சமயத்தில் இராமநாதபுரத்தில் பாணர்கள் திறையரசர்களாக இருந்தார்கள். அதே நேரத்தில் நாகதீபத்திலும் அவர்கள் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தார்கள். இவ்வம்சத்தில் வந்த உக்கிரசிங்கன் (பாணன்) மக்கள் மனதில் நிலைபெற்றுவிட்ட ஒரு மன்னனாயினான். இவனை பற்றிய ஐதீகங்கள் பல நின்று நிலைத்திருந்தன. கி.பி. 9ம் நூற்றாண்டில் கந்தரோடை நாகதீப அரசியலில் இருந்து தன்னிலை இழந்து விடுவதினைக் காணலாம். சோழ வம்சத்தின் செல்வாக்கு இவ்வாறான ஒரு நிலைக்கு காரணமாகியது. அதன் பின்னர் சிங்கை நகர் நாகதீபத்தின் வரலாற்றில் பெயர் பொறிப்பதனைக் காணலாம்.

# அத்தியாயம் : ஐந்து

# நல்லூரும் மத்திய கால திராவிடர் மரபுகளும்

நாகதீபத்தின் வரலாற்று வளர்ச்சியில் மத்திய காலத்து உயர்ந்த வளர்ச்சி நிலைக்குரிய தொல்லியல் எச்சங்களை ஒருங்கே கொண்டு அமைந்த மையமாக நல்லூர் விளங்குகின்றது. ஈழத் தமிழர் நாகரிகப் பரப்பிலும் பண் பாட்டிலும் நல்லூர் முககிய பங் கெடுத்திருந்தமையைப் பல சான் றுகள் வாயிலாகக் கண்டுகொள்ள லாம். ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் சரி, வைத்தியம், சோதிடம் ஆகிய அறிவியற்துறை பொறுத்த வரலாற்றிலும் சரி நல்லூர் என்ற ஸ்தானம் வகித் திருந்த பங்கு அளவிடற்கரியது. பொதுவாக யாழ்ப்பாணத்து முருக கலாசாரத்தின் பகைப்புல மாகவும் இன்று வரையும் விளங்கி வருவதும் இம்மையமே. இத் தகைய பல சிறப்புக்கள் ஒருங்கே கூடிக் காணப்பட்ட இம்மையத் தின் வரலாற்று வளர்ச்சியினை எடுத்துக்காட்டுவதற்குப் போதிய ஆதாரங்கள் இதுவரைக்கும் கிடைக்காமல் இருந்துவருவது ஒரு பெருங் குறைபாடாகும்.

ஈழத்துத் தமிழ் வரலாற்று ஆசிரியர்களின் கருத்துப்படி, நல்லூரானது கி. பி. 13ம் நூற் றாண்டிலிருந்து கி. பி 17ம் நூற் றாண்டின் தொடக்கம் வரைக் கும் யாழ்ப்பாணத்தில் அரசு செய்த சிங்கை ஆரிய சக்கர வர்த்திகளின் அரசியல் நடவடிக் கைகளின் மையமாக இருந்து வந்தது.[1] கி.பி. 1619ல் கடைசி மன்னனான சங்கிலி குமாரன் என்பவனைப்போர்த்துக்கீசர் சிறை பிடித்து கோவாவுக்கு அனுப்பியமையைத் தொடர்ந்து நல்லூரானது இதுவரைக்கும் பெற்றிருந்த அரசியல் வரலாற்று முக்கியத்துவத் துவத்தினை தமிழர் மத்தியிலிருந்து இழந்து கொண்டது. அதன் பின்னர் நல்லூர் என்ற மையத்தின் வரலாற்று வளர்ச்சியானது போர்த்துக்கீசர்களின் நடவடிக்கைகளின் பின்னணியில் மருவி நின்று கிறிஸ்தவ நடவடிக்கைகளுக்குரிய பகைப்புலமாக தொழிற்பட்டிருந்த மையமாக அமைந்தது.[2] தொடர்ந்து 1696ல் இலங்கை வந்த ஒல்லாந் தர்களது நடவடிக்கைகளின் கீழும், அதன் பின்னர் 1796/7ல் ஆங்கி லேயர்களது வருகையைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் கச்சேரி நிர் வாகத்தின் கீழும் நல்லூரானது உள்ளடைக்கப்பட்டதன் காரண மாக அரசியல் பொருளாதார சமூகவியல் அடிப்படையில் குறிப்பிடக் கூடியளவிற்கு அபிவிருத்திகள் எவையும் அங்கு ஏற்பட்டிருக்க வாய்ப் புக்கள் இல்லாதிருந்தது. ஓரளவிற்காவது ஒல்லாந்தர்களது நட வடிக்கைகள் நல்லூரினை மையப்படுத்தி அமைந்திருந்தமை காரண மாக, அவர்களது பண்பாட்டினை பிரதிபலித்து நிற்கக் கூடிய வகை யில் சில கலாசார எச்சங்களாவது இன்றுவரையும் அங்கு காணப் பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போது நல்லூரில் அமைந்து காணப்படுகின்ற கந்தசுவாமி கோயிலானது ஒல்லாந்தர் ஆட்சிக்கால இறுதியில் அங்கு அமைக்கப்பட்டதாகும்.[3] ஆங்கிலேயர்களது ஆட்சிக் காலத்தில் புதுப்பித்துக் கட்டப்பட்ட நிலையில் இன்றைய வளர்ச்சியை அக்கோயில் எட்டிப்பிடித்துள்ளது எனலாம்.

## அமைவிடம் :

நல்லூர் என்றழைக்கப்பட்ட புராதனமான மையம் எது என்பது இன்னமும் திட்டவட்டமாக வரலாற்றாசிரியர்களால் வரையறை செய்யப்படவில்லை. இருந்தும் கிடைக்கக் கூடிய போத்துக்கீச – டச்சு ஆவணங்களின் அடிப்படையில் புராதனம் வாய்ந்த நல்லூரானது வடக்கே சட்டநாதர் கோவிலினையும் கிழக்கே வெயில் உகந்தப் பிள்ளையார் கோவிலினையும்[4], மேற்கே வீரகாளியம்மன் கோவிலை யும், தெற்கே கைலாயபிள்ளையார் கோவிலினையும் உள்ளடக்கிக் காணப்பட்ட மையத்தினைக் குறிப்பிட்டு நின்றதா அல்லது குடா நாட்டிற்கு வெளியே பூநரியில் காணப்படும் நல்லூரினைக் குறிப் பிட்டு நின்றதா என்பதனையிட்டு வரையறை செய்வதும் கடினமாக வுள்ளது. இருந்தும் நாயன்மார்க்கட்டு பிள்ளையார் கோவிற் திருக் குளத்தினின்றும் மீட்கப்பட்ட கலி 3025 க்குரிய கல்வெட்டொன்றின் படி சிங்கையாரிய மகாராசா வீற்றிருந்து அரசோச்சிய மையம் அந் நான்கு காவற் தெய்வங்களைக் கொண்ட கோவில்களுக்கு மையத் தில் அமைந்துள்ள நிலப்பரப்பினையே குறிப்பிட்டு நிற்கின்றது என கொள்ளலாம்.[5]

நல்லூரைப் பற்றிய காலத்தால் முற்பட்ட கல்வெட்டு சோழர் காலத்திற்குரியதாகவுள்ளது. அக்கல்வெட்டானது யாழ்ப்பாணம் கோட்டை வாயிலிருந்து மீட்டெடுக்கப்பட்டது. எனவே நல்லூர் என்ற மையத்தின் அமைவிடம் திட்டவட்டமாக மேலே குறிப்பிட்ட நிலப்பரப்பிற்கு அண்மித்ததாகவேனும் காணப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. நல்லூருக்கு அண்மித்ததாக, 'ஐநூற்றுவன் வளவு' என்ற காணிப் பெயர் ஒன்று இன்று வரைக்கும் இருந்து கொண்டிருப்பது என்பது (காணிப் பெயர்) சோழர் காலத்துடன் அம் மையத்தினை இணைப்பதாக அமைகின்றது.[6] ஐநூற்றுவன் வளவு என்று அழைக்கப்படுகின்ற பகுதியானது தற்போது யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி காணப்படும் மையத்திற்கு தெற்காகக் காணப்படும் பெரிய நிலப்பரப்பினையே குறித்து நிற்கின்றது. யாழ்ப்பாணம் கோட்டையில் ஆரம்பத்தளம ஐநூற்றுவன் வளவுடன் தொடர்புடைய தாகக் காணப்பட்டிருக்கலாம். ஐநூற்றுவர் அல்லது ஐநூற்றுவன் என்பது சோழர் காலத்தில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஒரு பெரும் வணிக கணத்தினையே (Merchent Guild) குறிப்பிட்டு நிற்கின்றது. இவ்வணிக கணத்தினர் நல்லூர் என்ற மையத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக விளங்கியிருந்திருக்கக் கூடும். கூடவே நல்லூர் என்ற மையத்தின் வரலாற்று வளர்ச்சியினை இலங்கையின் சோழப் பெருமன்னர்கள் கால நிர்வாக நடவடிக்கைகளுடனும் நூற்றுவர் என்ற வணிக கணத்தினர்களது தொழிற்பாட்டின் பின்னணியிலும் தொடர்புபடுத்திப் பார்க்க முடியும்.

## நல்லூரும் சோழர் நடவடிக்கைகளும் :

திட்டவட்டமான தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்ள முடியாதிருப்பதன் காரணமாக நல்லூருக்கும் பேரரசுச் சோழர்களுக்கும் இடையே இருந்திருக்கக்கூடிய அரசியல் - பண்பாட்டுத் தொடர்புகளைச் சரியான முறையில் இனம்கண்டுகொள்ள முடியாதிருக்கின்றது யாழ்ப்பாணக் கோட்டைச் சாசனம் ஒன்றே நல்லூருக்கும் சோழர்களுக்குமிடையிலான தொடர்பினை எடுத்துக்காட்டுவதாகக் காணப்படுகின்றது.[7] ஏதோவொரு குறிப்பிட்ட கோவிலுக்கு அவ்வூர் சாத்தன் என்பவன் வழங்கிய சாவாமூவாப் பேராடுகள் பற்றியதான குறிப்பே அச்சாசனத்தில் இடம்பெற்றுள்ளது. ஆனால் எத்தகைய கோவிலுக்கு அத்தானம் வழங்கப்பட்டது என்பதனை சாசனத்தில் ஏற்பட்டிருந்த சிதைவினால் கொண்டு கூட்ட முடியாதுள்ளது.

பொதுவாக சோழர்கால நகரங்களில் சிவன்கோவில்களை அமைக்கின்ற பண்பே காணப்பட்டிருந்தது. 1ம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகியோர்களது காலத்தில் உருவாக்கப்பட்ட கோவில்கள் சிவன்கோவில்களாகவே அமைந்தன. யாழ்ப்பாணக்



கோட்டைக்குத் தெற்குப் பக்கமாக உள்ள கடற்பரப்பிற்கு அப்பால் மண்ணித்தலையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பெற்ற சோழர்காலத்துக்குரிய ஆலயம் 1ம் இராசராசன் காலத்திற்கும் முற்பட்டதாக, ஓரளவிற்கு 1ம் பராந்தகன் காலத்து கட்டிடக்கலைப் பணியைப் பிரதிபலிப்பதாக ஆய்வாளரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.[8] அங்கு கண்டுபிடிக்கப்பட்ட கருங்கல்லால் ஆன விஷ்ணு சிற்பம் ஒன்று பல்லவ சோழ கலைமரபின் கலப்பினை பிரதிபலித்து நிற்பதனையும் காட்டியுள்ளனர்.[9] இத்தகைய சோழப் பண்பாட்டிற்குரிய சான்றுகள் நல்லூருக்குத் தெற்காக அமைந்து கடற்பரப்பினை அண்டிய பகுதிகளில் கிடைத்துக்கொண்டிருக்கும்பொழுது, நல்லூர்ப் பிராந்தியத்தில் அவை ஆய்வாளர்களது கண்களுக்குப் புலப்படாதிருப்பது துரதிஷ்டவசமே. இந்நிலையில் நல்லூரில், சோழர் காலத்தில் எத்தகைய ஒரு கோவில் அமைக்கப்பட்டிருக்கக்கூடும்? அது சிவன்கோவிலாக இருந்திருக்குமா? அல்லது முருகன் கோவிலாக இருந்திருக்குமா? நல்லூரில் போர்த்துக்கீசரினால் அழிக்கப்பட்ட ஆலயம் சிவன்கோவிலாக இருந்திருக்குமா? இல்லை கந்தசுவாமி கோவிலாக இருந்திருக்குமா? யாழ்ப்பாணத்தரசர்கள் காலத்தில் மிகப் புகழ் பெற்றிருந்த கோவிலாக கந்தசுவாமி கோவில் அமைந்திருந்தது என்பதனை யாழ்ப்பாண வைபவமாலை உட்பட பல தமிழ்வரலாற்று நூல்கள் குறிப்பிடுவதனைக் காணலாம். அக்குறிப்பின் அடிப்படையில் நோக்கும்போது நல்லூரில் போர்துக்கீசர்களால் அழிக்கப்பட்ட ஆலயம் கந்தசுவாமி கோவில்தான் என்பதனை உறுதிப்படுத்த முடியுமாயின், சோழர்காலத்தில் நல்லூரில் கட்டப்பட்டிருந்த சிவன் கோவிலுக்கு நேர்ந்த கதி என்னவாக இருந்திருக்கும் என்பதும் ஒரு பிரச்சினைக்குரியதாக அமையும். இது மேலும் தெளிவான விரிவான ஆராய்விற்குரிய அம்சமாக இப்பொழுது தோற்றமளிக்கின்றது.

## சிவன் கோவில் எல்லைக் கோவிலா?

யாழ்ப்பாண வைபவமாலையில் நல்லூரில் அமைக்கப்பட்டிருந்த கோவில்களுள் சிவன் கோவில்களைப் பற்றிய குறிப்புக்களும் இடம் பெறுவதனைக் காணலாம். அவற்றுள் சட்டநாதேஸ்வரர் கோவில் வடதிசைக்குரிய எல்லைக் கோவிலாக அமைக்கப்பட்டதாக வைபவமாலை குறிப்பிடுகின்றது. தென்னாசியாவில் எவ்விடத்திலும் எல்லைக் கோவில்களாக சிவன்கோவில்கள் அமைக்கப்பட்டிருந்தமைக்கு சான்றுகள் இதுவரையில கிடைக்கவில்லை. நல்லூரில் மாத்திரம் இவ்வாறு சிவன்கோவில் ஒன்று எல்லைக் கோவிலாக மாற்றப்பட்டிருந்தமை வியப்புக்குரியதொன்றாகும். பொதுவாக எல்லைக் கோவில்களில் விநாயகர், வைரவர், காளி, பூதராயர் போன்றவற்றையே பிரதான மூர்த்தியாக இருத்துவது மரபு. எனவே நல்

ஊரைப் பொறுத்தவரையில் அதன் வடதிசைக்கு சிவனை எல்லைத் தெய்வமாக அமைக்கப்பட்டமைக்கும் ஏதோவொரு பின்னணி இருந்திருக்க வேண்டும். அப்பின்னணியானது ஒருவேளை சோழர்காலத்தில் நல்லூரில் அமையப்பெற்றிருந்த சிவன்கோவிலுடன் தொடர்புபட்டிருந்திருக்கக்கூடும். அவ்வாறாயின் சட்டநாதவீஸ்வரர் கோவிலின் வரலாறு சோழருடன் தொடர்புபட்டதாக இருந்திருக்குமா? என்ற ஐயப்பாடனது இப்பொழுது உதயமாகின்றது.[10]

யாழ்ப்பாணத்தில் நல்லூரின் கண் அமைந்து காணப்படுகின்ற சட்டநாதர் என்ற சிவன் கோவிலின் தோற்றத்தினை சோழருடன் தொடர்புபடுத்திப் பார்க்கக்கூடியவாறு சில சான்றுகள் கிடைத்துள்ளன. அவ்வகையில் இந்த ஈஸ்வரன் கோவிலின் திட்டவட்டமான பெயரினை அதாவது இன்று வழக்கிலிருந்து கொண்டிருக்கின்ற பெயர்தான் அக்கோவிலின் தோற்ற காலத்திலும் வழங்கப்பட்டதா அல்லது உண்மையான பெயர் மருவிச் சென்று இன்று வழக்கில் இருக்கும் நிலையை அடைந்து கொண்டதா என்பதையிட்டு சற்றுச் சிந்திக்க வேண்டியுள்ளது.

இக்கோயிலின் பெயர்த்தோற்றம் பற்றிய ஆய்வில் ஒருபடியாக அமைந்தது இன்று வரைக்கும் பாவனையிலிருந்து வரும் ஆலய/மணியில் பொறிக்கப்பட்டிருந்த சிறிய சாசனக் குறிப்பாகும்.[11] அது யாழ்ப்பாண வைபவமாலையில் இக் கோயில் தொடர்பாக குறிக்கப்பட்டுள்ள பெயரினை மேலும் உறுதிப்படுத்துவதாகவும் அமைகின்றது. அச்சாசனத்தின் வாசகம் பின்வருமாறு அமையும்.

| | | | |
|---|---|---|---|
| மூலம்: | சாலிவாகன சகாப<br>தம சாஅச கலியதம<br>நுனசுறு து நதுடா<br>வருஷ ம | வாசிப்பு: | சாலிவாகன சகாப்தம் 1784<br>கலியப்தம் 496[illegible]<br>துந்துபி வருஷம். |
| மூலம்: | யாழபாணததைச சாாநத<br>நலலூா சடடநாதன<br>கொயிலுககு சிவசமபு-ம | | யாழ்ப்பாணத்தைச் சார்ந்த<br>நல்லூர் சட்டநாதன் கோயிலுக்கு சிசவம்பு – ம(ணி) |

யாழ்ப்பாண வைபவமாலையானது கி.பி. 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த மயில்வாகனப் புலவர் என்பவரால் எழுதப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்ட சட்டநாதேஸ்வர் என்ற பெயரானது மேலே கொடுக்கப்பட்ட சாசனச் சான்று மூலமும் (18ம் நூற்றாண்டின் முடிவுவரைக்கும் அதற்குப் பின்னரும்கூட) அவ்வாறே அழைக்கப்பட்டு வந்தமையைக் காட்டி நிற்கின்றது. மயில்வாகனப் புலவர்



தனது நூலினை எழுதியபோது அக்கோவிலின் பெயரை அவ்வாறு பதிவு செய்தது என்பது அவருக்கு முற்பட்ட நூற்றாண்டிலாவது சட்டநாதன் கோவில் என அழைக்கப்பட்டு வந்திருந்த மரபினை மறைமுகமாக எடுத்துக்காட்டுகின்றது எனலாம். கோட்பாட்டளவில் அக்கோவிலின் பெயர்த் தோற்றத்தினையும், அதன் வழக்கினையும் கி. பி. 13ம் நூற்றாண்டிலிருந்தாவது நிச்சயப்படுத்திக்கொள்ள முடியும். அதற்கும் முற்பட்ட நிலையில் அக்கோவிலின் நிலைபேறு எவ்வாறு இருந்திருக்கும் என்பதனை, அதனை ஒரு எல்லைக்கோவிலாக மாற்றியமையிலிருந்து உய்த்து உணர முடிகிறது. இக்கருதுகோள் ஏனைய சான்றாதாரங்களினால் எதிர்காலத்தில் நிறுவப்படும் பட்சத்தில், அதன் பெயர்த் தோற்றத்தினை பின்வருமாறு கொள்வதற்கு வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என நம்பலாம்.

இலங்கையும் சோழப் பேரரசின்கீழ் ஏழு மாகாணங்களுக்குள் மூன்றாவதாக, மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயரில் கி. பி. 993க்கும் 1070 க்குமிடைப்பட்ட காலத்தில் ஆட்சி செய்யப்பட்டதன் விளைவாக பல சிவன்கோவில்கள் இங்கு கட்டியெழுப்பப்படுவதற்கு காரணமாயிற்று. அவ்வாறான சிவன்கோவில்கள் முக்கியமான நிர்வாக மையங்களாக விளங்கியிருந்திருக்கக்கூடிய நகரங்களிலே நிறுவப்பெற்று அம் மன்னர்களுடைய இயற் பெயர்களினாலோ அல்லது விருதுப்பெயர்களினாலோ பெயரிடப்பெற்று பல நன்கொடைகளும், தேவதானங்களும் வழங்கப்பட்டிருந்தன. இதுவரையில் இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட சோழர் சாசனங்கள் இக் கருத்தினை நன்கு நிறுவி நிற்கின்றன. அவ்வகையில் முதலாம் இராசராசனது விருதுப் பெயர்களிலேயும் அழைக்கப்பட்ட பல சிவன் கோவில்களை தமிழ் நாட்டிலிருந்தும் இலங்கையிலிருந்தும் நன்கு அறிந்துகொள்ள முடிகிறது, இரவிகுல மாணிக்க ஈஸ்வரம், இராசராசேஸ்வரம், வானவன் மாதேவி ஈஸ்வரம், பண்டித சோழ ஈஸ்வரம், திருவிராமீஸ்வரம் (திரு இராசீஸ்வரம்) என்பன இலங்கையில் சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட முக்கியமான கோவில்களாகும், தென்னிந்தியாவிலே முதலாம் இராசராசனது விருதுப் பெயர்களில் அமைந்திருந்த சிவாலயங்களாக அருமொழி ஈஸ்வரம், இராசராச ஈஸ்வரம், சோழேந்திர ஈஸ்வரம் ஜெயங் கொண்ட சோழேஸ்வரம் என்பன காணப்படுகின்றன. இவ்வகையில் இலங்கையில் இச் சட்டநாதவீஸ்வரர் கோவிலின் பெயர்த்தோற்றம் தொடர்பாக முதலாம் இராசராசனது விருதுகளில் ஒன்றான ஜனநாதன் என்பதனையும் இணைத்துப் பார்க்கக்கூடியதொன்றாக இருப்பது இங்கு நோக்கற்பாலதாகும்.

ஜனநாதஈஸ்வரம் என்ற நாமமே பின்னர் ஜடாநாதர் என்றாகி பின் ஜடைநாதன் என மருவி பின்னர் சட்டநாதன் என வழங்கியிருந்திருக்கலாம். அதுவே பின்னர் காலப்போக்கில் சட்டநாத ஈஸ்வரர் என்று மருவிய நிலையில் யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகளினால் எல்லைக் கோவிலாக உருமாற்றப்பட்டிருக்கக்கூடும். இக்கருத்தினை உறுதிப்படுத்துவதற்கு சாசன – இலக்கியவாதாரங்களை எதிர்காலத்தில் தேடிப் பெற்றுக்கொள்ளவேண்டிய ஓர் அவசியமுமுண்டு. முதலாம் இராஜராஜனது விருதுப்பெயர் என்ற வகையில் ஜனநாதபுரம் என்ற பெயர் ஈழமான மும்முடிச் சோழமண்டலத்தின் தலைநகரால் அமைந்த பொலனறுவைக்குச் சூட்டப்பட்டிருந்தமையினை சாசனச் சான்றுகள் உறுதிப்படுத்தி நிற்கின்றன. அவ்வாறாயின் 'ஜனநாத ஈஸ்வரம்' என்ற பெயரை சட்டநாதவீஸ்வரர் கோவிலுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதில் தவறு ஏதும் இருக்கவே முடியாது.

தென்னிந்தியாவில் ஜனநாத ஈஸ்வரம் என்ற பெயரில் சோழர் காலச் சிவன்கோவில்கள் எவையேனும் காணப்படுபவையாகத் தெரியவில்லை. ஜனநாதபுரம் என்ற பெயரில்கூட அங்கு நகரங்கள் இருந்ததற்கான சான்றுகளும் இன்னும் கிடைக்கவில்லை. இலங்கையிலே திருகோணமலை, கந்தளாய், பதவியா, மாதோட்டம், நல்லூர் என்பன ஈழமான மும்முடிச் சோழமண்டலத்தின் பிரதான நிர்வாக மையங்களாக–நகரங்களாக விளங்கியிருந்தன. இவற்றுள் நல்லூரைத் தவிர ஏனையவற்றில் கட்டப்பட்டிருந்த ஈஸ்வரன் கோவில்களது பெயர்களையும் தான விபரங்களையும் சாசனச் சான்றுகளிலிருந்து வரலாற்றாசிரியர்களினால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

ஆனால் நல்லூரைப் பொறுத்தமட்டில் நல்லூரிலுள்ள ஒரு கோவிலுக்கு விளக்கு எரிப்பதற்காக அவ்வூர் சாத்தன் என்பான் சாவாமூவாப் பேரேடுகளைத் தானமாக வழங்கிய ஒரு நிகழ்வினை யாழ்ப்பாணக் கோட்டைச் சாசனம் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. 1ம் இராசேந்திரனது இக் கல்வெட்டின் 12ம் வரியில் தானம் கொடுக்கப்பட்ட நிறுவனம் அமைந்திருந்த இடம் நல்லூர் என்பதனை பேராசிரியர் இந்திரபாலா உறுதிப்படுத்தியுள்ளார்.[12] அவர் அப்பெயரினை அனுமானித்து வாசிப்பதற்கு அடிப்படையாகவிருந்த எழுத்துக்கள் 'லூர்' என்பவை மட்டுமே. இவ்வெழுத்துக்களுக்கு முன்னும் பின்னும் இருந்திருக்கக்கூடிய எழுத்துக்கள் துர் அதிஷ்டவசமாகவோ என்னவோ வானிலையின் தாக்கத்திற்கு உட்பட்டு சிதைவடைந்து அழிந்துவிட்டன. இவ்விரு எழுத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டே 'நல்லூர்' என்ற கருத்திற்கு அவரால் வர முடிந்தது ஆனால் அவர் நல்லூரில் உள்ள எந்தக் கோவிலுக்கு இத் தானம் வழங்கப்பட்டது என்பதுபற்றி எந்தவிதமான குறிப்புக்



களையும் கொடுத்திருக்கவில்லை. இருப்பினும் பேராசிரியருடைய இவ்வாசிப்பினை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் அடுத்து இங்கு குறிப்பிடவிருக்கின்ற அம்சமானது மிக இலகுவானதாகவும் சுலபமானதாகவும் அமையும்.

அதாவது இச்சாசனத்தில் 12ம் வரியில் (நல்)லூர் என மட்டும் காணப்படுகின்றது என வைத்துக்கொள்வோம். அடுத்த 13ம் வரி 'த' என்ற எழுத்தில் சாசனப் பொறிப்பு ஆரம்பிக்கின்றது. அதே வரியில் 'த' என்ற எழுத்தினைத்தவிர மிகுதி எழுத்துக்கள் ஒன்றுமே காணப்படவில்லை. 12ம் வரியில் (நல்)லூர் என்ற பதிவினைத் தொடர்ந்து நான்கு எழுத்துக்களுக்குரிய இடைவெளி சாசனத்தில் பேணப்பட்டுள்ளமையும் அவதானிக்க முடிந்தது. எனவே (நல்)லூர் என்ற பதத்தினைத் தொடர்ந்து (ஜனநா) என்ற பதம் இணைந்து அடுத்துவரும் 'த' என்ற லிபியுடன் சேர்ந்து பின்னர் 'ஈஸ்வரமுடையாற்கு' என பதிவு செய்யப்பட்டு இருந்திருக்க வேண்டும் என கொள்ளக்கிடக்கின்றது .. . 'லூர்' .. என்பதை மாத்திரம் வைத்துக்கொண்டு நல்லூர் என்று வாசிக்கப்பட்டமை சரியாயின் அடுத்த வரியில் வரும் .. 'த'...... என்பதனை வைத்துக்கொண்டு (ஜனநா) த (ஈஸ்வரமுடையார்க்கு) என வாசிப்பதில் தவறொன்றுமிருக்காது என்பது சாசனவியற்றுறையில் இடம்பெறும் விஞ்ஞான முறையில் அமைந்த ஒரு விளக்கமாக அமையும். இருந்தும் இதனையொத்த இன்னொரு சாசனத்தினை தேடிக் கண்டுகொள்ளும் வரைக்கும் சட்டநாதவீஸ்வரர் தொடர்பான 'ஜனநாத ஈஸ்வரம்' என்ற முதற்பெயர் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்படலாம். அவ்வளவில் சோழருக்கும் நல்லூருக்குமிடையே இருந்திருக்கக்கூடிய தொடர்புகளையும் வரையறை செய்யலாம்.

(சாத்தன் என்ற பெயர் 'வணிக கணம்' என்ற கூட்டுக்குள் தொழிற்பட்ட வியாபாரியையே குறித்து நிற்கின்றது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சோழர்களுடைய சாசனப் பதிவுகளில் குறிப்பாக தானம் தொடர்பான பதிவுகளில் 'சாத்தன்' என்ற பெயர் அடிக்கடி பயன்படுத்தப்பட்டிருந்தமையைக் காணலாம். 'சாத்து' என்றால் வியாபாரிகள் கூட்டம் என்று பொருள்படும். சாத்தன் என்றால் அது ஒருமைப் பெயராக இடம்பெறுவதனையும் உணரலாம். நல்லூருக்கண்மையில் 'ஐநூற்றுவன் வளவு' என்றழைக்கப்பட்ட மையம் அமைந்து காணப்பட்டது எனவே ஐநூற்றுவர் என்ற வணிக கூட்டத்தினர்களுள் ஒரு சாத்தனே நல்லூரிலுள்ள ஜனநாதவீஸ்வரருக்கு சாவாமூவாப் பேரேடுகளைத் தானமாக வழங்கியிருந்த செய்தியினை யாழ்ப்பாணம் கோட்டைச் சாசனம் பதிவு செய்துள்ளது எனக் கொள்ளலாம்.)

## நல்லூரும் சிற்பக்கலை மரபும்: சிற்பங்களின் இயல்புகள், பாணி, காலம் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்பு

யாழ்ப்பாணத்தில் சிற்பக்கலை ஆய்வுகளானவை இன்னும் தொடங்கப் பெறாதவொரு நிலையிலேயே இருந்து கொண்டிருப்பதனைக் காணலாம். இங்கு கலைபற்றிய ஆய்வுகள் இன்னும் பெரும்பாலான மக்களின் கவனத்தினையீர்க்காதவொரு நிலையில் சிற்பக்கலை பற்றிய ஆய்வுகளை நடாத்துவதும் எதிர்பார்க்க முடியாததொன்றேயாகும். பாரம்பரிய கலைமரபில் சிற்பக்கலை மரபின் பின்னணியை ஆதாரங்களுடன் நிறுவ முடியாதிருந்தவொரு நிலையும் அந்நிலைக்குக் காரணமாகவிருந்தது எனலாம். இந்நிலையில் 1957ம் ஆண்டில் திரு. சண்முகநாதன் அவர்களால் நல்லூரில் உள்ள பூதவராயர் திருக்குளத்தினின்றும் மீட்கப்பட்ட குறிப்பிடத்தக்க ஒரு தொகுதிகருங்கற் சிற்பங்களின் கலைவனப்பினையும், அவற்றின் காலவரன் முறையையும் கண்டறியவேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. நல்லூர் பூதவராயர் திருக்குளத்தினின்றும் மீட்கப்பட்ட சிற்பத் தொகுதியிலிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையானவை தற்பொழுது யாழ்ப்பாண அரும்பொருளகத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டுள்ளன. வேறுசில இன்னும் சட்டநாதர் கோவிலில் வைத்துப் பூஜிக்கப்படுகின்றன எனவும் கூறப்படுகிறது. இதுவரையில் இச்சிற்பங்களின் கலைவனப்பினை தென்னிந்திய சிற்பக்கலைமரபின் பின்னணியில் எத்தவொரு நிலையிலும் வைத்து ஆராய்வதற்குரிய சூழ்நிலை (இதுவரையிலும்) உருவாக்கப்பட்டிருக்கவில்லை. பேராசிரியர் வி. சிவசாமி அவர்களே ஓரளவுக்காவது அக்கருங்கற் சிற்பங்களைப் பற்றிய அறிமுகத்தினையாவது கொடுத்துள்ளார் எனக் கூறலாம்.[13]

நல்லூர் என்ற மையத்தின் சிற்ப மரபினைப் பற்றி ஆராயும் பொழுது வேறும்பல சிற்பங்களை இன்று சேர்த்து ஆய்வு செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம். 1980ம் ஆண்டில் சோனகக் குடியிருப்பில் உள்ள கமால் வீதியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அழகிய பெரிய கருங்கற் சிற்பத்தினையும், ஒரு சிறிய தாமிர விக்கிரகத்தினையும் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ள முடிகிறது. (இதே போன்று கந்தர்மடத்தில் ஒரு குறிப்பிட்ட வீட்டில் வைத்துப் பாதுகாக்கப்பட்டுள்ள புராதனம் வாய்ந்த கருங்கற் சிற்பமொன்றினைப் பற்றியும ஆராய வேண்டும்) சங்கிலித்தோப்பில் உள்ள யமுனா ஏரியில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மரத்தினாலான அம்மன்



சிற்பமொன்றினையும் பற்றி இங்கு ஆராய முடிகிறது.[14] இறுதியாக யாழ்ப்பாணம் புராதன கதிரேசன் கோவிலுக்குரியது எனக் கொள்ளப்படும் பழமையான மரச் சிற்பங்களின் ஒரு தொகுதி பற்றியும் ஆராய முடிகிறது. இச் சிற்பச் செதுக்கு வேலைப்பாட்டில் காணப்படும் மனித கடவுளர் பற்றிய உருவங்களின் கலையமைதியினைப் பற்றியும், போர்த்துக்கீசர் அல்லது ஒல்லாந்தர் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட சிற்ப வடிவத்தொகுதிகளை உள்ளடக்கிய வகையிலும் கதிரேசன் கோவிலுக்குரியதாகக் கொள்ளப்படும் அம் மரத்தினாலான சிற்பச் செதுக்கு வேலைகளைப்பற்றி ஆராய முடிகிறது.[15]

எனவே மேற்படி குறிப்பிடப்பட்ட சிற்பங்களைப் பற்றியதான நேரடியான அவதானிப்புகளினதும், தென்னிந்தியப் பின்னணியில் அவற்றின் நிலைபற்றிய விளக்கக் குறிப்புக்களினதும் தொகுப்பாகவே இங்கு நல்லூர் சிற்பக்கலை மரபினைப்பற்றி ஆராய முடிகிறது. இச் சிலைகளின் அமைப்பு, சிற்பக்கலையில் அதன் வனப்பு, கால ஆய்வுக்கு உதவும் கலைக்கூறுகள் என்றவகையில் ஆராய்வது கலை வரலாற்றாய்வுக்கு மேலும் இடம் கொடுக்கும் நிலையை உறுதிப்படுத்துவதாக இருக்கும்.

### சோழக் கலைமரபும் சிற்பங்களும் :

சோழ மன்னர்களது சாசனங்களில் நல்லூர் என்ற மையம் பற்றி பல இடங்களிற் குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணலாம். யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்து பேராசிரியர் இந்திரபாலாவால் மீட்கப்பட்ட சோழருடைய சாசனமொன்றிற் கூட 'நல்லூரான' என்ற தொடர்புபட்டிருந்த நல்லூரில் அவர்களது காலத்து கலைமரபின் வெளிப்பாட்டினை, தொடர்புபட்ட சில சிற்பங்களில் காணலாம், அவ்வகையில் சட்டநாதேஸ்வரர் கோவிலுக்கு அருகாமையில் அமைந்த பூதவராயர், திருக்குளத்தினின்றும் மீட்கப்பட்ட சிற்பத் தொகுதியிலிருந்து இரண்டு கருங்கற் சிற்பங்களையும், கமால் வீதியிலிருந்து பெறப்பட்டுக்கொள்ளப்பட்ட ஒரு சிற்பத்தினையும் சோழர் கலை மரபு வெளிப்படும் சிற்பங்களாகக் கொள்ள முடிகிறது இறுதியாகக் குறிப்பிடப்பட்ட சிற்பத்தினை சோழர் பாணியுடன் இனம் கண்டு பேராசிரியர் இந்திரபாலா ஆய்வு செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

### அ) சனீஸ்வரன் கருங்கற்சிற்பம் [16]

பூதவராயர் திருக்குளத்தினின்றும் மீட்கப்பட்ட கருங்கற் சிற்பத் தொகுதியினுள் சனீஸ்வரன் சிற்பமானது மிகவும் பழமையானது என்று கொள்ளக்கூடிய வகையில் அச் சிற்பத்தின் 'சிற்ப இலக்ஷணங்

கள்' அமைந்துள்ளன. வாகனமான காகத்தின் மீது வலது காலை மடித்து, இடது கலை கீழே தொங்கவிட்டவண்ணம் செதுக்கப்பட்ட இச் சிற்பமானது அதன் உருவ அமைதியைப் பொறுத்தமட்டிலும், ஆபரணக் கலையின் தன்மைகளைப் பொறுத்தவரையிலும், அச் சிற்பத் தொகுதியினுள் பழமையானதாகக் கொள்ளவைக்கின்றது. சிற்பத்தின் அமைதி, அங்க இலக்ஷணங்கள் ஆபரணக்கலையின் தன்மை என்பவற்றை பிற்பட்ட சோழர் கலைப்பாணியுடன் ஒப்பிட்டு நோக்க முடிவதினால் சனீஸ்வரன் கருங்கற் சிற்பமானது பிற்பட்ட சோழர் காலத்தினைச் சேர்ந்தது எனக் குறிப்பிடலாம்.

சோழ சனீஸ்வரன் சிற்பத்தின் அங்க இலக்ஷணங்களை நோக்கும் பொழுது அதன் முக்கியமான தலையலங்காரமான 'ஜடாமகுடத்தினை' இங்கு எடுத்துக்காட்டுவது பொருத்தமானது. பிற்பட்ட சோழர்கால சிற்பக்கலை மரபில் பேணப்படுகின்ற தன்மையை இச் சிற்பத்தின் ஜடாமகுடம் நன்கு பிரதிபலித்து நிற்கின்றது. இச் சிற்பத்தில் ஜடாமகுடமானது மூன்று முக்கியமான கூறுகளையுடையதாகவுள்ளது. அதன் உச்சியில் காணப்படும் உச்சிக்கொண்டை (Top Nut), பின்னர் அதற்குக் கீழே ஜடாமுடியின் பிரதான இரு கூறுகளாக வகுக்கும் இடைவந்திக்கட்டு என்பனவே அவையாகும். பிற்பட்ட சோழர் காலைக்கலை மரபுகளில் மிகக் கூடுதலாகப் பயன்படுத்தப்படும் ஒரு கலைப்பாணியாக இது அமைந்திருப்பதனைத் தென்னிந்தியச் சிற்பங்களில் காணலாம். ஜடாமுடியை இருகூறாக வகுக்கும் இடைவந்திக் கட்டுக்குக் கீழ்ப்பாகத்தில் இரத்தினாரமும். மேற்பாகத்தில் லிங்கக்குறியும் இடம்பெற்றிருப்பது இச் சிற்பத்தினை அடையாளம் காண்பதற்கு உதவும் கூறுகளாகும். சிவன் கோவில் ஒன்றில் இச் சனீஸ்வரன் சிற்பம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதனை அக் குறியீடு தெளிவாக்குகின்றது எனலாம். (அவ்வாறாயின் சோழர் காலத்தில் நல்லூரில் அமைந்து காணப்பட்ட சிவன் கோவிலுக்கு எக்கதி நேர்ந்தது என்பது மேலும் ஆராய்வுக்குரியதாகும்.)

நான்கு திருக்கரங்களில் வலது மேற்கரம் உடைந்துவிட்ட நிலையிலும், இடது மேற்கரமானது பாசத்தினையும் தாங்கியுள்ளது. வலது கீழ்க் கரம் அபயஹஸ்தமாகவும், இடது கீழ்க் கரமானது வரதஹஸ்தமாகவும் காணப்படுகிறது. உள்ளங்கைகளில் ஸ்வஸ்திகாச்சின்னம் பொறிக்கப்பட்ட நிலையில் கைமேடுகள் மிகத் தெளிவாக வெளிக்காட்டப்பட்டுள்ளன. இதுவும் இச் சிற்பத்தின் ஒரு சிறப்பியல்பாகும்,

சமபங்க நிலையில் உருவாக்கப்பட்ட இச்சிற்பத்தின் ஒரு சிறப்பியல்பு மூன்று பரிமாணங்களையும் (முப்பரிமாணம்) கொண்டதாக



அமைக்கப்பட்டது என்பதே. காக வாகனத்துடன் கூடிய இச்சிற்பத்தில் சமபங்க நிலையைப் பேணுமுகமாக மடிக்கப்பட்ட வலது பாதமானது கீழே தொங்கவிடப்பட்டுள்ள இடது பாதத்திலும் பார்க்க அதன் திரட்சியான தன்மையிலிருந்து சற்றுக் குறைவான தோற்றத்தினை வெளிப்படுத்தி அமைக்கப்பட்டுள்ளது. காக வாகனத்தின் தலைப்பகுதி இடதுபுறம் நோக்கியும், அது பறக்கின்ற நிலையிலும் சித்தரிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இச் சிற்பமானது அசைந்து கொண்டிருக்கின்றது என்பதனைச் சிற்பி இரண்டு குறியீடுகள் மூலமாகச் சித்தரித்துள்ளான். ஒன்று: சனீஸ்வரனின் கொய்யகம் செல்கின்ற திசைக்கு எதிர்த்திசை நோக்கி (வலது பக்கமாக) காற்றினால் அசைவதுபோலவும், இரண்டு: காக வாகனத்தின் இறக்கைகள், வால் பகுதி என்பன விரிக்கப்பட்ட நிலையிலும் அசைவு நிலை சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அசைகின்ற சிற்பத் தொகுதியாக சனீஸ்வரன் சிற்பம் தொகுக்கப்பட்டு செதுக்கி வெளிப்படுத்தப்பட்ட தன்மையானது மற்றொரு சிற்ப அமைதியென்றே குறிப்பிட வேண்டும்.

சனீஸ்வரன் சிற்பத் தொகுதியின் பீடமானது சில விசேடமான இயல்புகளை கொண்டுள்ளது. அதாவது இரட்டிக்கப்பட்ட சதுரமான பீடமென்று முற்றிலும் திராவிட பாணிக்குரிய கட்டிடமொன்றின் அடித்தளத்தினை (பீடம்) வெளிப்படுத்துவதாகவுள்ளது. அதில் கூடு (Kudu) என்ற திராவிட பாணிக்குரிய கட்டிடக்கலைக்கூறு தெளிவாகச் செதுக்கப்பட்டுள்ள விதம் குறிப்பிடத்தக்கதாகும். இதிலிருந்து இச்சிற்பமானது கோவிலின் உட்பிரகாரத்தினுள் வைத்து வணங்குவதற்காக அல்லாமல் மேல்விதானப் பகுதியில் கட்டிடக் கலைக்கூறுகளுடன் வைத்துக் கட்டப்படுவதற்காக உருவாக்கப்பட்டது எனக் கூறலாம். இவ்வடிப்படையில் நல்லூர் பூதவராயர் குளத்திலிருந்தும் மீட்கப்பட்ட சிற்பத் தொகுதியினுள் சனீஸ்வரன் சிலையானது வேறுபட்டமைந்துள்ளது எனலாம்.

சனீஸ்வரன் சிற்பத்தின் ஆரபணமுறையை நோக்கும்போது அவை பெருமளவுக்கு பிற்பட்ட சோழர் காலத்திற்குரிய சிற்பங்களில் காணப்படுவது போன்று அமைந்துள்ளமையைக் காணலாம் நீண்ட மாலை (Oblong Garland) முறை சோழர்களுக்குரிய மரபாகும். இச் சிலையிலும் அதனைக் காணலாம். இதேபோன்று கழுத்தினைச் [illegible] காணப்படுகின்ற அணிகலங்களின் மாதிரி, [illegible]படுத்தப்பட்ட தன்மை, காதில் உள்ள [illegible]கள் முதலியவற்றில் பிற்பட்ட சோழர் காலத்துக்குரிய பாணியைக் காணமுடிகின்றது.

எனவே சனீஸ்வரன் சிற்பத்தின் அமைப்பு, சிற்பக்கலையில் அதன் வனப்பு, கால ஆய்வுக்கு உதவும் கலைக்கூறுகள் என்பவற்றை ஒன்றுதிரட்டி நோக்கும்பொழுது பிற்பட்ட சோழர் காலத்திற்குரிய சிற்ப மரபினைப் பிரதிபலிக்கும் வகையில் அது அமைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. இப் பின்னணியில் இச் சிலையானது கி.பி. 10ம் நூற்றாண்டுக்கும் 12ம் நூற்றாண்டுக்குமிடைப்பட்ட காலப் பகுதியில் உருவாக்கப்பட்டிருக்கலாம் எனக் கொள்ள முடியும்.

## ஆ. தக்ஷிணாமூர்த்தி கருங்கற் சிற்பம்:[17]

நல்லூர் பூதவராயர் திருக்குளத்னின்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சிற்பத்தொகுதியிலுள் இன்னொரு கருங்கற் சிற்பமாகக் காணப்படுவது தக்ஷிணாமூர்த்தி சிற்பமாகும். இத் தனித்துவத்தினை இச் சிற்பத்தில் இரண்டு அடிப்படைகளில் அடையாளம் காணமுடிகின்றது. (அ) தக்ஷிணாமூர்த்தி சிற்பத்தின் நான்கு திருக்கரங்களும் முழங்கைப்பகுதியிலிருந்தல்லாமல் தோட்பட்டையிலிருந்து பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்டமை, (ஆ) அபஷ்மார புருஷனின் முகத்தோற்றம் என்பவையே அவையாகும். இவ்விரு அம்சங்களுமே இச் சிற்பத்தின் அமைதியினையும், கலைவனப்பினையும், காலத்தினையும் கணிப்பதற்கு பெரிதும் பயன்படுபவையாக உள்ளன.

நல்லூர் பூதவராயர் திருக்குளத்திினின்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட நான்கு கரங்களையுடைய சிற்பங்களுள் தக்ஷிணாமூர்த்தி கருங்கற் சிற்பமானது தனித்துவம் வாய்ந்ததாக அமைவதற்குரிய காரணம் மற்றைய சிற்பங்களின் நான்கு கைகளும் முழங்கைப் பாகத்திலிருந்த பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளவையாக காணப்படுவதாகும். இந்நிலையில் தக்ஷிணாமூர்த்தி சிற்பமானது தனித்துவமாக அமைவதோடு மட்டுமல்லாது அதனை காலவடிப்படையில் அடையாளம் காண்பதற்கும் வழிவகுத்ததாக அமைந்துள்ளது. இலங்கையில் கண்டுபிடிக்கப்பெற்ற சோழர் காலத்திற்குரிய வெண்கலச் சிற்பங்களிலிருந்தும் கருங்கற் சிற்பங்களிலிருந்தும் தோட்பட்டையிலிருந்து நான்கு கரங்களினுடனான அமைப்பு பிரிவடைந்து செல்வதனைக் காணலாம். இதனை சமகாலத் தென்னிந்திய சிற்பமரபுகளிலிருந்தும் கண்டு கொள்ளலாம்.

சம பங்க நிலையை வெளிப்படுத்தியமைக்கப்பட்ட தக்ஷிணாமூர்த்தி சிலையின் தலையமைப்பினை நோக்கும்பொழுது பல சிறப்பியல்புகளை அவதானிக்க முடிகிறது. தீச்சுவாலைபோன்று ஜடாபாரம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் மையத்தில் இரத்தினாரம் செதுக்கப்பட்டுள்ளது. ஒழுங்காக அலங்கரிக்கப்பட்ட தீச்சுவாலையையுடைய ஜடாமகுடத்தின் கீழ்ப்பட்டமானது (நெற்றிப்பட்டமானது) அகன்ற பட்டிபோன்று அமைக்கப்பட்டுள்ளது. அப்பட்டியானது தட்க்ஷிணாமூர்த்தியின் நீண்ட முகத்திற்கேற்ப இரு கரைகளிலும் தடித்த வளையங்களிலான வளையம் போன்று அமைந்திருப்பதினை காணலாம். இந்நீண்ட முகத்திற் காணப்படும் தடித்த உதடானது அதன் முகத் தோற்றத்தினை கலை வனப்பு மிக்கதாக ஆக்குவதுடன் பிற்பட்ட சோழர் கால கலைக் கூறினையும் சுட்டி நிற்பதனைக் காணலாம்.



தட்க்ஷிணாமூர்த்தியின் நான்கு திருக்கரங்களில் மேல் வலது கரமானது நெருப்பினையும் (ஒரு வேளை சாமரையாகவும் இருக்கலாம்) மேல் இடது கரமானது நாகபாம்பினையும் தாங்கியுள்ளன. கீழ் வலது கரமானது அபயஹஸ்த நிலையில் ருத்திராக்கம் மாலையைத் தாங்கியுள்ள அதே நேரத்தில் கீழ் இடது கரமானது மடித்த இடது காலின் மீது நேரான முறையில் புறங்கை தெரியும்படியாகத் தொங்கவிடப்பட்டுள்ளது. பேராசிரியர் சிவசாமி ருத்திராக்கம் மாலையைத் தாங்கியுள்ள அபயஹஸ்த நிலையை 'ஞானமுத்திரை' எனக் குறிப்பிட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கதாகும்.[18]

கழுத்தில் அணியப்பெற்ற ஆபரணங்களின் தன்மையானது பிற்பட்ட சோழர் கலை மரபினைப் பின்பற்றியதாகும். சோழர் காலத்து தமிழகச் சிற்பங்களுடன் இச் சிற்பத்தினை ஒப்பிடும் போது ஒத்த தன்மை வெளிப்படுவதனை அவதானிக்கலாம்.

கைலாய மலையின் சிகரத்தில் அமர்ந்திருக்கும் தட்க்ஷிணாமூர்த்தியின் வலது பாதமானது அபஸ்மாரபுருஷனின் தோள் பட்டையில் தாங்குவதாக அமைக்கப்பட்டுள்ளது. அபஸ்மாரபுருஷனின் தோற்றத்தினை நோக்கும் பொழுது பொலநறுவையில் 1969 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டு அனுராதபுரம் அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெரிய நடராசர் வெண்கலச் சிற்பத்தின் அடிப்பீடத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள வாத்தியக்காரர்களுடைய தோற்றத்தினை ஞாபகமூட்டுவதாக அமைந்துள்ளது. ஆனால் இம் மூர்த்தத்தில் அபஸ்மார புருஷனின் வலது கரத்தில் நீண்ட உடைவாள் ஒன்று காணப்படுவதனை அவதானிக்க முடிகிறது. வாள் தாங்கிய அபஸ்மார புருஷனின் தோற்றப்பாடு இச் சிற்பத்தின் விசேடமான பண்பாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அதன் முகத் தோற்றமானது சோழர் காலப் பூதகணங்களையொத்திருப்பதால் இச் சிற்பத்தினையும் பிற்பட்ட சோழர் காலப் பாணிக்குரியதாகக் கொள்ளலாம்.

எனவே மேலே கூறப்பட்ட பண்புகளை ஒன்று திரட்டி நோக்கும் பொழுது கைலாயமலையின் உச்சி மீது வீற்றிருக்கும் இச் சிற்ப அமைதியானது. கி. பி. 10 ஆம் நூற்றாண்டிற்கும் 12 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரியதாகக் கொள்ளலாம்.

## இ. சண்டேஸ்வரர் சிற்பம் : [19]

யாழ்ப்பாணம் முஸ்லிம் குடியிருப்புப் பகுதியில் கமால் வீதியில் உள்ள ஓரிடத்திலிருந்து இப் பெரிய கருங்கற் சிற்பமானது பெற்றுக் கொள்ளப்பட்டது. இருக்கின்ற தோற்றத்தில் சமபங்க நிலையை வெளிப்படுத்தி நிற்கும் இப் பெரிய கருங்கற் சிற்பத்தின் பண்புகளையும் உருவ அமைதியையும் நன்கு ஆராய்ந்து அதனை பிற்பட்ட சோழர் காலக் கலைப் பாணிக்குரியதாக பேராசிரியர் இந்திரபாலா எடுத்துக் காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தலையமைப்பினைப் பொறுத்தமட்டில் ஜடாமகுடமானது மிகவும் நீண்டதாக சோழர் கால சிற்பக் கலை வனப்பின் மகுடமாகத் திகழ்கின்றது. மிகவும் நீண்ட தன்மையைக் கொண்ட ஜடாபாரம் விசேடமான பல இயல்புகளையுடையதாயுள்ளது. ஜடாமகுடத்தின் உச்சியில் ஜடையானது இரண்டாகப் பிரிக்கப்பட்டு பக்கவாட்டாக கீழ்நோக்கி விடப்பட்டுள்ளது. ஜடாமகுடத்தின் திரட்சியான ஒழுங்குபடுத்தப்பட்ட தன்மை சிற்பக் கலையின் தேர்ச்சியை நன்கு இனம் காணத்தூண்டுகின்றது. ஜடாமகுடத்தின் முன்மையப் பகுதியில் வட்டமான இரத்தினாரமும், அடியில் சுவர்ணபட்டமும் மிகவும் அலங்காரப்படுத்தப்பட்ட நிலையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. புராதன நல்லூர்ப் பிராந்தியத்திலிருந்து வெளிவந்த ஒரு கருங்கற் சிற்பம் என்ற வகையிலும், பிற்பட்ட சோழர் மரபுக்குரிய பல கலைத்துவ அம்சங்களை தனது ஜடையிலே மாத்திரம் தாங்கி வெளிவந்த சிறப்புக்குரிய ஒரு படிமம் என்ற வகையிலும் இச்சண்டேஸ்வரர் சிற்பமானது முக்கிய கவனத்தினையீர்ப்பதாக உள்ளது.

கழுத்து ஆபரணங்கள், காதணிகலன்கள் என்பன மிகவும் தெளிவானவையாகவும், பிற்பட்ட சோழர்கால வெண்கல விக்கிரஹங்களில் பின்பற்றப்பட்டிருந்த அணிகலன்களின் வடிவமைப்பினையேயுடையதாகவும் இச்சிற்பம் விளங்குகின்றது. யக்ஞோபவீதம் என்றழைக்கப்படும் முப்புரி நூல் அதன் பெயருக்கேற்ப மூன்று புரிகளையுடையதாகவே இடது தோட்பட்டையூடாகத் தெளிவாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இரு கரங்களுள் வலது கரமானது மிகவும் நீண்ட, அழகான மழு ஒன்றினைத் தாங்கி நிற்க, இடது கரமானது வரத ஹஸ்தமாக



வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அம்மழுவின் கூரான அடிப்பகுதியானது வலது தொடை மீது தாங்கியுள்ளது போன்றுள்ளது.

மிகவும் இளமையான தோற்றப்பாட்டினை வெளிப்படுத்தக்கூடியவாறு இச் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப முகத்தோற்றமும் நீண்ட, சதுரமான வெட்டினையுடையதாய் மெல்லிய சாந்தத் தன்மை வெளிப்படுமாறு செதுக்கியமைக்கப்பட்டுள்ளது. நீண்ட, சதுரமான முகவெட்டினுக்கேற்ப காதணிகளானவை பத்திர குண்டலங்களையுடையதாகவும், நீண்டதாக அல்லாமல் வட்டமானதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இப்பின்னணியில் இக் கருங்கற் சிற்பத்தினைப் பேராசிரியர் இந்திரபாலா சோழர் காலத்திற்குரிய சண்டேஸ்வரர் சிலை என அடையாளம் கண்டுள்ளார்.

எனவே தொகுத்து நோக்கும் பொழுது இச் சிற்பத்தின் உருவ அமைதியையும், கலை வனப்பினையும், அங்க லக்ஷணங்களையும் அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் பொழுது சந்தேகத்திற்கிடமின்றி அதனைப் பிற்பட்ட சோழர் காலக் கலைப்பண்புகளுக்குரியதாகக் கொள்ள வைக்கின்றது. அவ்வகையில் கி. பி. 10, 12 ஆம் நூற்றாண்டுக்கிடைப்பட்ட காலத்துக்குரியதாக அச்சிற்பத்தினைக் கொள்ளலாம்.

## நாயக்கக் கலைமரபும் சிற்பங்களும்:

### அ. மகிஷாசுரமர்த்தினி செப்புப் படிமம்: [20]

கமால் வீதியிலிருந்து மீட்கப்பட்ட இச்சிறிய வெண்கல உருவமானது யாழ்ப்பாணத்தின் வெண்கல சிற்பக்கலை மரபின் பழமையான வரலாற்றுத்தன்மையை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது. இது வரைக்கும் பழமையானது என்ற நிலையில் யாழ்ப்பாணத்தில் கிடைத்த மூன்று வெண்கல உருவங்களுள் மகிஷாசுரமர்த்தினியின் நிற்கும் நிலையில் அமைந்த இச் சிற்பமானது முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. ஒடுங்கிய நிலையில் நீண்ட வடிவமைப்பினையுடைய திருவாசி ஒன்றினுள் சதுரமான பீடமொன்றின் மீது அமைந்த வட்ட வடிவமான தாமரையாசனத்தின் மீது மகிஷாசுரமர்த்தினியின் நிற்கும் நிலையில் அமைந்த உருவம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மகிஷாசுரமர்த்தினியின் வாகனமான நீண்ட வளைந்த கொம்பினையுடைய எருமையின் தோற்றமானது சதுர வடிவான பீடத்தின் உட்குழிவினுள் புடைப்புச் சிற்ப அமைதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையினையும் காண முடிகிறது.

மகிஷாசுரமர்த்தினியின் நிற்கும் நிலையைச் சமபங்க நிலை என்று கூறுவதற்கில்லை. ஒருவேளை அதனை திரிபங்க நிலை எனக் குறிப்

பிட முடியும் மகிஷாசுரமர்த்தினியின் இடுப்புப் பகுதிக்குக் கீழ் உள்ள நிலையானது கிட்டத்தட்ட திருகோணமலையில் கிடைத்த பார்வதியின் அங்கலட்சணங்களையும் அசைவினையும் கொண்டிருப்பதிலிருந்து கிட்டத்தட்ட திரிபங்க நிலைக்குரிய தோற்றத்தினை இதில் காண முடிகின்றது எனலாம். இவ்வுருவத்தின் இடுப்புப் பகுதியானது ஒரு சீரான தன்மையில் வலது பக்கமாக வளைந்திருப்பதினை அச்சிற்ப அமைதியிலிருந்து காண முடிகின்றது.

மகிஷாசுரமர்த்தினியின் எட்டுத் திருக்கரங்களும் முழங்கைப் பாகத்திலிருந்தே பிரிந்து செல்வதனை இச்சிற்பத்தில் காணமுடிகின்றது. இத்தன்மையை தென்னிந்திய வெண்கலச் சிற்பமரபுகளிலும் கூடுதலாகக் காணலாம். இவ்வெட்டுத் திருக்கரங்களுள் கீழ் முன்னிரு வலது இடது கரங்களும் முறையே அபய வரத ஹஸ்தங்களிலும் ஏனைய ஆறு திருக்கரங்களும் படைக்கலன்களைக் கொண்டுள்ள நிலைகளிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. வலது பக்க கரங்களில் மேலிருந்து கிழாக சூலம், வாள், அங்குசம் என்பவையும், இடது பக்கத்திலுள்ள கரங்களில் மேலிருந்து கீழாக வெண்டயம், அம்பு + வில்லு, பாசம் என்பனவும் காணப்படுகின்றன.

மகிஷாசுரமர்த்தினியின் தலையமைப்பு இங்கு நன்கு ஆராயத்தக்கது. மகுட அமைப்பினை கரண்ட வடிவமாகக் கொள்வதற்கில்லை. அதில் பல பிரத்தியேகமான அம்சங்கள் காணப்படுகின்றன. அதாவது கூம்பு வடிவமாக அமைந்த இம் மகுடத்தின் மேற்பாகத்தில் மேலும் ஒரு சிறிய கூம்பு வடிவான அமைப்புக் காணப்படுகின்றது. 'கரண்ட மகுடம்' என இதனை அடையாளம் காணுவதாயின் கீழிருந்து மேல்நோக்கி ஒடுங்கிய வளையங்களாக அல்லது புரிகளாக அது அமைந்திருக்க வேண்டும். ஆனால் மகிஷாசுரமர்த்தினியின் தலையில் காணப்படுகின்ற இம் மகுடமானது ஒருவேளை கேசமகுடமாக இருக்கலாம். இம் மகுடத்தின் முன்புறத்தில் ஒரு உருவம் யோகாசன நிலையில் இருப்பதுபோல் தோற்றமளிக்கின்றது. இது ஒரு விசேடமான தன்மையாக இம்மகுடத்தில் காணப்படுகின்றது. இது மேலும் ஆராயத்தக்கது ஆகும்.

மகிஷாசுரமர்த்தினியின் முகத் தோற்றத்தினையும் காதணிகளின் அமைப்பினையும் நோக்கும்பொழுது கேரளப் பண்பாட்டினை வெளிப்படுத்துவதாக அமைவதனைக் காணலாம். பிற்பட்ட யாழ்ப்பணத்துக் கோவில்களிலும் உள்ள தெய்வ அம்சங்களில் இத்தன்மையைக் காணலாம். முகத்தோற்றத்தினை மட்டும் வைத்து நோக்குகின்றபொழுது, பொலனறுவையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்து வெண்கலப் படிவம் ஒன்றின் சிங்களச் சிற்பமுறையினடியகத் தோற்றம் பெற்ற கலைச்சாயலை வெளிப்படுத்துவதாகக் கொள்ளமுடியும்.



நன்கு அலங்காரப்படுத்தப்பட்டுள்ள ஆபரணக்கலைமுறையையும், ஆடைவகைகளையும் நோக்கும்பொழுது விஜய நகர நாயக்கர் காலக் கலைப்பாணியைப் பிரதிபலிப்பதாகக் கொள்ளமுடிகிறது. விஜய நகரப் பண்பாட்டிற்குரிய பல அம்சங்களை இம் மகிஷாசுரமர்த்தினிப் படிமத்தில் காணமுடிகிறது. மிகவும் அலங்காரப்படுத்தப்பட்ட ஆடையின் தோற்றப்பாடு அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். மகுட அமைப்பு முறையும் அதனை வலுப்படுத்தி நிற்கின்றது. இப்பின்னணியில் மகிஷாசுரமர்த்தினியின் படிமத்தின் காலத்தினை கி. பி. 14ம் 16ம் நூற்றாண்டுகளுக்கிடைப்பட்டதாகக் கொள்ளலாம்.

## ஆ. கஜலக்ஷ்மி கருங்கற் சிற்பம்: [21]

பிரமாண்ட உருவத்தோற்ற உணர்வினையூட்டிநிற்கும் இக் கருங்கற் சிற்பமானது விஜயநகர நாயக்கர் காலப்பாணியைச் சேர்ந்தது என்பதனை அதன் பல கூறுகளிலிருந்தும் கண்டுகொள்ள முடிகின்றது. இருமடங்காக்கப்பட்ட தாமரையாசனத்தில் சுகாசன நிலையில் வலது பாதத்தினைக் கீழே தொங்கவிட்ட வண்ணமும் இடது பாதத்தினை மடித்து தாமரையாசனத்தின் மீது வைத்த வண்ணமும் இச் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. வலது பாதத்தின் தொடையை இடது முன் பாதம் கிட்டத்தட்ட தொடுமளவிற்கு கஜலக்ஷ்மியின் இருக்கையானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

லக்ஷ்மியின் இருமருங்கிலும் இரு யானைகள் தத்தம் முன்னிரு பாதங்களையும் மேலுயர்த்தியவாறு, தும்பிக்கைகளை தாமரை மொட்டுடன் வளைந்தவண்ணம் இணைக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளன. இங்கே லக்ஷ்மிக்கு நீர் சொரிவதற்குப் பதிலாக யானைகளின் தும்பிக்கைகள் லக்ஷ்மி கொண்டிருக்கும் தாமரை மொட்டுடன் இரு பக்கங்களிலும் இணைக்கப்பட்ட தன்மை நோக்கத்தக்கது. லக்ஷ்மியின் மேல் பின்னிருகரங்களுமே தாமரை மொட்டினைக் கொண்டிருக்கின்றன.

மிகவும் அகலமான அலங்காரப்படுத்தப்பட்ட மகரதோரண அமைதிக்குள் இக் கஜலக்ஷ்மியின் சிற்பம் உருவாக்கப்பட்டுள்ள தன்மையானது நன்கு ஆராய்தற்குரியது. மகரத்தின் திரட்சியான கொழுகொழு என்ற வடிவம் அதன் பிற்பட்ட காலச் சிற்ப அமைதியினை எடுத்துக் காட்டுவதாகக் கொள்ளலாம். மகரதோரணத்தின் அமைப்பில் அதற்குரிய உருவ அமைதியில் சீரான தன்மை பின்பற்றாதவிடத்திலும், அதற்குள் இருக்கின்ற நிலையில் உருவாக்கப்பட்ட லக்ஷ்மியின் அங்கலட்சணங்களானவை சிற்பத்தைப் பார்த்த மாத்திரத்தில் கவரக்கூடியதாக இருக்கின்றது.

மிகவும் தெளிவானதும், புருவங்கள் கூர்மை கெடாதவகையில் ஒன்றுக்கு மேல் ஒன்றாக ஒடுங்கிய வளையங்களைக் கொண்ட கரண்ட மகுடமானது, லக்ஷ்மிக்குரிய எடுப்பான தோற்றத்தினை எடுத்து வழங்குகின்றது. அதேபோன்று மிகவும் தெளிவாகவும் கூர்மையாகவும் செதுக்கப்பட்ட ஆரபணக்கலைத்திறன் இரண்டாம் பாண்டியப் பேரரசின் பின் வளர்ச்சிபெற்றிருந்த கலைப்பாணியை எமக்கு நினைவூட்டுவதாகவுள்ளது. விம்மிப்பருத்துள்ள மார்புப்பகுதிக்கும் கழுத்துக்மிடையே காணப்படுகின்ற கழுத்தட்டியல், பின்னர் கழுத்துச்சங்கிலி, அதனுடன் இணைந்த வகையில் மார்புப் பதக்கம் என்பன மிகவும் திரட்சியான வகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தோட்பட்டையில் காணப்படும் அணிகலன்கன், காதணியாகக் குண்டலங்கள், கேசம் மகுடத்தின் கீழ்ப்பகுதியிலிருந்து வெளிப்பட்டு நிற்கின்ற தன்மை என்பன மிகவும் அலங்காரப்படுத்தப்பட்டுள்ளன.

ஆடையலங்காரத்தினைப் பொறுத்தமட்டிலும் தெளிவான பல இயல்புகளை காண முடிகின்றது. துதிக்கால்வரைக்குமாறு ஆடையின் மடிப்பு வரைகள், மடிக்கப்பட்ட இடது காலில் ஆடையின் மடிப்புக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விதம், அதிற் காற்சதங்கை என்பன கஜலக்ஷ்மியின் அலங்காரத்தினை மிகைப்படுத்துகின்றன.

முன் வலது கரம் உடைந்துவிட்ட நிலையில் முன் இடது கரமானது அபய ஹஸ்தமாக உள்ளது, அதன் உள்ளங்கையில் ஸ்வஸ்திகா அமைப்பு மிகவும் தெளிவாகவும், அங்கலட்சணத்தினை மெருகூட்டுவதாகவும் காணப்படுகின்றது.

உருவ அமைதியைப் பொறுத்தமட்டில், அதனை முழுமையாக நோக்கும்பொழுது அதன் பொருத்தப்பாடு (Propotion) மிகவும் குறைவு என்றே எண்ணத் தோன்றுகின்றது. லட்சுமி தாங்கியிருக்கும் தாமரை மொட்டுக்களின் வடிவம் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவுள்ளது. யானையின் வாய்ப்பகுதியிலிருந்து புறப்படும் மகர மீன்களின் உருவ வேறுபாடு. அவற்றின் நீள–அகலங்கள் இங்கு வேறுபடுகின்றன. இடது மகரமீனின் மீது செய்யப்பட்டுள்ள அலங்கார வேலைப்பாடுகளை வலது மகர மீனின் மீது காணமுடியவில்லை. மகுடத்தின் கீழ்ப்பக்க பிடரி வழியாக வெளியே தெரியுமாறு செய்யப்பட்ட கேசத்தின் பரப்பினை இருபக்கங்களிலும் சமப்படுத்தி வைக்கவில்லை. யானைகளின் செவி அமைப்பினையும் பரப்பினையும் பிரதான விக்கிரஹத்தின் காதுப்பகுதியுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது அங்கு முரண்பாடான தன்மை காணப்படுவதனையும் அவதானிக்கலாம். இடது யானையில் வயிற்றில் உள்ள பட்டுவரியை விட வலது யானையின் வயிற்றிலுள்ள பட்டுவரியானது தெளிவற்றதாகவோ அல்லது பூரணப்படுத்தப்படாததாகவோ காணப்படுகின்றது என



லாம். சுகாசன நிலையில் இருக்கின்ற லட்சுமியின் மடிப்பாகமானது உயரமட்டத்தில் இருபக்கங்களிலும் ஏற்றத்தாழ்வாக இருப்பதனையும் காணலாம். இக் காரணங்களினால் சமபலம் பேணப்படாத ஒரு நிலையில் இப்பிரமாண்டமான சிற்பம் செய்யப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

இப் பின்னணியில் பிற்பட்ட பாண்டியர் காலத்து சிற்பக் கலை மரபுடனோ அல்லது அதற்கும் பிற்பட்டதான விஜயநகர நாயக்கப் பாணியுடனோ இக் கஜலக்ஷ்மியின் சிற்ப அமைதியை ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. அவ்வகையில் கி. பி 14க்கும் 16 ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இச் சிற்பம் செய்யப்பட்டிருக்க முடியும்.

## இ) வள்ளி தேவயானை சமேதர சுப்பிரமணியர்: [22]

சிற்ப விதிகளுக்கமைய உருவாக்கப்பட்ட இச் சிற்பத்தொகுதியானது கால ஆய்விற்குரியதாகும். தென்னிந்தியச் சிற்பக்கலைப் பாணியை மிகவும் இலகுவாகப் பிரதிபலிகின்ற இச் சிற்ப அமைதியில் பல அம்சங்கள் மிகவும் நுணுக்கமாக ஆராய்வதற்குரியதாக உள்ளன.

வலது பக்கத்திலுள்ள தேவயானையின் வலது கரமானது மலரும் தாமரை மொட்டினைத் தாங்கியுள்ளது. இதேவேளையில் இடது பக்கத்திலுள்ள வள்ளியின் இடது கரத்தில் மலர்ந்த தாமரை காணப்படுகிறது தேவயானையின் இடது பக்கத் தோட்பட்டையூடாகக் காணப்படும் முப்புரி நூலில் இருந்து தேவயானையின் பிராமணீய நிலை புலனாகிறது. தாமரை மொட்டினைத் தாங்கியுள்ள தேவயானையின் வலதுகரத்தின் நிலையானது வலதுபக்க மார்பகத்திற்கும் கீழ் (Breast Nipple) அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதனையே சிற்பசாஸ்திரங்களும் வற்புறுத்தியுள்ளன. மார்புக்கச்சை அணிவிக்கப்படாத நிலையில் காணப்படும் இற்சிற்பத்தின் அலங்காரத் தன்மை மேலும் ஆராய்வதற்குரியது. இடது பக்கத்திலுள்ள வள்ளி சிற்பத்தில் காணப்படும் ஆடை அலங்காரத் தன்மைகளும் நோக்குதற்குரியவை. இங்கு மார்புக் கச்சை அணிவிக்கப்பட்ட நிலையில் வள்ளியின் சிற்பம் அலங்காரப்படுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம்.

இம் மூன்று சிற்ப உருவங்களினதும் முடியமைப்பினை நோக்கும் போது அவை கரண்டமகுட அமைப்பில் காணப்படுவதனையும், தேவயானையின் மகுடமானது புரிகளற்ற நிலையில் கூம்பு வடிவமாகத் தோற்றமளிப்பதனையும் காணலாம். முருகனது மகுடத்தில் நான்கு புரிகளையும் வள்ளியினது மகுடத்தில் மூன்று புரிகளையும் அவதானிக்க முடிகிறது மகுடங்களின் முன்பக்க மையத்தில் இரத்தினாரம் பொறிக்கப்பட்டுள்ளமையையும் அவதானிக்க முடிகிறது.

காதுகளில் அணியப்பெற்றுள்ள ஆபரணங்களைநோக்கும்பொழுது மகர குண்டலங்களை முருகனிலும், தேவயானையிலும் காண முடிகிறது. வள்ளியைப் பொறுத்தவரையில் பத்திரகுண்டலம் அணியப்பெற்றுள்ளமை ஒரு வேறுபட்ட அம்சமாகும். வள்ளியினது உருவத்தினை விட மற்றைய இரு சிற்பங்களினதும் காதாபரணங்கள் மிகவும் அலங்காரப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பதனை அவதானிக்க முடிகிறது.

நான்கு திருக்கரங்களையுடைய முருகனது திருவுருவத்தில் பின் மேல் வலது, இடது கரங்கள் முறையே சூலத்தினையும், வேலினையும் தாங்கியிருப்பதனைக் காணலாம். முன்திரு வலது, இடது கரங்கள் முறையே அபய வரத ஹஸ்தங்களில் அமைந்திருப்பதனைக் காணலாம். முருகனது வாகனமான மயில் வலதுபக்கம் நோக்கிய நிலையில் அமைக்கப்பட்டிருப்பது ஒரு விதிவிலக்கான அம்சமாகும்.

கால அடிப்படையில் இம் மூன்று சிற்பங்களினதும் அமைதியை நோக்கும்பொழுது தேவயானையின் மகுட அமைப்பிலிருந்து அவை விஜயநகர நாயக்கர் காலத்துக்குரியதாகக் கொள்ள முடிகின்றது. விஜயநகரச் சிற்பங்களில் கும்பக வடிவில் அமைந்த மகுடங்களையே பெருமளவில் காணமுடிகின்றது இப் பின்னணியில் இச் சிற்பத் தொகுதியினை கி. பி. 15 – 16ம் நூற்றாண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை எனக் கொள்ள முடியும்.

## விநாயகர் சிற்பம்: [23]

நல்லூர் பூதவராயர் திருக்குளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட கருங்கற்சிற்பங்களுள் இவ் விநாயகர் சிற்பமும் ஒன்றாகும். கருமையான மணியுருக்களைக் கொண்ட கருங்கல்லினால் உருவாக்கப்பட்டு, இருக்கின்ற நிலையையுடைய இச் சிற்பத்தின் இயல்புகளை ஆராயும்பொழுது பல விசேடமான அம்சங்களை அறிய முடிகிறது.

சிற்ப அமைதியின் வெளிப்பாட்டில் ஓர் இலகுத் தன்மையும், தெளிவும் வெளிப்பட்டு நிற்பதனைக் காணலாம். இச் சிற்பத்தின் தெளிவான சுவரத்தக்க இரு கூறுகளாக அதன் தலைப் பாகமும் வயிற்றுப் பாகமும் அமைந்துள்ளது. தலைமுடியானது கூரான கரண்ட மகுடமாகவுள்ளது. அது ஒன்றுக்குமேல் ஒன்று ஐந்து ஒடுங்கிய வளையங்களால் ஆனவை. மிகவும் அழகாக வெளிப்படுத்தப்பட்டுள்ள இம் முடியானது அலங்காரப்படுத்தப்பட்டு, அலைக் குஞ்சங்களால் அல்லது மயிர்க்குஞ்சங்களால் அழகு படுத்தப்பட்டுள்ளது எனலாம்.

விநாயகரின் இருக்கின்ற அமைப்பும் நோக்கத்தக்கது. வலது பாதமானது நிலைக்குத்தாக மடிக்கப்பட்டும் இடது பாதமானது



பக்கவாட்டாக மடிக்கப்பட்டும் அப்பெரு வயிற்றுப் பாகத்தின் பாரத்தினை தாங்க முடியாத நிலை வெளிப்படுமாப் போல் உருவாக்கப்பட்டுள்ளது. இது விநாயகர் என்ற உண்மையான இயல்பினை வெளிப்படுத்துவதாக உள்ளது. நான்கு திருக்கரங்களில் பின்விரு கரங்களும் பரசினையும் பாசத்தினையும், முறையே வலப்புறமாகவும் இடப்புறமாகவும் கொண்டிருக்க, வலது முன்கரமானது வலது புறத்தில் உடைக்கப்பட்ட கொம்பினையும், இடது முன்கரமானது மோதகத்தினையும் தாங்கியுள்ளன. இச் சிற்பத்தில் 'பானை வயிற்றோன் மோதகம் உண்கின்ற நிலை' வெளிப்படுத்தப்பட்டுள்ள தன்மையானது மிகவும் பொருத்தமானதாகவுள்ளது.

முன்நெற்றிப்பட்டத்தில் முக்குறியும், அதற்குமேல் வைரக் கல்லும் செதுக்கப்பட்டுள்ளது. இரு தந்தங்களுக்குமிடையே நீண்டு காணப்படும் தும்பிக்கையின் மேற்பகுதியில் நீள்வட்ட வடிவில் அதன் ஓங்கார நாதம் தீட்டப்பட்டுள்ளது. முப்புரி நூலானது மிகவும் நுண்ணியதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதுவே அதன் பழமைத் தன்மையையும் வெளிப்படுத்தி நிற்கின்றது எனலாம். தும்பிக்கையின் நடுப்பாகத்தில் மலர் மாலையொன்று தொங்குவது போல் செதுக்கப்பட்டுள்ளது. விநாயகரின் தோட்பட்டையில் தீட்டப்பட்டுள்ள வீரக் கழல் போன்ற ஆபரண அமைப்பின் தன்மை அதனைப் பழமை வாய்ந்த ஒரு சிற்பக் கலை மரபுக்குரியதாகக் கொள்ளலாம். நிச்சயமாக இச் சிற்ப அமைதியில் பிற்காலச் சோழப் பண்பாட்டுக்குரிய பண்புகளைக் காண முடியா விட்டாலும், பிற்பட்ட பாண்டியக் கலைப் பாணிக்குரிய அம்சங்களைக் காண முடிகின்றது. அவ்வகையில் கி. பி. 14 ஆம் நூற்றாண்டுக்குரிய சிற்ப லட்சணங்களை இவ் விநாயகர் சிற்பம் கொண்டுள்ளது என்று குறிப்பிடக் கூடியதாகவுள்ளது.

## சண்டேஸ்வரர் சிற்பம் அல்லது ஐயனார் சிற்பம் : [24]

இருக்கின்ற நிலையில் செதுக்கப்பட்டுள்ள இச் சிறிய சிற்பமானது நிலைக்குத்தாக மடிக்கப்பட்ட நிலையில் வலது பாதத்தினையும், பக்கவாட்டாக மடிக்கப்பட்ட நிலையில் இடது பாதத்தினையும் கொண்டுள்ளது. இடது பாதமானது பக்கவாட்டாக மடிக்கப்பட்ட நிலையில் வயிற்றுப் பாகத்தில் அமைந்துள்ள ஞாபியைத் தொட்டிருக்கவில்லை. சிற்பக் கலையில் இவ்வாறான இருக்கை நிலையானது உடலின் அரைப்பாகத்தினை மடிக்கப்பட்ட காற்பகுதி உள்ளடக்கியிருக்குமாறு செய்யப்படுவதே மரபாகும். அத்தகைய ஓரம்சம் இச் சிற்பத்தில் மீறப்பட்டுள்ளது.

இச்சிற்பத்தின் ஆடை, ஆபரணக் கலைமுறையைத் தெளிவாகக் காணமுடியாதுள்ளது. இம் மூர்த்தமானது வேட்டி அல்லது தோத்தியினை கொண்டுள்ளது என்பதனை மடிக்கப்பட்ட பாதங்களிலுள்ள சுருக்கங்களில் இருந்தே அறிய முடிகின்றது. குந்தியிருக்கின்ற நிலையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இச் சிலையின்மேல் வஸ்திர அலங்கார முறைகளைக் காண முடியவில்லை. இருந்தும் ஆபரணங்கள் அணிந்துள்ளமைக்கான அடையாளங்களைக் காண முடிகின்றது. அவை பெருமளவுக்கு வரைவுகளாகவே (Linear Crafts) காணப்படுகின்றன.

கழுத்தினையொட்டி இரு வரைபுருவங்கள் காணப்படுகின்றன. இவை ஒருவேளை அட்டியலை நினைவு கூர வைக்கலாம். இதற்கு மேற்புறமாக இரு நீண்ட வரை புருவங்கள் ஞாபிவரைக்கும் நீண்டு காணப்படுகின்றன. இது நீண்ட ஆபரணமொன்றின் வடிவமாகவும் உள்ளது. கழுத்தின்கண் உள்ள அட்டியல் போன்ற ஆபரணத்திற்கும், இந்நீண்ட ஆபரணத்திற்குமிடையே பதக்கமும். வச்சுராயுதமும் தீட்டப்பட்டுள்ளன. நெஞ்சுப்பாகத்தில் தீட்டப்பட்டுள்ள இவ் வச்சுராயுதம் ஒருவேளை இம் மூர்த்தத்தினை அடையாளம் காண்பதற்கு உதவுவதாகலாம்.

மகுடம் மூன்று புரிகளையுடைய கரண்டமாகவுள்ளது. மகுடத்தின் கீழ்ப்பாகத்திலிருந்து கேசம் வெளிப்பட்டுள்ளது. வெளிப்பட்ட கேசத்தின் அமைப்பானது இருகாதுகளுக்கும் பின்புறமாக சுருள் சுருளாக அமைக்கப்பட்டுள்ளது. காதுகள் தெளிவாக வெளிப்படுத்தப்படாது இருப்பினும் அதன் கோட்டு வரைமுறையிலிருந்து அதன் அமைப்பினையும், அதில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மகரகுண்டலங்களையும் அடையாளம் காணக்கூடியதாகவுள்ளது.

கரங்களை நோக்கும் பொழுது வலது கரத்தில் பரசு என்ற படைகலனும், இடது கரம் நேராக தொங்கவிடப்பட்டுள்ளமையினையும் காணலாம். ஆனால் தொங்கவிடப்பட்டுள்ள அக்கரத்தின் புறங்கைப்பாகம் வெளியே தெரியுமாறு அது அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இடது கரத்தில் ருத்திராட்சமாலை ஒன்றும் அணிவிக்கப்பட்டுக் காணப்படுகிறது. இந் நிலையில் இச்சிற்பத்தினை ஒரு காவற் தெய்வமாகவே சிலர் அடையாளம் கண்டுள்ளனர்.

காதில் அமைந்துள்ள மகரகுண்டலத்திலிருந்தும், நெஞ்சில் காணப்படுகின்ற வச்சிராயுத அமைப்பிலிருந்தும் இச்சிற்பத்தினைப் பரசுராமர்சிலை என அடையாளம் காணமுடிவதும் நோக்கத்தக்கது. பொதுவாக ஐயனார்சிலை பரசினை வலது கரத்தில் கொண்டுள்ள



நிலையில் சித்தரிக்கப்படினும், காதில் மகர குண்டலங்களையோ அல்லது நெஞ்சில் வச்சிரவடித்தினையோ கொண்டிருப்பதில்லை. அந்த இரு அம்சங்களையும் பரசுராமர் சிலைகளிலேயே தென்னிந்தியா பொறுத்துக் காணமுடிகிறது. அவ்வகையில் வலது பாதத்தில் சதங்கை அணிந்த நிலையில் யாழ்ப்பாண அரும்பொருளகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள இச் சிறிய, வெண்மணியுருக் கொண்ட கருங்கல்லினால் ஆன சிற்பமானது ஒரு சிறிய பரசுராமர் சிலையாகக் கொள்வதற்கும் வழி கொண்டுள்ளது.

## யமுனாரியிலிருந்து மீட்கப்பட்ட அம்மன் சிலை[25]

1957ம் ஆண்டில் யாழ்ப்பாண மாநகரசபையினர் யமுனாரியை ஆழமாக்கி, சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்ட பொழுது மரத்தினால் செய்யப்பட்ட இவ்வம்மன் சிலை கிடைத்தது. இலுப்பை மரத்தினாலான இச் சிற்பமானது 'யமுனா' என்ற பெண்பாற் பெயருக்குரிய ஏரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பவமானது வரலாற்று ரீதியில் முக்கியம் வாய்ந்ததாக இருந்தபொழுதிலும், அதன் சிற்பக்கலையம்சங்களை நோக்கும் பொழுது அதன் உருவாக்கமானது மிகவும் பிற்பட்ட காலத்துக்குரியதென்பது தெளிவாகின்றது. மரத்தினாலான பீடத்துடன் கூடிய இவ்வம்மன் சிலையை, ஊறு பட்டதன் காரணமாக வழிபாட்டு நிலைகளிலிருந்து விலக்கி, இவ் வேரிக்குள் இட்டிருப்பர்.

பேராசிரியர் சிவசாமி குறிப்பிட்டது போன்று இச் சிலையானது பழமையற்றதாயினும், கலைப்படைப்பு என்ற ரீதியில் எழில் வாய்ந்ததாக விளங்குவதனைக் காணலாம். நான்கு திருக்கரங்களில் பின் மேல், வலது இடது திருக்கரங்கள் முறையே பாசத்தினையும், (ஒரு வேளை ருத்திராட்ச மாலையாகவும் இருக்கலாம்.) தாமரை மொட்டினையும், தாங்கியிருக்க முன் வலது – இடது கரங்கள் முறையே அபய, வரத ஹஸ்தங்களாக அமைந்திருப்பதனையும் காண முடிகின்றது. இந் நான்கு திருக்கரங்களின் உள்ளங்கைகளிலும் சுவஸ்திகா சின்னம் மிகவும் அலங்காரப்படுத்தப்பட்ட நிலையில் பொறிக்கப்பட்டிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது.

கழுத்தாபரணங்கள் மிகவும் தெளிவாகவும், கலைநுட்ப ரீதியாகவும் தீட்டப்பட்டிருப்பது இங்கு கவரக்கூடிய அம்சமாகவுள்ளது. மார்புப் பதக்கத்துடன் இணைந்த கழுத்துச்சங்கிலியின் அமைப்பு மிகவும் லாவகமாகவுள்ளது. தோட்பட்டையிலும், இடுப்பிலும் அலங்காரப்படுத்தப்பட்ட ஆபரணங்கள் காணப்படுகின்றன.

ஆடையின் வெளிப்பாடானது மரத் தொழிற்பாட்டுக்குரிய ரீதியில் மிகவும் கச்சிதமாக அமைந்துள்ளது. மூற்கொய்யும் முறையில் அம்மனுக்குரிய ஆடையமைப்பு இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாதத்தினுடைய அமைப்பானது எகிப்திய சிற்பங்களில் காணப்படுகின்ற தன்மையை ஒத்ததாகவுள்ளது. அவ்வகையில் நிற்கின்ற நிலையில் அமைந்த இச்சிற்பத்தின் பாதமானது பீடத்துடன் ஒட்டியுள்ள நிலைபோன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தத்தில் இவ்வம்மன் சிலையானது கட்டையான தோற்றத்தினை வெளிப்படுத்தும் நிலையில் கலைவனப்பு மிக்கதாக உருவகிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடலாம்.

# அத்தியாயம் ஆறு

# யாழ்ப்பாணமும் சாசனவியலும்

ஈழத்தமிழரது வரலாற்றுக் கட்டுமானத்திற்கு அடிப்படையாகத் தேவைப்படுவது சாசனச் சான்றுகளே. இலங்கையைப் பொறுத்தமட்டில் சாசனவியல் ஆய்வுகள் இன்னும் தொடக்க நிலையிலேயே இருந்து கொண்டிருப்பதன் காரணத்தினால் வரலாற்று எழுத்தியலுக்கு விஞ்ஞான அடிப்படையில் அதனைப் பயன்படுத்துகின்ற பண்பு உருவாகவில்லை. இந்நிலையில் ஈழத்தில் தமிழ்ச்சாசனவியல் வரலாறானது பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் முயற்சிகளுடனேயே தோற்றுவிக்கப்பட்ட நிலையில் பேராசிரியர் வேலுப்பிள்ளை, பேராசிரியர் இந்திரபாலா ஆகியோர்களுடைய ஆக்கபூர்வமான முயற்சிகளுடன் உருப்பெற்றுக் கொண்டமையைக் காணமுடிகிறது. இருந்தும் அத்துறையை வளர்த்தெடுத்துச் செல்லும் வழியை (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டு ஒரு கால் நூற்றாண்டாகியும்) எவருமே உருவாக்கிக் கொடுக்க முன்வராமல் இருந்து கொண்டிருப்பது மிகவும் வேதனைப்பட வைக்கும் ஒரு விடயமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சாசனக் கண்டுபிடிப்புக்கள் மிகவும் குறைவாகவே நிகழ்த்தப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் இத்துறையில் ஆர்வம் காட்டும் ஆய்வாளர் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதெனலாம்; அல்லது இப் பிராந்தியத்தின் இயற்கையமைப்பு எண்ணிக்கை

யில் கூடுதலான சாசனங்கள் உருவாவதற்குத் தடையாக அமைந்திருக்கக் கூடும். இதற்கும் மேலாக, அந்நியர் ஆட்சிக்கால யாழ்ப்பாணத்தில் குறிப்பாக போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோர்களது ஆட்சிக்காலங்களின்போது இப் பிராந்தியத்தில் காணப்பட்ட சாசனப் பதிவுகள் அழிக்கப்பட்டிருக்கலாம். பொதுவாக போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் சாசனப்பதிவேடுகளை தாம் அமைத்த கோட்டைச் சுவர்களுக்கும் அத்திவாரங்களுக்குள்ளும் இட்டு மறைத்துவிடுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். என்று கூறப்படுகின்றது.[1]

பேராசிரியர் கா. இந்திரபாலாவின் தனிப்பட்ட முயற்சி காரணமாக யாழ்ப்பாணத்துச் சாசனங்கள் பற்றிய ஆய்வு புத்தூக்கம் பெற்றிருந்தது. சாசனவியற்துறையில் இவர் பல கண்டு பிடிப்புக்களையும், பதிப்புக்களையும் தொல்லியல் வரலாற்று நோக்கில் மேற்கொண்டிருந்தமையைக் காணலாம். தமிழ்ச் சாசனங்களின் முக்கியத்துவத்தினை வெளியுலகிற்கு தெரியப்படுத்துவதற்கான நோக்கில் எபிகிரபியா தமிழிக்கா (Epigraphia Tamilica) என்ற சாசனவியற் பதிவேடொன்றினையும் ஆரம்பித்து வைத்தார். இதுவரையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற் கண்டு பிடிக்கப்பெற்ற தமிழ்ச் சாசனங்களைப் பற்றிய தகவல்களை இப்பதிவேட்டிலிருந்தும், பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்திருந்த சிந்தனை என்ற சஞ்சிகையில் தொடர்ச்சியாக வெளிவந்த அவரது 'யாழ்ப்பாணத்துக் கல்வெட்டுக்கள்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்துமே அறிந்துகொள்ள முடிகின்றது பேராசிரியர் இந்திரபாலா தமிழ்ச் சாசனங்களை உள்ளடக்கிய தனது இரண்டாவது தொகுப்பினை (Ephigraphia Tamilica, Vol II) அச்சிடுவதற்கு ஆயத்தமாகிய நிலையில் தனது பல்கலைக்கழக சேவையை விட்டு நீங்கி, வெளிநாடு சென்றமை எமது சமூகத்திற்கு ஏற்பட்ட இழப்புக்களில் ஒன்றாக அமைந்தது. சாசனவியற் துறையில் அவரது சேவையைத் தொடர்வதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எவருமே உருவாக்கப்படாமல் இருக்கின்றமையும் எமது துர்ரதிஷ்டமேயெனலாம்.

யாழ்ப்பாணத்தில் கிடைத்துள்ள தமிழ்ச் சாசனங்கள் யாவும் பிற்பட்ட சோழர் காலத்திற்குரியனவாகவும், சில அதற்கும் பிற்பட்டனவாகவும் காணப்படுகின்றன. இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ள சோழர் காலத் தமிழ்ச் சாசனங்களைப் பற்றிய தகவல்களை எபிகிரபியா தமிழிக்கா என்ற சாசனப் பதிவேட்டிலிருந்தும், அச்சாசனங்கள் தொடர்பாக வார ஏடுகளில் வெளிவந்திருந்த கட்டுரைத் தொகுப்புக்களில் இருந்துமே பெற்றுக் கொள்ள முடிகிறது. அவை யாழ்ப்பாணப் பண்பாட்டு வரலாற்றுக் கட்டுமானத்திற்கு உரிய வரலாற்று மூலகங்களாகவும் அமைகின்றன. அவ்வகையில் ஊர்காவற்



றுறை கடற் கோட்டையிலிருந்து மீட்கப்பட்ட இரண்டு சாசனங்கள் அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள தேனீர்க்கடை வாசலில் கண்டுபிடிக்கப்பட்ட சாசனமொன்று, பின்னர் நயினார்தீவிற் கண்டு பிடிக்கப்பட்ட சாசனமொன்றும் இறுதியாக உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவிலிலிருந்தும், நாயன்மார்க்கட்டுப் பிள்ளையார் கோவிலிலிருந்தும் கண்டு பிக்கப்பட்ட சாசனங்களும் கள்ளியங் காட்டுச் செப்பேட்டுச் சாசனமும்இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

## ஊர்காவற்றுறைக் கல்வெட்டுக்கள்: [2]

ஊர்காவற்றுறை கடற்கோட்டையிலிருந்து இக் கல்வெட்டுக்களை முதன்முதலில் கண்டுபிடித்தவர் திரு. ஹேபட்கெனமன் என்பவராவர். இக் கல்வெட்டுக்களைத் தாங்கிய கற்றூண்கள் அக்கோட்டையின் வடகிழக்குப் பக்க மதிலில் அடித்தளத்திலிருந்து 11 அடி உயரத்தில் வைத்துக் கட்டப்பட்டிருந்தது. 1968ல் இலங்கைத் தொல்பொருளாய்வுப் பகுதியினரால் அக் கற்றூண்கள் அங்கிருந்து அகற்றப்பட்டு, அவற்றின் மைப் பிரதி எடுக்கப்பட்டு பதியப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1969, ஏப்ரலில் பேராசிரியர் இந்திரபாலாவினால் தெளிவான முறையில் மைப் பிரதி எடுக்கப்பட்டு, சாசனம் வாசிக்கப்பட்டது. அதன் பின்னர் அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தினை 'எபிகிரபியா தமிழிக்கா' என்னும் சாசனப் பதிவுச் சஞ்சிகையில் முதலாவதாக எழுதி வெளியிட்டிருந்தார்.

வைரமான சுண்ணக் கற்றூணில் இச் சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டு பக்கங்களில் பொறிப்புக்களைக் கொண்ட இச் சாசனம் தனித்தனியான சாசன வாசகத்தினை உள்ளடக்கியுள்ளது.

இச்சாசனம் பொறிக்கப்பட்ட காலத்தில் அத்தூண் வாயிற்படியில் கதவு நிலைக்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் அதனைக் கருத இடமுண்டு. அதன் நீளம் 37 அங்குலங்களாகும். சாசனம் பொறிக்கப்பட்ட கற்பரப்பின் அகலம் 8 அங்குலங்களாகும்.

இந்திரபாலா இச் சாசனங்களை மாதோட்டம் – ஊர்காவற்றுறைக் கல்வெட்டுக்கள் எனப் பெயரிட்டுள்ளார். அவரது கருத்தின் பிரகாரம் இது மாதோட்டத்திலிருந்து கடல் வழியாக ஹமென்ஹில் கோட்டைக்கு கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும் என்பதும், இதனை ஒரு கல்வெட்டின் உட்பொருளைக்கொண்டு அறியக்கூடியதாக உள்ளது எனவும், 'இதனாலேதான் இக் கல்வெட்டுக்களை மாதோட்டம் – ஊர்காவற்றுறைக் கல்வெட்டுக்கள் என குறிப்பிட்டுள்ளேன்' எனவும் அவர் கொள்வதனைக் காணலாம்.[3]

இக் கல்வெட்டில் இரண்டு பக்கங்களிலும் சாசனவாசகம் காணப்பட்டிருந்த பொழுதிலும், முதலில் ஒருபக்க வாசகத்தினையே இந்திரபாலா வாசித்திருந்தார் (1969 – 04 – 16). மற்றப்பக்கத்தில் காணப்பட்ட சாசனவாசகம் சுண்ணச்சாந்தினால் பெருமளவுக்கு மூடப்பட்டிருந்தமை காரணமாக முதலிரு வரிகளையே அவரால் வாசிக்க முடிந்திருந்தது. பின்னர் 1978ல் சுண்ணச் சாந்தினை நீக்கி சாசன வாசகத்தினை வாசித்து அதன் முழுமையான வரலாற்று முக்கியத்துவத்தினையும் வெளிப்படுத்தினார். அப்பகுதியை மைப் பிரதி எடுக்காமலேயே வாசிக்க முடிந்திருந்தது என்பதனை அவர் மேலும் குறிப்பிட்டதிலிருந்து அச் சாசன வாசகம் மிகவும் தெளிவாக இருந்தது என்பதும் புலனாகின்றது.

## வரிவடிவம்:

இவ்விருபக்கப் பொறிப்புக்களிலும் வரிவடிவமானது கிரந்தமும் தமிழும் கலந்தமுறையில் பொறிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். பொறிப்பில் காணப்படுகின்ற மொழிநடையானது பிற்பட்ட சோழர் காலத்துக்குரிய சாசனத் தமிழ் மரபாக உள்ளது. இவ்விரு பக்கப் பொறிப்புக்களின் பொருளையும், சாசனம் பதியப்பட்டதிற்கான நோக்கத்தினையும் பூரணமாக அறிந்து கொள்வதற்குத் தடையாகயிருப்பது அக் கல்லின் எஞ்சிய அடிப்பாகம் கிடைக்காமையே. எனினும் இவ்விருபக்க சாசனப் பதிவுகளில் சில முக்கியமான வரலாற்றுத் தகவல்களை அறிந்து கொள்ள முடிகின்றது. என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சாசனத்தின் பாடப்பிரதி:

*1ம் பக்கம்:*

ஸ்வஸ்தி ஸ்ரீ ஈழமுழுவதுங்
கொண்டு ஈழத்தரைசரையும்
பெண்டிர் பண்டாரமும்
பிடிச்சுக் கொடுபோன அதிகாரத்
தண்ட நாசகனார் ஐயங்கொண்ட
சோழ மூவேந்த வேளாளன்
மாதொட்டமான இராசராசபுர......

*2ம் பக்கம்:*

ஸ்வஸ்தி ஸ்ரீ ஈழமானமும்
முடிச்சோழமண்டலத்து
பாண்டியன் குலதனமாக



வைத்த முடியும் ஈழத்
தரையர் தம் முடியும்
ஆங்கவன் தேவி முடியும்
பெண்டிர் பண்டாரமும்
பிடிச்சுக் கொடுபோன அதிகாரத்
தண்ட நாயகன் ........

முதலாம் பக்கத்தில் உள்ள சாசனப் பதிவில் முதல் 17 வரிகள் மட்டுமே காணப்படுகின்றன. இரண்டாம் பக்கத்தில் முதல் 18 வரிகள் மட்டும் கிடைத்துள்ளன. இச்சாசனப் பதிவின் கீழ்ப்பாகம் உடைந்திருக்கக்கூடும் அல்லது மிகுதிப்பதிவு வேறோருகல்லில் பதியப்பட்டிருக்கக் கூடும் என சந்தேகிக்கப்படுகிறது. எனவே இரு பக்கப் பதிவுகளிலும் வரிகள் முற்றுப்பெறாதவொரு நிலையில் உள்ளன என்பதனை உணரலாம்.

இவ்விருபக்கச் சாசனப் பதிவுகளை நோக்கும் பொழுது முதலில் வாசிக்கப்பட்டதே முதலிற் பொறிக்கப்பட்டது என்பதும் மற்றது சிறிது காலம் பிந்திப் பொறிக்கப்பட்டிருந்தது என்பதும் தெளிவாகின்றது. இதனை அப் பதிவுகளின் பொருளமைதியிலிருந்து உணர்ந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது. இவ்விருபக்கச்சாசனப் பதிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு இக் கல்வெட்டின் முக்கியத்துவத்தினை நோக்க வேண்டும். இராசேந்திர சோழ மன்னனது ஆட்சிக் காலத்தின் போது சோழப்படைகள் இலங்கை மீது போர்ப்பிரகடனம் செய்து, அக்காலத்தில் இலங்கையின் அரசனாக விளங்கிய ஐந்தாவது மகிந்தனையும் அவனுடைய அரசியையும், மற்றும் அரச செல்வங்களையும் கவர்ந்து கொண்டு சென்ற வரலாற்றினை, மாதோட்டத்தில் கோயில் ஒன்றில் ஏற்படுத்தப்பட்ட தேவதானத்துடன் தொடர்பு பட்டமுறையில் எடுத்துக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'மாதோட்டத்தில் ஒரு கோயிலில் சோழர் தளபதியாகிய அதிகாரத் தண்ட நாசகனால் ஐய(ங்) கொண்ட (சோழ) மூவேந்த வேளாளர்' செய்து கொண்ட ஒரு காரியத்தைக் குறிப்பிடுவதற்கே இக்கல்வெட்டுப் பொறிக்கப்பட்டது என்று ஊகிப்பதற்கு இடமுண்டு.[4]

சூளவம்சத்திற் கூறப்பட்ட செய்திகள், முதலாம் ராசேந்திரனின் கரந்தைச் செப்பேடு, கோணேரிராஜபுரத்திலுள்ள ராசேந்திரனின் 7ம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஆகியவற்றுடன் ஒப்பிட்டு இச் சாசனத்தின் செய்தியை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. சாசனத்தின் இரண்டாம் பக்கத்திலுள்ள பாடப்

பிரதியை உறுதிப்படுத்தும் வகையில் சூளவம்சத்தில் இடம்பெறும் வாசகத்தினை இந்திரபாலா பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றார்.

'......(ஈழத்து) மன்னனுடைய 36வது ஆட்சியாண்டிலே சோழர் (மன்னனுடைய) மஹிஷயையும், (மன்னன்) முதுசொமாக்கப் பெற்றிருந்த இரத்தினங்களையும், முடியையும், (அரச குடும்பத்தின்) ஆபரணங்கள் அனைத்தையும் தெய்வங்கள் அளித்த பரிசாகிய விலை மதிக்கமுடியாத வைரக்காப்பினையும் பின்னர் மன்னனையும், தாம் பெற்ற செல்வங்கள் அனைத்தையும் உடனடியாகச் சோழ மன்னனிடம் அனுப்பி வைத்தனர்.[5] ....'

சூளவம்சத்தில் கூறப்பட்டுள்ள இப்பகுதியை சாசனப்பகுதியுடன் குறிப்பாக பிந்தி வாசிக்கப்பட்ட சாசனப் பாடப் பிரதியுடன் ஒப்பிட்டு நோக்கும்பொழுது அவை இரண்டும் பெருமளவுக்கு ஒத்திருப்பதனைக் காணலாம். எனவே சூளவம்சம் குறிப்பிட்டுள்ள இச்செய்தியானது பெருமளவுக்கு வரலாற்று உண்மைமிக்கது என்பதனை தமிழ்நாட்டில் கிடைத்துள்ள இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்தியுடன் ஒப்பிட்டும் அறிந்துகொள்ள முடிகின்றது.

......'பொருகடல் ஈழத்தரசர் தம்முடியும்
ஆங்கவர் தேவியரோங்
கெழின் முடியும் முன்னவர்
பக்கல் தென்னவர்
வைத்த சுந்தரமுடியும்
இந்திரனாரமுந் தெண்டிரை
ஈழமண்டல முழுவதுங் .....'

1ம் இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்திப் பாகமாக நீண்டு செல்கின்றது.[6]

இவ்வாறாக ஊர்காவற்றுறைக் கல்வெட்டுக்களினால் இராசேந்திர சோழனுடைய இலங்கைப் படையெடுப்பும் (1014) அப்படையெடுப்பானது அவனது தளபதியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டது என்பதும் தெளிவாகின்றது. இதுவரை காலமும் இலங்கை மீதான சோழர்களுடைய போர்ப் பிரகடனத்தைப் பற்றி, சூளவம்சம் கொடுத்த தகவலை, தென்னிந்தியச் சாசனங்களே உறுதிப்படுத்தின. ஆனால் ஹமன்ஹில் கோட்டைச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் அந்நிலை மாறி, முதன்முதலாக அக்கூற்றினை இலங்கையில் அதுவும் ஈழத்தமிழரின் நிலப்பரப்பிற்குள் கிடைத்த சாசனமொன்றினால் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பேற்பட்டது எனலாம்.



## யாழ்ப்பாணக் கோட்டைச் சாசனம்:[7]

யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் கண்டுபிடிக்கப்பெற்று வெளிப்படுத்தப்பட்ட சோழருடைய சாசனங்களில் யாழ்ப்பாணக் கோட்டைச் சாசனமும் ஒன்றாகும். இச்சாசனம் யாழ்ப்பாணக் கோட்டையின் பிரதான வாயிலின் உட்புறத்தில், கழிவுநீர் வாய்க்காலுக்குக் குறுக்கே வைத்துக் கட்டப்பட்டிருந்தது. இதனை பேராசிரியர் இந்திரபாலா 1970, ஏப்ரல், 14ம் திகதி மேற்கொண்டிருந்த மேலாய்வின்பொழுது கண்டுபிடித்து, அதன் மைப்பிரதியையும் எடுத்துக் கொண்டிருந்தார். இன்று யாழ்ப்பாணம் தொல்லியல் அரும்பொருளகத்தில் காணப்படும் இச்சாசனம், எபிகிரபியா தமிழிக்காவில் 10வது சாசனமாகப் பதியப்பட்டுள்ளது.

வைரமான சுண்ணக்கல்லில் பொறிக்கப்பட்ட இச்சாசனமானது 5 அடி 10 அங்குலங்கள் நீளத்தினையும், 8½ அங்குலங்கள் பக்கங்களின் அகலத்தினையுடையதாகவுமுள்ளது. நான்கு பக்கங்களில் இருபக்கப் பரப்பிலேயே சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது.

### வரிவடிவம்:

இரு பக்கப் பரப்பில் பொறிக்கப்பட்ட இச்சாசனமானது கிரந்தம், தமிழ் ஆகிய வரிவடிவங்களினால் பதிவு செய்யப்பட்டுள்ளது. சாசனத்தின் மொழி சோழர் காலத்திற்குரிய தமிழாகும். வரிவடிவத்துக்குரிய வளர்ச்சி நிலை கி. பி 11ம் நூற்றாண்டினைச் சேர்ந்ததாகவுள்ளது. சமகாலத்தில் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருந்த தமிழ் மொழியின் இலக்கண வரம்புகள் சோழர் சாசனத் தமிழ் மரபிலும் பின்பற்றப்பட்டிருந்தமையை ஒத்து, ஈழத்தில் யாழ்ப்பாணத்திலும் அம்மரபு பின்பற்றப்பட்டிருந்தமைக்கு இச்சாசனம் சிறந்த எடுத்துக்காட்டு எனலாம்.

### சாசனத்தின் பாடப் பிரதி:

இந்திரபாலா இச்சாசனத்தின் பாடப் பிரதியை இரண்டாக வகுத்து, வாசித்து எபிகிரபியா தமிழிக்காவில் பதிப்பித்துள்ளார். அதில் 'A' பாகம் 44 வரிகளையுடையதாகவுள்ளது. அது ஒரு மெய்க் கீர்த்திப் பாகமாகவும் உள்ளது. இம் மெய்க்கீர்த்திப் பாகம் பெருமளவுக்கு சேதமடைந்திருந்ததன் காரணமாக அதனை நேரடியாக வாசிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. ஆனால் அதிஷ்டவசமாக அச்சாசனம் 'திருமன்னி வளர' எனத் தொடங்கும் முதலாம் இராசேந்திர சோழனுக்குரிய மெய்க்கீர்த்திப் பாகமாக விளங்கிய

படியால் சிதைவுபட்ட அப் பகுதியை பூரணப்படுத்துவதற்கு தமிழகத்தில் கிடைத்த அம் மன்னனது சாசனங்களை ஆதாரமாகக் கொள்ள முடிந்தது.[8]

இச் சாசனத்தின் 'A' பாகத்தின் முக்கியத்துவம் என்னவெனில் தமிழகத்தில் முதலாம் இராசேந்திரனின் ஆட்சிக் காலத்தில் வெளிடப்பட்டிருந்த 'திருமன்னி வளர' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி வகையை உறுதிப்படுத்தும் வகையில் மணிபல்லவத்தில் (யாழ்ப்பாணத்தில்) கிடைத்த ஒரேயொரு சாசனம் இதுவாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வெளியே இவனது மெய்கீர்த்திச் சாசனங்கள் பல கிடைத்துள்ளன. பொலநறுவையில் உள்ள 2ம் சிவ தேவாலயம் (வானவன் மாதேவி ஈஸ்வரம்), பொலநறுவையிலுள்ள வட்டதாகே திருகோணமலைக் கோட்டை, பெரிய குளம் ஆகிய இடங்களில் முதலாம் இராசேந்திரனின் இம் மெய்க்கீர்த்திச் சாசனங்கள் காணப்பட்டன.[9]

'B' சாசனப்பகுதியே எமது பிரதேசம் பொறுத்து வரலாற்று அடிப்படையில் முக்கியத்துவமானதொன்றாகவுள்ளது. இங்கு சில வரிகளே பேணப்பட்டுள்ளபொழுதிலும், அவற்றிலிருந்து அச் சாசனம் பதியப்பட்டதற்கான நோக்கத்தினை அறியமுடிகின்றது. இப் பகுதி அரசனின் ஆட்சியாண்டுடனும், ஆட்சியாளனின் பெயருடனும் ஆரம்பிக்கின்றது. 29 வரிகளையே கொண்டு காணப்படும் இச் சாசனப் பகுதியின் பதிவு நோக்கம் குறிப்பிட்ட ஒரு கோயிலுக்கு கொடுத்த தானச் செய்தியைப் பதிவு செய்வதாகவே உள்ளது.

தானம் கொடுத்தவருடைய பெயர் இப்பகுதியில் இறுதியில் 'சாத்தன்' எனக் கொடுக்கப்பட்டுள்ளது. தானம் கொடுக்கப்பட்ட பொருள் 'சாவா முவா' (ப்பேராடு) என்பதாகும். இச்சாசனம் பொறிக்கப்பட்ட சமகால தமிழகத்திலும், அதனுடன் தொடர்புடையதாகவிருந்த பிரதேசங்களிலும் கோவில்களுக்கு வழங்கப்பட்ட தானங்களுள் ஆடுகள், மாடுகள், எருமைகள் முதலியனவும் உள்ளடங்கும். அவற்றைப் பற்றிச் சாசனங்களில் குறிப்பிடும் பொழுது 'சாவாமூவா' என அடைமொழி வழங்கி பதிவு செய்வது சாசன வழக்காக அமைந்தது.

கோவில்களுக்கு இவ்வகையான தானங்களை வழங்கும் நோக்கம் அவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நெய்யினால் திருவிளக்கிடுவதற்கு ஆகும். இச்சாசனத்தில் (நல்) லூரான... (ஒரு கோவிலுக்கு) அத்தகைய தானம் வழங்கப்பட்ட செய்தியை பதிவு செய்துள்ளமை இப் பிரதேசத்தின் பண்பாட்டு வரலாற்றுக்கு உதவுவதாக உள்ளது.



'சாவாமூவா' என்ற தொடரின் பொருளானது குறையாதது என்பதாகும். கோவிலின் பொறுப்பில் கையளிக்கப்படுகின்ற ஆடுகள் தம்மினத்தினை தொடர்ந்து பெருக்கிக்கொள்ளும் என்ற பொருளிலேயே 'சாவாமூவா' என்ற சொற்பதம் சாசனங்களில் பொறிக்கப்பட்டது என சாசனவியலாளர் குறிப்பிடுவர்.[10]

## யாழ்ப்பாணம் கோட்டைச் சாசனத்தின் பாடப்பிரதி:

1. பக்கம் '4'

1 - 9 (திருமன்னிவளர
இரு நிலமடந்தையும்
போர்ச்சயப் பாவையும்
சீர் தனிச் செல்வியும்
தன் பெருந் தேவியராகி
யின்புற நெடியலூ ழியுள்
இடைதுறை)
10. (ந) ாடும் தொடர்வன
11. (வே) வலிப் படர்வன
12. (வ) ாசி (யும் சுள்ளி)
13. (ச்) சூள் (ம) திற் (கொ)
14, ள்ளிப் (பாக்கையு)
15. (ம்) நன் (ணற்கருமர)
16. ன் (மண்ணைக்)
17. (ட) க்கமு (ம்பொருகடலீ)
18. ழத்தரை (சர் தம்முடியு)
19. (ம்) ஆங் (கவ) ர் (தே)
20. (வ) ய (ரோங்கெழி)
21. (ல்) முடி (யுமன்ன)
22. வர் பக்க (ல் தென்)
23. (ன) வர் (வைத்த சுந்)
24. தரமுடி (யுமிந்திர)
25. னாரமும் (தெண்டி)
26. றையீழ (மண்டல)
27. (மு)ழுவது (மெறிபடை)
28. (க்) கே (ரள) முறை
29. (மை) யி (ற்சூடுங்குல)
30 - 35. (தன (மாகிய பலர்
புகழ் முடியும் செங்கதிர்
மாலையும் செங்கதிர் வேலைத்
தொல்பெருங்காவற் பல்பழந்
தீவும் செரு) விருசி

36. (னைவியிறுபத்தொ) ருகா (ல)
37. (ர) சுகளை கட்ட பரசுராம
38. (ன்) மேவருந் சாந்திமத்
39. (தீ) வரன் கருதி (இரு)த் (தி)
40. (ய) செ (ச) ம் (பொற்றிருத்த) கு
41. (முடி) (யு) மாம்பொரு (தி) தண்
42. (டா) ற் கொண் (டகோப்) பரகே
43. (சரி) வ (ன்ம) ரா (னகோ)
விராஜெ
44. ந்திர (சொழ) த் (தெவருக்கு)

பக்கம் 'B'

1. யாண் (டு)......
2. உடையார் ஸ்ரீ (ரா)
3. ஜெ (ந்திர) சொழ செ (த)
4. வர்......
5. ழ (த் தெரி) ......
6. ......
7. ...... டவ (ண்) ......
8. ...... றுவ ......
9. ஈழ (ம) ான ......
10. ...... ஞ ......
11. ......
12. (நல்) லூர்......
13. த ......

14 – 18. ......

19. தி (ரு) வி (ள) க் ......
20. ...... க்கு வைத்த ......
21 ...... நெய் (யா) ......
22. (க்கிர னுக்கு (வை) ......
23. (த) சாவாமூவா ......
24. (பத்) து கி (வை) ......
25. (நெய்) யும் சந்திற் ......
26. (த்) தவர் செலுத் (தி)
27. ...... னேனிதை ......
28. ...... யினுடைய
29. ஆன சாத்தனே ......

'B' பகுதியில் உள்ள சாசனத்தின் பாடப் பிரதியை நோக்கும் பொழுது அங்கு நல்லூர் என்ற பெயருடன் தொடர்புபட்ட கோயில்



ஒன்றிற்கு தானம் வழங்கப்பட்ட செய்தி குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணலாம். பொதுவாக சோழப் பெருமன்னர்கள் தாம் அமைத்த சிவன் கோயில்களுக்கே இவ்வாறான தான வழக்கங்களை பின்பற்றி வந்திருந்தமை தெளிவாகும். அவ்வகையில் நல்லூரின் கண் அமைந்து காணப்பட்டிருந்த ஒரு சிவன் கோயிலுக்கே இச் சாவா மூவாப் பேராடுகளின் தானத்தை உறுதிப்படுத்தியிருந்தனர் என்பதனை இச் சாசனப் பகுதி மூலம் அறிய முடிகிறது. அவ்வாறாயின் நல்லூரின்கண் சோழ மன்னனால் அமைக்கப்பட்டிருந்த சிவாலயம் எது என்பது ஒரு பிரச்சினையாகின்றது. தற்போதைய நிலையில் நல்லூரின்கண் இரண்டு சிவன் கோயில்களைக் காண முடிகின்றது. ஒன்று சட்டநாதேஸ்வரர் கோயில்; மற்றது கைலாயநாதர் கோயில். இவற்றில் எது சோழர் காலத்துக்குரிய கோயில்? இது மேலும் விரிவான ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

சோழரால் அமைக்கப்பட்டிருந்த அச் சிவன் கோவில் (?) பின்னர் போத்துக்கீசரினாலோ அல்லது ஒல்லாந்தராலோ அழிக்கப்பட்டு அதன் மூலப் பொருட்களைக் கொண்டு யாழ்ப்பாணக் கோட்டையும் அப் பகுதியிலுள்ள குடியிருப்புக்களும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதனை சான்றுகள் மூலம் உறுதிப்படுத்த முடிகின்றது. அவ்வகையில் அக் கோட்டையில் சோழர்களுடைய அச் சாசனம் கிடைக்கப் பெற்றமையையும் குறிப்பிடலாம் திராவிட மரபில் அமைந்த கோயிற் தூண்கள், சிற்ப வடிவங்கள் பொறிக்கப்பட்ட பல கருங்கற்கள் என்பன இப் பிராந்தியத்திலுள்ள இடிபாடுகளின் மத்தியில் காணப்படுவது மேலும் அக் கருத்தினை உறுதிப்படுத்தி நிற்கின்றது.[11]

## யாழ்ப்பாணம் பிரதான வீதிக் கல்வெட்டு [12]

எபிகிரபியா தமிழிக்கா என்ற சாசனப் பதிவேட்டில் ஏழாவது சாசனமாக இடம்பெற்றுள்ள இக் கல்வெட்டு யாழ்ப்பாணம் பிரதான வீதிக் கல்வெட்டு எனப் பெயரிடப்பட்டுள்ளது. 'சென்ட்ரல் கபே' என்ற தேநீர்க்கடையின் வாசலில் படிக்கல்லாக நீண்ட காலமாக உபயோகிக்கப்பட்டு வந்த இச் சாசனத்தினை 1968 இல் தொல்லியல் ஆய்வுப் பகுதியினர் மீட்டெடுத்துக் கொடுத்தனர். இக் கல்வெட்டின் முதன்மைப் பிரதியை தொல்லியல் ஆய்வுப் பகுதியினர் 1968 செப்டெம்பர், 20ம் நாளில் எடுத்திருந்தனர். ஆனால் அம் மைப் பிரதி தெளிவற்ற நிலையில் காணப்பட்டதன் காரணமாக கா. இந்திரபாலாவினால் 1969, ஏப்பிரல், 16ம் நாளில் மீண்டும் ஒரு மைப் பிரதி எடுக்கப்பட்டது. அதன் அடிப்படையிலேயே இச் சாசனத்தின் முக்கியத்துவம் இங்கு ஆராயப்படுகிறது.

வைரமான வெண் சுண்ணக்கல்லில் பொறிக்கப்பட்ட இச் சாசனம் 5½ அடி நீளமும் 7 அங்குல அகலமுமுடையது. சாசனம் இடம் பெற்றுள்ள பகுதி ஒரு பக்கமாகவுள்ளது. பொறிக்கப்பட்ட சாசனப் பரப்பில் அடிக்கடி கால் மிதிபட்டதன் காரணமாக எழுத்துக்கள் மிகவும் சிதைவடைந்து காணப்படுகின்றன. இச் சாசனத்தில் 25 வரிகளுக்கு மேல் காணப்படுகின்ற போதிலும் ஏறத்தாள 15 வரிகளையே ஓரளவு வாசிக்க முடிந்துள்ளது.

சாசனத்தின் வரிவடிவம் கி. பி. 15ம் நூற்றாண்டுத் தமிழ் ஆகும். இச் சாசனத்தின் தொடக்கத்தில் 'ஸ்ரீ' என்ற மங்கல வாக்கியம் மட்டும் கிரந்த வரிவடிவில் பொறிக்கப்பட்டுள்ளது. இச் சாசனப் பொறிப்பின் தன்மையானது சோழர்களது சாசனப் பொறிப்பு முறையுடன் பெருமளவுக்கு ஒத்துக் காணப்படுவதனையும் அவதானிக்கலாம். இலங்கை ஆட்சி செய்த சிங்கள மன்னன் ஒருவனைப் பற்றியதாக இச் சாசனத்தின் பொருள் இடம்பெற்றுள்ளது. இச் சாசனத்தின் வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது:-

1. ஸ்ரீ சங்க
2. பொதிவ
3. (ர்) மரான
4. தி(ரு)புவ(ந)
5. (ச) சக்க(ற)
6. வத்திக(ள்)
7. சிறிபராக்
8. கிறமபா
9. கு தெவ
10. (ற்கு) யா
11. ண்டு.........
12. .........(ஆ)
13. வது(க்)
14. (குஏ) தி(ர)
15. (ா வது)......

இச் சாசனத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை ஆராய்வதற்கு ஏதுவாக அப் பொறிப்பு எமக்கு பாதுகாக்கப்பட்ட நிலையில் கிடைக்காது போனமை எமது துர்ரதிஷ்டமே. குறைந்த பட்ச நிலையில் அச் சாசனம் பொறிக்கப்பட்டதன் பொருளைக் கூட அறிந்து கொள்ள முடியவில்லை. இருந்தும் இக் கல்வெட்டினைப் பொறிப்பித்த மனனனைப் பற்றி பேராசிரியர் இந்திரபாலா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.



'இக் கல்வெட்டிலே குறிப்பிட்டுள்ள மன்னன் ஸ்ரீ சங்கபோதி வர்மரான திரிபுவநச் சக்கரவர்த்திகள் சிறி பராக்கிரமபாகு தேவர் என்பவனாவான். இம் மன்னனை அடையாளம் கண்டு கொள்வதிலே பிரச்சினைகள் இல்லை. பராக்கிரமபாகு என்ற பெயரைத் தாங்கிய பல மன்னர்கள் இலங்கையிலே ஆட்சி புரிந்திருந்தாலும் 12ம் நூற்றாண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் செலுத்திய பராக்கிரமபாகு ஒருவன் மட்டுமே. இவன் ஆறாம் பராக்கிரமபாகு ஆவான். எங்களுடைய கல்டெட்டின் எழுத்து நிச்சயமாக பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு மிகவும் பிற்பட்டது. ஆகவே இக் கல்வெட்டிலே குறிப்பிடப்பட்டுள்ளவன் 15 ம் நூற்றாண்டிலே யாழ்பாணத்திலும் ஆதிக்கம் செலுத்திய 6ம் பராக்கிரமபாகு ஆவான்'[13]

இக் கல்வெட்டானது கூடுதலாகச் சிதைந்திருக்கின்ற காரணத்தினால் பராக்கிரமபாகுவின் எந்த ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டது என்பதனையும் கண்டு கொள்ள முடியாதிருக்கின்றது. ஆனால் இம் மன்னன் கோட்டையை (ஸ்ரீ ஜயவர்த்தனபுரத்தினை) தலைநகராகக் கொண்டு கி. பி. 1412க்கும் 1467க்கும் இடைப்பட்ட 55 வருட காலத்தில் ஆட்சி புரிந்திருந்தான் என்பதனை அறியலாம். வரலாற்று இலக்கியங்களின்படி இம் மன்னன் தனது 36ம் ஆட்சியாண்டின் பின்னரேயே யாழ்ப்பாண இராச்சியத்துடனான தொடர்புகளை மேற்கொண்டிருந்தான் என்பதனையும் அறிய முடிகிறது. இப் பின்னணியில் இந்திரபாலா, இக் கல்வெட்டானது 6ம் பராக்கிரமபாகுவின் 36ம் ஆட்சியாண்டாகிய கி. பி. 1448க்கும் அவன் இறந்த ஆண்டாகிய 1467க்கும் இடைப்பட்ட காலத்தில் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

இச் சாசனத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை ஆராயும் பொழுது நேரடியான தகவல்களைக் கொடுக்கமுடியாதிருப்பினும். சூசகமாக சில விடயங்களை குறிப்பிட்டுச் சொல்ல முடிகிறது.

6ம் பராக்கிரமபாகுவின் யாழ்ப்பாணத் தொடர்புகளில், அவனது வளர்ப்பு மகன் எனக் கூறப்படும் சபுமால் குமரய்யன் அல்லது செண்பகப் பெருமான் எனக் குறிப்பிடப்படும் புவனேகபாகு தொடர்புற்றிருந்தான் எனக் கூறப்படுகிறது. சிறிது காலம் செண்பகப் பெருமானினால் நல்லூர் வெற்றிகொள்ளப்பட்டு 6ம் பராக்கிரமபாகுவின் பிரதிநிதியாக யாழ்ப்பாண இராச்சியம் ஆளப்பட்டு வந்தது என்பதனையும் கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை போன்ற இலக்

கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. இக் கட்டத்திலேயே நல்லூரில் உள்ள முருகன் ஆலயத்தினை இப் புவனேகபாகு கட்டுவித்தான் என யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுவதனை. நல்லூர் முருகன் கோவிற் கட்டியம் உறுதிப்படுத்துகின்றது.[14] இன்றுவரை நல்லூர் கந்தசுவாமி கோவிற் கட்டியத்தில் புவனேகபாகுவின் பெயர் இடம் பெற்றுக்கொண்டு வருவது யாழ்ப்பாண வரலாற்றில் மிகச் சுவையான ஓரம்சமாக உள்ளது எனலாம்.

(சிங்கள மன்னன் ஒருவனின் பிரதிநிதி, அவனால் வெற்றி கொள்ளப்பட்ட பிரதேசத்தில் போதிமாதவனுக்கு கோயிலை அமைப்பதற்குப் பதிலாக கந்தவேளுக்கு ஒரு கோயில் அமைத்தான் என்றால், நல்லூரின் வரலாற்றுப் பின்னணியில் இந்துத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் வலிமையான நீண்ட செல்வாக்கே அடிப்படைக் காரணமாக இருந்திருக்க வேண்டும். எனவே இச் சாசனத்தினூடே எதிர்காலத்தில் அவ் வரலாறு ஆராயப்பட வேண்டும். இந்நகரை மையமாகக்கொண்ட யாழ்ப்பாண இராச்சியம் இந்துப் பண்பாட்டுப் பகைப்புலம் என்பதும் இதனூடாக நிறுவ முடியும்.)

## நயினாதீவுக் கல்வெட்டு:

நயினாதீவில் உள்ள நாகபூஷணி அம்மன் ஆலயத்தினுள்ளே உள்ள ஒரு கற்பலகையில் இச் சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது. இச் சாசனப் பொறிப்பின் கற்பலகை 3 அடி 11 அங்குல நீளமும், மேற் பகுதியில் 1 அடி 7 அங்குல அகலமும், கீழ்ப்பக்கத்தில் 2 அடி 4 அங்குல அகலமுடையது. கற்பலகையின் இரு பக்கங்களிலும் சாசனப் பொறிப்பு இடம்பெற்றுள்ளது.

## வரிவடிவமும் மொழியும்:

இக் கல்வெட்டு கிரந்தத்தினையும் தமிழையும் வரிவடிவமாகக் கொண்டுள்ளது. சாசனத்தின் முக்கியமான பகுதி தமிழ் வரிவடிவிலும், இறுதி இரண்டு வரிகள் சமஸ்கிருத வரிவடிவிலும் அமைக்கப்பட்டுள்ளது. இச் சாசனத்தின் வரிவடிவ அமைப்பினைக் கொண்டு அதனை கி. பி. 12ம் நூற்றாண்டுக்குரியதாகக் கொள்வர்.[15]

இலங்கைத் தொல்பொருட் திணைக்களத்தினர் 1949ல் இச்சாசனத்தின் மைப்பிரதி ஒன்றை எடுத்தனர். இதற்கும் முன்னர் முதலியார் சி. இராசநாயகம் 1926ல் இச் சாசனத்தின் பாடப்பிரதியை தனது Anc ent Jaffna என்ற நூலில் அடிக்குறிப்பாகக் கொடுத்துள்ளார்.[16] அப் பாடப்பிரதி பின்வருமாறு:-

''ஊராத்துறையிற் பரதேசிகள் வந்து இருக்க
வேணுமென்றும் இவர்கள் ரஷைப்பட வேணுமென்றும்



பு(து) துறைகளில் பரதேசிகள் வந்த(ாலித்) துறையிே(ல)
சந்திக்க (ே)வணுமென்றும் நா(வாய)ஆணை
குதிரையொடு(ம்) பண்டார சேவைக்கு
ஆனை குதிரை கொடு வந்த மரக்கலங்
கெட்டதுண்டாகில் நாலத்தொன்று பண்ட(ா)ரத்துக்கு
கொண்டு மூன்று கூறும் (உ)டையவனுக்கு
விடக்கடவதாகவும் – வாணிய மரக்கலங் கெட்டதுண்டாகில்
செம் பாகம் பண்டாரத்துக் கொண்டு
செம்பாகம் உடையவனுக்கு விடக் கடவதாகவும்
இவ் வயவஸதை தித்து தனையுங் கல்லிலுஞ்
செம்பிலும் எழுத்து வெட்டுவித்து இவ் வியவஸ்தை
செய்து கொடுத்து தேவ பராக்கிரம பூஜோ''

பேராசிரியர் கா. இந்திரபாலா 1949ல் தொல்பொருட் திணைக்களத்தினரால் எடுத்த மைப்பிரதியை வைத்து பதிப்பித்த இச் சாசனத்தின் பாடப் பிரதி பின்வருமாறு:-[17]

1. ............... நாங்கள் ...............
2. ............. வந்து ஊராத்துறை
3. (யில்) பரதெசிகள் வந்து
4. இருக்க வெணுமென்றும்
5. அவர்கள் ரஷைப்பட்டு
6. வணுமென்றும் பல து ை
7. ற களில் பரதெசிகள் வந்து நந்து
8. றையி(ெ)ல கூட வெணுமென்று
9. (ம்) நாம் ஆனை குதிரை மெல் ஸ்நெஹ
10. (மு) ண்டாதலால் நமக்கு ஆனை குதிரை
11. கொடு வந்த மரக்கலங் கெட்டது
12. ண்டாகில் நாலத் தொன்று பண்டா
13. (ர) த்துக்குக் கொண்டு மூன்று கூறும்
14. (உ) டையவனுக்கு விடக் கடவதாகவு
15. (ம்) வாணிய மரக்கலங் கெட்டதுண்
16. டாகில் செம் பாகம் பண்டாரத்துக்
17. (கு)க் கொண்டு செம்பாகம் உடைய
18. (வ)னுக்கு விடக்கடவதாகவும் இவ்
19. வவஸ்தை (ரு)ள்ளதனையுங்க
20. ல்லிலுந் செம்பிலும் எழுத்து வெ
21. ட்டி வித்து இவ் வவஸ்தை செய்துங்கு
22. டுத்து .. ....... கு
23,

இவ்விரு பாடப் பிரதிகளிலும் பலவேறுபாடுகள் இருப்பதனை ஒப்பிட்டு நோக்கும் பொழுது உணர முடிகிறது. குறிப்பாக முதலி

யார் இராசநாயகம் தவறாக இச் சாசனத்தின் பாடப் பிரதியை பதிவு செய்துள்ளார் என்பதனை பிற்பட்ட சாசனப் பாடப் பிரதியை நோக்கும் பொழுது தெளிவாகிறது. இந்திரபாலா இதனை நன்கு சுட்டிக் காட்டியுள்ளார். 'உதாரணமாக, 'பல' என்பது 'புது' என்றும் (வரி–6). வந்து நந்துறை என்பது 'வந்தால் இத்துறை' என்றும் (வரி–6–7) 'கூட' என்பது 'சந்திக்க' என்றும் (வரி–8) 'நாம்' என்பது 'நாவாய்' என்றும் 'மெல் ஸ்நெஹம் உண்டாதலால்' என்பது 'ஓடும் பண்டார செவைக்கு' என்றும் (வரி 16–17), 'வவ்ஸ்தை' என்பது 'வயவஸ்தை' என்றும் (வரி 19, 21), 'செய்துங்குடுத்து' என்பது 'செய்து கொடுத்து' என்றும் (வரி 21), கொடுக்கப் பட்டுள்ளன. மேலும் சில சமஸ்கிருதச் சொற்கள் அவருடைய பிரதியிலே விடப்பட்டுள்ளன.[18]

இக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டதன் பிரதான நோக்கம் அச் சாசனப் பகுதியிலிருந்து தெளிவாகத் தெரிகிறது- 'இக் கல்வெட்டு அக்காலத்தில் பிறநாட்டு வர்த்தகர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சில வசதிகளையும் சுங்க ஒழுங்குகளையும் எடுத்துக் கூறுகின்றது. பிற நாட்டு வர்த்தகர்கள் இதிலே பரதெசிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். இவ் வர்த்தகர்கள் யானை, குதிரை போன்ற மிருகங்களையும் வாணிபப் பொருட்களையும் ஏற்றிவந்தனர் என்பது இக் கல்வெட்டாலே தெரியவருகின்றது. மன்னனுக்கு யானை, குதிரை ஆகியனவற்றைக் கொண்டு வந்த மரக்கலங்கள் சேதமடைந்து கரையை அடைந்தால், அவை கொண்டுவந்த மிருகங்களுள் நாலில் ஒரு பங்கு மன்னனுடைய பண்டாரத்துக்கும் (திறை சேரிக்கும்) எஞ்சிய பங்கு மரக்கலச் சொந்தக்காரருக்கும் செல்ல வேண்டும் எனவும், பிற வாணிபப் பொருட்களை ஏற்றிவந்த மரக்கலங்கள் சேதமடைந்தால் அவற்றின் பொருட்களுள் அரைப்பங்கு பண்டாரத்துக்கும் அரைப்பங்கு சொந்தக்காரருக்கும் செல்ல வேண்டும் எனவும் விதிக்கப் பட்டிருந்தது.'[19]

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இக் கல்வெட்டினைப் பொறிப்பதற்கு ஆணை வழங்கிய மன்னனின் பெயரையும் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது. இதனை இச் சாசனத்தின் 22 ஆம் 23 ஆம் வரிகளில் இடம்பெற்றுள்ள சமஸ்கிருத மொழிப் பதிவிலிருந்து, 'சகல சிங்களச் சக்கரவர்த்தியாகிய தேவ பராக்கிரமபாகு' என அறியமுடிகிறது. சாசனத்தின் வரிவடிவ அமைப்பில் அது கி. பி. 1ı ஆம அல்லது 12 ஆம் நூற்றாண்டுக்குரியது என்பதனைக் கண்டு கொள்ளலாம். அவ்வாறாயின் இக் காலப்பகுதியில் பொலனறுவையில் இருந்து அரசு செய்த மன்னர்களுள் மூவருக்கு 'தேவ பராக்கிரமபாகு' என்ற விருதுப் பெயர் வழங்கியமையையும் கண்டு



கொள்ளலாம். இவர்களுள் எவர் இச்சாசனப் பதிவுக்குரியவர் என்பது இப்பொழுது ஆராய்வுக்குரியதாகின்றது.

நயினாதீவு 'நாகபூசணியம்மன் கோவிலினுள் காணப்படுகின்ற இக் கல்வெட்டுக்குரிய மன்னன் யார் என்பது தொடர்பாக இந்திரபாலா குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கது. 'இக் காலப்பகுதியில் பராக்கிரமபாகு என்ற பெயரைத் தாங்கிய மூன்று மன்னர்கள் ஆட்சி புரிததனர். (1) முதலாம் மகா பராக்கிரமபாகு, (2) பராக்கிரமபாகு நிஸங்க மல்லன், (3) இரண்டாம் பராக்கிரமபாகு என்போராவர். இவர்களுள் 2ம் பராக்கிரமபாகு வட இலங்கையில் ஆட்சி புரியவில்லை. ஆகவே அவனுடைய கல்வெட்டாக இருக்க முடியாது...... எனினும் 1ம் பராக்கிரமபாகுவே ஊர்காவற்றுறையில் பலவகைப்பட்ட முயற்சிகளிலே ஈடுபட்டவன். அவனுடைய கடற்படைத் தளங்களுள் ஒன்றாக ஊர்காவற்றுறை விளங்கியது என்பது தமிழ்நாட்டுக் கல்வெட்டு ஒன்றால் (திருவாலங்காட்டு கல்வெட்டில்) அறிய முடிகிறது. மேலும் 1ம் பராக்கிரமபாகு வெளிநாடுகளுடன் அரசாங்கம் நடாத்திய வர்த்தகத்தை நன்கு ஒழுங்குபடுத்தி வெளிநாட்டு வர்த்தகத்திலே அக்கறை காட்டியிருந்தான் என்பதனை நம்மால் அறிய முடிகிறது ................. பராக்கிரமபாகு நிஸங்கமல்லனாக இருந்தால் தனிப்பட்ட பராக்கிரம என்ற பெயரை மட்டும் விளங்குவது கஷ்டம். ஆகவே நயினாதீவுக் கல்வெட்டு 1ம் பராக்கிரமபாகுவினுடையது என்ற முடிவினையே ஏற்கவேண்டியுள்ளது.[20]

இக் கல்வெட்டில் குறிக்கப்பட்ட ஊராத்துறை பற்றி இந்திரபாலா விளக்கம் கொடுக்கும்பொழுது அதனை தற்காலத்தில் ஊர்காவற்றுறை என அழைக்கப்படும் இடத்துடன் அடையாளம் காண்கின்றார். சூளவம்சத்தில் இப் பெயரானது 'ஊராத் தொட' அல்லது 'ஸூராத்தொட' என குறிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் விளக்குகின்றார். அதன் பொருள் 'பன்றித்துறை' என்பதாகும். அவ்வாறாயின் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் காணப்படும் 'ஊர்காவற்றுறை' என்ற இடப்பெயர் தொடர்பாக எம்மால் என்ன விளக்கத்தினை கொடுக்க முடியும்.[21]

இச் சாசனத்தின் வரலாற்று முக்கியத்துவத்தில் இலங்கையுடன் தொடர்புபட்டிருந்த வர்த்தக முயற்சி பற்றிய வரைவு தெளிவாக உள்ளது. குறிப்பாக 1ம் பராக்கிரமபாகு காலத்தில் இலங்கைக்கு யானைகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன என்ற கூற்றினை இக் கல்வெட்டு உறுதிப்படுத்தி நிற்கின்றதெனலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள் காணப்படும் யானைப்பந்தி, ஆனைவிழுந்தான் சந்தி, யானையிறவு, ஆனைக்கோட்டை. கலிகை (கரியச்) சந்தி (கரி-யானை) போன்ற இடப்பெயர்களும் ஒருவேளை இவ் ஆனை வர்த்தகத்துடன் தொடர்புபட்டவையாகலாம்.

## உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவிற் கல்வெட்டு[22]

இணுவில் கிராமத்தின் கிழக்கு எல்லையாக விளங்கும் உரும்பிராய், வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு தலமாவுள்ளது. இங்கு அமைந்துள்ள கருணாகரப் பிள்ளையார் கோவிலிலே அதற்குக் காரணம் என்பது கர்ணபரம்பரைக் கதைகளினால் தெரியவருகின்றது. கருணாகரத் தொண்டமான் என்பவன் இலங்கையை வென்றபோது உரும்பிராயில் உள்ள பிள்ளையார் கோவிலைத் திருத்தியமைத்தான் அல்லது கட்டினான் என்பது பொதுவான ஐதீகமாகும்.

யாழ்ப்பாண வைபவமாலையில் இணுவில் கருணாகரப் பிள்ளையார் கோவில் கட்டப்பட்ட வரலாறு கூறப்பட்டுள்ளதைக் காணலாம். அக் கூற்றானது இக் கோவிற் கல்வெட்டு ஒன்றினால் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும், கி. பி. 1567ல் அக் கல்வெட்டு அங்கு வைக்கப்பட்டது எனவும் முதலியார் இராசநாயகம் குறிப்பிட்டுள்ளார். இக் கல்வெட்டினை மைப்பிரதியெடுக்க ஆரம்பத்தில் இந்திரபாலா முயன்றபொழுது கோயில் அர்ச்சகர் அனுமதி கொடுக்கவில்லை. பின்னர் 1970 பெப்ரவரி 28ம் நாள் கருணாகரப் பிள்ளையார் கோவிற் கல்வெட்டினை அவர் மைப்பிரதியெடுத்தார். அதன் மூலம் அக் கல்வெட்டு மிகவும் சிதைந்த நிலையில் இருப்பதனை அறிந்துகொள்ள முடிந்தது.

ஒரு தூணின் உடைந்த பாகத்திலே ஐந்து பக்கங்களில் எழுத்துக்கள் காணப்பட்டன. மேற்பாகத்தில் இருந்த இரண்டாவது கல்வெட்டின் எழுத்துக்கள் ஏனையவற்றைவிட பிற்பட்ட காலத்தாகும். இவ்வெழுத்தக்களாவன:–[23]

1. திருச்சிற்றம்பலம்
2. பண்டார
3. த் தன்ம(ம்)
4. உடமை
5. ப் பணம் ரு

இவற்றுடன் ஒரு திருச்சூலமும் பொறிக்கப்பட்டிருந்தால் இந்திரபாலா இதனை ஒரு திருச்சூலக்கல் எனக் குறிப்பிட்டுள்ளார். கல்லின் ஏனைய பாகங்களில் உள்ள எழுத்துக்கள் அனைத்தும் ஒரு தனிச் சாசனத்தினைச் சேர்ந்தவையாக உள்ளன. 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற மங்கல வாக்கியத்துடன் ஆரம்பமாகும் இச்சாசனம் 'பிறபவ' ஆண்டில் பொறிக்கப்பட்டதாகத் தோன்றுகின்றது. இவ்வாண்டினை கி. பி. 1567 என இந்திரபாலா குறிப்பிடுகின்றார்.[24]

### முதலாவது கல்வெட்டின் வாசகம்[25]

| | பக்கம் – 1 | பக்கம் – 2 | பக்கம் – 3 | பக்கம் – 4 |
|---|---|---|---|---|
| 01. | ஸ்வஸ்தி | சகா(த்)தம் | ..................... ... | ... ........................ |
| 02. | ..... பிறபவ | தருஷம் சித் | (திரை) ................ | ............................ |
| 03. | ..................... ........ | (த...டப) ..... | ன ........................ | ............................ |
| 04. | ............................ | (ற்ற . வா . வூர) | (னாரு)ம் ............... | ............................ |
| 05. | ..................... ... | ந்தத் திருச்(சூ) | ல ........................ | ............................ |
| 06. | ........ ................... | (கண அடி)தெ | ாழு(ம்) .. லம் | ............................ |
| 07 | ..................... ........ | (ம்பொ)னம்ப | லம்ப(னை) .... | ........ .. .................. |
| 08. | லன் (பென்) ........ .. | .. .. அழகி நினை | வியும் .... (ரும்) | ..... (ரும்செ) |
| 09 | (ய்) தது இந்தப்ப | (டி)சந்திராதித் தண | வரையும் நடக்க | கடவதாகவும் |
| 10. | இந்த தன்மத் | தை யாதா மொ | ருவர் பொல்லா | ங்கு நிலைத்தவ |
| 11 | ர்கள் கொங்கை (க்) | (க)ரையிலெ கொவ | தை செய்த பாவம் | பெறக்கடவதாகவும் |

தமிழ்மொழியில் பொறிக்கப்பட்ட இக் கல்வெட்டுக்களின் வரி வடிவமானது 15ம் அல்லது 16ம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தது எனக் குறிப்பிடலாம். இவற்றுள் முதலாவது கல்வெட்டின் வரி வடிவமே காலத்தால் முற்பட்டது என இந்திரபாலா கருதுகின்றார். மேலும் அவர் குறிப்பிடும்பொழுது 'இக் கல்வெட்டு, கோயிலுக்குச் செய்யப்பட்ட தர்மம் ஒன்றை பதிவு செய்வதற்காக எழுதப்பட்டது என்பது தெளிவு எனினும் இத் தர்மம் என்ன என்பதனை திட்ட வட்டமாக அறிய முடியவில்லை. கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட தூண் ஒரு திரிசூலக் கல்லாக இருந்ததினாலும், கல்வெட்டிலே '(இ)ந்தத் திரிசூல ' என்ற வாசகம் வருகின்றமையினாலும், இத் தர்மம், கோயிலுக்கு வழங்கப்பட்ட ஒரு நிலத்தானமாகும் என ஊகிக்கலாம், சைவக் கோயில்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தானங் களின் எல்லைக் கல்லாகவே திரிசூலக் கற்கள் நாட்டப்பட்டன. கோயிலின் பெயரும் எமது கல்வெட்டில் தெளிவாக இல்லை. ஆனால் முதலியார் இராசநாயகத்தின் குறிப்பின்படி, 'கருணாகரப் பிள்ளை யார் கோவில்' என்ற குறிப்பு இதிலே வருகின்றது என விளக்கு கின்றார்.[26]

இக் கல்வெட்டின் ஒரு சிறப்பியல்பினையும் அவதானிக்க முடி கிறது. அதாவது கல்வெட்டுகளின் இறுதியில் வரும் 'ஓம் படைக் கிளவி' என அழைக்கப்படும் பாகமாகும். அது இக் கல்வெட்டில் 'இந்தப்படி சந்திராதித்த வரையும் நடக்கக் கடவதாகவும், இந்தத் தன்மத்தை யாதாமொருவர் பொல்லாங்கு நினைத்தவர்கள் கொங் கைக் கரையிலே கோவதை செய்த பாவம் பெறக் கடதாகவும்' என்று இடம்பெற்றுள்ளது. கள்ளியங்காட்டில் கிடைத்த செப்பேடு களில் கிடைத்த ஓம்படைக் கிளவியுடன் இதனை மேலும் ஒப்பிட்டு ஆராய்வது பொருத்தமாக அமையும்.

## நாயன்மார்கட்டு சிங்கையாரியன் கல்வெட்டு [27]

'யாழ்ப்பாண இராச்சியம்' என்ற மத்தியகால இறைபுலத்தின் தலைநகர் மையம் என்று இற்றைவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட் டுள்ள நல்லூரில் யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆண்ட சிங்கையாரிய னைக் குறிப்பிடும் ஒரு கல்வெட்டுக் கிடைத்திருப்பது வரலாற்றில் ஆர்வமூட்டும் ஒரு செய்தியாகும்.

யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆண்ட எந்தவொரு மன்ன னைச் சுட்டியாவது யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் கல்வெட்டுக்கள் எதுவும் இதற்கு முன் வெளிப்படவில்லை. 1979ல் நல்லூரைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் மேலாய்வு ஒன்றினை மேற்கொண்டு வருகையில் இக் கல்வெட்டினை முதன்முதலாக ஆராய முடிந்தது.



நாயன்மார்கட்டிலுள்ள கனகரத்தினம் வீதியிலிருந்து செல்லும் நாயன்மார் வீதிக்குத் தெற்கே சுமார் 200 யார் தொலைவில் அமைந்துள்ள அரசடி விநாயகர் கோவிலில் இக் கல்வெட்டுக் கிடைத் தது. அது நல்ல நிலையில் பேணப்பட்டும் உள்ளது. (தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரும்பொருளகத்தில் பாதுகாக்கப் பட்டுள்ளது.)

இந்த விநாயகர் கோயிலுக்கு முன்பாக உள்ள திருக்குளத்தினை ஆழமாக்கும் முயற்சியில் 1942ல் யாழ்ப்பாண மாநகர சபையினர் ஈடுபட்டிருந்த பொழுது இச் சாசனம் அக் குளத்தின் மத்தியிலிருந்து மீட்கப்பட்டது என அறிய முடிகிறது. இச் செய்தி ஏற்கனவே 'இந்து சாதனத்தில்' வெளிவந்திருந்தும் கூட அதன் வரலாற்று முக்கி யத்துவம் எடுத்துக்காட்டப்பட்டிருக்கவில்லை.

இரண்டு அடி நீளமும் $1\frac{1}{2}$ அடி அகலமுமுடைய வெண் வைரக் கல்லில் இச் சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது. சாசனப் பதிவு தமிழ் வரிவடிவில் அமைந்துள்ளது. ஐந்து வரிகளைக் கொண்ட இச் சாசனப் பதிவு, பிள்ளையார் சுழியுடன் ஆரம்பிக்கின்றது. இச் சாசனத்தின் பாடப் பிரதி பின்வருமாறு:–[28]

உ
கலி கூ உருல்
தீர்தங் கொடுக்க
சிங்கையாரியனால்
அமைகப்பெற்றது

இலங்கையில் சிங்கையாரியர் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுக் களுள் இதனை இரண்டாவதாகக் கொள்ளலாம். (முதல் கல்வெட்டு கேகாலை மாவட்டத்தில் 'கொட்டகம' என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. கொட்டகமக் கல்வெட்டு கி. பி. 14ம் 15ம் நூற் றாண்டுக்குரியதென்று கொள்ளப்படுகின்றது.) இச் சாசனத்தின காலத்தைப் பற்றிப் பேராசிரியர் கா. இந்திரபாலா தெரிவித்த கருத் தாவது:–

> ''இக் கல்வெட்டு கலி 3025 இல் நடைபெற்றதாக ஒரு சம்ப சம்பவத்தினைக் குறிப்பிடுகின்றது. கலி 3025 என்பது கி. மு. 76ம் ஆண்டைக் குறிப்பதாகும். சாசனத்தின் எழுத்தோ கிறிஸ்துவுக் குப் பிற்பட்ட 14ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனக் கூற முடியாது. சிங்கையாரியருடைய காலமும் கிறிஸ்துவுக்கு முற் பட்டதன்று. ஆகவே இதிலே கொடுக்கப்பட்ட ஆண்டிலே ஏதோ தவறுண்டு. யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியுறு முன்னர் 14ம் அல்லது 15ம் நூற்றாண்டில் இது பொறிக்கப்பட்டிருக்கலாம்''[29]

இக் கல்வெட்டிற் குறிப்பிடப்படும் மன்னனை யார் என அடையாளம் கண்டு கொள்வது மிகவும் கஷ்டமாகவுள்ளது. ஏனெனில் சிங்கையாரியன் என்பது பொதுவாக யாழ்ப்பாணத்தினை ஆட்சி புரிந்த மன்னர்கள் சூடிக் கொண்ட பொதுப் பெயராக விருதுப் பெயராக இருந்தமையினாலாகும். யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமலை போன்ற பழைய யாழ்ப்பாணத்து நூல்களில் சிங்கையாரியர் என்ற ஒருவன் தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து அரசு புரிந்துள்ளான் எனக் கூறப்பட்டுள்ளது. எனினும் அவனுக்குப் பின்னர் ஆட்சி புரிந்த பல யாழ்ப்பாண மன்னர்கள் சிங்கையாரியன் என்ற பெயரை வம்சப் பெயரைப் போன்று பயன்படுத்தியுள்ளார்கள். உதாரணமாக குலசேகர சிங்கையாரியன், வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்ட சிங்கையாரியன் போன்ற பெயர்களைக் காணலாம். இக் காரணத்தினால் இப்படியான மன்னர்களுள் எவனை எங்கள் கல்வெட்டு குறிப்பிடுகின்றது எனக் கொள்வது பிரச்சினையை ஏற்படுத்தும் பிரச்சினை எதுவாக இருந்தாலும் யாழ்ப்பாண வைபவமாலை போன்ற இலக்கிய ஆதாரங்களிலே சிங்கையாரியர்கள் எனக் குறிப்பிட்டுள்ள யாழ்ப்பாண மன்னர்கள் பற்றிய வரலாறு வெறும் கற்பனையாகாது என்பதனை கல்வெட்டுக்களாலும் உறுதிப்படுத்த முடிகிறது.

புனித தீர்த்த நிலையங்களிலிருந்து நீரினை எடுத்துச் சென்று தாம் புதிதாதக அமைத்த கேணிகள், திருக்குளங்கள் ஆகியவற்றிலே கலந்து புனித தீர்த்தங்களின் பெயர்களை சூட்டுவது மரபாக இருந்து வந்தமையினை வரலாற்றில் காண முடிகின்றது. முதலாம் இராசேந்திர சோழன் கங்கை வரை படையெடுத்துச் சென்று கங்கை நீரைக் கொணர்ந்து கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு தடாகத்தினை அமைத்தான் என்பதனை சாசனங்கள் வாயிலாக அறிய முடிகின்றது[30] இதே போன்று நல்லூரில் உள்ள சங்கிலியன் தோப்பில் அமைந்து காணப்படும் 'யமுனாரி' எனப்படும் இயமுனா ஏரியும் வட இந்தியாவிலுள்ள யமுனா நதியின் தீர்த்தங் கொண்டு உருவாக்கப்பட்டது என்று யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. அதனையொத்த ஒரு வகையிலேயே நாயன்மார்க்கட்டு அரசடிப் பிள்ளையார் கோவிற் திருக்குளம் அமைக்கப் பெற்றிருக்கலாம் என்பதனை அச்சாசன வாசகம் எடுத்துக் காட்டுகின்றது. அல்லது சுவாமி தீர்த்தமாடுவதற்கான கட்டிடத்தினை குளத்தின் நடுவே சிங்கையாரிய மன்னன் அமைத்திருக்கலாம். இவ்வகையில் சிங்கையாரியன் பற்றிய இக் கல்வெட்டானது யாழ்ப்பாண வரலாற்றிற்கு இன்றியமையாததாகவுள்ளது.



## Foot notes and References :

## அடிக்குறிப்புகளும் உசாத்துணை நூல்களும்;

### Chapter – One


1. Liam De Paor; 1969, **Archaeology,** an illustrated introduction, Penguin Series, G. Britain.
2. Coles, John 1973, **Archaeology by Experiment,** Hutchinson & Co. Ltd, London.
3. Wilson David; 1975, **Science and Archaeology** Penguin Series. G. Britain.
4. Fowler, Peter J.: 1977, **Approaches to Archaeology** A&C Black Limited, London.
5. Hodder, Ian; 1986, **Reading the Past** Current approaches to interpritation in Archaeology, Uni. of Cambridge, U, K,
6. Shanks, Mihcael & Tilly Christoper; 1987, **Social Theory and Archaeology** Polity Press, Cambridge, U. K.
7. Shennan, S.J. (Ed), 1979, **Archaeological Approaches to Cultural Identity,** Unwin Hymn Ltd, London.
8. Rao, S. R.; 1994, **New Fronters of Archaeology** Popular Prakashant Pvt, Ltd, Bumbay.
9. Greene, Kevin: 1996, **Archaeology; an Introdoctio** B. T. Batsford Ltd, London.


### Chapter – Two

1) இதே கருத்தினை கலாநிதி ரகுபதி தனது ஆய்வு நூல் ஒன்றி குறிப்பிட்டுள்ளமையும் நோக்கத்தக்கது. See: **Tamil Soci Formation in SriLanka: Historical Outline,** Institute Research and Development, Madras 1986.

2) "...... பரராசசிங்க முதலி இறந்த பின் பறங்கிக்காரர் தாம் இடிக்காமல் விட்டிருந்த ஆலயமெல்லாவற்றையும் இடித்தார்கள். அப்பொழுது பரதபாணி என்னும் பிராமணன் கீரிமலைச்சாரலில் உள்ள தேவாலயங்களின் தட்டுமுட்டுச் சாமான்களையும் விக்கிரஹங்களையும் கிணற்றிற் போட்டு மூடிவைத்தான். கந்தசுவாமி கோவிலின் பணிவிடைக்காரனாயிருந்த பண்டாரம் அத்திசையில் ஆலயங்களின் சம்பவங்களைக் கொண்ட செப்புப் பட்டயத்தை எடுத்துக் கொண்டு மட்டக்களப்புக்கு ஓடினான் " யாழ்ப்பாண வைபவமாலை, குல - சபாநாதன் பதிப்பு, பக் 80 — 81

3) சுன்னாகம் — கந்தரோடையில் இவ்வாறான செயல்கள் பல நிகழ்ந்துள்ளன. கந்தரோடையில் சில வருடங்களுக்கு முன்னர் கிணறு தோண்டப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் கிடைத்த புராதன ஆபரணத் தொகுதி ஒன்று சுன்னாகத்திலுள்ள தங்க வியாபாரி ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்ட சம்பவம் இங்கு குறிப்பிடத்தக்கது.

குறிப்பிடத்தக்க இரண்டாவது சம்பவம்: நீள்வட்டமான மஞ்சள் வர்ணத்திலமைந்த சந்திரகாந்தக்கல் ஒன்றில் ரிஷபம் ஒன்று முன்னங்காலினை மடக்கிப் படுத்திருப்பது போன்ற உருவம் புடைப்புச் சிற்பமுறையில் செதுக்கப்பட்ட நிலையில் கந்தரோடையில் ஒருவருக்குக் கிடைத்துள்ளது. அவர் அதனைத் தனது வெள்ளியிலான மோதிரத்தில் பதித்து அணிந்து கொண்டுள்ளார். இது மிகவும் வரலாற்றுப் பெறுமதி வாய்ந்தது என்பதனை இந்நூலின் ஆசிரியர் பல முறையும் அவருக்கு உணர்த்தியும் அது பயனளிக்கவில்லை.

மூன்றாவது சம்பவம்: பொலிகண்டி என்னுமிடத்திலுள்ள ஏழுபுளியடி என்ற மையம் வரலாற்றுத் தொன்மைமிக்கது. இற்றைக்கு பத்து வருடங்கட்கு முன்னர் தங்கத்திலான தலைமுடி ஒன்று தற்செயலாக அகழ்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் அதனை உடனேயே மறைத்து விட்டார்கள்.

நான்காவது சம்பவம்: புங்குடுதீவு பானாவோடையிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட வெண் சலவைக்கல்லினாலான (Marble) அழகிய அமராவதிப் புத்தர் படிமம் ஒன்று உடனேயே தூள் - தூளாக்கப்பட்டு அத்திவாரத்தினுள் இட்டு மறைக்கப்பட்ட செய்தியும் வருத்தம் தருவதாக உள்ளது.

அண்மைக் காலங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரும்பொருளகத்தில் பேராசிரியர் இந்திரபாலாவினாலும் பேராசிரியர் சிவசாமியினாலும் இந்நூலின் ஆசிரியராலும் காலகாலமாகச்



சேகரித்த பொருட்கள் யாவும் முதலில் I. P. K. F. இனாலும் பின்பு இலங்கை இராணுவத்தினராலும் அழித்தொழிக்கப்பட்ட செய்தியையும் வரலாற்றாசிரியன் என்ற வகையில் இங்கு பதிவு செய்தாக வேண்டும்.

4) அமெரிக்கப் பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த அரும்பொருளகக் காப்பாளர் Vimala Begley தலைமையில் 1970ல் கந்தாரோடையில் விஞ்ஞானபூர்வமான அகழ்வாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. See: Expedition: 9 (4) Summer, 1967 "Archaeological Exploration in Northern Ceylon"

5) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினர் 1980ல் கா. இந்திரபாலாவைத் தலைமையாகக் கொண்டு ஆனைக்கோட்டையில் உள்ள கரையாம்பிட்டி என்னும் பெருங் கற்கால ஈமத்தலமொன்றில் அகழ்வாய்வினை மேற்கொண்டிருந்தனர். கலாநிதி P. ரகுபதியின் Ph D. ஆய்வின் ஒருபகுதியாகவே ஆனைக்கோட்டை அகழ்வு மேற்கொள்ளப்பட்டது. (இந்நூலின் ஆசிரியர் பிரதான புகைப்படப்பிடிப்பாளராக அங்கு கடமை ஆற்றினார்.)

6) இந்திரபாலா, கா., 'யாழ்ப்பாணத்தில் தொல்பொருளாராட்சி இளவேனில் (ஆண்டுமலர்), 1970)

7) Kathiresu, S., **A Hand book of the Jaffna Peninsula** 1905, P. 2

8) சிவசாமி, V., **தீவகம் ஒரு வரலாற்று நோக்கு**, 1990, ப. 2

9) Pillai, K. K., **A Social History of the Tamils**, Vol I, 1975, PP. 46 — 49.

10) மேற்படி. P.12

11) கிருஷ்ணராசா, செ., மாதோட்டம் ஒரு தொல்பொருட் களஞ்சியம், வீரகேசரி (வாரமலர்) P, 5, 08 - 06 - 1980

12. பேராசிரியர் கா, இந்திரபாலா வகுப்பறைக் கற்பித்தலின் போது நிகழ்ந்த ஒரு விரிவுரையில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். (1979)

13. Ratnagar, S.; **Encounters** 'The Westerly Trade of the Harappa Civilization.' 1981, PP. 138 - 140 and PP. 106 - 108,

14. U. P. I. News Service, "Maldives and Indus valley" **The Hindu**, March 15, 1985.

15. Mahadevan, Ilavatham: 'Rare coins of Jaffna, **Tamilica**. vol. I, pp. III - 120.

இதே வகையான நாணயம் ஒற்று கந்தரோடையில் உள்ள **சங்கம் புலவு** என்ற மையத்தில் இந்நூலாசிரியரால் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. பார்க்க: யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய கதைகூறும் நாணயம் **வீரகேசரி** (வாரவெளியீடு), 10-08-97 பக் – 15.

16. **மகாவம்சம்:** 8 : 54 – 63

"... இந்தப் பீடிகையைக் கைப்பற்ற இருநாகர்கள் சண்டையிட்டனர். இருவருள் எவரும் அதை நிலத்திலிருந்து அசைக்க முடியவில்லை. ஆயினும் கைப்பற்றும் முயற்சியை விட்டுவிட மனமொப்பாமல் கோபக்கனல் கக்கும் கண்களுடன் அவர்கள் தம் பெரும் படைகளை எதிரெதிர் நடாத்தி செங்குருதிப் போரிட்டனர். மாமுதல்வர் அவர்களிடையே தோன்றி "இந்தப்பீடிகை எனது ஆகவே பூசலை நிறுத்துங்கள்" என்றார். பின் அவர் அதன் மீதமர்ந்து அறநெறி சாற்றினார்." (மணிபல்லவத்துயருற்ற காதை : செய்யுள் - ரு. (50).

18. குணசிங்கம்; செ. : **கோணேஸ்வரம்**, 1973, பக். 50 – 51

19. மேற்படி ; அடிக்குறிப்பு 43, பக் 52.

20. **Epigraphia Zelenica**; Vol. iv, pp. 229 – 237

21. Pieris. P. E; Nagadepa and Budahist Remains in Jaffna, J. R. A. S. (C. B.), 1922. P.

22. **மகாவம்சம்;** தமிழாக்கம் by. S. சங்கரன், பக். 20, 25-26

23. கணபதிப்பிள்ளை, கா; 'வடபகுதித் துறைமுகங்கள்,' **ஈழத்து வாழ்வும் வளமும்**, 1972, P. 93.

24. **மகாவம்சம்;** தமிழாக்கம் by. S. சங்கரன், அதிகாரம் 11: 23-26; 19: 2ர-26.

25. **Epigraphia Zelenica**, Vol. (iv), PP. 229-237



26. **மகாவம்சம்;** தமிழாக்கம் by. S. சங்கரன், அதி 19: 60-67.

27. இந்திரபாலா, கா; 'யாழ்ப்பாணத்துக் கல்வெட்டுக்கள்,' **சிந்தனைச் சிற்றிதழ்**, பக். 5.

28 **மகாவம்சம்;** தமிழாக்கம் by. S. சங்கரன், அதி 25: 105-112

29. **சூளவம்சம்** (முதலாம் பாகம்) ஆங்கில மொழி பெயர்ப்பு by. வில்லியம் கைகர், அதி. 60. செய்யுள் 60.

30. மேற்படி; அதிகாரம் 42, செய்யுள் 67.

31. மேற்படி; அடிக்குறிப்பு, பக். 72.

## Chapter Three

01. இராசநாயகம், செ; (**கைலாயமாலை**) ஆராய்ச்சி முன்னுரை, P. (ix)

02. மேற்படி

03. Godakumbura, C; 'Kantarodai', **J. R. A. S. (C. B)** Vol. 12. P. 71. 1968.

04. மேற்படி

05. மேற்படி

06. Xeiver, Fr.; **The land of letters**, PP. 49-58, 1977.

07. Ragupathy, P; **Early Settlements in Jaffna** PP. 57-62 1987.

08. Begley, Vimala, 'Archaeological Exploration in Nothern Ceylon', **Expedition**, 9 (4), 1967.

09. மேற்படி.

10 Ragupathy, p. : **Early Settlements in Jaffna**, pp. 57 62, 1977

Begley, Vimala : 'Arehaeologicol. ...........,' **Expedetion**, 9 (4). 1967.

11. Godakumbura, C. E. ; 'Kantarodai,' **J. R. A. S (C B),** Vol. (xii), p. 71, 1968.

12. புஷ்பரட்ணம், ப. ; **பூநகரி: தொல்பொருளாய்வு** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, 1993, யாழ்ப்பாணம்.

13. இச்சிற்பங்கள் யாவும் தற்பொழுது யாழ்ப்பாண அரும்பொருட் காட்சிச்சாலையில் வைத்துப்பாதுகாக்கப்பட்டுள்ளன.

14. Gadakumbura, C. E. ; Archaeology of Ceylon........., **C. T.** Jan. p, 4, 1967.

15. செம்பினாலான இவ்விருவுருவங்களும் தற்பொழுது யாழ்ப்பாண அரும்பொருட் காட்சிச்சாலையில் வைத்து பாதுகாக்கப்பட்டுள்ளன.

16. Pieris, P. E.; '**Nagadipa** and **Bnddhist** .' **J. R. A. S.(C.B)** Vol. xxviii, **p. 27.**

17. பொன்னம்பலம், சி. ; 'கந்தரோடைத் தொல்பொருட்களும் யான் பெற்ற அனுபவங்களும்,' **பூர்வகலா**, யாழ்ப்பாணத் தொல்லியற்கழகச் சஞ்சிகை, p. 3, 1973.

18. Pieris, P. E. ; p. 27.

19. Begley, Vimala. ; முன் கூறப்பட்டது.

20. குருமூர்த்தி, சா. ; **தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும்**, சென்னைப் பல்கலைக்கழகம், 1974., p. 62.

21. Ragupthy, p. : **Early Settlements in Jaffna,** An Archaeological Survey, p. 205, 1987.

22. மிகவும் அண்மையில் கந்தரோடையில் மிகப்பழமையான புளிய மரமொன்று வேருடன் தறித்து எடுக்கப்பட்ட போது கிடைத்த சிறிய மட்கலசமொன்றிலிருந்து இரும்பினாலான சிறிய வேல் (Spear Head) ஒன்று இவ்வாசிரியரால் மீட்டெடுக்கப்பட்டது.

23. புஷ்பரட்ணம், ப. ; பூநகரி தொல்பொருளாய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, p. 28, plate – 24, 1993.



## Chapter Four

1. "Fresh archaeological discoveries by Mr. Thor Heyerdahl leader of the 1947 Kon Ticki expedition, have uncovered ruins of an advanced Civilization on remote **Maldives Islands** atolls that apparently had links some 4000 years ago with the Indus Valley Civilization"
U. P. I. News Serviece, **Maldives and Indus Valley, The Hindu.** March 15, 1985.

2. மேற்படி.

3. மகாதேவன், ஐராவதம்; **Journal of Tamil Studies,** Thanjavur, December, 1986, pp 24 - 47

4. Narayana Babu, P. and Shivananda Venkata Rao; 'Ancient Ports of the Tamilnadu Coast based on archaeological evidence'. **I A R: Indian Archaeology**, A Review, 1967-69.

5. மேற்படி

6. இப் பள்ளத்தாக்கின் இருமருங்கிலும் பல நகரங்களும், கிராமக் குடியிருப்புகளும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே செழித்து வளர்ந்திருந்தன. மாகியப்பிட்டியும் கந்தரோடையும் ஒன்றாக இருமருங்கிலும் இணைந்த வகையில் ஒரு பெரு நகரக் குடியிருப்பாக வளர்ச்சியடைந்திருந்தமையை உறுதிப்படுத்தும் தொல்லியல் எச்சங்கள் அண்மையில் கிடைத்துள்ளன. மாகியப் பிட்டியில் சிவன்கோவில், விஷ்ணுகோவில் போன்றவற்றின் அழிபாடுகள் நிலத்தினுள் புதையுண்டுள்ளன. புராதன வியாபார மையம் ஒன்றின் (சந்தை) அழிபாடுகளும் இங்கேயே புதையுண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

To Further Reading: See - Deraniyagala, S, ; **The Prehistory of SriLanka I,** p. 356

7. சாண்டில்யனால் எழுதப்பட்ட கடல்புறா என்ற வரலாற்று நாவல் சிறந்த ஓர் உதாரணமாகும். கிரேக்க நாகரிக காலத்திலிருந்தே புறாக்களை கடல் மார்க்கங்களில் பயன்படுத்தப்படுகின்ற முறை உருவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பட்டினப்பாலை, செய்யுள் — 190

9. மேற்படி, செய்யுள் 55

10. நெடுநல்வாடை, செய்யுள் 45

11. பேராசிரியர் க. கைலாசபதி நினைவுக் கருத்தரங்கிற்காக **'வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் சங்ககாலப் படிமங்கள்'** என்ற தலைப்பில் கட்டுரை வாசிக்கப்பட்ட போது இச் சர்ச்சை நிகழ்ந்தது. (04 - 12 -1993 இரண்டாம் அமர்வு, கைலாசபதி கலையரங்கு, யாழ்- பல்கலைக்கழகம்)

12. Venkatraman, R.; **Indian Archaeology** (a Survey). NS Pub, p. 128

13. மேற்படி

